இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56

சுடர் 32 | கதிர் 190 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை 04.06.2017

## சீரற்ற காலநிலையை முன்கூட்டியே அறிய 2 டொப்ளர் ராடர்கள்

### இலங்கைக்கு வழங்குகிறது ஜப்பான்

யாழ்ப்பாணம், ஜூன் 4
மோசமான வானிலை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இலங்கையில் 2 டொப்ளர் ராடர்களை ஜப்பான் பொருத் தவுள்ளது. >> 53





# அமெ., ஐரோப்பிய நாடுகளாலேயே தீர்வைத் தரமுடியும்

### வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுப் போராட்டம்

வவுனியா, ஜூன் 4

"தமிழர்களுக்கு அமெரிக்கா பாதுகாப்புவழங்க வேண்டும். எமக்கான தீர்வை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தாலேயே பெற்றுத் தர முடியும்"

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளைப் பிடித்துக் கொண்டு அவர்கள் கவனவீர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் வவுனியாவில் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இவர்களது போராட்டம் நேற்று நூறாவது நாளை எட்டியது.

வவுனியா கந்தசுவாமி கோயிலுக்கு மு.ப. 11 மணியளவில். >> 49

## திருமலைப் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை தாக்குதல்



யாழ்ப்பாணம், ஜூன் 4
கடந்த சில தினங்களாக ஓய்ந்திருந்த பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல் மீண்டும் ஆரம்பித்துள்ளன. திருகோணமலை பெரியகடை ஜும்மா பள்ளி வாசல் >> 53

## சிறுபான்மையினருக்கு எதிராக செயற்படுவோர் மீது நடவடிக்கை

### மனித உரிமைகள் ஆணைக்குழு அரச தலைவரிடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 4
இலங்கையில் சிறுபான்மை இனங்களை குறிப்பாக முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் வன்முறை மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை >> 53

## ஞானசாரரைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரம்

### இப்படிக் கூறுகிறார் பொலிஸ்மா அதிபர்

வவுனியா, ஜூன் 4
"தவறிழைத்தது எவராக இருந்தாலும் அவர்களது தகுதி தராதரம் பாராது சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். சட்டத்தின் முன் அனைவரும் சமம். >> 53

## இடர் பாதித்த மக்களை நேற்று நேரில் சந்தித்தார் சம்பந்தன்

### உதவிப் பொருள்களும் வழங்கி வைத்தார்



யாழ்ப்பாணம், ஜூன் 4
இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் கவலைடைவதாக அந்த மக்களிடம் நேற்று >> 53

## அமெரிக்காவின் நிவாரண நிதியை மைத்திரியிடம் வழங்கினார் கெசாப்



யாழ்ப்பாணம், ஜூன் 4
வெள்ள இடர் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு 356 மில்லியன் ரூபாவை அமெரிக்க அரசு வழங்கியுள்ளது. அரச >> 53

## திருட்டு நகைகளை உருக்கி விற்று மோ.சைக்கிள், ஐ போன்கள் வாங்கிய திருடர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 4
"பிரதேச செயலரின் வீட்டில் திருடிய 20 பவுண் தங்க நகைகளை உருக்கி விற்று மோட்டார் சைக்கிள் மற்றும் ஐ போன்களும் வாங்கினோம்" என்று திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 பேரும் விசாரணையில் கூறினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். திருட்டு நகைகளை உருக்கிக் கொடுத்த குற்றச்சாட்டில் நகைத் தொழிலாளி ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் >> 53



## அமைதிப் படை விவகாரம்

## இலங்கை ராணுவத்துக்கு ஐ.நா. புதிய நிபந்தனை



கொழும்பு, ஜூன் 4
"பன்னாட்டு மனித உரிமைகள் சட்டம் அல்லது பன்னாட்டு மனிதாபிமானச் சட்டத்தை ஐ.நா. அமைதிப் படையில் >> 53

### யாழ்ப்பாணத்திலிருந்து கடத்திய

## 2,500 கிலோ மாட்டிறைச்சி கிளியில் நேற்றுப் புதைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணத்தில் வைத்து 38 மாடுகளைச் சட்டவிரோதமாக வெட்டிக்கொன்று இறைச்சியையும் தலைகளையும் வாகனத்தில் மறைத்து வைத்துக் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட புத்தளம் நபர்களைக் கிளிநொச்சி நீதிவான் மன்று பிணையில் விடுவித்தது.

கடத்தப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 500 கிலோ கிராம் நிறையுடைய இறைச்சி நீதிமன்றின் உத்தரவில் கிளிநொச்சி திருநகர் சுடலையில் நேற்றுப் புதைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து சங்குப்பிட்டி பூநகரி ஊடாகப் புத்தளத்துக்கு நேற்று >> 53

### வடமராட்சி கிழக்கில் நேற்று அதிகாலை

## கத்தி முனையில் 2 வீடுகளில் நகைகள், பணம் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 4
வீடு புகுந்த கொள்ளைக் கும்பல் குடும்பத் தலைவரை அடித்து மயக்கிவிட்டு, பெண்களின் கழுத்தில் கத்தியைவைத்து தேடுதல் நடத்தி 10 பவுண் நகைக >> 49

## இடரில் காணாமற்போன 91 பேரின் தகவலில்லை

### நேற்றும் 5 சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
"வெள்ளம் மற்றும் நிலச்சரிவு இடர்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 211ஆக உயர்ந்துள் >> 53

## மகிந்த ஆட்சியில் நடந்த மோசடிகளை விசாரிக்கச் சிறப்பு உயர் நீதிமன்றம்

### உருவாக்க அரசு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில் விரைவான விசாரணையை முன்னெடுப்பதற்கு சிறப்பு உயர் நீதிமன்றத்தை உருவாக்க அரசு முடிவு செய்திருக்கின்றது. >> 49




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தமிழ் இந்துக் கலாசாரம் சார் கலைகளை வளர்க்க அனைவரும் முன்வரவேண்டும்

## யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

தமிழ் இந்துக் கலாசாரம் சார்ந்த கலைகளை வளர்க்கவும், அதனைப் பாதுக்காக்கவும் அனைவரும் முன் வர வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் அழைப்புவிடுத்தார்.

வடக்கு மாகாண கலாசார மத்திய நிலையங்களின் ஏற்பாட்டில் கலா சாரம் சார்ந்த இசை மற்றும் நடன நிகழ்வு யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்படத்தில் நேற்று மாலை 3 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது இனத்துக்குரிய அடையாளமாக எமது கலாசாரம் சார்ந்த நிகழ்வுகள் உள்ளன. அதனைப் பாதுகாக்கவும், அந்த கலைசார்ந்த வல்லுநர்களை புதிதாக உருவாக்கவும் இந்த கலாசார மத்திய நிலையங்கள் செயற்பட்டு கொண்டு இருகின்றன. அவை ஒவ்வொரு பிரதேசம் சார்பாக இருப்பதால் எம்மை நாம் வளர்த்துக் கொள்ள சிறந்த ஊடகமாக இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 7 கலாசார மத்திய நிலையங்கள் உள்ளன. இன்னமும் 2 கலாசார நிலையங்கள் மேலதிகமாக நிறுவப்பட வுள்ளன. துறை சார்ந்த அமைச்சர் எமக்குப் பக்கபலமாக உள்ளார். ஆகவே இவ்வாறான மத்திய நிலையங்களைப் பயன்படுத்தி எமது கலாசாரத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான கலாசார நிகழ்வுகளை நாம் நடத்த முன் வர வேண்டும்.

எமது கலாசாரம் மற்றும் பாரம்பரிய கிராமிய நிகழ்வுகளை நடத்துவதற்கும் கலசாரங்களை பேணும் கட்டடங்களை அமைக்கவும் கொழும்பு அமைச்சு தற்போது முன்வந்து செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது" என்று யாழ்ப்பாண மாவட்டச்செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-ரி)

# பட்டப் பகலில் வாளுடன் அட்டகாசம் புரிந்தோர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாண நகரில் பட்டப் பகலில் வாளுடன் திரிந்த இளைஞர்கள் தொடர்பாகப் பத்திரிகையில் வந்த செய்தியின் அடிப்படையில் இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளொன்றில் வாளுடன் திரிந்ததால் பதற்றமான சூழல் நிலவியதாகத் தெரிவித்து கடந்த மே 15 ஆம் திகதி உதயனில் புகைப் படத்துடன் செய்தி வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியின் அடிப்படையில் புகைப் படத்தில் காணப்பட்ட மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகட்டை வைத்து விசாரணை நடத்திய யாழ்ப்பாணப் பொலிஸார், சம்பவம் தொடர்பாக மானிப்பாய் கனகசபை வீதி மற்றும் லோட்டன் வீதிப் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அந்த இளைஞர்களில் ஒருவர் சம்பவம் இடம்பெற்ற நேரம் தான் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் இருந்ததாகச் சட்டத்தரணியூடாக நீதிமன்றிற்குத் தெரிவித்தார். இதனையடுத்து அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லுமாறும் மற்றையவரை இம்மாதம் 13ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

(த-103)



# சிறுமிகள் மீதான பாலியல் வதையை கண்டித்து கிழக்கில் நேற்றும் பேரணி

திருகோணமலை, ஜூன் 4

திருகோணமலை, மூதூர் மல்லிகைத் தீவில் 3 சிறுமிகளை வன்புணர்வுக்குட்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்து மட்டக்களப்பில் நேற்றும் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

பெரியவெளி மல்லிகைத்தீவில் அறநெறிக் கல்வி வகுப்புக்கு சென்ற மூன்று பாடசாலை மாணவிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 4 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு இளைஞர்களின் ஏற்பாட்டில் காந்தி பூங்கா முன்றலில் இந்தச் சம்பவத்தை கண்டித்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் இளையோர்கள் பலர் கலந்துகொண்டனர். இதில் வேலைதேடும் பட்டதாரிகளும் கலந்துகொண்டு ஆதரவளித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கடந்த வியாழக்கிழமையும் மட்டக்களப்பில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. அந்தப் பேரணியின் நிறைவில் பொலிஸ்மா அதிபருக்கு மனுவும் கையளிக்கப்பட்டிருந்தது.

(வ-10)

# மோ. சைக்கிளை மோதிவிட்டு ஹைஏஸ் வான் தப்பி ஓட்டம்

## நாச்சிக்குடா காட்டுப் பகுதியில் நேற்று மாலை சம்பவம்

கிளிநொச்சி, ஜுன் 4

கிளிநொச்சி - நாச்சிக்குடா பிரதேசத்தில் ஹைஏஸ் வான் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை 4.30 மணியளவில் மன்னார் பூநகரி நெடுஞ்சாலையில் நாச்சிக்குடா காட்டுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற வாகனமே இவ்வாறு நிறுத்தாமல் சென்றுள்ளது.

தெய்வாதீனமாக காயங்களுடன் உயிர்தப்பிய இருவரும் கிளிநொச்சியை வந்தடைந்துள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த பொன்னம்பலம் நாகேந்திரன், பரந்தனைச் சேர்ந்த அ.சந்திரகுமார் ஆகிய இருவருமே பகாயமடைந்தனர்.

"நாச்சிக்குடா முதன்மை வீதியிலிருக்கும் வளைவில் நாம் வந்து கொண்டிருந்தபோது, எதிரே மிக வேகமாக வந்த வான் எம்மை நோக்கி வந்தது. விபரீதமறிந்த நாம் சடுதியாக சைக்கிளைத் காட்டுக்குள் திருப்பியதால் பெரும் ஆபத்திலிருந்து தப்பித்தோம். எனினும் நாம் விபத்துக்குள்ளாதை அறிந்தும் சாரதி சற்றும் மனிதாபிமானமின்றி வாகனத்தை நிறுத்தாது சென்றுவிட்டார். அந்தப் பகுதியில் மக்கள் நடமாட்டமும் இல்லை. உதவிக்கு எவரும் வரவில்லை. இளைஞர் ஒருவர்தான் வாகனத்தைச் செலுத்தி வந்தார்" என்று விபத்தில் படுகாயமடைந்த இருவரும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(வ-ய)

# விபத்தில் காயமடைந்த வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

வீதி விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் 7 நாட்களின் பின் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரியாலை, கனகரட்ணம் வீதியைச் சேர்ந்த வேதநாயகம் கோபாலசுந்தரம் (வயது-69) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

"யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் உள்ள ஆலயத்துக்கு கடந்த 26 ஆம் திகதி சென்றுவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த வயோதிபரை, அந்தவழியே வந்த வான் ஒன்றின் பக்கக் கண்ணாடி தட்டியுள்ளது. இந்த விபத்தால் வயோதிபர் அந்த இடத்தில் வீழ்ந்து மயக்கமடைந்தார். அவரை விபத்தில் சிக்கிய வான் சாரதியே தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்த்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்ட நாளிலிருந்து வயோதிபர் கோமா நிலையிலேயே இருந்துள்ளார். இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் இறப்பு விசாரணையை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் வயோதிபரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(வ-8)

# தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் நேர்முகத் தேர்வு ஜூன் 28ஆம் திகதி ஆரம்பம்

## வடக்கு கல்விச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகளுக்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்களும் 176 ஒப்பந்த ஆசிரியர்களும் உள்ளனர். இவர்களை ஆசியர் சேவைக்குள் உள்ளீர்பதற்கான அனுமதிகள் கோரப்பட்டிருந்தன.

அவர்களில் ஒப்பந்த ஆசிரியர்களையும் உள்ளடக்கிய வகையிலேயே 676 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான அனுமதிகளே கடந்த மாதம் கிடைத்திருந்தது. எனினும் ஒப்பந்த ஆசிரியர்களுக்கு உடனடியாகவே தனியான ஏற்பாட்டில் நிரந்தர நியமனம் வழங்க வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்குத் தற்போது அனுமதி கிடைத்துள்ளது.

இந்த நிலையில் 676 தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் இணைப்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அத்துடன் ஒப்பந்த ஆசிரியர்கள் 176 பேருக்குமான நிரந்தர நியமனத்துக்கு கொள்கையளவில் இணக்கம் எட்டப்பட்டது. எழுத்து மூலமான அனுமதியைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. கிடைத்தவுடன் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனமும் விரைவில் வழங்க ஆவன செய்யப்படும் - என்றார். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 17 இயக்கத்தின் தோழர்களை அடைத்து வைத்திருக்கும் செயல் பெரும் வேதனையைத் தருகிறது

## தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

'ஈழத் தமிழர் உரிமைகளுக்காக குரல் கொடுத்துவரும் திருமுருகன் காந்தி மற்றும் மே 17 இயக்க தோழர்களும் ஈழத் தமிழர்களின் இனப்படுகொலை தொடர்பிலான நினைவேந்தலை ஒழுங்கு செய்தமைக்காக தமிழ்நாடு வன்செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயல் பெரும் மன வேதனையையும் சோர்வையும் தருகின்றது'

இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப்பேச்சாளர்களான சட்டத்தரணி கு.குருபரன் அருட்தந்தை எழில் ராஜன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

'ஈழத் தமிழர்கள் தொடர்பில் குரல் கொடுத்து வரும் தமிழகம் சார்ந்த முக்கிய சமூக இயக்கங்களில் மே 17 இயக்கம் தலைமையானது. மே 17 இயக்கத்தினர் எம்மவர்களின் அரசியல் விடுதலை, நீதிக்கான போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பு செய்து வருகின்றமை மட்டுமல்லாது, தமிழகத்தின் சமூகப் பிரச்சினைகளில் பல முற்போக்கான நிலைப்பாடுகளுக்கும் போராட்டங்களுக்கும் காரணமானவர்களும் பங்காளிகளும் ஆவார்கள்.

ஈழத்தில் தமிழர்களின் நினைவு கூரும் உரிமைக்காக இலங்கை பொலிஸாரின், இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக நாம் இலங்கையின் நீதிமன்றங்களிலும் மக்கள் போராட்டங்கள் மூலமாக வும் போராட வேண்டியிருக்க, ஈழத் தமிழர்களின் நினைவாக தமிழர்களினால் தெரிவு செய்யப்பட்ட தமிழக அரசு தமிழக மண்ணில் ஈழத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை நினைவு கூருவதற்குத் தடை விதிப்பதும் ஏற்பாட்டாளர்களைக் கைது செய்து அடைத்து வைத்திருப்பதும் பெரும் மன வேதனையையும் சோர்வையும் தருகின்றது.

நினைவேந்தலை ஒழுங்கு செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு ஈழத் தமிழ் சமூக செயற்பாட்டாளர்களின் சார்பில் நாம் தமிழக அரசை வேண்டுகிறோம்' என்று அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# கால்நடை வளர்ப்போருக்கான நடமாடும் சேவை இன்று

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சிப் பிரதேசக் கால்நடை வளர்ப்போர்களுக்கான நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப.9.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எழுதுமட்டு வாழ் சிறிகணேசா வித்தியாலயத் தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கால்நடைத் திணைக்களத்தின் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவையை மாகாண விவசாய கால்நடைகள் உற்பத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைப்பார். இந்த நடமாடும் சேவையில் கால்நடைகளுக்கான சிகிச்சைகள், வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல் மற்றும் பெண் நாய்களுக்கான கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்தல், பண்ணையாளர்களுக்கான ஆலோசனைகள், பண்ணைகளைப் பதிவு செய்தல், விலங்குகள் காப்புறுதி செய்தல் போன்றவை இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# அங்கஜன் எம்.பியின் ஏற்பாட்டில் சேகரித்த நிவாரணம் தெற்குக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 4

இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணியினரால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் நேற்று தெற்குக்கு அனுப்பி வைக்கப்பட்டன.



தெற்கில் ஏற்பட்ட இடரின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணியினரால் அத்தியாவசியப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் கடந்த ஐந்து நாள்களாகப் பருத்தித்துறை, நெல்லியடி, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், மல்லாகம், சுன்னாகம், கோப்பாய், சங்கானை, கரவெட்டி, காரைநகர், மானிப்பாய், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் சேகரிக்கப்பட்டன. சேகரித்த பொருள்கள் பார ஊர்திகள் மூலம் தெற்கு மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (த-10)

# குப்பைகளை தரம் பிரிக்கும் மையத் திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் யாழ்ப்பாண மாநகர சபையால் அமைக்கப்பட்டுள்ள குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிக்கும் மையத்தின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என யாழ்ப்பாண மாநகரசபையின் தகவல் வழங்கும் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்து கொள்வார். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் இதில் கலந்துகொள்வார்கள். (த-ரி)



# ஊடகவியலாளர் குகநாதனுக்கு சுவிஸில் பணிநயப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 4

மூத்த ஊடகவியலாளரும், உதயன் பத்திரிகையின் முன்னாள் செய்தியாசிரியருமான ஞா.குகநாதனின் 40ஆவது திருமண நாளில், அவரது 50ஆவது ஆண்டு ஊடகப் பணியை மதிப்பளிக்கும் விழா எதிர்வரும் 17ஆம் திகதி சனிக் கிழமை காலை 10 மணிக்கு, சுவிஸிலுள்ள அருள்மிகு சிறி கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5)

## மாணவி மீது வன்புணர்வு கிளியில் இளைஞர் கைது

கிளிநொச்சி முறிப்பு பிரதேசத்தில் 15 வயது பாடசாலை மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

குறித்த மாணவியின் வீட்டில் தங்கியிருந்த உறவுமுறையான 25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"மாணவியின் பெற்றோரின் சம்மதத்துடன் அவர்களது வீட்டிலேயே இளைஞன் தங்கியிருந்துள்ளார். இருவருக்கும் இடையே காதல் தொடர்பு இருந்து வந்துள்ளது. இந்தநிலையில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதகாலப்பகுதியில் தொடர்ச்சியாக மாணவியை இளைஞன் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார்." என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-ய)



தென்னிலங்கையில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று 76 குடும்பங்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இரத்தினபுரி கலவானை தமிழ் வித்தியாலயத்தில் வைத்து கையளிக்கப்பட்டன. (வ-4.10)

# மாணவியை மோதிவிட்டு தப்பியது மோ. சைக்கிள்

அளவெட்டி, ஜூன் 4

பாடசாலை முடிந்து வீடு சென்ற மாணவியை வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளவிட்டுத் தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவம் கடந்த 2ஆம் திகதி பன்னாலையில் இடம்பெற்றது.

பன்னாலை சேர். கனகசபை அ.த.க. வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கும் குணதாசன் லோசிகா (வயது 7) பாடசாலை முடிந்து வீட்டுக்கு வீதியால் சென்று கொண்டிருந்தபோது திடீரென வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதிவிட்டுத் தப்பியதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவி தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-36)

# வேலணை கோபுரத்து வைரவர் வருடாந்தப் பொங்கல் விழா

## வரும் வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வேலணை, மணியகாரன் வீட்டடி, கோபுரத்து வைரவர் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தனிச் சிறப்பு வாய்ந்த கோபுரத்து வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் அண்மையில் வெகு சிறப்பாக நடந்து முடிந்த நிலையில் வருடாந்தப் பொங்கல் விழா நடைபெறுவதற்குத் திருவருள் கூடியிருப்பதாக ஆலய அறங்காவலர் பசுபதி தேவநாயகம் தெரிவித்தார்.

ஆலயப் பக்தர்கள் அனைவரும் அன்றைய தினம் வழமைபோன்றே பொங்கல் செய்து மடை வைப்பதற்குரிய ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார். (உ)

## சங்காபிசேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் 1008 சங்காபிசேகக் கிரியைகள் பிரம்மஸ்ரீ பா.பாலகிருஸ்ணக்குருக்கள் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு நித்திய பூசைகளைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் முருகப்பெருமான் சகிதம் வீதிவலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (த-12)

மாணவியை அழைத்துச் சென்ற குற்றச்சாட்டில்

# கிளி. பாடசாலை ஆசிரியர் விளக்கமறியல் சாலையில்

கிளிநொச்சி, ஜூன் 4

காரணமின்றி உயர்தர வகுப்பு மாணவியை அழைத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கிளிநொச்சிப் பாடசாலை ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார். சந்தேகநபர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கிளிநொச்சிப் பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவி ஒருவரை அந்தப் பாடசாலையின் கணித பாட ஆசிரியர் கருத்தரங்குக்கென நேற்றுமுன்தினம் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றார். ஒரு மாணவியை மட்டும் அழைத்துச் சென்றதால் சந்தேகம் எழுந்தது. அதனால் அந்தப் பாடசாலையில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் மாணவியின் உறவினர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர். அவர்கள் மேற்கொண்ட விசாரணையில் மாணவி மீட்கப்பட்டார். அவரைக் காரணமின்றி அழைத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அப்போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், மாணவியின் மருத்துவபரிசோதனை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஆசிரியர் நேற்று கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன், மாணவியைச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி மன்றில் அறிக்கை முன் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார். (வ-ய)

ஊடகவியலாளர் மீது தாக்குதல்

# கோத்தபாயவிடம் சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஜூன் 4

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் 3 மணி நேர விசாரணையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்தினர்.

தி நேசன் நாளிதழின் பிரதி ஆசிரியராக இருந்த கீத் நொயார் 2008ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேஜர் உள்ளிட்ட 6 இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவை, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் மூன்று மணி நேரம் விசாரணை செய்தனர். அவர் மீண்டும் விசாரணைக்காக அழைக்கப்படுவார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர் தாக்கப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்ததால் கோத்தபாய ராஜபக்ச இந்தச் சம்பவம் தொடர்பாக அறிந்திருந்தாரா? என்ற கோணத்திலேயே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

கீத் நொயார் 2008ஆம் ஆண்டு மே 23ஆம் திகதி அதிகாலையில் விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் தாம் தலையிட்டதாக கோத்தபாய ராஜபக்ச கூறியிருந்தமை குறித்தும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் கேள்விகளை எழுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



மலர்வு 29 . 03 . 1945

உதிர்வு 01 . 06 . 2017

### திருமதி அலோசியஸ் மேரி பிறக்சிடா (மல்லிகா)

நாரந்தனையை பிறப்பிடமாகவும், வவுனியா, அண்ணாநகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அலோசியஸ் மேரி பிறக்சிடா (மல்லிகா) 01.06.2017 வியாழக்கிழமை மாலை இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிபோல் - சவிராசி தம்பதிகளின் அன்பு புதல்வியும், தியோகு அந்தோனி - சவினம்மா தம்பதிகளின் மருமகளும், அந்தோனி அலோசியஸ் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற போல் கனியூட் வலன்ரைன், நிமால் மேரி டெனி (காலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சந்திரா வலன்ரைன், P.M.M. சித்தீக் (காலி), காலஞ்சென்ற றூபின் மேரி கிறேசியா, நொயலின் சாந்தினி கமலிற்றா, எட்வின் நவில் தேவராஜ், றோஸ்மேரி அன்ரனிற்றா (ஆசிரியை - வ/ முருகநூர் சாரதா வித்தியாலயம்), யூட் மரிய அன்ரன், லூட்ஸ் றஞ்சினி பப்ரிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெராட் ஜெஸ்மின் டல்றீன் ஏற்றியன்ஸ், சந்திரபாஸ், யாழினி, கஜவதனன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரிவின்சன், ஸ்ரெவினா, டார்வின், கார்த்திகா, லக்ஸ்மிகரன், எழில்ரன், எடின்ஷன், கரோலின், அலெக்ஸி, சோபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.06.2017) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆன்ம இளைப்பாற்றுக்காக திருப்பலி நிறைவேற்றப்பட்டு இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.13, அண்ணாநகர் பிரதான வீதி,
வவுனியா.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**024 205 1438, 077 664 8525**

## மரணஅறிவித்தல்

### திருமதி இலட்சுமி பரமசிவம்



**பிறப்பு : 13 .02. 1939
இறப்பு : 01 .06. 2017**

யாழ்.புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்,கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும், கொழும்பு தெகிவளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி பரமசிவம் 01.06.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமசிவத்தின் அன்பு மனைவியும், சூரியகலா(லண்டன்), திருமுருகா(லண்டன்), கண்ணதாசன்(லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), ரஞ்சன் (ஐங்கரன் வட்டக்கச்சி), கேதினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சரஸ்வதி, தவராசா, புஸ்பலீலா, நவரட்ணம்(சந்திரன்), காலஞ்சென்ற இந்திரன், சிறிகாந், நாகேஸ்வரன், குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, நாகவதனா, சரிதா, இதயமலர், நிசாந்தினி, கிருஸ்ணகாந் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை, செந்தமிழ்ச்செல்வி, தெட்சனாமூர்த்தி, கேதீஸ்வரி, இந்திராதேவி, யோகலட்சுமி, மனோ ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்சன், டயனன், சதிசன், செந்துரன், லாவன்யா, லக்சியா, கிந்துஜன், கானுஜன், கிருஸ்னுஜன், சுவாதி, அபிலாஸ், ஆதீக், கிருஜன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5ஆம் யூனிட், இராமநாதபுரம்,
கிளிநொச்சி.**

தகவல்:
மகன்(ஐங்கரன்)

**தொடர்பு : 077 036 3211**

## மரணஅறிவித்தல்

### திருமதி சின்னம்மா பூதத்தம்பி



யாழ்.உடுப்பிட்டி மல்லந்தறையைப் பிறப்பிட மாகவும் கரவத்தனை, சத்திரமங்கை, கம்பர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா பூதத்தம்பி 02.06.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தன் பூதத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வட்டன் - வள்ளி தம்பதிகளின் அன்பு மகளும் , காலஞ்சென்றவர்களான முத்தன் - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வட்டன் சுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி சுந்தரம் வைரி , திருமதி சின்னத்தம்பி மீனாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், குமரகுரு, முத்துலிங்கம் (லண்டன்), டாக்டர் இராசையா (லண்டன்), சிவகுரு, சத்திவேல் (அதிபர், யா/ உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தி), அருந்தவராணி (சுவிஸ்), புஸ்பராணி (கனடா), அமிர்தவேல் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, தேவிகா (லண்டன்), இந்திரா (லண்டன்),சந்திரவதனா, விஜயமாலினி (தாதிய உத்தியோகத்தர் - வல்வெட்டித்துறை), யோகநாயகம் (சுவிஸ்),பத்மநாதன் (கனடா), சுகந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுதர்சினி, லவக்குமரன், சர்மிலன், தனுஸ்லன், மதுஸ்லன், சௌமியா, வினுஜன், இரஜிந்தன், ஜனார்த்தனன், லக்சனா, விக்னா, கோபிநந்தன்,கனகாம்பரி, சாகித்தியன், கிருத்தியன், கிஷாந்தியன், குபேரன், பிரியா, தர்மிலன், பவித்திரா, பைரவி, தாரகன், பரணிகா, அபினாஸ், அஜிவ் ஆகியோரின் அன்புப் பாட்டியும், கிரிசோத், அபிராஜ், அபிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் (சத்திரங்கை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பூ.சக்திவேல் (அதிபர்- யா/ உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம் - வல்வெட்டித்துறை)**

**077 923 6558, 077 087 0143**

## 37 ஆவது பிறந்தநாளில் ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 04 . 06 . 1980

உதிர்வு 31 . 05 . 2008

### யோகரட்ணம் கீதன்

(CEYLINCO INSURANCE)

இப் புவிதனில் வாழ்வியலை நீ இழந்தாய் - அதனால்
நிழலாய் போன நிஜங்களில்
இன்னமும் எம்மைத் தொலைத்தபடி
வாழ்க்கையில் நாம் தோற்றுவிட்டோம்.

நிகழ்வோடு ஒட்டாமல் ஒரு வாழ்க்கை
இது வாழ்க்கையல்ல, வாழ்வதற்குரியதுமல்ல
எனினும் வாழ்கிறோம், மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களோடு

இவ்வுலகில் பலர் பிறந்தும் இறந்தும், வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்
வாழும் போதே இறந்தவர் போல் வாழ்பவர் பலர்
**"தக்கார் தகவிலார் என்பது அவர் தம்
எச்சத்தால் அறியப்படும்"**
என வள்ளுவர் கூறும் கருத்துக்கு அமையவும்

**"மரணத்தின் பின் எவனொருவன் வாழ்கிறானோ!
அவன் பாக்கிய வான்"**
என்ற பைபிளின் கூற்றுப்படியும்

வையகத்தில் சதிகார கும்பலினால் உன் வாழ்வு
சிதைக்கப்பட்டாலும் வானுறையும் - தெய்வ மகனாகிய
உனது தன்னலமற்ற சேவையும், அன்பும்
உன் குடும்ப வழிவந்தோருக்கு ஆசீர்வாதமாகவும்,
அத்திவாரமாகவும் அமைந்து அவர்கள் உன்னைப்போல
மற்றவர்களுக்கு வழிகாட்டியாக சிறப்புடன் வாழ
தோன்றாத்துணையாக இருந்து வழி நடத்துவாயாக!
ஒன்பது ஆண்டுகள் கழிந்தாலும், நிகழ்காலம், எதிர்காலம் இன்றி
அன்றைய கதறலுடன் உன் நினைவில் வாழ்ந்துவரும்

"யோகீத்தா வாசம்"
181, காட்டு கந்தோர் ஒழுங்கை,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**தாய், தந்தை மற்றும் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அயலுறவு அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றார்

கொழும்பு, ஜூன் 4

இலங்கையின் புதிய அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட வசந்த சேனநாயக்க, இலங்கை அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



அரச தலைவர் கடந்த 31 ஆம் திகதி, பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பதவிகளை மாற்றம் செய்த போது, வசந்த சேனநாயக்க அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் அயலுறவுத்துறைச் செயலாளர் எசல வீரக்கோன் ஆகியோர் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

வசந்த சேனநாயக்க இலங்கையின் முதல் தலைமை அமைச்சரான டி.எஸ்.சேனநாயக்கவின் கொள்ளுப் பேரனும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவின் மைத்துனரும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம், சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட இவர், பின்னர் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்து வந்தார்.

இலங்கை அயலுறவுத்துறை அமைச்சில் இதுவரையில் பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் பதவியே இருந்து வந்தது. 2015இல் இருந்து அஜித் பெரேரா மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் அந்தப் பதவிகளை முன்னர் வகித்து வந்தனர். தற்போது, அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சராக வசந்த சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். (ஐ - 10)

## சீனப்பௌத்த சங்கம் ரூ.22 மில்லி. உதவி

சீனப் பௌத்த சங்கம் 22 மில்லியன் ரூபா நிதியை அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று கையளித்தது. சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டது என்று அரச தலைவரின் ஊடகப்பிரிவினால் அனுப்பப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சீன அரசானது தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கி வரும் இத்தகைய ஒத்துழைப்புக்களால் இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால தொடர்புகள் மேலும் விருத்தி அடைகின்றன. இலங்கை இடர்களைச் சந்திக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும், சீன அரசு உதவிகளை வழங்குவதையிட்டு நன்றி தெரிவிக்கின்றேன்.

பன்னாட்டு ரீதியில் கிடைக்கும் நிதி உதவிகளும், சீன அரசின் நிதி உதவிகளும் சீரற்ற காலநிலையால் இருக்குள்ளாகி, வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக உபயோகப்படுத்தப்படும். சீனப் பௌத்த சங்கத்தின் தேரர்கள் மீண்டும் இலங்கைக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட வசதிகளை ஏற்படுத்தப்படும் என்று அரச தலைவர் குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ஐ - 10)

---


### மரண அறிவித்தல்

### திருமதி தவமணி அழகராசா



பிறப்பு 01.05.1951 — இறப்பு 02.06.2017

குடத்தனை வடக்கு, குடத்தனையைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி அழகராசா 02.06.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிஐயா - காலஞ்சென்ற பூமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா மற்றும் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், அழகராசாவின் (ஹோமியோபதி வைத்தியர்) அன்பு மனைவியும், சிவலிங்கம் (ஜேர்மனி), ஜீவானந்தம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரங்கேசன் (ஜேர்மனி), சுகந்தி (சமுர்த்தி உத்தியோகத்தர்), அழகேசன் (ஜேர்மனி), கமலேசன், விமலேசன் (கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், றேணுகா (ஜேர்மனி), சிதம்பரநாதன் (பிரதேச செயலகம் - சாவகச்சேரி), சோபனா (ஜேர்மனி), சுஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிசன், சதுசன், மிதுஷன், விதுசிகா, துசானி, தயானா, அதிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2017) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் அவ்ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 8.30 மணியளவில் தகனத்துக்காக குடத்தனை வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குடத்தனை வடக்கு,
குடத்தனை.**

**தகவல்-
குடும்பத்தினர்.**

**077 779 2997, 077 150 8592**

### மரண அறிவித்தல்

### திருமதி செல்வரூபி மகேசன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரூபி மகேசன் 29.05.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முநாமலைவீதி, மானிப்பாய்** **தகவல்-குடும்பத்தினர்.**

**077 951 4971, 077 555 2281**

### 25 ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர்
**மாணிக்கம் தங்கவடிவேல்**
(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - R.D.A)



மலர்வு 19.12.1942
உதிர்வு 11.06.1992

திதி: 04.06.2017

பார் போற்றும் உத்தமராய் பாசமுடன் எம்மை வழிநடாத்தி
உலகமென உங்களை நாம் நம்பியிருந்த வேளை
பாதி வழியில் எம்மை பரிதவிக்கவிட்டு பார் உலகம் சென்று
ஆனதுவோ அப்பா ஆண்டுகள் இருபத்தைந்து
என்றும் உங்கள் நினைவில்

**தங்கத்தாமரை,
அல்வாய்.** **குடும்பத்தினர்.**

### யாழ்.கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

### கந்தையா துரைராசா

### 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 03 . 1928
மறைவு 31 . 05 . 1997

அன்புடனும் பாசத்துடனும் எங்களைப் பாதுகாத்த தெய்வமே!
எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்தது ஏனோ?
துன்பம் ஏதும் இல்லாமல் கஷ்டங்கள் ஏதும் இல்லாமல்
உங்கள் மலர்ந்த முகத்துடன் எங்களை உங்கள்
கண் இமைக்குள் வைத்து நாம் வாழ வழி அமைத்துக் கொடுத்தீர்கள் அப்பா!

எம்மை எல்லாம் ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட
இருந்தாலும் பெற்ற தந்தையாகிடுமோ அப்பா?
உங்களைப் போல் அன்பு கொள்ள யாருமில்லை
20 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பாசத்துக்குப் பட்ட கடன் தீராதப்பா

உடல் மட்டும் தான் பிரிந்தது ஆனால்
முழு நிலவாக எம்முடன் தான் இருக்கிறது அப்பா
ஒற்றுமை என்ற தடி ஒன்றாக இருந்தால்
அதை எப்போதும் எவராலும் உடைத்தெறிய முடியாது
என்று நீங்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கும்
இந்த வாக்கியம் இன்றும் என் காதில்
ஒலித்துக் கொண்டு இருக்கின்றது அப்பா!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய கரம்பன் கிழக்கு காளிகாபுவனேஸ்வரி
அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்

அன்பின் பிரிவால்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

உ
சிவமயம்
கும்பிளான் கற்கரை கற்பக விநாயகர் துணை

### 23 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

அமரர் ஞானலக்ஷ்மி
ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(B.A (Hons) Eng.Trd)
(முன்னைநாள் ஆசிரியர் - நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்)



தவப்பேறு 11.01.1960 மலேசியா
சிவப்பேறு 03.06.1994 சிவபூமி

அன்பால், பண்பால், பக்தியால், அறிவால்
அனைவர் மனதிலும் நிறைந்த இனிய பிறவியே...
இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பே...
இனிமேல் எங்கு காண்போம் ஞானா.....

அன்புடன்
ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கணவர்)
இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி கல்வி வலயம்) உற்றார், உறவினர்.

246/4 A, கோயில் வீதி,
நல்லூர்.

### ஆறாத்துயரத்தில் மூன்றாண்டுகள்



மண் மகிழ 01 . 04 . 1979
கண் நெகிழ 09 . 06 . 2014

அமரர் **வயிரவநாதர் மயூரன்**
(VM URAN ENTERPRISE)
04.06.2017

அப்பா ஆயிரம் உறவுகள் எமக்கு இருந்தாலும்
உங்கள் ஒருவருக்கு ஈடாகுமா?
நித்தம் உங்களை நினைத்து நினைத்து
கண்ணீர் சிந்துகின்றோம் அப்பா!
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து வாருங்கள் அப்பா!
எம்மிடமே!

**கச்சாய் வீதி,
கொடிகாமம்.** (ஜே.8644) (13)

என்றென்றும் ஈரவிழிகளுடன்
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CANADA , USA study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில். விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

### Royal Visa Consultants & Education Service

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892


# குடமுழுக்கு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 4

கொக்குவில் மேற்கு மணியர்பதி வள்ளி தேவசேனா சமேத சிறி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய குடமுழுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.45 மணி முதல் 8.45 மணி வரையிலுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் குடமுழுக்கு நடைபெறவுள்ளது. மாலை 7 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும்.

(த-10)


### வேலை வாய்ப்பு

பெண்கள்மட்டும்தொடர்புகொள்ளவும்யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல அழகுக் கலைப் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை.தையலில் NVQ Level 4 முடித்தவர்களும் தேவை.

வயதெல்லை 22 - 35

அழகுக்கலையில் முன் அனுபவம் தேவையில்லை ஆங்கில அறிவு வேண்டும்.

தொடர்பு 076 701 1645

### வீடு,காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் 2 1/2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

077 255 0807

### வீடு வாடகைக்கு

இல.186, கண்டி வீதி, கச்சேரியில் (பெண்டிகோஸ் சபைக்கு முன்பாக) 04 பெரிய அறை, 02 சிறிய அறையுடன் கூடிய போதியளவு வாகன தரிப்பிட வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

எஸ்.கோபிநாத் - 0044 794 079 5145

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை ஹட்லி க்லூரி, துறைமுகம், சந்தைக்கு மிக அருகில் பீச்றோட்டில் உள்ள 04 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு. 077 968 5566

### 5 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு

நாவற்குளி கோயிலாக் கண்டியில் ஒரு எல்லை கடற்கரையை எல்லையாகக் கொண்ட 3 Pase மின்சார வசதி, பெரிய Factry அருகில் உள்ள 5 ஏக்கர் காணி விற்பனைக்கு

தொடர்பு. 077 234 9933

### வாடகைக்கு

பெண்களுக்கான சகலவசதிகளுடன் கூடிய (உணவுகள்) விடுதி அறைகள் மாத வாடகைக்கு உண்டு. தரம்வாய்ந்த சகலவிதமான, சைவ, அசைவ உணவுகள் Oder செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்பு.077 216 0870, 076 919 8259



## சூப்பர் போல் (SUPER BALL)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 658
சீட்டிழுப்பு திகதி 03.06.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 39 46 58 71 Y

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 47, 436, 068/=

தொ.பே: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2885 திகதி: 03.06.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 13 36 41 60 M
போனஸ் இல.: 10
திங்கட்கிழமை ஜக்பொட்: ரூ. 64, 340, 457/-

தொ.பே: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழையுங்கள்



### சைவ உணவகத்திற்கான வேலைவாய்ப்பு

மூன்று நேர உணவு, தங்குமிடவசதி,
கவர்ச்சியான சம்பளம், நிரந்தரதொழில் வாய்ப்புடன்

1) சப்பிளையர் ( உணவு பாரிமாறுபவர்கள்)
2) சமையலாளர்
3) அரையல் பகுதியாளர்
4) காசாளர் ( ஆண் / பெண் இருபாலாரும்)
5) பில்கிளாக்
6) சுத்திகரிப்பாளர்
7) மரக்கறி வெட்டுபவர்கள்
8) தோசை போடுவர்கள்
9) றொட்டி போடுப்வர்கள்
10) ஏனைய குசினி வேலைகளுக்குமாக

தொடர்பு - 076 732 2886
36, 38 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.



## உத்தியோகபூர்வ முடிவுகள்

සංවර්ධන වාසනාව
Development Fortune

சீட்டிழுப்பு வாரம் ▶ 45
சீட்டிழுப்பு திகதி ▶ 03.06.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 01 26 33 39
சுப்பர் இலக்கம்: 03
அதிர்ஷ்ட மாதம்: டிசெம்பர்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 12, 118, 730/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 460, 545/=
அடுத்த ஜக்பொட் 1, 894, 400/=

08.06.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



## சிறுநீரகம் தேவை

26 வயதுடைய இளைஞன் ஒருவருக்கு "B Positive" சிறுநீரகம் தேவை. தானம் செய்ய விரும்புபவர்கள் தயவு செய்து உடனடியாக தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 075 590 2512

(C/29997)(10)


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து மகேஸ்பாலன்



நயினாதீவினைப் பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மகேஸ்பாலன் கடந்த (02.06.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கஜிதரன், லகிஸ்கரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**
**077 760 0848, 077 990 6122**

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி

### யோகேஸ்வரி தர்மராசா

பிறப்பு 16 . 01 . 1946



இறப்பு 02 . 06 . 2017

சங்கானையை பிறப்பிடமாகவும் மாலிசந்தி காமாட்சிஅம்மன் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி தர்மராசா 02.06.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தர்மராசாவின் அன்பு மனைவியும் சிறீகாந்தன் (ஜேர்மன்),லதா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் பரமேஸ்வரி,இராஜேஸ்வரி,சிவநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரேவதி (ஜேர்மன்),இரத்தினரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அருண்,ஆரபி,லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2017) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாலிசந்தி,**
**காமாட்சி கோயில் வீதி,**
**அல்வாய் தெற்கு.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**077 983 3661**


## விஷேட பல் வைத்திய சேவை

- பல் மூக சீராக்கல் (Consultant Orthodontist)
- மூக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

### சன்றைஸ் மெடி கிளினிக்

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

### றோயல் மெடிக்கல் சென்ரர்

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)


## நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பும்

கடந்த 05.04.2017
புதன்கிழமை பிரான்ஸில்
இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி



**அமரர்**
**சின்னத்துரை பூமணி**

அவர்களின் அந்தியேட்டியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் கடந்த 02.06.2017 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பிரான்ஸில்நடைபெற்றது. அதனையொட்டிஇன்று(04.06.2017)ஞாயிறு மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத் தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அன்னார் இறைபதம் எய்திய செய்திகேட்டு ஆறுதல் கூறி தேறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நின்று தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு துயருற்றிருக்கும் அனைவருக்கும் பலவழிகளிலும் உதவியவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**71, கோவில் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில். [illegible]**

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலச்சந்திரனின் ஒளிப்படம் ஜோதிகா நடிக்கும் படத்தில்

சென்னை, ஜூன் 4

இயக்குநர் பிரம்மாவின் இயக்கத்தில் ஜோதிகா நடித்திருக்கும் திரைப்படம் மகளிர் மட்டும். அந்தத் திரைப்படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியானது. அதில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் புதல்வன் பாலச்சந்திரனின் ஒளிப்படம் ஏந்தியவாறு பெண்கள் விளக்கை கையில் வைத்துக் கொண்டு போராட்டம் நடத்துவது போன்ற காட்சி அமைந்துள்ளது.

மெரினாவில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாகவே காட்சி அமைக்கப்பட்டுள்ளது. பாலச்சந்திரன் எத்தனை காலங்கள் கடந்தாலும் இந்த 21ஆம் நூற்றாண்டில் நடந்த மிகப் பெரும் மனிதப் படுகொலையின் சாட்சியாக, ஆவணமாக மாறியிருக்கிறான் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ற-21)



# கருணாநிதிக்கு வயது 94

சென்னை, ஜூன் 4

தமிழகத்தின் முக்கிய கட்சிகளில் ஒன்றான தி.மு. கழகத்தின் தலைவர் கருணாநிதி நேற்றுத் தனது 94ஆவது பிறந்த தினத்தை வெகு கோலாகலமாகக் கொண்டாடினார்.

கருணாநிதியின் கோபாலபுரம் வீட்டில் நேற்றுக் காலை அரசியல் தலைவர்கள் பலரும் கருணாநிதியை நேரில் சென்று சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். சென்னை, வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று மாலை கருணாநிதியின் பிறந்த நாள் கொண்டாட்டமும் சட்டமன்றத்துக்கு கருணாநிதி பிரவேசித்த வைர விழாக் கொண்டாட்டமும் நேற்று மாலை நடைபெற்றன. இதில் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி, பீகார் முதலமைச்சர் நிதீஸ்குமார் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். 'ஓய்வறியா சூரியனாக 80 ஆண்டுகால பொதுவாழ்வுக்குச் சொந்தக்காரரான தலைவர் அவர்களின் 94 வது பிறந்தநாள் மற்றும் அவரது சட்டமன்றப் பணிகளுக்கான வைர விழா காண்கின்ற இந்த நன்னாளில் நாம் மட்டுமன்றி, இந்திய நாடே அவரை வாழ்த்துகிறது. உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் உள்ளத்தால் வாழ்த்துகிறார்கள்.' என தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், கருணாநிதியின் மகனுமான ஸ்டாலின் தெரிவித்தார். (ம)







தெற்கில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ். மாவட்டத்தில் இருந்து பொருள்கள் கொண்டு சென்ற முதலாவது பார ஊர்தியில் இருந்து 7 லட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர்ப் போத்தல்கள் காலி மாவட்டச் செயலாளர் கொடிக்காரவிடம் கடந்த முதலாம் திகதி ஒப்படைக்கப்பட்டன. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளரும் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர்களில் ஒருவருமான வை.சிவராசா மற்றும் அமைப்பின் இயக்குநர் பேராசிரியர் ஜெயந்த களுபோவில தேசிய அமைப்பாளர் சந்திரபாலன் ஆகியோர் தண்ணீர்ப் போத்தல்களை காலி மாவட்டச் செயலாளரிடம் கையளித்துள்ளனர். (ற-9)

# 95 ஆவது நாளை எட்டியது கேப்பாப்பிலவு போராட்டம்

## காணி விடுவிப்புத் தொடர்பில் அரசு மௌனம்

முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு மக்களின் காணி விடுவிப்புப் போராட்டம் நேற்று 95 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப் படைக் காரியாலயம் பொதுமக்களின் 482 ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. காணிகளின் உரிமையாளர்களான 138 குடும்பங்கள் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தித் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தொடர் போராட்டம் நடத்தும் மக்களைக் கடந்த மாதம் 18ஆம் திகதி சந்தித்தார்.

"இந்தக் காணிகளில் இருந்து வெளியே இராணுவம் 500 மில்லியன் ரூபா பணம் கோருகின்றது. 70 ஏக்கர் இரண்டு குழி காணிகளை விடுவிக்கும் எண்ணம் இராணுவத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை. மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக அரச தலைவருக்கு எடுத்துரைப்போம்." என்று அவர் மக்களுக்குத் தெரிவித்தார். இதுவரை காணி விடுவிப்புத் தொடர்பாக எந்தவொரு பதிலும் எந்தத் தரப்பினராலும் வழங்கப்படவில்லை.

"இரவு, பகலாக நாம் போராட்டம் நடத்துகின்றோம். வெயிலின் கொடுமையாலும், நுளம்புத் தாக்கத்தாலும் எமது குழந்தைகள் நோய்களுக்கு ஆளாகின்றனர். எங்கள் நியாயமான கோரிக்கைக்கு உரிய தீர்வு தராது கூட்டரசு எம்மை மேலும் துன்பமான நிலைக்குத் தள்ளுகின்றது. எங்கள் பிரச்சினை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் கரிசனை கொண்டு ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர். (ற-21,7)

# எவரும் என்னை நீக்கவில்லை: தினகரன் நேற்றுத் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 4

அ.தி.மு. கழகத்தில் இருந்து எவரும் என்னை நீக்கவில்லை. அந்த அதிகாரம் பொதுச் செயலாளருக்கு மட்டுமே உண்டு. கட்சிப் பணியை மிக விரைவில் தொடரவுள்ளேன் இவ்வாறு தெரிவித்தார் டி.டி.வி.தினகரன்.

இரட்டை இலைச் சின்னத்தைப் பெற லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில், கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி இரவு கைதுசெய்யப்பட்டார், டி.டி.வி.தினகரன். விசாரணைக்குப் பின்னர், அவர் டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டார். தனக்குப் பிணை வழங்கக்கோரி, டெல்லி நீதிமன்றத்தில் அவர் தாக்கல்செய்த மனு மீது, கடந்த சில தினங்களுக்கு முன் விசாரணை எடுத்தக் கொள்ளப்பட்டது. இதையடுத்து நேற்றுமுன்தினம் தினகரனுக்குப் பிணை கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, திகார் சிறையிலிருந்து நேற்றுக் காலை டி.டி.வி.தினகரன் வெளியில் வந்துள்ளார். பிறகு சென்னை புறப்பட்ட அவர், டெல்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, 'சிறையில் இருந்தபோது தமிழகத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மத்திய அரசுக்குப் பணிந்து தமிழக அரசு செயல்படவில்லை. சென்னை சென்று, மீண்டும் எனது கட்சிப் பணியைத் தொடர்வேன். என்னை கட்சியிலிருந்து நீக்கியதாக எவரும் அறிவிக்கவில்லை. கட்சியிலிருந்து என்னை நீக்குவதற்கு, பொதுச்செயலாளருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது' என்று தெரிவித்தார். (ம)



### இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில்

# சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 84 பேர்

## வவு. மாவட்ட நீதிவான் மன்ற சமுதாய சீர் திருத்தப் பிரிவு தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 4

வவுனியா நீதிமன்ற சமுதாய சீர்திருத்தக் காரியாலயத்தில் 2017ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை 84 கட்டளையாளர்கள் வவுனியா நீதிமன்றால் சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்ட நீதிவான் மன்ற சமுதாய சீர் திருத்தப் பிரிவு தெரிவித்தது.

அந்தப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் உள்ளதாவது:

40 கட்டளையாளர்கள் கட்டளை நிறைவேற்றி சமுகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எமது திணைக்களம் ஊடாக தனிநபர் உளவள ஆலோசனைகள், குழு ஆலோசனைகள், ஆன்மீக உபதேசங்கள் விரிஏ (VTA) நிறுவனத்துடன் இணைந்து தொழிற் பயிற்சி, தமிழ் சிங்கள பிரதேச செயலகங்களுடன் இணைந்து தொழிற் பயிற்சி, வாழ்வாதார ஊக்குவிப்பு, சிரமதான பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

நன்னடத்தை உத்தியோகத்தர் ஊடாக சிறுவர் தொடர்பாகவும், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக பெண்கள் சம்பந்தமாகவும் வவுனியா போக்குவரத்து பொலிஸார் ஊடாக போக்குவரத்து விதிகள் பற்றியும் விளக்க மளிக்கப்பட்டன. வவுனியா பொது வைத்தியசாலை ஊடாக வைத்திய ஆலோசனை, சிகிச்சைக்கும் உட்படுத்தப்பட்டனர். வவுனியா பொது வைத்தியசாலை ஊடாக நல பிரிவு ஊடாக மாதாந்தம் விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றுவருகின்றது.

வவுனியா மாவட்ட நீதிபதி, மேலதிக நீதிபதியின் ஆலோசனைக்கு இணங்க குற்றச் செயல்களைக் குறைக்க இன்னும் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா விவசாயக் கல்லூரியுடன் இணைந்து விவசாயம், வீட்டுத் தோட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டு சுய தொழில் மேற்கொள்ளுவதற்குமான வழிகாட்டல்களுடன் சமுகத்தில் குடிமகன்களாக தேசமான்ய எம்.ஏ.எம் அனஸ் மற்றும் ஏ.சி அசுருதீன் ஆகியோர் தலைமையில் சமுகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்- என்றுள்ளது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்திக் குத்து: சந்தேகத்தில் இளைஞர் கைது

தென்மராட்சி, ஜீன் 4
சாவு வீட்டில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஏற்பட்ட கத்திக் குத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
வரணி வடக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிக் கிரியை ஒன்றில் கலந்து கொண்டவர்களிடையே மோதல் ஏற்பட்டது என்றும், அங்கிருந்த ஒருவர் தன்னைக் கத்தியால் தாக்கினார் என்றும், தொடையிலும், முதுகிலும் காயங்கள் ஏற்பட்டன என்றும் அதே இடத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
அது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜீன் 4
புங்குடுதீவு கடற்பகுதியில் டைனமற் வெடிமருந்து உபயோகித்து தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் சிக்கினர். இரு படகுகளில் மீன்பிடித்தவர்கள் அவற்றை கரைக்குக் கொண்டுவந்தபோது கடற்றொழில் திணைக்களப் பரிசோதகர்களிடம் சிக்கிக் கொண்டனர்.
கடந்த திங்கட்கிழமை யாழ். மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்துக்கு இது தொடர்பில் இரகசியத் தகவல் கிடைத்தது. திணைக்களப் பரிசோதகர்கள் அந்தப் பகுதிக்கு உடனடியாகச் சென்றனர். டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்த மூவரைக் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மூவரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் நீதிமன்ற உத்தரவின்படி அழிக்கப்பட்டன. (ற-17)

# இரணைதீவு மக்கள் போராட்டம் 34ஆவது நாளாகத் தொடர்கிறது



கிளிநொச்சி, ஜீன் 4
தமது பூர்வீக இடமான இரணைதீவில் தம்மை மீள்குடியமர்த்த வேண்டும் என்று மக்கள் நடத்தி வரும் போராட்டம் நேற்று 34 ஆவது நாளாகத் தொடர்ந்தது.
இரணைதீவில் இருந்து 1992ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக்கள் போர் முடிந்து 8 ஆண்டுகள் கடந்தும் இதுவரை மீள்குடிமர்த்தப்படவில்லை. அங்கு சென்று தங்கித் தொழில் செய்யவும் அனுமதிக்கப்படவில்லை. தற்போது முழங்காவில், இரணைமாதா நகரில் குடி யேற்றப்பட்டுள்ள அவர்கள் தம்மைத் தமது பூர்வீக நிலத்தில் குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.
அவர்களின் கோரிக்கை தொடர்பில் நீண்டகாலமாக எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டபோதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.
தமது கோரிக்கை தொடர்ச்சியாகப் புறந்தள்ளப்பட்டதை அடுத்து கடந்த மாதம் முதலாம் திகதி முதல் இரணைதீவு மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். தமது பிரச்சினை தொடர்பாக மாவட்ட செயலரிடம் மனுவும் கையளித்தனர். அதற்கு எந்தப் பதிலும் வழங்கப்படாத நிலையில் தற்போதுவரை அவர்களின் போராட்டம் தொடர்கின்றது.
தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று இரணைதீவைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் தெரிவித்தனர். (ற21)

## சுற்றாடல் தின நிகழ்வுகள் சுழிபுரம் பிரதேச சபையில்

யாழ்ப்பாணம், ஜீன் 4
வடக்கு மாகாண உலக சுற்றாடல் தின நிகழ்வுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் நடைபெறவுள்ளன. வேள்ட்விசன் லங்கா யாழ்.மாவட்டமுகாமையாளர் ஆர்.ஜெயால்ட் அன்ரனி தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.
சுற்றாடலை ஒருங்கிணைத்து பாதுகாத்து மனிதத்துக்கு உதவோம் எனும் தொனிப்பொருளில் உலக சுற்றாடல தின விழா முன்னெடுக்கப்படவுள்ளது. அன்றுசூழலுக்கு இசைவான துணிப்பை அறிமுகம் செய்யப்படவுள்ளது. நிகழ்வுக்கு வரும் அனைவருக்கும் பெறுமதியான துணிப்பையும், கொய்யா மற்றும் மாதுளை மரங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் சிறப்புரையாற்றுவதுடன் துணிப்பையை அறிமுகம் செய்து பயன் தரு கனிமரங்களை நடுவார். சிறப்பு அதிதியாக வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகாரசபை பணிப்பாளர் எம்.ஏ.சி.நஜீப் கலந்து கொள்வார்.
அதிதிகளாக வலி.மேற்குப் பிரதேச செயலாளர் செல்வி எஸ்.பிறேமினி, வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி கே.சண்முகலிங்கம், வலிகாமம் வலய சங்கனை கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.என் உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)



## வை.எம்.சி. கிராமத்தின் சாலை சீரமைப்புக்கு நிதி

கிளிநொச்சி, ஜீன் 4
பரந்தன், கோரக்கன்கட்டு வை.எம்.சி. கிராமத்துக்குச் செல்லும் பிரதான சாலைச் சீரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதிக் கிராம அலுவலர் தெரிவித்தார்.
அந்தக் கிராமத்தில் வசிக்கும் சுமார் 50 குடும்பங்கள் போரின் பின்னர் மீள்குடியமர்ந்தவர்களாவர். முல்லைத்தீவுக்குச் செல்லும் பிரதான சாலைக்கு அருகில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது.
கிராமத்துக்கான சாலை சேதமடைந்திருந்த நிலையில் மழை காலங்களில் போக்குவரத்துத் தடைப்பட்டது. மீள்குடியமர்ந்து 7 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் ஆண்டுதோரும் தாம் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது என்று கிராம மக்கள் தெரிவித்தனர். தற்போது சாலைச் சீரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும் என்று கிராம அலுவலர் தெரிவித்தார். (ற-6)

## விபத்தில் மாணவி காயம்

அளவெட்டி, ஜீன் 4
பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய மாணவியை வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பன்னாலையில் நடந்துள்ளது.
பன்னாலை சேர். கனகசபை அ.த.க. வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கும் குணதாசன் லோசிகா எனும் மாணவியே சம்பவத்தில் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-36)

### மூடப்பட்ட தொடருந்து கடவையூடாகச் சென்று

## பயணிகளின் உயிருடன் விளையாடிய சாரதி

தென்ராட்சி, ஜீன் 4
தொடருந்து வருவதற்கு அபாய ஒலி எழுப்பப்பட்டுக் கடவையும் மூடப்பட்டிருந்த நிலையில் காத்திருந்த வாகனங்களைத் தாண்டிச் சென்ற சிற்றூர்தி கடவையில் காணப்பட்ட இடைவெளியூடாக கடவையைக் கடந்து சென்றது.
சிற்றூர்தியில் இருந்த பயணிகள் அச்சத்தில் அலறியதைக் கவனத்தில் கொள்ளாத சாரதி தனது "திறமையை" வெளிக்காட்டுவதில் முனைப்பாக இருந்தார் என்று சம்பவத்தைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை யாழ். கச்சேரி தொடருந்துக் கடவையில் நடந்தது என்று தெரிவிக்கப்பட்டது. சாரதியின் இந்தப் பொறுப்பற்ற நடவடிக்கையால் அந்தப் பகுதியில் இருந்தவர்களும், பயணிகளும் கடும் விசனமடைந்தனர்.
வடக்கு மாகாணத்தில் தொடருந்துடனான விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில், மூடப்பட்ட கடவையூடாக சிற்றூர்தியைச் செலுத்திச் சென்ற சாரதியின் நடவடிக்கை மிகவும் கண்டனத்துக்குரியது. கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற சிற்றூர்திச் சாரதியே இவ்வாறு பொறுப்பற்ற வகையில் சிற்றூர்தியைச் செலுத்திச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## பதிவிலக்கம் இல்லாத மீன்பிடிப் படகு கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஜீன் 4
காங்கேசன்துறைக் கடற்பரப்பில் பதிவிலக்கம் இல்லாது மீன்பிடியில் ஈடுபட்ட படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. அதிலிருந்த 4 மீனவர்களையும், படகையும் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.
படகில் பதிவிலக்கம் பொறிக்கப்படாததாலும், பதிவு புதுப்பிக்கப்படாததாலும் மீனவர்கள் மல்லாகம் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத் தப்பட்டனர். அவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
மீன்பிடிப் படகுகள் அனைத்திலும் பதிவிலக்கம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். பதிவு இலக்கம் பொறிக்கப்படாவிட்டாலோ, புதுப்பிக்கப்படாதிருந்தாலோ சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)





## முச்சக்கர வண்டி தடம்புரண்டதில் நான்கு பேர் வைத்தியசாலையில்

வவுனியா, ஜீன் 4
வவுனியா, வைரவப்புளியங்குளம் குளக்கட்டு வீதியில் நேற்று மதியம் முச்சக்கர வண்டியொன்று தடம்புரண்டது. அதில் நால்வர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
லக்சபானா வீதியிலிருந்து தொடருந்து நிலையம் நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியே தடம்புரண்டது. முச்சக்கர வண்டியில் பயணித்த நால்வரே காயமடைந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால அவகாசம் இன்றோடு நிறைவு அகல மறுக்கின்றது இராணுவம்

## புதுக்குடியிருப்பு மக்கள் கவலை



முல்லைத்தீவு, ஜூன் 4
இராணுவம் கையகப்படுத்தியுள்ள புதுக்குடியிருப்பு மக்களின் காணிகள் 3 மாத கால அவகாசத்தில் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பாக இராணுவத்தினர் தற்போது வரை மௌனமாக இருக்கின்றனர் என்று காணிகளின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பிலக்குடியிருப்பில் மக்கள் நில மீட்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொன்னம்பலம் வைத்தியசாலை அமைந்திருந்த காணி உள்ளடங்கலாக இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க் கோரி அவற்றின் உரிமையாளர்களும் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தொடர் போராட்டம் ஒரு மாதத்தை அண்மித்த சந்தர்ப்பத்தில் நில மீட்புக்கான இரு போராட்டங்களுக்கும் மக்கள், மற்றும் பொது அமைப்புக்களினுடைய ஆதரவுகள் பல்கிப்பெருகின. எதிர்கட்சித் தலைவர் உட்பட அரசியல் தலைவர்கள் அரச தலைவருடன் பேச்சு நடத்தினார். காணி விடுவிப்பிற்கான உறுதி மொழியை அரச தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

இராணுவத்தால் மாவட்ட செயலாளர் ஊடாக காணி விடுவிப்பு தொடர்பில் ஒரு கடிதம் மக்களுக்கு வழங்கப்பட்டது. 7.75 ஏக்கர் காணி முதல் கட்டமாக விடுவிக்கப்படும் எனவும் மிகுதி 10 ஏக்கர் காணி இரண்டாம் கட்டமாக 3 மாதங்களில் விடுவிக்க ப்படும் எனவும் எஞ்சிய பொன்னம்பலம் வைத்தியசாலை அமைந்துள்ள காணி 6 மாதங்களில் விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு கால அவகாசங்கள் கோரப்பட்டன.

காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மாற்று காணிகளில் செல்வதற்கும், அவர்களுடைய பொருட்களை அங்கிருந்து நகர்த்துவதற்குமே அந்தக் கால அவகாசம் கோரப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. அதை மக்கள் ஏற்றுக்கொண்டனர். கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி முதல் கட்டமாக காணிகள் விடுவிக்கப்பட்டன. இன்று 4 ஆம் திகதியுடன் 3 மாத கால அவகாசம் முடிவடைகின்றது.

"3 மாத கால அவகாசம் முடிந்துள்ளது. இராணுவத்தினர் இங்கிருந்து அகல்வதற்கான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அவர்களின் உடமைகள் இங்கிருந்து நகர்த்தப்பட்டதாகவும் தெரியவில்லை. அரசு எங்களை ஏமாற்றிவிட்டது என்றே உணருகின்றோம். எம்மால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளான மாவட்ட செயலரும் இராணுவத்தினரை அணுகி வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற ஆவண செய்ய வேண்டும். இராணுவத்திடம் இருந்து எமது காணிகளை மீட்டுத் தர வேண்டும்." என்று காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-21,7)

## மாணவனின் சாவுக்குக் காரணமான ஆசிரியரைப் பணி நீக்கவேண்டும்

### கனகராயன்குளம் பாடசாலை மாணவர்கள் கோரிக்கை

வவுனியா, ஜூன் 4
தமது நண்பனின் இறப்புக்கு ஆசிரியர் காரணம் என்று குற்றஞ்சாட்டிய சக மாணவர்கள் அவரைப் பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

வவுனியா, கனராயன்குளத்தைச் சேர்ந்த தர்மராசா ஜனார்த்தனன் (வயது-17) என்ற மாணவன் தவறான முடிவெடுத்து விசமருந்தி உயிரிழந்தார். அவரது இறுதிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் அம்பாள்குளம், குறிசுட்டான்குளத்தில் நடந்தது. அங்கு திரண்டிருந்த மாணவர்களே இவ்வாறு தெரிவித்தனர்.

"சிரமதானம் ஒன்றின்போது இரு மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட பிணக்குக் காரணமாக சக மாணவர்களின் முன்பாகத் தண்டனை வழங்கப்பட்டது. அதனால் மனமுடைந்தே இவ்வாறான முடிவு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர் தண்டித்த விதமே இதற்குக் காரணம். இந்த ஆசிரியர் ஏற்கனவே ஒரு மாணவனுக்கு அறைந்து மாணவனுக்குக் காது கேட்காத நிலைமை காணப்படுகின்றது. இந்த ஆசிரியர் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும். வேறு பாடசாலைகளிலும் பணியாற்ற அனுமதிக்கக் கூடாது" என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

"ஆசிரியர் தண்டித்தமைக்கும் மாணவன் உயிரிழந்தமைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. நாங்களும் படிக்கும்போது தவறு விட்டால் தண்டிக்கப்பட்டோம். அவ்வாறு கற்றே இந்த நிலைமைக்கு வந்துள்ளோம். மாணவர்கள் தவறுகள் விடும்போது தண்டிக்க வேண்டும். அப்போதே அவர்கள் ஒழுக்கமானவர்களாக உயர்வார்கள். கனகராயன்குளம் பாடசாலை தற்போது கல்வியில் உயர்கின்றது. எழுந்தமானமாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு மாணவர்களின் மனங்களைக் கெடுக்கக் கூடாது. பாடசாலையின் பெயரையும் கெடுக்கக் கூடாது." என்று தெரிவித்தார் பாடசாலையைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர்.

"சுட்டிக்காட்டப்படும் ஆசிரியர் மீது துறைசார் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாணவர்களுக்கு சரீர ரீதியில் தண்டனை வழங்கக் கூடாது என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 14 ஆயிரம் ஆசிரியர்கள் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு கையொப்பம் இட்டுள்ளனர்." என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். (ந-21)

## ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்தில் திருடிய சந்தேகத்தில் மூவர் கைது

வவுனியா, ஜூன் 4
ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்தில் உள்ள பிரதேச செயலரின் வீட்டில் திருடியவர்கள் என்ற சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ்தடி சில்வா தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் பிரதேச செயலர் வீட்டில் நகைகளும், பணமும் திருடப்பட்டன. இது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் ஓமந்தை, மாணிக்கவளவுப் பகுதியில் குற்றச் செயலில் ஈடுபட்ட ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிரதேச செயலர் வீட்டில் திருடியமை தெரிய வந்தது. அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் செட்டிக்குளம், மெனிக்பாமில் இருவர் கைது செய்யப்பட்டனர். இன்னுமொருவர் தேடப்பட்டு வருகின்றார்.

கைது செய்யப்பட்டவர் பிரதேச செயலர் வீட்டில் முன்னர் கட்டட வேலைகளில் ஈடுபட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-402)




வடக்கு மாகாண அஞ்சல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் 45 அலுவலர்கள் உட்பட 50 பேர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்குப் பயிற்சிக்காக அழைத்து வரப்பட்டனர். வடக்கு மாகாண அஞ்சல் திணைக்களத்தால் அஞ்சல் அதிபர்களாக நியமனம் பெற்று இருவாரப் பயிற்சி பெறும் 17 அலுவலர்களும், அஞ்சல் அலுவலகங்களில் கடமையாற்றி பதவியுயர்வு பெற்று 6 மாதப் பயிற்சி பெறும் 28 பேரும், கல்லூரி அலுவலர்களும் அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்றனர். கடந்த ஆண்டு தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் வெற்றி பெற்ற அஞ்சல் அலுவலகச் செயற்பாடுகளை அவர்கள் பார்வையிட்டனர். (ந-9)

## கரைச்சிப் பிரதேச சபையில் இருந்த கைரேகைப் பதிவுக் கருவி திருட்டு



கிளிநொச்சி, ஜூன் 4
கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையில் பணியாளர்களின் வரவை உறுதிப்படுத்துவதற்குப் பொறுத்தப்பட்டிருந்த கைரேகைப் பதிவுக் கருவி காணாமல் போயுள்ளது என்று பிரதேச சபைச் செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை பணி முடிந்து பணியாளர்கள் வெளியேறியபோது கைரேகை அடையாளம் பதியப்பட்டது. நேற்று முன்தினம் காலை கருவி காணாமல் போயுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-35)



தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, சிறிலங்கா இன்சுரன்சின் வடபிராந்திய அலுவலகம் சேகரித்த உலர் உணவுப் பொருள்கள், அந்த நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில், முகாமைத்துவப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன. (ந)

## டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தில் சாவகச்சேரியில் 1,900 இடங்கள் தரிசிப்பு

தென்மராட்சி, ஜூன் 4
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் கடந்த இரு தினங்கள் நடத்தப்பட்ட தேசிய டெங்குக் கட்டப்பாட்டுச் செயற்றிட்டத்தில் ஆயிரத்து 900 இடங்கள் தரிசிக்கப்பட்டன. 7 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த முதலாம் திகதி மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சரசாலை தெற்கு மற்றும் வடக்கு, மட்டுவில் கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய பிரிவுகளில் உள்ள 986 இடங்களில் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டது. 89 பேருக்கு காணிகளைத் துப்புரவாக்குவதற்குரிய இருவார கால அவகாசம் வழங்கப்பட்டு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது. டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட குடியிருப்பாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

மறுநாள் கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகா பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் மத்தி, கச்சாய், கெற்பேலி ஆகிய பிரிவுகளில் உள்ள 898 இடங்களில் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டது. 76 பேருக்குச் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. 6 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்புக்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள், கட்டட கட்டுமானங்கள் நடைபெறும் இடங்கள் என்பவை தரிசிக்கப்பட்டன.

சுகாதாரத் திணைக்கள அலுவலர்களுடன் சாவகச்சேரி, கொடிகாதம் பொலிஸ் நிலையங்களின் சுற்றுச்சுழல் பாதுகாப்புப் பொலிஸார், படையினர், தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்கள், கிராம டெங்குக் குழு உறுப்பினர்கள் தரிசிப்புகளின் இணைந்திருந்தனர்.

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பத்தேகமவில் விபத்துக்குள்ளான உலங்குவானூர்தி மீட்கப்பட்டது






கொழும்பு, ஜூன் 4

நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, வீழ்ந்து விபத்துக்குள்ளான உலங்குவானூர்தி 6 நாள்களின் பின்னர் மீட்கப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி தென்பகுதியில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உலங்குவானூர்தி ஊடாக நிவாரண விநியோகம் முன்னெடுக்கப் பட்டது. நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த எம்.ஐ.17 உலங்கு வானூர்தி, காலி பத்தேகமப் பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. விமானியின் சாதுரியத்தால் உயிர்ச் சேதங்கள், பொருள் சேதங்கள் பெருமளவு தவிர்க்கப்பட்டிருந்தன. மே 29 ஆம் திகதி வீழ்ந்த உலங்கு வானூர்தியை உடனடியாக மீட்க முடியாத அளவுக்கு அந்தப் பகுதியில் வெள்ள நீர் நிரம்பிக் காணப்பட்டது.

வெள்ள நீர் வடிந்தோடிய நிலையில், உலங்கு வானூர்தி நேற்றைய தினம் பெக்கோ இயந்திரங்களின் உதவியுடன் மீட்கப்பட்டது.

உலங்குவானூர்தியைத் திருத்துவதற்கான பாகங்களை இந்தியா ஏற்கனவே இலங்கை வான்படைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### வீடு விற்பனைக்கு
நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் வீடொன்று விற்பனைக்கு உள்ளது. தரகர் வேண்டாம்.
**011 271 0534**

### விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் உள்ள ஐஸ்கிறீம் வாகனம் விற்பனைக்குண்டு.
NP28 - XXXX
**077 179 0595**

### காணி விற்பனை
இல.25/27, கண்டிவீதி, சாவகச்சேரியில் பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் 10.5 பரப்புக் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
076 930 0123
Viber - 0090 5252 7232

### வெற்றுக்காணிகள், தென்னந்தோப்பு விற்பனைக்கு
ஏ9 வீதி, கைதடி, நுணாவில் பகுதியில் படைப்பு வளவு எனப்படும் 25 பரப்புக் காணி யும், இக்காணியின் எதிர்ப்புறமாக 9 பரப்புக் காணியும் உடன் விற்பனைகுண்டு. இக் காணி சகடத்தூர் வளவு என அழைக்கப் படும். மேலும் நுணாவில் - கல்வயல் வீதியி லுள்ள (காப்பற்வீதி) கந்தளி எனுமிடத்தில் நவசர் தோட்டம் எனப்படும் 52 பரப்புத் தென்னந் தோப்புக் காணியும் விற் பனைக்கு உண்டு. தொழிற்சாலை அமைப்பதற்கு உகந்தது தென்னந்தோப்பு யுத்தத்தால் அழிந்து போயுள்ளது. 2 கிணறு. மா. பலா மரங்கள் உண்டு.
**077 747 1050, 077 960 3001, 077 356 5345**

### வீடு விற்பனை
உடுவில் பிரதேச செயலக வீதியில் புதிய வீடொன்று விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
**077 625 6519**

### வீடு விற்பனைக்கு
சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 2 பரப்புக் காணியில் 4 அறை, சமையலறை, கோல், குளியலறை வசதியுடன் வீடு விற்பனைக்கு.
077 967 2472, 021 300 7064

### விற்பனைக்கு
இசுசு ஜெமின் மோட்டார் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
சனி, ஞாயிறு மட்டும்.
(CS 004634) (14)
**077 684 8324/ 021 222 7650**

### காணியும் வீடும் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கச்சேரி . நல்லூர் வீதியில் முத்திரைச்சந்திக்கு அண்மித்ததாக $1\frac{1}{2}$ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
**075 796 0594**

### விற்பனைக்குண்டு
புதிய மோட்டார் சைக்கிள்கள்
HONDA MD90 (Japan) - 248 000/=
CUSTOM 90 (China) - 125 000/=
MD 90 உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு.
இல.4, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(பெற்றோல் செட் முன்பாக)
077 454 6371/ 021 321 5765



## தேவை



### மணிக்கூடுகள் தேவை
Rolex, Omega, Phatap philiph, Carteir மற்றும் Swiss மணிக்கூடுகள் விலைக்கு வாங்கப்படும். (பழைய கால) பழுதடைந்ததும் ஏற்றுக்கொள்ளப்படும்.
அழையுங்கள் - 077 035 0805, 077 703 1041

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 07.05.1981, 10மணி 55 நிமிடத்தில் பிறந்த கனடா PR உள்ள கிரகபாவம் $32\frac{1}{2}$ சூரி.சுக்கிரன், செவ் 10 இல், 3 ஆம் பாதம் மிருகசீரிடம் நட்சத்திரமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
**077 370 3671**

### வேலையாள்கள் தேவை
- காசாளர்
- விற்பனையாளர்

யாழ். நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்றுக்குத் தேவை
(A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது)
(இருபாலாரும் விரும்பத்தக்கது)
கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
**077 314 7580**

### மணமகள் தேவை
அச்சுவினி நட்சத்திரம் 3ஆம் பாதம் உடைய அரச தொழில் உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.
(சீதனம் முதன்மைப் படுத்தப்பட மாட்டாது)
**077 159 14 68**

### தேவை
திருநெல்வேலியில் இயங்கும் பூட்சிற்றி ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை. முழு/பகுதி நேரம் தொடர்பு கொள்ளவும் ஆண், பெண் இருபாலாரும்.
**077 748 0357** (AJA CS 4666) (14)

### காணி குத்தகைக்கு தேவை
கோண்டாவில், இராசபாதை வீதி பகுதிகளில் தோட்டக் காணி குத்தகைக்கு தேவை.
**077 892 4932**

### தேவை
சாவகச்சேரியில் இயங்கும் சிற்றுண்டி நிலையத்துக்குப் பெண் விற்பனையாளர் தேவை.
077 271 9116

### தேவை
மாவட்ட ரீதியான பொது தொடர்பு அலுவலர்கள் தேவை (ஆண்/பெண்)
அடிப்படைச் சம்பளம் 50.000
தொ.பே:. **071 865 2510**
**077 104 2510**
**071 865 2505**

### தேவை
ஊதுபத்தி தொழிற்சாலைக்குப் பெண்பிள்ளைகள் தேவை.
K.K. தொழிற்சாலை,
மகளிர் திட்டம், மிருசுவில்.
**077 602 3002**

## ஏனையவை

### வாடகை/ மீள்பாவனை
வீடு வாடகைக்கு உண்டு. சகல வாகனங்களின் பிளாஸ்ரிக் பொருள்கள் சிறந்த முறையில் குறைந்த செலவில் மீள் திருத்திக் கொடுக்கப்படும். (CS 4668) (14)
**075 542 8128**
பழைய தபாற்கந்தோர் வீதி, K.K.S Road, Kokuvil.

### மணமக்கள் உள்ளனர்
சகல கிறிஸ்தவர்களுக்கும் மணமகன். மணமகள் உள்ளனர். முதல் முறையாக தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இலக்கம் 5538
C/O - உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் 789, 785 பேருந்து மார்க்கத்தில் Carpet வீதி முகப்புடன் 6 அறை வசதியான வீடு பயன் தரு மரங்களுடனும், தளபாடங்களுடனும் உடனடியாக குடி புகக் கூடிய முறையில் வாடகைக்கு உண்டு.
**077 203 5419**

### உடன் வாடகைக்கு உண்டு
நல்லூர்க் கோயிலுக்கு மிக அண்மையில் வடக்குப் பக்கம் அமைதியான சூழலில் கோயில் வீதியில் 5 அறைகள், சமையல் அறை, சாப்பாட்டறை, வரவேற்பறை, 2 இணைந்த குளியலறைகள் என்பன கொண்ட சகல வசதிகளுமுள்ள மாபிள் பதித்த புதிய மேல்மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
**076 796 4127**

### வீடு வாடகைக்கு உண்டு
இரண்டு மாடிகளைக் கொண்ட சகலவசதிகளை உடைய வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கு உகந்தது. நேரில் பார்வையிடலாம்)
**075 908 2636/ 075 208 2636**
99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### கடை வாடகைக்கு
இல.137, கஸ்தூரியார் வீதி (நகரமையப்பகுதி)
நீளம் 115" அகலம் 13"
**077 351 8131**

### வீடு வாடகைக்கு
பழைய பூங்கா வீதியில் சுண்டிக்குளியில் 4 அறைகளும் இரண்டு பெரிய Double Hall, மேல் மாடியில் பெரிய Hall, 4 கார்கள் விடக்கூடிய தரிப்பிட வசதியும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
**076 602 3324**

### நாகபூஷணி திருமண சேவை
எம்மிடம் ஏராளமான மணமக்கள் உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் தரப்படும். ஏழு நாள் களும் திறந்திருக்கும்.
383/ 14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர்க் கோயில் வடக்குப் பக்கம்)
**077 138 7596, 021 222 9306**

### மணமகள் தேவை
- 81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 36 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மண மகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
- 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 24 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 88 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 7 பாவமுடைய BSc இஞ்சினியர் மணமகனுக்கு 5 அடி 7 அங்குலத்தில் பட்டதாரி மணமகள் தேவை.
- 84 இல் பிறந்த 12 இல் செவ்வாய் $33\frac{1}{2}$ பாவ முடைய விவகாரத்துபெற்ற இஞ்சினியர் மணம கனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 8 இல் சூரியன் செவ்வாய் $43\frac{1}{2}$ பாவமுடைய MSc இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

சூரியன் செவ்வாய் குற்றமுள்ள குற்றமில்லாத உள்நாட்டில் வெளிநாட்டில் தகுதியான மண மக்கள் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
(பூங்கனிச் சோலையடி முடமாவடி)
தொடர்பு: **077 607 0862**

### அனெக்ஸ் வாடகைக்கு
ஓட்டுமடம் சந்திக்கருகாமையில் வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. (வயதானவர்கள் பெண்கள் விரும்பத்தக்கது)
**071 098 2743**

### வீடு வாடகைக்குத் தேவை
வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு யாழ்.நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. ஒரு மாதத்துக்கு மட்டும்.
077 231 7230

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### வாடகைக்கு
யாழ் நகரில் அறைகள் (றூம்) மாத வாடகைக்குண்டு. (CS 4667) (14)
**077 728 3811**

### பிரத்தியேக கணித வகுப்புக்கள்
C.K.B.THAYALAN
Gr6 - G11 வகுப்புக்கள்
2017(O/L) கணித வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பம்.
85, பலாலி வீதி, கந்தர்மடம்(சந்தி)
**077 688 8946**

### வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் உள்ள விற்பனை நிலையத்திற்கு கீழுள்ள பதவிக்கு வேலைவாய்ப்பு உள்ளது.

**விற்பனை நிர்வாகி**
- க.பொ.த. உ/தர சித்தி
- சந்தைப்படுத்தல் தொடர்பான 2 வருட அனுபவம்
- தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- 20-32 வயதிற்கு உட்பட்ட ஆண்களாயிருத்தல்
- மோட்டார் சைக்கில் ஓட்டுனர் உரிமம் இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள தகமைகள் உள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையினை இவ்விளம்பரம் பிரசுரமான திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்குமாறு கீழுள்ள மின்னஞ்சல் அல்லது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஜினசேன (பிரைவெட்) லிமிட்டட்
இல. 174, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்: jaffna@jinasena.com.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# SAY YES TO A BRIGHT FUTURE



## AUUP

" Qualified Professional Degree" and Working Permit

Bachelor of Information & Communication Technology

Bachelor of Business

Bachelor of Commerce (Accounting)

New Intake June 23

10 Months in Sri Lanka

2 Years in Australia

" Qualified Professional Degree" and Working Permit

**இன்றைய இளைஞர்களின் வெளிநாட்டுக் கனவினை இலகுவாக நிறைவேற்றுவதற்கான வழிகாட்டலை பெற்றிடுங்கள்**

முதலாம் வருடத்தை இலங்கையிலும் இறுதி இரு வருடங்கள் அவுஸ்ரேலியாவிலும் தொடரும் வாய்ப்பு

.பட்டப்படிப்பின் போது 2 வருடங்கள் வேலைக்கான அனுமதி

.இலகுவான கட்டண முறைகள்

.உலகத்தரம் வாய்ந்த தொழில்முறைப்பட்டதாரி ஆகுவதற்கான அரியவாய்ப்பு

மேலதிக தகவல்களுக்காக

**WHITE LOTUS CAMPUS**
No. 154,A1 Navalar Road, Jaffna
Tel - 0217223773,0776223963

# சரியான சூழல் மதிப்பீடுகள் இல்லாத அபிவிருத்திகளே இடருக்குக் காரணம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

சரியான சூழல் மதிப்பீடுகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காரணமாகவே நாட்டில் இடர்கள் அதிகரித்துள்ளன என்று பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கால்வாய்கள் மற்றும் நீர்வழிகளை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டங்களை அகற்றுதல், நகரப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றுதல் தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலக வெப்பமயமாதல் காரணமாக எதிர்வரும் 50 வருடங்களில் யாழ்ப்பாணம் அரைப் பாலைவனமாக மாறும் வாய்ப்பு உள்ளது. தாய்நாட்டுக் கோரிக்கைக்காகக் கூச்ச லிடுவதற்கு முன்னர், மக்கள் தமது நிலங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தற்போது யாழ்ப்பாணத்தை மூலோபாய முறையில் அபிவிருத்தி செய்து அந்தச் சூழலைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது.

பேரழிவுகள் ஏற்படுவதற்கு முன்னர் எச்சரிக்கை விடுக்க முடியாமல் போவது பெரியபிரச்சினையாகும்.

மக்களின் பாதுகாப்புக்காக, நிலையான மக்கள்மையத்தைக் கட்டியெழுப்புவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. என்றார். (ஐ-10)

## இந்திய முறையிலான சாறி பிளவுஸ் கட்டிங்

★ சாறி பிளவுஸ் கட்டிங் பயிற்சிகள்.
★ ஆறு (6) விதமானவை (பிளவுஸ் 6, பஞ்சாபி 6)
★ வெளிநாடு செல்பவர்களுக்கு உகந்தது.
★ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ நிச்கேக் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

**221, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P: 077 3149 386**

(CS/4672)(10)

## வேலைவாய்ப்பு

யாழில் உள்ள பிரபல ஸ்ருடியோ ஒன்றுக்கு **Graphic Designers** தேவை. **O/L, A/L** சித்தி **Photoshop** இல் தேர்ச்சி மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விரும்புவோர் உடன் நேரில் வரவும்.

**Win Star Job Bank**
122, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
**Tel: 021 320 2789**

(CS/4675)(10)

## சமூக வலைத்தள பயிற்சிப் பட்டறை

வளவாளர் மேர்வின் மக்குலா அயர்லாந்து
இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்று, தேவ சபைகள் சங்கம் இலங்கை
Organized By: NCC with AG Ceylon

இடம் : YMCA Jaffna (A/C)
திகதி : 17 th June 2017
நேரம் : 9.00 am - 4.30 pm
கட்டணம் : Rs. 1000

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி
Limited Seats Only

Introduction to church and social media
What social media platforms we should use
How do we produce context
How do we manage the risks + Benerits as an Organisation



பெறுமதியான சான்றிதழ், மதிய உணவு, இருவேளை சிற்றுண்டி பானங்கள் வழங்கப்படும்...

கட்டணத்தை செலுத்தி வரவை உறுதிப்படுத்தவும் !

கொண்டு வரவேண்டியது: ஸ்மாட் போன், குறிப்பு புத்தகம், தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி
Please Bring Smart Phone, Pen and Note book, Should have a personal Email address
Contact: Pastor Rajah, Kanagalingam Mobile: 077 729 9991

## வேலைவாய்ப்பு

வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் முன்னணி கட்டட நிர்மாணத் துறைக்கு கொக்கு ஆபரேட்டர், வோர்கிளிப்ட் ஆபரேட்டர், பூர்ம் டரக் ஆபரேட்டர், லோபேர்ட், 10 சக்கர ஏற்றி லொறி, சாரதிகள் தேவை. இரவு, பகல் வேலை செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். மாதாந்தம் ரூ.65,000 - 75,000 சம்பளம் பெறக்கூடியதாக இருக்கும்.

**ஜெயலத் - இல.658, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 9**
**கொமர்ஷல் வங்கிக்கு அருகில்**
**தொ. எண் - 011 269 3646, 071 453 2193**



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## அறிவித்தல்

### 2017 உயர் திருவிழாக் காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல் உடை தேங்காய் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த உயர் திருவிழா 25.06.2017 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 09.07.2017 ஆம் திகதியன்று நிறைவு பெற உள்ளது. இக்காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு, நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடை தேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 11.06.2017 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:-**

1. குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
2. ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவுக்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும்.

**அன்னையின் பணியில் நா.யோகநாதன்**
**செயலாளர், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு.**

## Blue Skyy Agency

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர் தேவை.(ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் )

தகைமைகள் :

**விற்பனை உதவியாளர்**

- **க. பொ.த (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்.**
- **முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.**
- **வயதெல்லை 19 –45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.**

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 10. 06. 2017 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**பிற்குறிப்பு :**
**மாத சம்பளம் ரூ** .25000 வழங்கப்படும்.

**விண்ணப்ப முகவரி :** Blue Skyy Agency
**173, கே. கே. எஸ் வீதி,**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை மாத்திரைகளுடன் இளைஞர்கள் மூவர் கைது

கொழும்பு, ஜூன் 4
500 போதை மாத்திரைகளுடன் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கல்முனை மட்டக்களப்பு நெடுஞ்சாலையின், கல்லடிப் பிரதேசத்தில் இடம்பெற்றது. பிறைந்துறைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கல்முனையிலிருந்து சுமார் முப்பாதாயிரம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளை, பிறைந்துறைச்சேனைக்கு முச்சக்கர வண்டி மூலம் கொண்டுச் செல்லும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட மூவரும் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-10)

## வங்கியில் பணமோசடி: பெண்ணுக்கு 18 வருடங்கள் கடூழியச் சிறை

கொழும்பு, ஜூன் 4
வங்கி ஒன்றில் பண மோசடி செய்த இளம் பெண் ஒருவருக்கு பொலனறுவை நீதிமன்றம் 18 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது. பொலனறுவை பெந்திவல ஜயந்திபுரப் பிரதேசத்தைச் சேர்ந்த சாந்தனி அபேசூரிய என்ற இளம் பெண்ணுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு மக்கள் வங்கியில் தற்காலிக அடிப்படையில் பணி வழங்கப்படுகின்றது. இவ்வாறு பணிக்குச் சென்ற பெண் ஒருவரே பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். இவர் சுமார் முப்பது இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த பெண்ணுக்கு உயர் நீதிமன்ற நீதிபதி நிமால் ரணவீர 18 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்ததுடன், 90 இலட்ச ரூபா நட்டஈடு செலுத்துமாறும் உத்தரவிட்டார்.
அதேவேளை மோசடிக்கு உதவிய அவரது சகோதரரான இந்துனில் சமன் குமாரவுக்கு 18வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
குறித்த பெண் கடந்த 2001ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். 2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்த மோசடியில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டு, சட்டமா அதிபரினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## மகாஜன சபை கட்டடத்தின் சீரமைப்பு பணிகள் இன்று


அளவெட்டி, ஜூன் 4
அளவெட்டி மகாஜனசபைக் கட்டடத்துக்கான சீரமைப்புப் பணிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிமுதல் 8.30 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளன.
மகாஜனசபையின் தலைவர் வை.பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல் நடுவார். (ஐ-36)

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your
Academic / General
IELTS
Next exam date in Jaffna. 24 June 2017
29 July 2017
idp www. idp.com/srilanka
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

வேலையாள்கள் தேவை
காரைநகர் சீநோர் வேலைத்தளத்துக்கு சகல கட்டுமானப் பணிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் வேலையாள்கள் தேவை.
077 366 2349

Study with Part time Work
Malasiya / Singapore / Cyprus
• முதலாம் வருடம் படித்துவிட்டு 2ம் வருடத்தில் இருந்து வேலை.
• 2ம் வருடம் வேலையுடன் சேர்ந்து படிப்பை முடித்துவிட்டு 3ம் வருடம் Australia / USA வில் மேற்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு.
2017 July/September பிரிவுகள்
O/L - 3C, 3S மட்டும் IELTS தேவையில்லை
வரையறுக்கப்பட்ட மாணவர் குழாம் மட்டும் அங்கீகரிக்கப்பட்ட College மட்டும் அங்கீகரிக்கப்பட்ட Hotel ல் வேலை
தங்குமிட வசதி இலவசம்
சேவை
UK/ USA/ Canada
Swiss/Franch
போன்ற நாடுகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அனைத்து சேவைகளும் செய்து தரப்படும்
Bank Balance (வங்கியில் பண வைப்பு)
விண்ணப்பம் நிரப்புதல்
Appointment போடுதல்
Document சரிபார்த்தல்
Document தயார்படுத்தல்
போன்ற சேவை
NEW WAY SKY LINE INSTITUTE
No. 2C, IBC Road, Colombo -06.
(Near by Arpico Wellawatte - sea side)
Tel : 0114 575 043 / 077 334 7332

முன்னேற்றப் பாதையை நோக்கி இன்னுமோர்
அடியை எடுத்து வைக்க
உங்களுக்கோர் திரிபல!



தொழிற்சாலைகள் | சேவைகள் | வணிகம் | கமத்தொழில்

சிறிய மற்றும் நடுத்தர வியாபார அபிவிருத்திக்கு, நிதி உதவிக்கும் அப்பாற்பட்ட பல சேவைகள்

உங்களின் வியாபாரத்தினை தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் வெற்றிகரமாக்கிக் கொள்ளுங்கள். இந்த அடியினை எடுத்து வைக்க உங்களுக்கு உந்துசக்தியாகத் திகழ்கின்றது கொமர்ஷல் வங்கியின் திரிபல அபிவிருத்திக் கடன்.

• வியாபாரம் சம்பந்தமான திட்ட அறிக்கை அவசியமில்லை
• சூழல் நட்புறவு சம்பந்தமான திட்டங்களுக்கு விசேட வசதி
• வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு அவசியமான தொழில்நுட்ப, சக்திவள மற்றும் நிதி முகாமைத்துவ அறிவுரைகள்
• நாடு முழுவதும் பரந்துள்ள கிளை வலையமைப்பு ஊடாக விரைவான, இலகுவான கடன் வசதி

விரைவான அனுமதி

உள்ளடங்கலாக நிதி உதவியுடன் கூடிய சக்தியாக திரிபல அபிவிருத்திக் கடன் திட்டம்.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்: 011 2 353 850 / 011 2 353 851 / 011 2 353 852

திரிபல
அபிவிருத்திக் கடன்
COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது  Fitch Rating - AA (lka)  +94 112 353 333  www.combank.lk

## வேலைவாய்ப்பு

1. Technical Office (NCT (Civil),NDT (Civil), HND (Civil) or Equivalent)
2. பட வரைஞர் - Certificate in Draughtsman and Auto CAD 2D. 3D with Quantity surveying Experience

**Your CV and Covering letter must be send Before 9th June 2017**

021 221 3663
E-Mail - Vacancynsc@gmail .com

## மணி திருமண சேவை

உங்களுக்குப் பிடித்த உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன், மணமகள்களை ஜாதகப் பொருத்தப்படி தேடிக்கொள்ள உங்கள் விவரங்களை அனுப்பி வைக்கலாம்.

தொடர்பு :- 077 454 5864 - (Viber ,Whats app)
021 490 6824.
முகவரி :- No. 9/1, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.
Web :- manivto.blogspot.com
Face book page :- mani matrimony

1000 இற்கும் மேற்பட்ட ஜாதகங்கள் உள்ளன.
உறவுகளை இணைக்கும் பாலம்.

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500, 9000

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**

பதிவு இல : 16168
077 2106 155
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா? *பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ? *இள நரையா ?
*தலையிடியா ? *முடி அடர்த்தி இல்லையா?

**பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய.**

பதிவு இல : 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## இவ்வார வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| ✓Graphic Designers | : 1 பெண் | - 15,000/= |
| ✓காசாளர்கள் | : 4 பெண்கள் | - 12,000/= - 20,000/= |
| ✓கண்காணிப்பாளர் | : 1 ஆண் | - 25,000/= |
| ✓வரவேற்பாளர் | : 1 ஆண் | - 15,000/= |
| ✓சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் | : 2 ஆண்கள் | - 20,000/= |
| ✓உதவியாளர்கள் | : 2 ஆண்கள் | - 15,000/= |

**மேற்குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளில் இணைய விரும்புவோர் உங்கள் சுயவிவரக் கோவையுடன் உடன் நேரில் வரவும்.**

4 வருடகால வேலைதேடுவோரின் நம்பிக்கையைவென்ற ஓர் நிறுவனம்

**WINSTAR JOB BANK**
122, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
www.winstarjaffna.com
021 320 2789
(CS/4675)(10)


## இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் வடமாகாணக் கிளை ஒப்பந்ததாரர்களுக்கான கருத்தரங்கு

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் வடமாகாணக் கிளையானது வடமாகாணத்தில் உள்ள ஒப்பந்தகாரர்களின் நலன் கருதி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) உடன் இணைந்து இனி வரும் காலங்களில் ஒப்பந்த காரர்களுக்கான பயிற்சி நெறியை வடமாகாணத்தில் தமிழ் மொழி மூலம் நடாத்தவுள்ளது. அதன் பிரகாரம் முதலாவது பயிற்சி பட்டறையாக " **ஒப்பந்தத்தில் எதிர்பாராமல் ஏற்படுகின்ற பிரச்சினைகளும் அதற்குரிய தீர்வுகளும்** " (Major issues encountered in a contact and Remedial Measures) என்ற தலைப்பின் கீழ் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இடம் : யூரோவில் மண்டபம், இல.17, கமநல சேவை நிலைய ஒழுங்கை, நல்லூர்.
காலம்: 10.06.2017 (சனிக்கிழமை)
நேரம்: 8.30 - 16.30 வரை
கட்டணம் : 3500/= (எல்லாம் அடங்கலாக)

இக்கருத்தில் பங்குபற்றுவோருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அச்சான்றிதழுக்கு CIDA நிறுவனத்தினால் 10 புள்ளிகள் வழங்கப்படும்.

**மேலதிக தகவல்களுக்கு:**
**இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பேசி: 021 221 7567/ 077 744 8076**


திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS Life Skills A1 B1**

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

## ஸ்ரீ கணபதி ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
ஜோதிடர் குருஜி அர்ஜுன் ராஜ்
076 737 2269

மெய்யன்பர்களே !
இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம் கைரேகை பார்த்து பலன் சொல்லுவார். கணவன் மனைவி சண்டைபிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியப் பலன்களை சொல்லுவார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருவார். கண்திஸ்டி, செய்வினை கோளாறு (Black Magid) போன்றவற்றிற்கும் தீர்வு கிடைக்கும்.

தமிழ்மொழியில் ஜோதிடம் சொல்லப்படும். நீங்கள் பல ஜோதிடர்களை சந்திக்கலாம். இவரையும் ஒரு முறை சந்தியுங்கள். நல்ல பலன் நிச்சயம் உங்களுக்கு கிட்டும்.

நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
100% உத்தரவாதம்
இல.60, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
(யூனிவேர் சிற்றி மீடியா சென்ரர் அருகில்)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(CS 4648) (14)

அனைத்து முச்சக்கரவண்டி குத்தகையுடனும்
பெறுமதியான மின்விசிறி மற்றும்
**02 MRF ரயர் இலவசம்**




SINGER FINANCE
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

# VACANCIES
## SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

**SALES EXECUTIVE**

**Requirements**
* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

**If you believe that you are the right cantidate,**
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130

Trainee Marketing Executive 18,000+++ → Marketing Executive 25,000/-+++ → After 3 months Management Executive 42,500/-

**Benifits**
→ An attractive salary
→ Travelling allowances
→ Commissions payments
→ Telephone facilities
→ Motorbike allowances
→ Incentive & Overseas trips for target achievers
→ Career development (Management position)



Pioneer House (PVT) Ltd.
No. 100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com
(AJA/CS/4680)(10)

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீடொன்றில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
076 636 7091 / 077 2626 944
(CS/4681)(10)

## ஆட்டோ விற்பனைக்கு

ABBxxxx இலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்கு.
தொடர்பு: 077 565 9976
(CS/4671)(10)

## வேலைவாய்ப்பு
## Unique Dental Care

திருநெல்வேலியில் அமைந்துள்ள பல் வைத்திய நிலையத்துக்கு பல் மருத்துவ உதவியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 234 6034
561,Palaly Road,
Thirunelvely, Jaffna.
(CS/4677)(10)

## பனங்காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு, வடலியடைப்பில் உள்ள 6 பரப்பு பனங்காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:
077 3867183
(பா.தவேந்திரகுமார்)
0777 864 546
(C/29995)(10)

## வேலை வாய்ப்பு

- மேசன் ,
- தச்சன்,
- பெயின்டர்,
- உதவியாளர்

நீங்கள் இலங்கையில் எப்பாகத்திலும் இருந்தாலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

வயது - 19 - 48
*மாத முடிவில் (பாஸ்) 85000/= ரூபா
* லேபர் 65000/= பெறுக்கொள்ள முடியும்.

இடம் :-
*கொழும்பு,
* யாழ்ப்பாணம்,
* புத்தளம்,
* நீர்கொழும்பு

மற்றும் பல இடங்களிலும் எங்கள் வேலைத்தளங்கள் உள்ளன.
நீங்கள் விரும்பிய இடங்களில் வேலை செய்ய முடியும்.

*தங்குமிடம் இலவசம்.

க.கண்ணதாசன் ( கண்ணன்),
பளை, யாழ்ப்பாணம்.
077 550 1520
077 712 9690


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலட்சாதிபதியாகும் வரத்தை பெற்று தங்க பவுண்களை வெல்லுங்கள்

முதல் பரிசு ரூ.25 இலட்சம்

இரண்டாம் பரிசு ரூ.15 இலட்சம்

மூன்றாம் பரிசு ரூ.10 இலட்சம்

வெற்றிபெறும் 50 பேருக்கு 50 தங்க நாணயங்கள்

**நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில்...**
முதலாம் இடத்திலுள்ள றைனோ மற்றும் றைனோ கலர் அப் கூரைத்தகடுகளை வாங்கும் போது உங்கள் விற்பனை முகவரிடமிருந்து கிடைக்கும் கூப்பனை நிரப்பி விற்பனை முகவரின் முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை அதனுடன் இணைத்து அனுப்பவும்.

நீங்கள் வாங்கும் றைனோ மற்றும் றைனோ கலர் அப் கூரைத்தகடுகளின் பெறுமதியின் அடிப்படையில் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பு உங்களுக்கு அதிகரிக்கும். ரூ. 25,000 பெறுமதியான றைனோ மற்றும் றைனோ கலர் அப் கூரைத்தகடுகளை வாங்கும் போது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது.
உதாரணமாக ரூ. 100,000 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கு 4 சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

போட்டியில் பங்குபற்ற வேண்டுமாயின் ரூ. 25,000 பெறுமதியான றைனோ மற்றும் றைனோ கலர் அப் கூரைத்தகடுகளை வாங்கவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "றைனோ கலர்அப் வாசனா றெல்ல 3" என்று குறிப்பிட மறக்க வேண்டாம்.

தபாலில் அனுப்புவதற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிட்ட அலுவலகங்களிலும் உங்கள் கூப்பன்களை கையளிக்கலாம்.

றைனோ தலைமை அலுவலகம்: இல.752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
ஏக்கல-தொழிற்சாலை: இல.30, மினுவாங்கொட வீதி, ஏக்கல-ஜாஎல

பண்டகசாலைகள்
எம்பிலிபிட்டிய: நோனாகம வீதி, கிரலவெல்கட்டுவ, எம்பிலிபிட்டிய.
வவுனியா: ராமனூர், புளியன்குளம்.

பொது நிபந்தனைகள்
- சகல கூப்பன்களும் வியாபார முகவர்களின் இறப்பர் முத்திரையிடப்பட்ட அல்லது முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் இணைத்து "றைனோ கலர்அப் வாசனா றெல்ல 3" (த.பெ.இல. 1882, கொழும்பு) என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- பற்றுச்சீட்டின் பிரதி இந்தப்போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- 2017 ஜூன் 1 ஆம் திகதிக்கு முன்னர் வாங்கிய கூரைத்தகடுகளுக்கான பற்றுச்சீட்டுக்கள் இப்போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- றைனோ ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பதிவு செய்யப்பட்ட றைனோ வியாபார முகவர்கள் போட்டியில் பங்குபற்றுவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளனர்.
- வெற்றியாளர்கள் செல்லுபடியாகக்கூடிய தங்கள் அடையாள அட்டை/கடவுச்சீட்டு/வாகன அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்து தங்களுக்குரிய பரிசுகளை பெற்றுக்கொள்ளலாம்.


துரித அழைப்பு: 0776 551 559
(றைனோ கலர்அப் வாசனா றெல்ல 3 பற்றிய தகவல்களுக்கு)


ரூ. 1,385/= க்கு மேல்

RHINO
றைனோ ரூபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டட்
ஈ-மெயில்: telemarketing@rhino.lk வெப்: www.rhino.lk
...கூடலின் பைபர் பாதுகாப்பான பாவனைக்கான நம்பத்தகுந்த நிறுவனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் மேற்கு மணியர்பதி
# அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ் – 04.06.2017



"ஓங்கார விநாயகனோ டுடனாய்த் தோன்றும் ஒருவனே ஆறுமுகா ஒளிரும் வேலை
நாங்காண வலக்கரத்தும் நளின வள்ளி நகைமுகமார் தெய்வானை நலமார் பக்கம்
பாங்கா மயிலிவர்ந்து பலரும் வேண்டப்பலவளமார் கொக்குவிலூர்ப் பதிக்கண்மேற்கே
மாங்காவிற் குயிலிசைகொள் மணியர்காட்டு மால்மருகா ஸ்ரீ சுப்பிரமணியா போற்றி."

**வைகாசி மாதம் 21ஆம் நாள் (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிமுதல் 8.45 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகமும் மாலை 7 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.**

## ஆசியுரை



யாழ்ப்பாணம் கொக்குவிலில் மணியர்பதியில் வீற்றிருந்து அருள் புரியும் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம் புனர்நிர்மாணம் செய்யப் பெற்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மக்கள் மனங்களில் தெய்வீக அருள் பொழிவதை இட்டு மகிழ்ச்சியாக அமைகின்றது. கிராமமக்கள் அனைவருமே மனம் சலிக்காமல் உற்சாகத்துடன் இப்பணியை குறுகியகால இடைவெளியில் நிறைவு செய்தது முருகப்பெருமானுடைய திருவருளாகும்.

இத்திருப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஆலய பரிபாலன சபையினர் இந்து இளைஞர் மன்றத்தினர். உபயகாரர் நிதியுதவி நல்கியோர் மற்றும் பக்தர்கள் ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக்கலைஞர்கள் ஆகிய அனைவருக்கும் இக்கும்பாபிஷேக நன்னாளில் எம்பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைத்து அனைவரும் சகல வளங்களுடனும் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமானின் பாதம் பணிந்து நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவப்பிரம்மஸ்ரீ ஈசான சிவாச்சாரியார்**
**சிவாகம ஞானசாகரம்**
**சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக்குருக்கள்**
**பிரதிஷ்டா பிரதமகுருவும் தேவஸ்தான பிரதமகுரு.**

## ஆலயம்

இந்து சமுத்திரத்தின் முத்தாக மிளிரும் "சிவபூமி" எனத் திருமூலரால் போற்றப்பட்ட ஈழத்திருநாட்டின் வடபால் சைவமும், தமிழும், அறமும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் முருகன் ஆலயங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் கொக்குவில் பதியிலே மணியர்பதி என்னும் திவ்விய நாமத்துடன் விளங்கும் வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமிக்கும் விநாயகர் முதல் சண்டேசுவராந்த பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ஏவிளம்பி வருஷம் வைகாசி மாதம் 21 ஆம் நாள் (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் தசமி திதியும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 7.45 மணிமுதல் 8.45 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெற முருகன் திருவருள் கைகூடியுள்ளதால் அடியார்கள் அன்றும் அதற்கு முன் நடைபெறும் கிரியைகளில் கலந்துகொண்டு முருகன் திருவருளை பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

## தலைவரின் ஆசிச்செய்தி



கொக்குவில் மணியர்பதி முருகப்பெருமானின் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆலயம் புனருத்தாரண வேலைகள் செய்ய பரிபாலன சபையின் ஒத்துழைப்பும் ஊர்மக்கள், உபயகாரர்களின் நிதி உதவியும் ஆலயம் மிக அழகுக் கோயிலாக கண்முன்னே காட்சி அளிக்கின்றது. இன்னும் பல திருப்பணிகள் நிறைவேற உள்ளது. அனைவரது ஒத்துழைப்பும் மேன்மேலும் கிடைக்க வேண்டும்.

இக்கும்பாபிஷேகத்தின் பலன் பரிபாலன சபையினருக்கும் ஊர்மக்கள், உபயகாரர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

**சு.க.குகராசா**
**பரிபாலனசபைத் தலைவர்.**

## ஆசியுரை



யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு மணியர்பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபட்ச உத்தம மஹா கும்பாபிஷேகம் இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை நிகழ்வது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கின்றது. கலியுக வரதனாகிய கந்தன் மீது எமது பிரதேசத்தில் வாழும் மக்கள் கொண்ட அளவற்ற பக்தியினால் பல புகழ் மிக்க முருகன் ஆலயங்கள் எழுச்சிபெற்று எமது சமய வாழ்வை நெறிப்படுத்தி வருகின்றன. நாவலர் பெருமான் காலத்தில் கச்சியப்பரின் கந்தபுராணம் ஆலயங்களில் புராண படலத்தின் வழி சிறப்புற்றதன் பயனாய் யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம் மேலோங்கியது. அம்மரபை மேலும் வளம்பெறச் செய்யும் வகையில் சிறப்புப்பெறும் முருகன் ஆலயங்களில் ஒன்றாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் ஆலயத்தில் பல்துறை சார்ந்த அனைவரினதும் ஒத்துழைப்பினாலும் கூட்டு முயற்சியினாலும் திருப்பணிகள் நிறைவேறி மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது எம்பெருமானின் திருவருட்பேறினாலாகும். ஆலயத்தில் நிகழும் திருப்பணிகள் உன்னதமான சிவபுண்ணியமாகும்.

சிவப்பிரம்மஸ்ரீ இ.விக்னேஸ்வரக் குருக்கள் அவர்களது தலைமையில் ஏனைய குருமணிகளின் அனுசரணையுடன் ஏழு நாள்கள் மிக விஸ்தாரமான முறையில் நடைபெறும் இம்மஹா கும்பாபிஷேகத்தினால் முருகனது தெய்வீக சாந்நித்தியம் இவ்வாலயத்தில் மிகுந்து விளங்கவுள்ளமை குறிப்பிடற்பாலது.

முருகப்பெருமானின் கும்பாபிஷேகத் திருவருளினால் ஆலய பரிபாலன சபையினர். இந்து இளைஞர் மன்றத்தினர், உபயகாரர், ஊர் மக்கள். ஆலயத்தினை அழகு மிகு கலைக்கோயிலாக உருவாக்கிய சிற்பக் கலைஞர்கள். ஏனைய கலைஞர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் முருகப் பெருமானின் திருவருள் கிட்டி வாழ்வு வளம்பெறவும் மண்ணில் நல்லவண்ணம் இன்பமுடன் இனிதே வாழவும் எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம். முருகன் திருவருளோடு குருமணிகளின் குருவருளும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி**
**பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்.**
**வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## மணியர்பதி முருகன் கும்பாபிஷேகம் காண்கிறார்



கொக்குவில் மேற்கு மணியர்பதி முருகப் பெருமானின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கிற இவ் வேளையில் முருகப்பெருமான் திருவருள் பக்தர்கள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன். மிகக்குறுகிய காலத்தில் ஆலயத்தினுடைய திருப்பணிகள் நிறைவடைந்திருப்பது நாம் எல்லோரும் செய்த பெரும்பாக்கியம். இந்தப் பாரிய திருப்பணிக்கு உதவி செய்த வெளிநாட்டு உள்நாட்டு அடியார்கள் முருகன் மேல் தீராத பக்தி கொண்ட அடியார்கள். அனைவரும் மணியர்பதி புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை தரிசித்து வேண்டியவரம் பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

**சிவாகமஞான பாஸ்கரன்**
**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்.**
**அதிபர் தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீபீடம்**
**ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவாலயம்**
**இணுவில், சுன்னாகம்.**

அனுசரணை:-

NIPPON PAINT

ஓவியம் வேலைகள்
செல்லையா செல்வதாஸ்
ஆலய கட்டட நிர்மாணம் சிற்பம்,
விஷ்வகர்மா சிவில் புறொ...

ஞானம் பெயின்ட்ஸ்
சகலவிதமான வர்ணப் பெயின்ற் கலவை அகம்
558, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
T.P: 077 6184691, 021 222 5577



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பள்ளிவாசலின் மீதான தாக்குதல் பெருந் தவறு

திருகோணமலை, பெரியகடை ஜூம்மா பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எவருக்கும் காயங்களோ உயிர் ஆபத்தோ ஏற்படவில்லை. எனினும் அச்சமூட்டும் நிலை ஒன்றை இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியிருக்கிறது. மூதூரில் சிறு குழந்தைகள் மூவர் பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தில் முஸ்லிம்கள் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டிருக்கும் பின்னணியில் இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டிப்பது கவலையை அதிகரிக்கின்றது.

எவர் செய்திருந்தாலும் இத்தகைய தாக்குதல் மிகக் கண்டனத்துக்குரியது. வணக்க இடங்கள் மீது தாக்குதல் நடத்துவதும், அதன் மூலம் ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்களை அல்லது ஓர் இனத்தை அச்சுறுத்த முயற்சிப்பது ம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல. அது வன்மையான கண்டனத்துக்குரியது.

அதிலும் குறிப்பாக மூதூர்ச் சம்பவத்தின் பின்னணியில் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டமைக்காகத்தான் இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டதாக இருந்தால், அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. தவறுகளைச் செய்யும் தனிமனிதர்களுக்காக அவர்கள் சார்ந்த சமூகம் அல்லது இனம் அந்தத் தவறுகளுக்கு எந்த வகையிலும் பொறுப்பாளியாக முடியாது.

மூதூர்ச் சம்பவத்துக்காக பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படுவது நியாயம் என்றானால், யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற சைவக் கோயில்கள் அனைத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதே தமிழர்களின் நியாயமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் புங்குடுதீவில் மாணவி வித்தியா கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர்கள் அனைவரும் தமிழர்கள், அவர்களில் பெரும்பாலானவர்கள் சைவர்கள்.

அந்தச் சம்பவத்தை தமிழர்கள் எப்படிச் சில கட்டுக்கடங்காத தனிமனிதர்களின் நடத்தையாக எடுத்துக்கொண்டார்களோ, அதுபோன்றே மூதூர்ச் சம்பவத்திலும் சம்பந்தப்பட்டவர்களின் தனிமனிதத் தவறாகவே அதனைக் கொள்ள வேண்டும். அதற்கு எந்த வகையிலும் இன அல்லது மத சார்பு முகமூடியைப் பொருத்த முடியாது. அவ்வாறு செய்வது வரலாற்றுத் தவறு.

அதிலும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் ஒற்றுமை வேறெப்போதையும்விட அதிகம் தேவைப்படும் இன்றைய கால கட்டடத்தில் இதுபோன்ற சம்பவங்கள் அனைத்தையும் கெடுத்துவிடும். தனிமனிதர்களின் தவறுகளுக்காக ஓர் இனத்தின் மீது பழிபோட்டு வசைபாடும் தன்மையை சமூக ஊடகங்களில் அதிகம் பார்க்க முடிகிறது. பள்ளிவாசல் மீதான முட்டாள்த் தனமான அவசரச் செயல்களுக்கு இத்தகைய சமூக ஊடகங்களின் தாக்கமும் காரணம் என்பதைப் புறந்தள்ளிவிட முடியாது.


வன்முறையையும் காழ்ப்புணர்வையும் பரப்ப விரும்புபவர்களுக்கு இதுபோன்ற சம்பவங்கள் அவல் கிடைத்த மாதிரியாகி விடுகின்றன. இந்த விடயத்தில் தமிழ் முஸ்லிம் இனங்களின் அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் நிதானத்துடன் செயற்பட்டு நிலைமை கட்டுமீறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பள்ளிவாசல் மீதான தாக்குத லும்கூட உணர்ச்சி மேலீட்டால் புரியப்பட்ட தனிமனிதத் தவறாகவே பார்க்கப்பட வேண்டும். அதுவும் ஒரு இனத்தின் மீதான வன்மப் பாய்ச்சலாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது.

இதுபோன்ற இரு இனங்கள் தொடர்புபட்ட சம்பவங்களில் மதத் தலைவர்கள் ஒன்றுபட்டு ஆரம்பத்திலேயே முறையான கண்டனங்களையும் ஒன்றுபடுத்தப்பட்ட போராட்டங்களையும் அறிவிப்பது இனங்களுக்கு இடையில் மேலும் பிளவும் கசப்பும் வளராமல் இருக்க உதவும். இனி வரும் காலங்களிலாவது அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் இது விடயத்தில் மிகுந்த நுண்ணறிவுடனும் முற்கூட்டிய சிந்தனையுடனும் அறிவார்ந்து செயற்பட முன்வர வேண்டும்.

தனிமனிதத் தவறுகள் இனங்கள் இடையிலான முரண்பாடுகளாக வளர்வதற்கு இடமளிக்கக்கூடாது.

# ஈழத் தமிழர் அரசியல் பயணத்தில் வரலாற்று பதிவான தினம்

# யூன் 05



"குறித்த போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வா, அவரது மகன் சந்திரகாசன் உட்பட அனைவருமே தாக்கப்பட்டனர். வன்னிய சிங்கத்தின் ஆடை கிழித்தெறியப்பட துன்னாலை செல்லையாவின் காது கடித்து எடுக்கப்பட்டது. தந்தையின் இளைய மகன் சந்திரகாசனும், தந்தையின் கண்முன்னே தாக்கப்பட்டார். இத்தோடு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கத்தின் நெற்றி உடைக்கப்பட்டது."

ந.லோகதயாளன்

தமிழ் மக்களின் வாழ்வையே புரட்டிப்போட்டு இனத்தின் வாழ்வையே புரட்டிப்போட்ட வரலாற்றின் ஆரம்பங்களுக்கு சிங்கள அரசு பிள்ளையார் சுழி போட்டதான செயலாக அமைந்த முக்கிய நிகழ்வும். தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க முயன்றஓர் இளைஞனின் நினைவு தினமும் ஒருங்கே இணைந்ததே இன்றைய யூன் 5ஆம் நாளாகும்.

இலங்கை அரசியலில் 1947 ஆம் ஆண்டு தேர்தலுக்கு பின்பு 1948ஆம் ஆண்டில் மலையகத் தமிழரின் வாக்குரிமைப் பறிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் ஐ.தே.கட்சியின் ஆட்சியில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த பண்டாரநாயக்க 1952ல் கட்சியில் இருந்து வெளியேறி தனித்து சுதந்திரக்கட்சியை உருவாக்கி தேர்தலில் போட்டியிட்டு, கட்சி தோல்வியடைய பண்டாரநாயக்கா மட்டும் வெற்றியீட்டினார். இதன் பின்னர் 1953இல் டட்லி சேனாநாயக்காவின் காலத்தில் கூப்பனுக்கு வழங்கப்பட்டுவந்த அரிசியின் விலையை அரசு 25 சதத்தினால் அதிகரித்தமையினால் இடது சாரிகள் தலமையில் ஓர் கடை யடைப்புப் போராட்டம் நடை பெற்றது. அந்தப் போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சியும் பூரணமாக ஆதரவளித்தது. இப்போராட்டம் பெரிய வெற்றியடைந்தது. இதன் காரணமாக டட்லி சேனாநாயக்கா உடனடியாகவே தமது தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டர்.

இதன் பின்னர் சேர்.ஜோன் கொத்தலாவல பிரதமராகிய போது, நாட்டில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என உறுதியளித்தார். ஆனால் அதே ஆண்டில் களனி மாநாட்டில் தனிச் சிங்களச் சட்டப் பிரகடனம் செய்யப்பட்டது.

### தனிச் சிங்களச் சட்டத்தால் அரசியலையே மாற்றி அமைத்த பண்டாரநாயகா

பின்னர் 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்க தமக்கு அரசமைக்க வாய்ப்பு வழங்கினால் 24 மணி நேரத்தில் தனிச சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவருவேன் என்றார். இதனால் அந்தத் தேர்தலில் ஐ.தே.கட்சி 8 ஆசனங்களை மட்டுமே பெற்றது. சமசமாசக் கட்சி உள ளிட்ட இடது சாரிகள் 18 ஆசனங்கள் பெற்று என்.எம்.பெரேரா எதிர்க்கட்சித் தலைவரானார். இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி 10 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன் பின்னர் சில மாதங்களில், சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக்கொள்ளவிருந்த தினத்தில், அதாவது 1956 ஜூன் மாதம் 5ஆம் திகதியன்று, அதற்கு எதிராக காலிமுகத்திடலில் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் ஓர் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது காலிமுகத்திடலின் பச்சைப் புல்வெளிகளில் இரத்த ஆறு ஓடியது. இதுவே இலங்கையில் இடம் பெற்ற அத்தனை இனப்பிரச்சனைகள் ஆகட்டும், இன அழிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புக்கள், ஆயுத போராட்டங்களுக்கும் பிள்ளையார் சுழியிட்டது எனலாம். இவ்வாறு தமிழரசுக் கட்சி யூன் 05ம் திகதியன்று, கொழும்பு காலிமுகத்திடலில் மேற்கொண்ட மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்கள் அடிப்படையில் சுமார் 500பேர் பங்கு கொண்டிருந்தனர். இந்தப் போராட்டம் அரசை அச்சம் கொள்ள வைத்ததனால் காடையர்களை ஏவி சத்தியாக்கிரகப் போராட்டத்தை அடக்க அரசு முயன்றது.

### சத்தியாக்கிரகப் பேராட்டத்தை முன்னெடுத்த தமிழரசுக் கட்சியினர்

குறித்த போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வா, அவரது மகன் சந்திரகாசன் உட்பட அனைவருமே தாக்கப்பட்டனர். வன்னியசிங்கத்தின் ஆடை கிழித்தெரியப்பட, துன்னாலை செல்லையாவின் காது கடித்து எடுக்கப்பட்டது. தந்தையின் இளைய மகன் சந்திரகாசனும், தந்தையின் கண்முன்னே தாக்கப்பட்டார். அத்தோடு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கத்தின் நெற்றி உடைக்கப்பட்டது. அவ்வாறு காயப்பட்ட நெற்றியில் இருந்து இரத்தம் வழிய வழிய, அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தவேளையில் "போர் வடுவுடன் உள் நுழைகின்றார் அமிர்தலிங்கம்" என பண்டாரநாயக்கா ஏளனம் செய்தார்.

சத்தியாக்கிரகிகளைத் தாக்கிய அந்த அநீதியான செயற்பாடு காரணமாக இலங்கையை உலகமே ஏளனம் செய்யும் ஒரு நிலை நாட்டில் ஏற்படப்போகின்றது என்பதனை அப்போது தலைமை அமைச்சர் பண்டாரநாயகா உணரவில்லை. கொல்வின் ஆர் டி சில்வா இது தொடர்பில் ஓர் தீர்க்கதரிசனக் கூற்றையும் தெரிவித்தார். இந்த நாட்டில் இரு மொழி எனில் ஒரு நாடாகவே இருக்கும். ஒரு மொழி எனில், இரு நாடுகளாக ஆக நேரிடும் என அவர் கூறியிருந்தார். இவ்வாறு மொழிப் புரட்சிக்கு வித்திட்ட நாள் யூன் 05 ஆகும்.

### தமிழர்களது ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்ட பொன்.சிவகுமாரன்


இதேபோன்றுதமிழர்களின்அகிம்சை ஆயுதப்போர் அனைத்துக்கும் 56 யூன் 5இல் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் பிள்ளையார் சுழி இட்டிருந்த பின்பு, மெல்ல மெல்ல ஆரம்பித்த போர் வடிவம் ஆயுதப்போராகப் பரிணமிக்க காரணமாக அமைந்தது தியாகி பொன் சிவகுமார னின் நிகழ்வு. அதுவும் ஓர் யூன் 05இல்தான் நிகழ்ந்தது.


தமிழ் மாணவர் பேரவைத் தலைவனாகச் செயல்பட்ட பொன். சிவகுமாரன் அவ் வேளையில் அரசின் பிரதி அமைச்சரான சோமவீரசந்திரசிறீ மீதான குண்டுத் தாக்குதல், மற்றும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகர மீதான தாக்குதலையும் நடத்தியிருந்தார். அந்தக்காலப் பகுதியில் இருதடவைகள் பொலிசாரால் கைதாகி வெளிவந்திருந்த நிலையில், மீண்டும் பொலிஸாரால் இலக்கு வைக்கப்பட்டார். இந்தத் தட்வை தாம் அகப்பட்டால் பொலிசாரால் ஏற்படக்கூடிய விபரீதங்களை சிவகுமாரன் உணர்ந்தார். இதனால் பொலிசாரின் தேடுதல்கள், சுற்றி வளைப்புக்களிலும் அகப்படாது முழுமையாக தலைமறைவாகவே சிவகுமாரன் வாழ நேர்ந்தது. இவ்வாறு செயற்பட்ட சிவகுமாரன், தமிழர்களது ஆயுதப்போராட்ட ஆரம்ப கர்த்தாக்களான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் மற்றும் பிரபாகரன் போன்றோருடன் இணைந்தும் செயல்படுகின்றார். இதனால் அதிகமாகவே தேடப்பட்ட நிலையில் உடனடியாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்லுமாறு அவருக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. ஆனால் தனது உயிரைப் பற்றிச் சற்றும் அஞ்சாத சிவகுமாரன், ஆயுதப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதிலேயே குறியாக விருந்தார்.

இந்த நிலையில்தான், கோப்பாய் பகுதியில் 1974 ஜூன் மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில் சிவகுமாரன் இலக்கு வைக்கப்பட்ட வேளையில், தமிழர்களின் போராட்ட வரலாற்றின் முதல் போராளியாக 'சயினைட்' உட்கொண்டு மண்ணை முத்தமிட்டு மடிந்த முதல்போராளியாகின்றான். அந்த வீர வரலாறும் இதே ஜூன் 5ல்தான் எழுதப்படுகின்றது.

இவ்வாறு சிறப்பு மிக்க யூன் 5ஆம் நாள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உடுப்பிட்டி சிவசிதம்பரத்தின் மறைவின் நினைவு நாள் மற்றும் 58ம் ஆண்டு யூன் 05ஆம் திகதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டமை போன்ற திருப்பு முனையான சம்பவங்களும் நிகழ்ந்தேறிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும்.

> இதேபோன்று தமிழர்களின் அகிம்சை ஆயுதப்போர் அனைத்திற்கும் 56 யூன் 5இல் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் பிள்ளையார் சுழி இட்டிருந்தபின்பு மெல்ல மெல்ல ஆரம்பித்த யுத்த வடிவம் ஆயுதப்போராக பரிணமிக்க காரணமாக அமைந்தது தியாகி பொன் சிவகுமாரனின் நிகழ்வு . அதுவும் ஓர் யூன் 05இல்தான் நிகழ்ந்தது. தமிழ் மாணவர் பேரவைத் தலைவனாகச் செயல்பட்ட பொன் . சிவகுமாரன் பிரதி அமைச்சரான சோம வீரசந்திரசிறீ மீதான குண்டுத் தாக்குதல், மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகர மீதான தாக்குதலையும் நடத்தியிருந்தார்.





## ஆசிரியருக்கான கடிதம்

### அநியாய உயிரிழப்புக்களைத் தடுத்து நிறுத்த முயல்வீர்களா?

வீதி விபத்துக்கள் விடயத்தில் நாடளாவிய ரீதியில் சிலபல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையைவிடத் தற்போது பெருமளவு அதிகரிப்பு நிலவுவதாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் அடிக்கடி செய்திகள் வெளியிடப்படுகின்றன. இத்தகைய வீதி விபத்துக்களைத் தடுப்பது அல்லது குறைப்பது தொடர்பாக விமர்சனக் கட்டுரைகள்வேறு, ஒருபுறம் வெளியாகின்றன.

இத்தகைய பின்னணியில் கடந்த ஆண்டில் மட்டும், நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்ற ஏறக்குறைய 35 ஆயிரம் வரையிலான வீதி விபத்துக்களில் மூவாயிரம் பேர் வரையில் உயிரிழக்கவும் 7500 பேர் வரையில் அவயவங்களை இழக்கவும் நேர்ந்துள்ளதாக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளார். இவற்றில் பெரும்பாலான வீதி விபத்துக்கள் வடமாகாணத்திலேயே இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்திருப்பதுதான், கூடிய கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் பயணிகள் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்களும் தனியார் பேருந்துகளும் அதிக பயணிகளை ஏற்றி இறக்கும் முனைப்பில் போட்டி மனப்பாங்குடன் செயற்படுவதும், அதிவேகமாக சாரத்தியம் செய்வதும் இவற்றில் பயணிக்கும் பயணிகள் உயிர் அச்சுறுத்தலுடன் பயணிக்கும் நிலையை உருவாக்கி வைக்கிறது. அது மட்டுமன்றி ஏனைய வாகனங்களைக் கையாள்வோர் குறிப்பாக, மோட்டார் சைக்கிள் ஓட்டிகளில் பலர் உரிய முறையில் சாரத்தியத்தில் போதிய அனுபவம் பெற்றிருக்காமையும் இதற்கு ஒரு காரணமெனக் கருத வேண்டியுள்ளது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரத்திய அனுமதிப்பத்திரம் பெற்று விட்டால் மட்டும், ஒருவர் சிறந்த சாரதியாக ஆகிவிட இயலாது. வாகனச் சாரத்தியத்தில், அவதானமும் பொறுமையும் அவசியமென்பதை உணராத எமது இன்றைய இளம் தலைமுறையினர், கட்டுப்பாடற்ற வேகத்தில் தமது வாகனங்களை-குறிப்பாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி வீதி விபத்துக்களில் தாமும் சிக்கிக் கொள்வதுடன், அப்பாவிப் பொதுமக்க ளது பாதசாரிகளது உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் போக்கை சம்பந்தப்பட்ட நிர்வாகத் தரப்பினர்கள் தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் முக்கிய தேவை. செய்வார்களா?

ப.நடராசா
நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவினால் ஏற்படும் நரம்புத் தொகுதிப் பாதிப்புக்கள்

மருத்துவ நிபுணர் அஜந்தா கேசவராஜ்
மருத்துவர் கலாநிதி சிவதி பிரதீபன்

### நீரிழிவு ஓர் அறிமுகம்

நீரிழிவு நோயானது சதையியால் சுரக்கப்படும் இன்சுலின் ஹோர்மோன் சுரப்பானது பெருமளவில் குறைவடையும் போது அல்லது அதன் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படும் போது குருதியில் குளுக்கோஸ் எல்லை மீறி அதிகரிப்பதால் ஏற்படுகிறது.

அதிகரிக்கும் குருதிக் குளுக்கோஸானது உடலின் பல அங்கங்களிலும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. முக்கியமாக கண், நரம்புத் தொகுதி, இதயம் மற்றும் சிறு நீரகத்தை இது வெகுவாகப் பாதிக்கின்றது.

கடந்த இரு தசாப்தங்களை எடுத்து நோக்கும் போது பன்னாட்டு ரீதியில் நீரிழிவு நோயானது பெருமளவில் அதிகரித்துள்ளது. ஆண், பெண் இருபாலாரையும் நீரிழிவு சமனிலைத் தன்மையோடே பாதிக்கிறது. நீரிழிவு ஏற்படும் சந்தர்ப்பமானது. பின்வரும் காரணிகளால் அதிகப்படுத்தப்படுகிறது.

1. குடும்பத்தில் நீரிழிவு நோயாளர்கள் உள்ளமை
2. அதிக உடல்நிறை (உடற்திணிவுச் சுட்டி 25 கிலோவுக்கும் அதிகமாதல் (≥ 25 kg/m2)
3. உடற்பயிற்சியின்மை
4. இனம்
5. ஏற்கனவே அறியப்பட்ட நீரிழிவுக்கு முன்னான நிலை
6. கர்ப்பகால நீரிழிவு அல்லது உடல்நிறை கூடிய பிள்ளைப் பேறு, நான்கு கிலோவுக்கும் அதிகமாதல் (>4kg)
7. உயர்குருதியமுக்கம்(≥140/90mnHg)
8. அதிகரித்த கொலஸ்ரோல்(HDL<35mg/dl, TG>250mg/dl)
9. சூலக நீர்க்கட்டிகள் (polycystic ovarian disease), தோல் மடிப்புக்களில் கருமை படர்ந்த நிலை (Acanthosis nigricans)

உலக சுகாதார நிறுவனமானது நீரிழிவு நோய் நிர்ணய எல்லையைப் பின்வருமாறு கூறுகிறது. குணங்குறிகள் உள்ள நோயாளரில் பின்வரும் ஓர் ஆய்வுகூட முடிவும். குணங்குறிகளில்லாதவர்களுக்கு இரு வெவ்வேறு ஆய்வுகூட முடிவுகளும் தேவைப்படுகிறது.

1. 08 மணித்தியாலங்கள் உணவு எதுவும் உட்கொள்ளாமல் குருதியில் குளுக்கோஸ் அளவு7.0mm1/l(126mg/dl) >(fasting plasma Glucose)
2. எழுந்தமான குருதிக் குளுக்கோஸ் (randomplasma glucose) msT>11.1mm 1/L(200mg/dl)
3. HbA1c> 6.5 நீரிழிவானது குணப்படுத்த முடியாததாயினும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியது.

### நரம்புத் தொகுதி ஓர் அறிமுகம்

மனித நரம்புத் தொகுதி முழுவதும் சிறப்புக் கலங்களாலான நரம்புக் கலங்களால் (Neurone) ஆனது. அது தூண்டல்களை வாங்கி நரம்புகளினுடான கணத்தாக்கங்களாக விளைவுகளை அங்கங்களுக்குக் கடத்தும் தொழிலைச் செய்கிறது. இதனால் மனித உடலானது தூண்டல்களிற்கேற்ற ஒருங்கிணைந்த துலங்கல்களை விளைவுகளாகக் காட்டக் கூடியதாகவுள்ளது.

மனித நரம்புத் தொகுதியானது விசேடமாகக் கடந்த காலங்களில் பெற்ற தரவுகளை சேமித்து ஒருங்கிணைத்துத் தேவையான பொழுதுகளில் வழங்கிப் பகுத்தறிவாகிய ஆறாம்அறிவால்உயர்ந்துவிளங்குகின்றது.

நரம்புத் தொகுதியானது மைய நரம்புத் தொகுதி (central nervous system), சுற்றயல் நரம்புத் தொகுதி (peripheral nervous system), தன்னியக்க நரம்புத் தொகுதி (Automatic nervous system) என வகைப்படுத்தப்படுகிறது.

மைய நரம்புத் தொகுதியானது. மூளையையும் (Brain) முன்னாணையும் (Spinal Cord) கொண்டது.

சுற்றயல் நரம்புத் தொகுதியானது. மண்டையோட்டு நரம்புகளையும் (Cranial nerves) முன்னாண் (Spinal nerves) நரம்புகளையும் கொண்டது.

தன்னியக்க நரம்புத் தொகுதியானது பரிவு (Sympathetic), பராபரிவு (parasympathetic) நரம்புகளைக் கொண்ட தன்னியக்க நரம்புகள், இதயம், சுரப்புகள் மற்றும் வளவளப்பான தசைகளின் தொழிற்பாட்டுக்கு உதவுகிறது. உடலில் அவசர நிலமைகளின் போது பரிவு நரம்புகளும், சக்தி சேமிப்புக்கும் புதுப்பித்தலிற்கும் பராபரிவு நரம்புகளும் தொழிற்பாட்டு ரீதியில் பணி ஆற்றுகின்றன. மூளை மற்றைய அங்கங்களைப் போலன்றி குளுக்கோஸை மாத்திரமே போசணைப் பொருளாகப் பயன்படுத்துகிறது. அதனால் குருதிக் குளுக்கோஸ் அதிகரித்த நிலையிலும் குறைந்த நிலையிலும் மூளையானது பாதிப்படைகிறது.

### நீரிழிவு நோயாளர்களில் ஏற்படும் நரம்புப் பாதிப்புக்கள்

நீரிழிவினால் ஏற்படுகின்ற உயர்மட்டக் குளுக்கோஸ் ஆனது குருதிக் குழாய்களில் இருவேறு விதமான சிக்கல்களை உருவாக்குகிறது.

1. பருமனான குருதிக்குழாய்ச் சிக்கல்கள் உதாரணமாகப் பாரிசவாதம் ஏற்படுகிறது. (Stroke Micro vascular Complications)
2. நுண்ணிய குருதிக் குழாய் சிக்கல்கள் உதாரணம் நீரிழிவு நரம்புப் பாதிப்பு (Diabetic neuropathy Micro vascular Complications)

### பாரிச வாதம்

மூளைக்குக் குருதியானது இரு பெரும் நாடிகளுடாக (carotid& Vertebral) வழங்கப்படுகிறது. அந்த நாடிகளிலோ அல்லது அதன் கிளைகளிலோ ஏற்படும் கொழுப்புப் படிவுகளாலும், அவை உடையும் போது ஏற்படும் குருதி உறைவுக் கட்டிகளாலும், உண்டாகும் அடைப்புகளினாலும் மூளையில் ஏற்படும் பாதிப்பினாலேயே பாரிச வாதம் உருவாகிறது.

திடீரென்று ஏற்படும் குருதி ஓட்டக் குறைவினால் மூளையின் அந்தப் பகுதியானது படிப்படியாக உயிரிழக்க நேரிடுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மூளைப்பகுதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் உடல்பகுதி செயலிழக்கிறது.

பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பம் சாதாரண ஒருவரிலும் பார்க்க நீரிழிவு நோயாளர்களில் இருமடங்காகவும், துரிதமாகவும் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

### நீரிழிவு நோயாளர்களில் பாரிசவாதம் ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகள்

1. குருதிக் குளுக்கோஸ் அளவு கட்டுப்பாடில்லாமல் இருத்தல்
2. அதிகரித்த உடற்பருமன் (Metabolic Syndrone)
3. அதிகரித்த குருதிக் கொலஸ்ரோலின் அளவு
4. புகைப்பிடித்தல்
5. குடும்பத்தில் பாரிசவாதம் உள்ளமை
6. அதிகரித்த வயது
7. சிறுநீரில் அல்புமின் (Micro albuminuria) வெளியேறல்




### நீரிழிவு நோயாளர் பாரிசவாதத்தைத் தடுக்கச் செய்ய வேண்டியவை

1. குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
2. உடற் பருமனைக் குறைத்தல்
3. குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல் (<130/80mmHg)
4. குருதியில் கொலஸ்ரோலின் அளவைக் குறைத்தல்
5. புகைப்பிடித்தலைத் தவிர்த்தல்
6. பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளைத் (Asprin Clopidogrel) தவறாது உள்ளெடுத்தல்.


பாரிசவாதம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுமாயின் (ஒரு பக்கக் கையோ அல்லது காலோ அல்லது கையும் காலுமோ செயலிழத்தல், பேச்சுத் தடை, நடைத் தள்ளாட்டம், திடீர் கண்பார்வைக் குறைவுகள்) உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் குருதிக்கட்டியைக் கரைக்கும் மருந்து (Thrombolytic Therapy) பாரிசவாத அறிகுறி ஏற்பட்டு முதல் நான்கரை மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படல் வேண்டும்.

பாரிசவாதம் ஏற்பட்ட பின்னும் தவறாது மருந்துகளை உட்கொள்வதோடு உடற்பயிற்சிகள், ஆலோசனைகள் என்பவற்றை ஒழுங்காகப் பெற்றுக் கொண்டு மேலுமொரு தாக்கம் வராமல் பாதுகாக்க வேண்டும்.

### நீரிழிவால் ஏற்படும் நரம்பு நோய்

(Diabetic neuropathy)

நரம்புகளுக்குக் குருதியை வழங்கும் நுண் குருதிக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் நீண்ட கால உயர் குருதிக் குளுக்கோஸ் அளவு ஆகியவற்றால் இது ஏற்படுகிறது. வயதான நோயாளர்களில் நீரிழிவைக் கண்டுபிடிக்கும் போதே இவை இனங்காணப்படலாம். ஆனாலும் இன்சுலினில் தங்கியிருக்கும் நீரிழிவை உடையவர்களில் நீரிழிவு ஏற்பட்டு 10 தொடக்கம் 20 வருடங்களின் பின்பே இது வெளிக்காட்டப்படுகிறது. இது பின்வருமாறு வகை பிரிக்கப்படுகின்றது.




1. சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு (Symmetrical mainly sensory polyneuropathy Distal)
2. சடுதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு (Acute painful neuropathy)
3. ஒற்றை நரம்புப் பாதிப்பு அதாவது, பல்வேறு ஒற்றை நரம்புகள் தனித்தனியாகப் பாதிக்கப்படல். (Mononeuropathy and Mono neuritis multiplex)
4. சமச்சீரற்ற இயக்க நரம்புப் பாதிப்பு (Diabetic amyotrophy)
5. தன்னியக்க நரம்பு நோய்கள் (Autonomic neuropathy )

### சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு

இதன் ஆரம்ப அறிகுறிகளாக நோவையோ, வெப்பத்தையோ அல்லது அதிர்வுகளையோ உணரமுடியாத விறைப்பு நிலைகள் அமைகின்றன. இதன் நாட்பட்ட நிலைகளில் பஞ்சின் மேல் நடப்பது போல் உணர்வார்கள். கால்களே கைகளை விட அதிகம் பாதிப்படையும். உணர்ச்சிகள் குறைவதால் சிறு சிறு காயங்களும் கவனிக்கப்படாமல் கொப்புளங்களாகவோ அல்லது புண்களாகவோ காணப்படும். மூட்டுக்களிற்கான நரம்புப் பாதிப்பு நரம்பிழந்த மூட்டுக்களாக (Charcot's joints) உருவாகும்.

### சடுதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு

நோயாளிகள் கால்கள், பாதங்கள் போன்றவற்றில் எரிவு, நோ போன்றவற்றை உணர்ந்து கொள்வர். இரவு வேளையில் இத் தன்மைகள் கூடுதலாக இருக்கும். படுக்கை விரிப்பின் அழுத்தமே தாங்க முடியாமல் அவதிப்படுவர். இது நீரிழிவைக் கண்டுபிடிக்கும் போதே காணப்படலாம். அத்துடன் குருதிக் குளுக்கோஸைத் திடீரெனக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் போதும் இது ஏற்படுகிறது. நீரிழிவை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இது தானாகவே குறிப்பாக, 3தொடக்கம் 12 மாதங்களில் குணமடையும்.

இதில் ஒரு வகையானது நாட்பட்ட நோவுடனா பாதிப்பாகக் காணப்படுகிறது. நீண்ட கால நோயாளிகளிலே இது ஏற்படுகிறது. சிகிச்சை பலன் அளிப்பதும் கடினம்.

### தனித்தனி நரம்புகளின் பாதிப்பு

இந்த வகையான பாதிப்பு உடலின் எந்த நரம்பையும் பாதிக்கலாம். கண்தசை நரம்புகள் கூடுதலாகப் பாதிக்கப்படும். இவை தானாகவே குறிப்பாக, 3தொடக்கம் 6 மாதங்களில் முழுமையாகக் குணமடையும்.

### நீரிழிவால் ஏற்படும் தசைமெலிவு

(DM amyotrophy)

வயதான ஆண் நீரிழிவு நோயாளர்களிலேயே இது கூடுதலாக ஏற்படும். நோவுடன் கூடிய தசை மெலிவு ஏற்படும். தொடை மற்றும் தோள் பகுதிகள் அதிகம் பாதிக்கப்படுகிறது. தொடுகையுற முடியாத அளவுக்கு நோவின் தன்மை வெளி இருக்கும். இது சரியாக குருதிக் குளுக்கோஸை கட்டுப்படுத்தாதவர் கால்களிலேயே காணப்படுகிறது. குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்தும் போது தசைமெலிவைக் குணப்படுத்தலாம்.

### தன்னியக்க நரம்பு நோய்கள்

நீரிழிவு நோயாளர்களில் இந்தப் பாதிப்பு கூடுதலான குணங்குறிகளை வெளிக்காட்டாமலேயே இருக்கும். அரிதாகவே குணங்குறிகள் வெளிக்காட்டப்படும். படுக்கையிலிருந்து எழும்போது ஏற்படும் தலைச்சுற்று ஓய்வு நிலையிலும் அதிகரித்த இதய ஓட்டம், தொடர்ச்சியான வாந்தி, இரவில் வயிற்றோட்டம் போன்றவை இதனால் ஏற்படுகிறது. ஆண்மைக்குறைவும் (Impotence) இதனால் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

நீரிழிவு நோயாளர்கள் நரம்புப் பாதிப்பைத் தவிர்க்கக் குருதிக் குளுக்கோசின் அளவை சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கால்களை கிரமமாக அவதானித்துக் காயங்கள், புண்கள் ஏற்படுவதை உடனுக்குடன் கண்டு கொண்டு சிகிச்சை பெற வேண்டும். ஆக, நாம் அனைவரும் நீரிழிவை வெற்றி கொண்டு பாதிப்புக்கள் ஏற்படாது நலமுடன் வாழ்வோமாக.

நரம்பியல் பிரிவு,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 04.06.2017



# செல்வம் கொழிக்கும் இராணுவ முகாம் உள்நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது

சைதண்யன்

பாலைப்பழம் உண்ணும் அவாவுடன் யாழ்ப்பாணம் -மன்னார் வீதி வழியான எனது பயணம் ஆரம்பமாயிற்று.

பரந்த வயல், கடல் வெளிகளில் வீசிக்கொண்டிருக்கும் பலமான காற்றையும் உயர்ந்து, நிமிர்ந்து நிற்கும் சங்குப்பிட்டிப் பாலத்தையும் தாண்டிபூநகரிச் சந்தியை அடைந்து விட்டது மோட்டார் சைக்கிள். அங்கிருந்து மன்னார் செல்லும் திசை நோக்கிச் சிறிது தூரம் பயணித்தால், பாலை மரங்கள் செறிந்திருக்கும் காடுகள் வந்துவிடும்.

காட்டுக்குள்புகுந்து, கஸ்ரப்பட்டுப்பழம் பறிக்க வேண்டிய அளவுக்கு இம்முறை அங்கென்றும் இங்கென்றுமாக பாலைமரங்கள் அரிதாகக் காய்க்கவில்லை. "வீதிக் கரைகளில் நிற்கும் மரங்களில்கூட அதிக பழங்களைப் பறித்துவிடலாம்..." ஏலவே அங்கு சென்று வந்திருந்த சிலர் இப்படியாக எனது காதுகளில் எத்தி வைத்திருந்தனர்.

மிதமான வேகத்தில் மோட்டார் சைக்கிள் பயணித்துக் கொண்டிருக்கின்றது. மண்டக்கல்லாறு என்ற பகுதியையும் கடந்தாயிற்று. இன்னும் சற்றுத் தூரம் பயணித்ததில் பாலை மரங்களும் அவற்றில் ஏராளம் பழங்களுமான காட்சிகள் கண்களை நிறைத்தன.

இடையிடையே சனக்கூட்டங்கள் சிலவும் வீதியின் இரு கரைகளிலும் முகாமிட்டுக் கொண்டு பாலைப்பழங்களைப் பிடுங்கிக் கொள்வதில் மும்முரமாயிருக்கின்றன. நானும் வீதி ஓரமாக மோட்டார் சைக்கிளைத் தரித்துவிட்டுப் பழம் பறிக்க ஆயத்தமானேன்.

ஆனால் இங்கே வீசும் மெல்லிய காற்றில், களைகட்டியிருக்கும் பாலைப்பழங்களின் வாசனை இருக்கவில்லை. மூக்கைத் துளைக்கும் ஒரு புதிய வாசனை இடையிடையே காற்றோடு வந்து போனது. வீதியின் வலது பக்கத்திலிருந்து. கொஞ்சம் தூக்கலாகவே. அது என்னவாக இருக்கும்...!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீதியின் வலது பக்கத்தில், அந்த வாசனை ஊற்றெடுக்கும் பகுதிகளில் கரும் பச்சைநிற ஆடை தரித்திருக்கும் இளைஞர்கள் சிலர் நின்று கொண்டிருக்கின்றார்கள்.
ஓ... ஓ... அவர்கள் இராணுவத்தினர்...! இருவர் இருவராக இடையிடையே நின்று ஏதேதோ செய்துகொண்டிருக்கின்றார்கள்.

"இது ஓர் இராணுவ முகாம் அனுமதியின்றி உட்செல்வது தடை செய்யப்பட்டுள்ளது" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கும் பதாகைகளை நட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பதாகைகளுக்கு பின்புறத்தில் இராணுவ முகாம் இருப்பதற்கான அறிகுறிகள் எவையும் தென்படவில்லையே...!
சற்றே எட்டிப்பார்த்தேன்.
அவை கஜு மரங்கள்...!
அவற்றில் ஏராளம் பழங்கள் கனிந்து தொங்குகின்றன. வீதிஓரமாக வீதியுடன் நீண்டு ஐந்தாறு கிலோ மீற்றர்கள் வரைக்கும் நிற்கும் அந்தக் கஜு மரங்கள் காய்த்து மணம் வீசிக்கொண்டிருக்கின்றன. அதன் ஒரு மூலையில் முகாமிட்டிருக்கும் இந்த இராணுவத்தினர், அவை அனைத்தையும் ஆக்கிரமித்து, இப்படியான எச்சரிக்கைப் பதாகைகளை காட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனக்கு இப்போது பாலைப்பழம்பிடுங்கும்அவா மறைந்து வீதியோடு நீண்டிருக்கும் இவ்வளவு கஜு மரங்களையும் உண்டாக்கிப் பராமரிப்பது இராணுவத்தினரால் எப்படிச் சாத்தியமாயிற்று எனும் சந்தேகம் எழத்தொடங்கீற்று.

**இவ்வளவு பெரும் பரப்பில் இவை எவ்வாறு?**

மோட்டார் சைக்கிளில் மெதுவாக ஊர்ந்தபடி அதன் நீள விஸ்தீரணத்தை ஓரளவு கணக்கெடுத்துக்கொண்டதில்...
மண்டக்கல்லாறு கழிந்த சிறிது தூரத்திலேயே அந்த மரமுந்திரிகைத் தோட்டம் ஆரம்பமாகி விடுகின்றது. பின்னர் பொன்னாவெளிக்குப்போகும் கிளை வீதி ஒன்றுடன் அதன் அடர்த்தி அதிகமாகின்றது. அதுவே நாலவெளி, சுன்னாவில், திக்குவில் வரைக்கும் நீண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட ஐந்தாறு கிலோ மீற்றர்கள்.
நீளம் இவ்வாறிருக்க அதன் அகலம் எவ்வாறிருக்கும் என்பதை என்னால் அறியமுடியவில்லை. வீதியோரமாக நின்று சிந்தித்துக் கொண்டிருக்க வயது முதிர்ந்த ஒருவர் அந்த வழியாகத் தன்னுடைய சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்தார். அவர் இந்தப் பகுதியில் வசிப்பவராக இருக்கலாம். சரிதான். அவர் என்னிடம் சிக்கியும் கொண்டார்.

— — — — —

"ஐயா... நீங்கள் இந்த ஊரோ...?"
நின்று நிதானித்தவர்.
"ஓ தம்பி. என்ன சொல்லுங்கோ..." என்றார் தாராளமாக.
அவரது குரலில் தளர்வுடன் தெளிவின்மையும் இருந்தது. அவர் ஒரு மலையகத் தமிழர் அவரை நெருங்கி உரையாட முற்பட்டேன்.
"ஐயா உந்தக் கசுத்தோட்டங்கள் எவ்வளவு பரப்பில கிடக்குது? என்னெண்டு உவ்வளவும் இதில வந்தது...?" ஒரு கேள்வியைத் தொடுத்தேன்.
பெரு மூச்சிழுத்துக் கொண்டார். அதற்கேற்ப அவர் கூறியவைகளும் கொஞ்சம் பெரிய விடயங்களாகத்தானிருந்தன.
"உது கசுத் தோட்டமில்ல தம்பி. கசுப் பண்ணை. அதுவும் ஒண்டு, றெண்டில்ல. உங்கனேய மூண்டு பண்ணை கிடக்குது. நூறு, இருநூறு, ஐந்நூறு, ஆயிரமில்ல. ஆயிரத்தைநூறு ஏக்கர்களுக்கும்கூட வரும். றோட்டு நீளம் அளந்து பாத்தீங்கன்னா... மூண்டு... ஓ... மூண்டு மைலுக்குக் கிட்ட வரும். உள்ளுக்க.... அரைக் கட்ட... முக்காக் கட்ட அளவில அளவில இருக்கும்"
"இவ்வளவும் என்னண்டு வந்தது...?"
"இது இயக்கம் ஆக்கள் வைச்சது தம்பீ... நாங்கள்தான் வேலை செய்தனாங்கள். அவங்கள்தான் சனத்துக்குச் சம்பளம் கொடுத்து இவ்வளவையும் உண்டாக்கினவங்கள். நாங்கள் வைச்ச எல்லாம் இப்ப வளந்திச்சுது"
வயது தளர்ந்து விட்டாலும் தனது அந்தக்கால ஞாபகங்களை வலுவாகத் தனது மனதில் பதிந்து வைத்திருக்கின்றார். அந்தக் காலத்தை நேற்று நடந்தது போலவும் அவர் விவரிக்கத் தொடங்கினார்.

**வியர்வை சிந்தியவர்களும் வளர்த்தெடுத்தவர்களும்**

"இயக்கத்தின்ர நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தியின்ர மேற்பார்வையிலதான் ஆரம்பத்தில ஆள்களுக்குச் சம்பளம் கொடுத்து, டோசருகள வைச்சு இந்த இடத்தைத் துப்பரவாக்கினவை. அவர் இடக்கிட வந்து பாப்பார். நாங்கள் அப்பேக்க திக்குவிலுக்க இருந்தனாங்கள். ஒரு அம்பது, அறுவது பேரா வேலைக்கு வந்தம். இங்கால கிராஞ்சிப் பக்கமிருந்தும் கொஞ்ச ஆக்கள் வந்தவை. சம்பளமும்... ஏதோ... முன்னூறு, நானூறு போல கிடக்கு. துப்பரவாக்கி முடிஞ்ச காலத்தில கிராஞ்சி, மன்னார் பக்கமிருந்து பால்க்கிழுவங்கதியாலுகள் லொறியிலயும் ரக்றறியும் ஏத்திக்கொணாந்து பறிச்சு வேலி அடைச்சது. பிறகு 2அடி நீள, அகலத்தில இருபத்தைஞ்சு, முப்பது அடி இடைவெளிக்கொரு குழி வெட்டி அதில தான் உந்தக் கசுக்கன்டுகள 'பட்' கன்டுகளா(ஒட்டுக் கன்டுகள்) நட்டம். அநுராதபுரத்தில இருந்தும் சிலதை மன்னார்ப்பக்கம் இருந்தும் கொண்டு வந்ததா ஞாபகம். கன்டுகள் வளர்க்கவும் எங்களத்தான் வேலைக்கு வைச்சிருந்தினம். இயக்க ஆக்கள் ஒருத்தரும் வாறதில்ல. சனத்துக்கு வேலை குடுத்தாங்கள். நல்ல சம்பளமும் கிடைச்சுது. கன்டுகள் வளரத் தொடங்கின காலத்தில தமிழேந்தி வாறேல்லப்போல... ஓ... பிறகு வைப்பகத்தில இருந்த வீரத்தேவன்தான் அடிக்கடி வாறவர். கன்டுகளுக்குத் தண்ணி ஊத்த மூண்டு பவுசருகள் இரவு, பகலாத் தொடந்து ஓடிக்கொண்டிருக்கும். கன்டுகளுக்கிடையில இடைவெளி அதுக்குத்தான் பெரிசா விட்டிருக்கினம்.
மண்டக்கல்லாத்தடிப் பண்ணையிலதான் முதலில கன்டுகள் நட்டனாங்கள். அதத்தான் முதலாவது பண்ண எண்டவ பிறகு... இப்ப... நாச்சிக்குடாப் பொலிஸ்ரேசன் இருந்த இடமாண்டி... 12ஆம் கட்டையா இருக்கணும்... உந்த சுன்னாவிலுக்கும் திக்குவிலுக் கும் இடையில வைச்சதுதான் றெண்டாவது பண்ண. திக்குவி லாண்டி இருக்கிறது மூண்டாம் பண்ண. அவ்ளே ஏக்கரிலயும் பட் கன்டுகள நட்டு பின்னால இருக்கிற பிரம்படு பள்ளம், சுன்னாவில் குளம், நாலாவெளிக்குளம், காவாக் குளம், வெளவால் குளம் எல்லாத்தில இருந்தும் தண்ணியடிச்சுக் கன்டுகளுக்கு விட்டு மூண்டு, நாலு வருசங்களா வளத்தம். பிறகு பூ ஒடிச்சு, நிலத்தில இருந்து மூண்டு அடியளவில வளருற கிளையளையும் வெட்டி மரங்கள எழும்பி வளரச் செய்தம். எல்லாம் நல்லா வளந்து பூத்துக் காய்க்கத் தொடங்கியிருக்க, சன்டை தொடங்கீற்று. கஸ்ரப்பட்ட அவங்களும் வேலை செய்த நாங்களுமா எல்லாத்தையும் விட்டுட்டு கிளிநெச்சிக்குப் போனம். முதல் பழத்தில இருந்து இண்டு வரைக்கும் அதில கஸ்ரப்பட்ட ஒருத்தருக்கும் அது இல்லாமப் போச்சுது. சண்டை முடிஞ்சு வந்து பாத்தா எல்லாக் கண்டுகளும் நல்லாக் காச்சிருந்திச்சு. ஆனா இடையிடையா இருந்த ஆமிக்காரர் கொஞ்சம் கொஞ்சமா பண்ண முழுக்கத் தங்களின்ர பண்ண எண்டு போர்ட் வைக்கினம்"

— — — — —

ஆம்... ஐயா சொல்வதுபோல் விடுதலைப்புலிகளும் மக்களுமாக இணைந்து வளர்த்தெடுத்துவிட்ட ஆயிரத்து ஐந்நூறு வரையான ஏக்கர்களிலுள்ள அந்த மரமுந்திரிகைகளின் இன்றைய ஏகதாராளமான வருமானங்கள் அனைத்தையும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனமோ, விவசாயத் திணைக்களமோ, வடமாகாண சபையோ அல்லது எந்தவொரு அரச நிர்வாகங்களோ தமக்குக் கீழே இதுவரைக் கொண்டுவரவில்லை. இது அரசுடமையாக்கப்படுவதற்கு மாறாக இன்றுவரை இராணுவம் வசமே இருக்கின்றது. அதன் ஏகப்பட்ட வருமானங்கள், அதன் மூலமான வேலை வாய்ப்புகள் என்று பல நன்மைகள் அதற்குள் புதைந்து கிடக்கின்றன.
அதைவிட இப்போது இளமை கொண்டிருக்கும் அந்த மரமுந்திரிகை மரங்களை இராணுவம் நன்கு பராமரிப்பதில்லை. மாறாக அதிலிருந்து வருமானத்தைப் பதுக்கிக் கொள்வதில் மும்முரமாயிருக்கின்றது. அதற்கு நீர் இறைப்பது மட்டும் போதுமானதல்ல. பசளைகள், பருவத்துக்கேற்ப கைக்கொள்ள வேண்டிய அதன் வளர்ச்சியையும் பயனையும் ஊக்குவிக்கும் இன்னும் ஏராளம் பராமரிப்பு வேலைகளை இராணுவம் செய்வதாகத் தெரியவில்லை. மாறாக அதன் பயனை அனுபவிப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றது.
இதனால் அந்தக் கன்றுகளின் ஆயுள் குறைந்து விடும்.
"போன மாதங்களில அவங்கட காம்புக்குள்ள எங்கள் எல்லாரையும் கூப்பிட்டு விவசாயக்காரர் பயிற்சி எண்டு ஒண்டு வைச்சவ. நாங்களும் நாங்க நட்ட மரங்கள் எப்பிடியிருக்குதெண்டு பார்க்கலாம் எண்ட சந்தோசத்தில அதுக்குள்ள போனம். மரங்களுக்குக் கீழ விழுகிற கொட்டைகளப் புறக்குறதுக்காகப் போல... கீழ வடிவாத் துப்பரவாக்கி வைச்சிருக்கி றாங்கள். இடைக்கிடை தண்ணியும் விடுறாங்கள் போல கிடக்கு. ஆனாப் பூக்கிற, பிஞ்சு பிடிக்கிற காலத்தில செய்யுற வேலைகள் ஒண்டையும் செய்யிறதாத் தெரியெல்ல. அதோட மரத்தைத் துளைச்சுப் பிசின் வடிய வைக்கிற புழு ஒண்டு இருக்குது. அது அடி மரத்தில ஓட்டையடிச்சுப் பூந்து இடைக்கிடை இருக்குது. அதைத் தோண்டி வெளியில எடுத்துப்போட்டு பிசின் வடியவிடாமல் மருந்துசெய்யவேணும். அதுக்குமருந்தும் இருக்குது. பண்ணைக்குள்ள நிறைய மரங்கள் இப்பிடியா இருக்குது. சரியாக் கவனிக்காட்டி பதினைஞ்சு, இருவது வருசங்கள் வரைக்கும் நல்ல வருமானம் தாற மரங்கள் அநியாயமாகப் போயிரும்" என்றார் மன உளைச்சலோடு.

**கற்பனைக்கும் எட்டாத கஜுவின் வருமானம்**

'எனக்கு மூண்டு ஏக்கரில கசு நிற்குது. காய்க்கிறப்போ ஒரு கண்டில இருந்து கிழமைக்கு மூண்டு கிலோ கொட்டை எடுப்பன். ஒருகிலோ 350 - 400ரூபா போகுது. பருப்பாக்கினால் ஆயிரம் ரூபாவுக்கும் மோலை போகுது. நான் பருப்பாக்கித்தான் குடுக்கிறது. என்ர மூண்டு ஏக்கரிலயும் 25அடிக்கு ஒரு கண்டு வைச்சிருக்கிறன். ஒருமுறை கொட்டை ஆய்ஞ்சு குடுக்குறப்போ ஒண்டு ஒண்டரை லச்சம் வரும். காய்க்கிறப்போ இப்பிடி மூண்டு, நாலுவாட்டி ஆயலாம். அதவிட பழங்களையும் தனியா விப்பன்' இது அதே வயோதிபர்தான். தான் நாட்டிய மரங்கள் இப்படி அநாதரவாகி விட்டனவே என்கின்ற ஆதங்கத்துடன் என்னிடமிருந்து விடைபெற்றார் அவர்.
அவருடைய மூன்று ஏக்கர்களிலேயும் அவர் பெறும் வருமானம் இப்படியாக விருந்தால், இப்போது இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் இந்த ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான ஏக்கர்களின் வருமானத்தை எப்படிக் கற்பனை செய்து பார்ப்பீர்கள்...?

"இப்போது இளமை கொண்டிருக்கும் அந்த மரமுந்திரிகை மரங்களை இராணுவம் நன்கு பராமரிப்பதில்லை. மாறாக அதிலிருந்து வருமானத்தைப் பதுக்கிக் கொள்வதில் மும்முரமாயிருக்கின்றது. அதற்கு நீர் இறைப்பது மட்டும் போதுமானதல்ல. பசளைகள், பருவத்துக் கேற்ப கைக்கொள்ள வேண்டிய அதன் வளர்ச்சியையும் பயனையும் ஊக்குவிக்கும் இன்னும் ஏராளம் பராமரிப்பு வேலைகளை இராணுவம் செய்வதாகத் தெரியவில்லை. மாறாக அதன் பயனை அனுபவிப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமும் தண்டனையும்



குணசேகரன் சக்தீனா

வழக்குகள் நடைபெறும் இடம் நீதிமன்றம் என அறிந்துள்ளோம். அதிலும் பலரும் அறிந்த சில விசித்திரமான திருமண விவகாரத்து வழக்குகள் மன்றுப்படி ஏறுவதும் வழக்கம். ஆண்-பெண் சம்மதத்துடன் திருமணங்கள் நடைபெறுவதும் இரண்டு, மூன்று பிள்ளைகளைப் பெற்றதும் விவகாரத்துப்பெறுவதும் அல்லது அதற்கு முன்போ விவகாரத்துப் பெறுவதும் சில குடும்பங்களின் வழக்கமாக உள்ளன. இவை காலத்துக்குக் காலம் அதிகரிக்கின்றனவே தவிரக் குறைந்தபாடில்லை. இந்த விவகாரத்துக் கலாசாரம் இப்போது மலினமாகிவிட்டது. இதனால் இவற்றை விசித்திரம் என்பதாகப் பார்க்க முடியாது. ஆனால் இங்கு நான் கூற வந்தது இந்த விவகாரத்து வழக்குகளைக் காட்டிலும் கணவன் - மனைவிக்கிடையே நடந்தி ருக்கின்ற விசித்திரமான வழக்கு ஒன்றையே. அது வேறொன்றுமில்லை. மனைவியை வன்புணர்ந்த கணவனைத் தண்டித்த வழக்கு...!

•••

மன்றில் வழக்குக்காகப் பலதரப்பட்டவர்களும் வந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரது பார்வையும் அங்கு வந்திருந்த அந்த ஆண் - பெண் இருவர் மீதும் இருந்தது. காரணம் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் திருமணம் முடித்துக் கொண்ட தம்பதியினர். மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்த ஆண் சில வருடங்களுக்கு முன்னர் குற்றமிழைத்திருக்கின்றார். அந்தக் குற்றத்துக்கு இப்போது அவருக்குத் தண்டனை கிடைத்திருக்கின்றது. இதில் விசித்திரம் என்னவென்றால் கணவன் குற்றவாளி என்பதை உறுதிப்படுத்தும் சாட்சியாக அவருடைய மனைவி இருப்பதேயாகும். மன்றுக்கு வெளியே தம்பதியர்களாக இருக்கும் இவர்கள் இருவரும் மேல் மன்றுக்குள் குற்றவாளியும் சாட்சியுமாக நின்று கொண்டிருக்கின்றார்கள்.

மன்றின் செயற்பாடுகள் வழமையான நேரத்துக்கு ஆரம்பமாகின. இந்தத் தம்பதியர்கள் சம்பந்தப்பட்ட வழக்குத் தான் முதல் வழக்கு. குற்றவாளியான கணவன் குற்றவாளிக் கூண்டுக்குள் ஏற்றப்பட்டார். சாட்சியான மனைவி எழுந்து நின்றார்.

•••

அருகில் இருந்தவர்கள் குசுகுசுத்தார்கள் "இவர்கள் என்ன வழக்குக்காக வந்திருக்கிறார்கள்" என்று. இந்தச் சந்தேகம் அங்குள்ள அனைவருக்கும் எழுந்திருக்க வேண்டும். வைத்த கண் வாங்காமல் நீதிபதியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அனைவரும். நீதிபதி கூறினார் "எதிரிக்குக் குற்றப்பத்திரம் தமிழ் மொழியில் வாசித்துக் காண்பிக்கப்படும்" குற்றப்பத்திரம் எதிரி செவிமடுப்பதற்கு வாசிக்கப்பட்டது. எதிரி சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி "எதிரி தான் குற்றவாளி என்பதை ஏற்றுக்கொள்கின்றார்" என்றார்.

அவர் செய்த குற்றம் மன்னிக்கத்தகாதது. மிகவும் கொடூரமானது. கடந்த 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் மற்றும் 2010ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளில் யாழ்ப்பாணம் - நல்லூர்ப்பகுதியில் 16வயதுக் குட்பட்ட சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமையே அவர் இழைத்திருந்த குற்றம். இந்தப் பாலியல் வன்புணர்வு மூன்று தடவைகள் நடைபெற்றுள்ளது. ஆகவே இவர் மேல் 3 குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன. இதன்படி கைது செய்யப்பட்டுப் பின்பு பிணையில் விடுதலை செய்யப்பட்ட குறித்த நபர். இந்தச் சம்பவம் நடைபெற்றதற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் தான் வன்புணர்ந்த அந்தச் சிறுமிக்கு 18வயது பூர்த்தியாகியதும் சட்டரீதியாக அவரைத் திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு இப்பொழுது மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

•••

மன்றின் அமைதியைக் குலைத்தது அந்தப் பெண்ணின் குரல் "ஐயா எனது கணவர் அப்பொழுது செய்த தவறை மன்னித்து, அவரை விடுதலை செய்யுங்கள்" தனது கணவருக்காக உரிமையுடன் ஒலித்தது அவனது மனைவியின் குரல்.

அமைதியாகச் சிரிக்க முயன்றும் தோற்றுப்போனவர்கள் சிலர் பாதுகாப்புப் பொலிசாரால் அறிவுறுத்தப்பட்டார்கள்.

இப்போது எதிரி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எழுந்து "குறித்த குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தற்சமயம் தான் செய்த குற்றத்தை ஏற்றுக்கொள்கின்றார் என்றும் பாதிக்கப்பட்ட பெண்ணையே அவர் சட்டப்படி திருமணம் செய்து வாழுகின்றார், இந்தத் திருமணம் மூலம் அவர்களுக்கு மூன்று குழந்தைகளும் இருக்கின்றன என்றும் குறித்த சம்பவம் நடைபெற்றபோது குற்றவாளியும் பாதிக்கப்பட்ட பெண்ணும் காதலர்களாக இருந்துள்ளார்கள். காதல் வசப்பட்டதினாலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும்" குறிப்பிட்டு குறித்த நபருக்கு குறைந்த பட்சத் தண்டனை வழங்க ஆவணசெய்யுமாறு கோரினார். இதற்கு மறுவாதம் புரிந்த அரசசட்டவாதி " குற்றஞ்சாட்டப்பட்ட குறித்த நபர் பாதிக்கப்பட்ட பெண்ணையே திருமணம் செய்து கொண்டதால் அவர் இழைத்த குற்றம் குற்றம் இல்லையென்று பொருள்படாது என்றும் குறித்த குற்றம் பாரதூரமான குற்றம்" என்றும் மன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

இவற்றைப் பரிசீலனை செய்த நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்ட பெண்ணையே திருமணம் செய்து வாழ்கிறார், இவர்களின் திருமணம் சட்டப்படி நடைபெற்றுள்ளது என்று திருமண ஆவணங்கள் மூலம் அறிய முடிகின்றது, ஆனாலும் இவர் இழைத்த குற்றம் மிகப் பாரதூரமான குற்றமாகும். குற்றவாளி மூன்று குற்றச்சாட்டுக்களுக்குரியவர் என்று கூறி அந்த மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளிக்குத் தலா இரண்டு வருடங்கள் கடூழியச்சிறைத் தண்டனையும் அதை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்த சிறைத்தண்டனையாகவும், தண்டப்பணமாக தலா 2ஆயிரம் படி 6ஆயிரம் ரூபாவும், நஷ்ட ஈடாக 5ஆயிரம் ரூபாப்படி 15ஆயிரம் ரூபாவும் விதித்துத் தீர்ப்பளித்தார். வழக்கு நிறைவு பெற்றது மன்று கலைந்தது.

•••




இந்த வழக்கு விசித்திரம் என்பதற்கு அப்பால் நிறையப் படிப்பினைகளையும் எடுத்தியம்பிச் சென்றுள்ளது. சட்டம் தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்திருக்கின்றது. நத்தை வேகத்திலேயோ, ஆமை வேகத்திலேயோ நகர்ந்திருந்தாலும் குற்றத்துக்கு அது தண்டனை வழங்கியிருக்கின்றது. அத்துடன் நீதி என்பது இழுத்தடிக்கப்படாமல் உடனடியாக வழங்கப்படவேண்டியது என்பதும் இந்த வழக்கிலிருந்து மன்றுக்கான ஒரு பாடம். அதை விட குற்றவாளிக்கும் இத்தகைய குற்றங்களை இனிவருங்காலங்களில் செய்யவிருக்கும் குற்றவாளிகளுக்கும் நெற்றியில் ஆணி அறைந்ததைப்போல எச்சரித்திருக்கின்றது இந்தத் தண்டனை. சிறுமி, சிறுவர் முறைகேடுகளில் ஈடுபட்டுப் பின்னர் பிராயிச்சித்தம் தேடும் நோக்கிலயோ அல்லது தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் நோக்கத்துடனேயே எத்தகைய நற் காரியங்களில் இறங்கினாலும் கூட குற்றவாளிகள் தண்டணையிலிருந்து தப்ப முடியாது எனும் புதிய நீதிச்சாரம் ஒன்றை அது தெளிய வைத்துச் சென்றுள்ளது. குற்றத்தின் பின்னர் நிகழ்ந்த மாற்றங்களால் குற்றம் குற்றமற்றது என்று ஆகிவிடாது என்பது இந்த வழக்கு உணர்த்தும் பாடம்.

"அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் திருமணம் முடித்துக் கொண்ட தம்பதியினர். மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்த ஆண் சில வருடங்களுக்கு முன்னர் குற்றமிழைத்திருக்கின்றார். அந்தக் குற்றத்துக்கு இப்போது அவருக்குத் தண்டனை கிடைத்திருக்கின்றது. இதில் விசித்திரம் என்னவென்றால் கணவன் குற்றவாளி என்பதை உறுதிப்படுத்தும் சாட்சியாக அவருடைய மனைவி இருப்பதேயாகும். மன்றுக்கு வெளியே தம்பதியர்களாக இருக்கும் இவர்கள் இருவரும் மன்றுக்குள் குற்றவாளியும் சாட்சியுமாக நின்று கொண்டிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ட்ரம்பின் முதலாவது 'ஏநர்'



பிரகாஸ்

உயர்தரப் பாதுகாப்பு, அரசசெலவு, ஆடம்பரமான நாடுகள், முன்னாள் மொடல் அழகியான தற்போதைய மனைவி என உலகத்தை ஒரு கலக்குக் கலக்கி மீண்டும் அமெரிக்கா திரும்பியுள்ளார் அதிபர் டொனால்ட் ட்ரம்ப். ட்ரம்பின் இந்தப் பயணத்தால் உலகத்துக்கு என்னென்ன அனுகூலங்கள் ஏற்பட்டுள்ளன என்று சற்று ஆழமாகச் சிந்துத்துப் பார்த்தால் "ஒரு ஆணியும் பிடுங்குப்படேல்ல" என்று ஒற்றை வரியில் பதில் சொல்லி விடலாம். அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று, கடந்த ஜனவரியில் ஆட்சிப்பீடம் ஏறியவர் ட்ரம்ப். அன்றிலிருந்து அவர் பன்னாட்டு அரசியலில் சில அதிரடி நகர்வுகளைக் காட்டியிருந்த போதிலும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. கடந்த மாதம் இறுதியில் தனது முதல் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தார் ட்ரம்ப்.

**சவூதி**

ட்ரம்ப் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், முதலாவதாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாடாகச் சவூதி பதிவானது. இந்தச் சுற்றுப்பயணத்தில் இருதரப்பு வர்த்தகம் முக்கிய விடயமாக அமைந்தது. ஆரியக்கூத்தாடினாலும்



காரியத்தில் கண் என்பதை சவூதி சுற்றுப்பயணத்தின் மூலம் ட்ரம்ப் நிரூபித்துள்ளார். ஆயிரமல்ல, பத்தாயிரமல்ல இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் கோடி பெறுமதியான இராணுவத் தளபாடங்களை அமெரிக்காவிடம் இருந்து நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் சவூதி வாங்கவுள்ளது. உலக நாடுகளின் இராணுவ வர்த்தகத்தில் இது மிகப்பெரும் தொகை. ரஷ்யாவே வாயைப் பிளக்கின்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இந்த ஒப்பந்தத்தை ஈரானின் மூத்த தலைவர் அயத்துல்லா "சவூதி, அமெரிக்காவுக்கு பால் கறக்கும் பசு. அமெரிக்காவின் வேலை முடிந்துவிட்டால் சவூதியின் கதையும் முடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அயத்துல்லா அற்புதமாகக் கணித்துள்ளார் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

**இஸ்ரேல் - பலஸ்தீனம்**

சவூதியில் தான் சென்ற அலுவலைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு, உலகவல்லரசின்துரை நேராக இஸ்ரேல் சென்றிருக்கிறார். அங்கேதான் இந்த நூற்றாண்டின் ஆகச் சிறந்த நகைச்சுவையும் அரங்கேறியது. கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பல பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலின் செயற்பாடுகளுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானமும் நிறைவேறியுள்ளது. இந்த நிலையில் இஸ்ரேலுக்குச் சென்ற ட்ரம்ப் அந்த நாட்டின் அதிபர் நெத்தன்யாகு, பலஸ்தீன அதிபர் அப்பாஸ் ஆகியோரைச் சந்தித்த பின்னர், "கடந்தகால பகைமை, வெறுப்பு மற்றும் வலி ஆகியவற்றை கைவிட்டு இருநாடுகளும் இணைந்துசெயற்பட முன்வரவேண்டும்" என்று அழைப்பு விடுத்தார். இஸ்ரேலின் போக்கை ஆதரித்து ஐக்கிய நாடுகள் சபையில் அந்த நாட்டுக்கு எதிராக வரும் கண்டனத் தீர்மானங்களை இல்லாது செய்துவந்த வரலாற்றுப் பெருமை அமெரிக்காவுக்கே உண்டு. அமெரிக்காவின் கண்மூடித்தனமான ஆதரவு இல்லையேன்றால் இஸ்ரேல் இன்று இந்தளவுதூரம் தனது ஆக்கிரமிப்பு மனோபாவத்தை வளர்த்திருக்காது. இவ்வளவற்றையும் செய்த பின்னர் வலியை மறக்கச் சொன்னால் பலஸ்தீனம் உடன்படுமா...? இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே இருப்பது ஒற்றை வரியில் முடியக்கூடிய பகையா...? "கிழக்கு ஜெருசலேம் எமது தலைநகர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை" என்று ட்ரம்பிடம் சொல்லிப் பத்திரமாக வழியனுப்பி வைத்தார் பலஸ்தீன அதிபர் அப்பாஸ்.



**பாப்பரசருடன்....**

அதிபர் தேல்தலில் ட்ரம்ப், அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்டப்படும் என்று வாக்குறுதி வழங்கினார். இதற்குப் பாப்பரசர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். சுவர் கட்டுவது அல்லாமல் சுவர் இடிக்கப்படுவதே மனிதநேயம் என்று பாப்பரசர் தெரிவித்தார். இதற்கு ட்ரம்ப் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இவ்வாறான விடயங்களில் பாப்பரசர் தலையிடுவது அழகல்ல என்று ட்ரம்பின் பேச்சு அமைந்திருந்தது. இந்தப் பின்னணியில் தான் இந்தச் சந்திப்பும் இடம்பெற்றது. மொத்தத்தில் ஒரு மந்தையில் இருந்த இரண்டு ஆடுகள் வேறுவேறு திசைகளில் சென்ற பின்னர் இடம்பெற்ற சந்திப்பு இது. சம்பிரதாய பூர்வ அடிப்படையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதனால் இது பெரிய அளவில் எதிர்பார்க்கப்படவும் இல்லை. எடுபடவும் இல்லை.





**ஜி7 மாநாடு**

பாப்பரசருடனான சந்திப்பைத் தொடர்ந்து இத்தாலியில் நடைபெற்ற ஜி7 மாநாட்டில் ட்ரம்ப் கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. கனடா அதிபர் ஜஸ்ரின், ஜேர்மனி அதிபர் மெர்க்கல், பிரான்ஸ் அதிபர் மக்ரோன், பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே ஆகியோருடன் தனித்தனியாக ட்ரம்ப் ஆலோசனை நடத்தினார். இந்த விசேட சந்திப்புக்களில் எந்தெந்த விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன என்று உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. இந்த மாநாட்டை முடித்துக் கொண்டு மீண்டும் வெள்ளை மாளிகைக்குத் திரும்பினார் ட்ரம்ப்.

இந்தப் பயணங்களை ஒரு நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால், ட்ரம்ப் முதலாவதாகச் சென்ற சவூதியே ஆகச் சிறந்த பயணம் என்பதும், இந்தப் பயணம் அமெரிக்காவுக்கு மட்டும் நன்மை பயக்கவல்லது என்பதும் தெளிவாகும். ட்ரம்ப், அடிப்படையில் ஒரு பெரும் வர்த்தகர், செல்வந்தர். அவரை அதிராக்கியதன் மூலம் அமெரிக்கா தனது பொருளாதாரத்தை மேலும் வளர்த்துக் கொள்ளும். இராணுவத்தை மென்மேலும் பலப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் உலக வல்லரசு என்ற அடிப்படையில் தென்சீனக் கடல்பரப்பு, கிழக்கு உக்ரைன் விவகாரம், அகதிகள் பிரச்சினை, ஆயுத களாசாரம், கிழக்கு ஜெருசலேம் விவகாரம் உள்ளிட்ட பற்பல பிரச்சினைகளுக்கு ட்ரம்பால் தீர்வு தரப்படமாட்டாது என்பதற்கு அவரின் முதல் பயணம் தக்க சான்று. இதைத் தான் ட்ரம்பும் சொல்கிறார். "அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே..."

ட்ரம்பின் இந்தப் பயணத்தால் உலகத்துக்கு என்னென்ன அனுகூலங்கள் ஏற்பட்டுள்ளன என்று சற்று ஆழமாகச் சிந்துத்துப் பார்த்தால் 'ஒரு ஆணியும் பிடுங்குப்படேல்ல" என்று ஒற்றை வரியில் பதில் சொல்லி விடலாம். அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று கடந்த ஜனவரியில் ஆட்சிப்பீடம் ஏறியவர் ட்ரம்ப். அன்றிலிருந்து அவர் பன்னாட்டு அரசியலில் சில அதிரடி நகர்வுகளைக் காட்டியிருந்த போதிலும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. கடந்த மாதம் இறுதியில் தனது முதல் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தார் ட்ரம்ப்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அப்பம்

துரை.சிவபாலன்

அம்மா...
அப்பா...
அப்பம்...

இப்படியாகச் சொல்வதெழுதுதல் எழுதியிருந்த வயதில் அப்பம் என எழுதும்போதுகூட எனக்கு ஞாபகம் வருவது உண்மையில் அப்பம் அல்ல சீராத்தை ஆச்சி தான்.

நான் நினைக்கின்றேன் எனக்கு நான்கு அல்லது ஐந்து வயதிருந்திருக்க வேண்டும். பள்ளிக்கூடம் போக ஆரம்பித்த காலம். காலையில் இரண்டு கூட்டம் அப்பத்தைச் சாப்பிட்டுவிட்டு, பள்ளி சென்றிருந்த பெரும்பாலான நாள்களில் பாட நேரத்தின் அரைவாசி லேயே உறங்கி விடுவது வழமையாக இருந்தது.

சீராத்தை ஆச்சியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து நான்காவது வீடாகத்தான் இருந்தது. அந்த ஆச்சி விடியற் காலை ஐந்து, ஐந்தரை மணிக்கெல்லாம் எழும்பி அப்பம் சுடும் வேலையை ஆரம்பித்து விடுவார். ஆச்சியின் வாழ்வாதாரம் அப்பம் சுட்டு விற்பதி லேயே தங்கிருந்தது என்று நினைக்கின்றேன். பெரும்பாலான நாள்களில் ஆச்சியின் வியாபாரத்தை ஆரம்பித்து வைப்பது நானாகத்தான் இருக்கும். ஒரு கூட்டம் அப்பம் பத்துச் சதம்...!

இதை நீங்கள் நம்பமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்காக நான் இந்தக் கதையைப் படிக்கின்ற உங்கள் ஒவ்வொருவருடைய வீட்டுக்கும் கற்பூரமும் தீப்பெட்டியும் கொண்டு வந்து கற்பூரம் கொழுத்திச் சத்தியம் பண்ணிக் கொண்டிருக்க முடியாது. அந்தக்காலத்தில் ஆச்சியின் அப்பத்துக்கு மட்டுமல்ல சகல பொருட்ளுக்குமுரிய பணப் பெறுமதிகளும் இப்படியாகத்தான் இருந்தன.

— — — —

சீராத்தை ஆச்சி அப்பம் சுட்ட விதத்தை ஒரு நாவலாகக்கூட எழுதலாம். அது உண்மையான, காத்திரமான எழுத்தாளருக்குரியது. அதனால் நான் அதைத் தவிர்க்கின்றேன். அப்பம் சுடுவதற்கென்று ஆச்சியிடம் இரண்டு அப்பத் தாச்சிகள் இருக்கும். எண்ணை தடவப்பட்டு, அடுப்பில் வைக்கப் பட்டதால் சூடாகிவிட்டிருக்கும் ஒரு தாச்சிக்குள் அப்பத்துக்குரியளவான மாவை அகப்பையால் அள்ளி ஊற்றிய பின்னர் தாச்சியை அந்தச் சூட்டுடன் எடுத்து வட்டமாக வளைத்து ஒரு அலசு அலசுவார் ஆச்சி. அந்த அலசலில் தாச்சிக்குள் அரைவட்ட வடிவாக அப்ப மா ஓட்டிக் கொள்ளும். அடுப்பில் தாச்சியை வைத்தவுடன் தடிணமான முதல்பாலை (தேங்காய்த் துருவல்களில் இருந்து முதலாவதாகச் சிறிதளவு நீர் சேர்த்துப் பிளிந்து எடுக்கப்பட்ட பால். அதனுடன் அளவான சீனி சேர்க்கப்பட்டிருக்கும்) வட்டமாக ஒட்டிக்கொண்டுள்ள மாப்பகுதிக்கு மத்தியில், அப்பத் தாச்சியின் குழிப்பகுதிக்குள் விடுவார். உடனடியாகவே அந்த அப்பத்தாச்சியை மூடும் வகையில், அதற்கு மேலாக மிதமான சுட்டையும் கொடுப்பார்.

அது என்ன? எதற்கு? எப்படி? என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். அந்தக் காலத்தில் சுடப்பட்ட அப்பங்களின் அருமை பெருமைக்கும் சுவைக்கும் காரணம் இந்த 'மேல்சூடு' தான்.

'மேல்சூடு' என்றதும் 'உடற்சூடு' என யாரும் தவறாகப் பொருள் கொள்ள வேண்டாம்.

'மேல்சூடு' என்பது பாவனை இழந்த அலுமினியப் பானைக்குள் (சருவப் பானை) பொச்சு மட்டை, கொக்கறை, ஊமல் என்பவற்றைப்போட்டு, நெருப்புப் பற்ற வைத்து, அவற்றின் நெருப்புத்தணல்களால் சூடாகிவிட்ட அலுமினியப் பானையை அப்பத் தாச்சிக்கு மேலாக வைத்து அப்பத்துக்கு மேற்புறமும் சூடு கொடுப்பதாகும்.

மேல் சூடும் கீழ்ச்சூடும் சரியான முறையில் கொடுக்கப்பட்டால் அப்பத்தைத் தாச்சியில் இருந்து எடுக்க எந்த உபகரணமும் தேவையில்லை. இரண்டு விரல்களாலேயே அப்பத்தைத் தாச்சியில் இருந்து சுளகுக்கு மாற்றி விடலாம். மேல் சூடு ஒரு தாச்சிக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஆச்சி மற்றத் தாச்சிக்குள் மாவை ஊற்றி அடுத்த அப்பத்தைத் தயார் நிலைக்குக் கொண்டு வந்து மேல் சூட்டை அந்தத் தாச்சிக்கு மாற்றி விடுவார். இந்த மேல் சூட்டுச் சருவப் பானையை இரண்டு தாச்சிகளிலும் மாற்றி மாற்றித் தூக்கி வைப்பதற்கு இரண்டு அகப்பைக் காம்பு நீளத்தில் பூவரசம் தடிகளை ஆச்சி பாவித்தது ஞாபகமிருக்கின்றது.



— — — —

அப்பத்தின் மேல் சூட்டையும் கீழ் சூட்டையும் ஏற்றளவு கொடுப்பதற்கும் ஒரு பயிற்சி வேண்டும். பெரும்பாலும் கீழ் சூட்டைக் கொடுப்பதற்கு கொக்கறை தென்னம் பாளை என்பவற்றுடன் சிறு சுள்ளித் தடிகளும் பயன்படுத்தப்பட்டன. மேல் சூட்டுச்சருவப்பானையின் தணலைக் கவனித்து, இரண்டு அப்பங்களுக்கும் மேல் சூட்டையும் கீழ்ச்சூட்டையும் மாறி மாறிக் கொடுத்து, தாச்சியிலிருந்து அப்பத்தைச் சுளகுக்கு மாற்றி, ஒன்றன் மேல் ஒன்றாக அப்பங்கள் இரண்டை இணைத்துக் கூட்டமாக்கி, இடைக்கிடை வந்துபோகும் வாடிக்கையாளர்களையும் கவனித்து, வியாபாரத்தைப் பார்ப்பதற்கு உண்மையில் கடவுள் சீராத்தை ஆச்சிக்கு நான்கு கைகளையாவது கொடுத்திருக்க வேண்டும். ஆனால் ஆச்சி பாவம். இரண்டு கைகளாலே பல பந்துகளை எறிந்து ஏந்தும் ஒரு சர்க்கஸ்காரனைப்போல ஆச்சி அந்த வயதான காலத்தில் இயங்கியதை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கின்றது.

ஆச்சியின் அப்பத்தில் ஒரு வாசனையும் சுவையும் வடிவும் இருக்கும். அப்பத்தின் எல்லாக்கரைகளும் பொன்னிறத்தில் காணப்பட்டன. கரைகளைப்பிய்த்து எடுக்கும்போது அவை உடைந்து நொருங்கும் இசை இப்போதும் அடி மனதில். ஒரு அப்பத்தைச் சாப்பிட்டு விட்டால் மறு அப்பத்தைச் சாப்பிட வாயூறும். பொருளாதார நிபுணர்கள் கூறிச் சென்ற 'குறைந்து செல்லும் எல்லைப் பயன்பாட்டு விதி' ஆச்சியின் அப்பத்துக்குப் பொருத்தமில்லாமல் போய்விடும். எனக்குக் கிட்டத்தட்ட 15 வயது இருந்த போதுஎன்னுடைய ஒன்று விட்ட மாமியின் மகனும் நானும் போட்டிக்கு ஆச்சியின் அப்பம் சாப்பிட்டதில் நான் எட்டரைக் கூட்டம் அப்பத்தைச் சாப்பிட்டு வெற்றி பெற்றது இன்னும் நினைவில்...

பின்னர் எனது பெரிய தாயாரும் அவருடைய மகளும் சுடும் அப்பங்களில் ஓரளவுக்காவது ஆச்சியின் அப்பச் சுவையை உணர்ந்திருந்தேன்.

— — — —

அப்பத்துக்குரிய மாவைத் தயார் செய்வதில்தான் அதிகம் தங்கியுள்ளது அதன் சுவை. சிகப்புப் பச்சை அரிசியை நீரில் ஊறவைத்து, இடித்து, மாவாக்கி கடைசியாகவரும் அதாவது அரிதட்டில் மிஞ்சிவரும் சவ்வரிசி அளவான அந்த அரிசிக் குறுணல்களைக் கொண்டு கஞ்சி காய்ச்சுவார்கள். அந்தக் கஞ்சியுடன் அளவான மாவைக் கலந்து (சில சமயம் கோதுமை மாவையும் கலப்பார்கள்) அப்பத்துக்குரிய மாவை உருவாக்குவார்கள். பெரும்பாலும் இதற்கு மண்பானை பாவிக்கப்படும். மாவை இலகுபடுத்திப் புளிக்க வைக்கச் சிறிதளவு பனம் கள்ளுச் சேர்ப்பார்கள். ஆச்சிக்குப் பிற்பட்ட காலங்களில் பெரியம்மா அப்பம் சுடுவதாக இருந்தால், கள்ளு வாங்கிவரும் பொறுப்பு என்னிடந்தான் தரப்படும். 'யானை மார்க்' சோடாப் போத்தல்கள் இரண்டைத் தயார்ப்படுத்தி கள்ளுத் தொழிலாளர்களைத் தேடிப்பிடித்து இரண்டு போத்தல்கள் நிறையவும் கள்ளு வாங்கி விடுவேன். ஆனால் பெரியம்மாவுக்குக் கொடுப்பது காற்போத்தலுக்குக் குறைவான கள்ளு. அது நான்கு ஐந்து மேசைக் கரண்டியளவுதான் வரும். அந்தளவே அப்பத்துக்குப் போதுமானதாக இருக்கும். மீதிக் கள்ளு எங்கே? இந்தக் கேள்வியைக் கேட்கும்போதே சாதுவாகத் தலைசுற்றுவதுபோல் இருக்கின்றது. பெரியம்மா வீட்டு அப்பம் சீராத்தை ஆச்சியின் அப்பம் போல் இல்லாவிட்டாலும் குறைசொல்ல முடியாத அளவுக்கு ஈடுகொடுத்திருந்தது.

— — — —

இவையெல்லாம் நடந்து இற்றைக்கு முப்பது, முப்பத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன. இன்று அப்பம் அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியை இனிப் பார்ப்போம்.

கடந்த வருடம் தாயகத்துக்கு வந்திருந்தபோது பெரியம்மா வீட்டிலும் இரண்டு நாள்கள் தங்கக் கிடைத்தது. பெரியம்மா சுட்ட அப்பமும் ஞாபகத்துக்கு வந்தது. எழும்பி நடக்கவே கஷ்ரப்படுமளவுக்கு வயதாகிவிட்ட பெரியம்மாவிடம் அப்பம் சுட்டுத்தருமாறு கேட்க முடியாது என்பதால், பெரியக்காவிடம் 'அப்பம் சாப்பிட ஆசையாக இருக்கின்றது' எனச் சொன்னேன். பெரியக்கா தனதுமகளை உரத்த குரலில் கூப்பிட்டார் 'ரெலிபோன் புத்தக்கத்தில அப்பக்கார அம்மாவின்ர நம்பர் இருக்கு அவாவுக்குப் போன் பண்ணி நாளைக்குப் பத்துக் கூட்டம் அப்பம் வேண்டும் என்று சொல்லு புள்ள' எனத் தனது மகளுக்கு அன்புக் கட்டளையிட்டார். எனக்கு அன்று இரவுமுழுக்கஅப்பக்கனவாகவே இருந்தது.

சீராத்தையாச்சி, பள்ளிக்கூடம், மேல் சூடு தரும் சருவப் பானை, சுளகு, கள்ளு.... இப்படி நீண்ட பொருள்களும் உணர்வுகளுமாக இரவு விடிந்தது.

காலை எட்டு மணிக்கு முன்பாகவே ஒரு பையன் அப்பத்தைத் தந்து விட்டுப் போய்விட்டான். அப்பம் கோப்பைக்கு மாறி அக்கா கையால் எனக்குத் தரப்பட்டது. அதை அப்பம் என ஏற்றுக் கொள்ள எனது மனம் மறுத்தது. பிரித்தானியாப் பீட்சா வின் அளவில் கனதியாகவும் நிறம் மாறியும் இருந்தது. அவதியில் இரண்டு துண்டுகளை பிய்த்து மென்று, மூன்றா வது துண்டையும்வாய்க்குள்வைத்தேன்.

— — — —

அன்றைய முழுநாளையும் ஒரு கூட்டம் அப்பத்தைச் சாப்பிட்டு நான் வீணாக்க விரும்பவில்லை. யாரும் பார்க்காத சமயம் நான்காவது துண்டை பக்கத்தில் நின்ற நாய்க்கு முன்னால் வீசினேன். அது மணந்து பார்த்துவிட்டு மறுதிசை நோக்கி மெதுவாக நடந்தது.

> ஆச்சியின் அப்பத்தில் ஒரு வாசனையும் சுவையும் வடிவும் இருக்கும். அப்பத்தின் எல்லாக்கரைகளும் பொன்னிறத்தில் காணப்பட்டன. கரைகளைப் பிய்த்து எடுக்கும் போது அவை உடைந்து நொருங்கும் இசை இப்போதும் அடி மனதில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1929

# அதிகம் பரவ வேண்டிய விழிப்புணர்வுச் சினிமா

சி.ப.வேந்தன்

படைப்பு என்பது படைப்பாளியால் உயிர் பெறுவது. அது அந்தப் படைப்பாளிக்கு ஆத்ம திருப்தியை அளிக்கும் வகையில் இருக்கவேண்டும். அல்லாவிட்டால் அதைநுகர்பவனைத்திருப்திக்குள்ளாக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்றையேனும்அதுநிகழ்த்தமுடியாதுபோய்விடுமாகில் அதைப் படைப்பு எனும் வகைக்குள் அடக்கமுடியாது. படைப்பாளிக்கு அவன் உருவாக்கும்படைப்புமுழுத்திருப்தியைக் கொடுக்குமாகில் அது தன்னை நுகர்பவர்களுக்கும்பூரணதிருப்தியளிக்கும்என்பது வெளிப்படை.

அண்மைக்கால தமிழ் சினிமாப்படைப்புக்கள்சிலமேற்குறித்தவகைக்குள்அடங்கியும்அடங்காமலும்தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. சிலசினிமாபடைப்பாளிகள் சினிமாவின் தரமறிந்து, வகையறிந்து தம்முடையசினிமாக்களைமேன்மையானவையாகப் படைக்க முயற்சிக்கின்றார்கள். மற்றவர்களுடைய சினிமாக்களின் தன்மையறிந்து அதனை மதித்து எப்படியாவது ஈழத்தில் சினிமாவுக்கான ஓர் நிரந்தர தளத்தை அதுவும் வணிக ரீதியிலான, உலகத்தரம் வாய்ந்த, தொழில்ரீதியிலானசினிமாத்தளத்தைஉருவாக்கிவிடவேண்டுமென்பதிலும்அவர்கள்தீவிரமாக உழைத்துவருகிறார்கள். சிலர் சினிமா உலகு இப்படித்தான் இருக்கும், இருக்கவேண்டும் எனும் கற்பிதங்களைத் தமக்குள் பேணிக்கொண்டு தாம் ஒரு புதியபாதையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும்சிலர் அனைத்தும் வசமாகிவிட்டது(தொழில்நுட்ப வசதிகள்) நாமும் ஒரு சினிமாவை எடுத்துவிடுவோமேஎனும்மேம்போக்குடன்தமக்குத் தெரிந்தவைகளோடு சினிமாக்களை உருவாக்கி(எதைப்பற்றியும் கவலைப்படாமல் நான் எடுப்பதே சினிமா எனும் நினைப்போடு) வருகிறார்கள். சிலர் சினிமாவை வெறுமனே ஒரு செய்தி ஊடகமாகப்பாவித்துஎவ்வளவுக்குமுடியுமோஅவ்வளவுக்கு நெருக்கமாக செய்தியை அல்லது கருத்தை மக்களிடம் கொண்டுசேர்த்துவிடும் முனைப்போடு சினிமாவை அணுகுகிறார்கள். இப்படி பல கோணங்களிலும் பதம்பார்க்கப்பட்டு வரும் ஈழ சினிமாமெல்லமெல்லவளர்ச்சிஅடைந்து கொண்டிருக்கிறது.

**சினிமாவல்லாத சினிமா மூலம் செய்தியைக் கடத்துதல்**

இந்த வரிசையில் மேற்குறித்தவற்றில் நான்காவது பாணியில் சினிமாவை வெறும்செய்தி ஊடகமாக அணுகி மக்களிடம் மிக முக்கியமான செய்தியையும் விழிப்புணர்வையும் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார் '1929' எனும் குறும் படத்தின் இயக்குனர் எஸ்.கௌரீசன். இலங்கையில் நாடு முழவதும் பெரும் பிரச்சினையாக உருவாகி இருக்கும் சிறுவர்களுக்கெதிரானபாலியல்துன்புறுத்தல்களைமையமாகவைத்து அதுதொடர்பில் விழிப்புணர்வை ஊட்டும் வகையில் படத்தை உருவாக்கியிருக்கின்றார்.

சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குத்தகவல்தெரிவிக்கும்தொலைபேசி இலக்கமான 1929 எனும் இலக்கத்தை படத்தின்தலைப்பாகஇட்டிருப்பதுபடத்தின் மிக முக்கியமான கவனக்குவிப்பே அது தான் என்பதைச் சொல்லிவிடுகிறது.



**படம்பேசும் கதை**

பாடசாலையில் 90க்கு மேலே புள்ளிகளைப்பெறுகின்ற, தாயில்லாத குடிகாரத் தகப்பனைக்கொண்ட சிறுவனே கதையின் நாயகன். தினமும் குடித்துவிட்டு வரும் தகப்பன் அன்றும் குடிபோதையிலேயே வீட்டுக்கு வருகிறான். பசியல் இருக்கும் சிறுவன் எதுவுமில்லாது தகப்பனின் காதுக்குள் இருக்கும் சில்லறை நாணயத்தைஎடுத்துச்சென்றுவாழைப்பழம் வாங்கிப் பசியைப் போக்கிக் கொள்கிறான். விட்டுக்குத்திரும்பவந்துதந்தையை எழுப்பும்போதுதந்தைஇறந்துகிடக்கிறார். தனிமையில் விடப்படும் சிறுவன் தனது அன்றாட பசியைப்போக்க ஒரு கடையில் வேலைகேட்டுப்போகிறான். அங்கே வரும்கட்டடப்பொருள்உற்பத்திமுதலாளி சிறுவனைத் தன்னுடன் வேலைக்கு அழைத்துப்போகிறான். அங்கே சிறுவனதுமுதல்வேலையேமுதலாளிக்குசிகரப் பற்றவைத்துவிடுவதுதான். பிறிதொருநாள்சீமெந்துக்கற்களைகஸ்ரப்பட்டுஎடுத்து அடுக்கிக்கொண்டிருக்கிறான் சிறுவன். சரியாகவேலைசெய்யவில்லை எனமுதாளிபேசுகிறான். சிறுவன்காலின் மேலேகல்லைப்போட்டுவிடகாயம்உண்டாகின்றது. கல்லும்உடைந்துபோகின்றது. கல்லைஉடைத்துவிட்டதற்காகஅவனை முதலாளி அடிக்கிறான். வேறொருநாள் முதலாளி தனது கைபேசியில் பாலியல் வீடியோக்களைப்பார்த்துக்கொண்டிருக்கிறான். சிறுவனுக்கும் அதைக் கூப்பிட்டுக் காட்டுகிறான். சிறுவன்பார்க்கமறுக்கவும் கட்டாயப்படுத்திக் காண்பிக்கிறான். அப்படியே அருகிலிருக்கும் மறைவிடத்துக்குச் சிறுவனை அழைத்துச்சென்று துஸ்பிரயோகத்துக்கு ஆளாக்குகிறான். அழுதுகொண்டே வீதியில் செல்லும் சிறுவனை எதிர்ப்படும் இளைஞன் ஒருவன் நடந்ததை விசாரித்து அறிந்து கொள்கிறான். மறுநாளும் சிறுவனை அங்கே போகும் படிதிட்டமிட்டுஅங்குஅனுப்பி1929எனும் இலக்கத்துடன்தொடர்புகொண்டுகையும் மெய்யுமாகக் குற்றவாளியைக் கைது செய்ய வழி செய்கிறான். "சிறுவர்களே உங்கள் உடலின் மீது ஏனையோரால் மேற்கொள்ளப்படும்விரும்பத்தகாததொடுகைகளுக்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள். சிறுவர்கள்மீதுபிரயோகிக்கப்படும் உளவியல் மற்றும் உடலியல் ரீதியான துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்த அனைவரும் அணிதிரள்வோம். சிறார்களின் வளமான எதிர்காலத்துக்காக அவர்களின் மீது பிரயோகிக்கப்படும் துஷ்பிரயோகங்களைத்தடுத்துநிறுத்துவோம். அழையுங்கள் நாடு முழுவதும் ஒரே இலக்கம்1929"எனும் குரல் ஒலிக்க படம் முடிவடைகின்றது. குணா, தினேஸ் ஏகாம்பரம், ரி.எஸ். ரஜித், எஸ்.கௌரீசன், சி.சந்திர குமார், தவக்குமார் ஆகியோர் நடித்திருக்கின்றார்கள்.



> திரைப்படத்துக்கான அழகியல், நுணுக்கம், முறையியல் என்ற எவற்றையும் பற்றிக் கவலைப்படாது சொல்லவரும் கருத்தில் மாத்திரமே குறியாயிருந்து அதனைப் பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதில் மட்டுமே கவனம் செலுத்தி இருக்கிறார் இயக்குநர்.

**படைப்பியலை விஞ்சிய கருத்தியல்**

திரைப்படத்துக்கான அழகியல், நுணுக்கம், முறையியல் என்ற எவற்றையும் பற்றிக் கவலைப்படாது சொல்லவரும் கருத்தில்மாத்திரமே குறியாயிருந்து அதனைப் பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதில்மட்டுமேகவனம்செலுத்தி இருக்கிறார் இயக்குநர். இது அவருக்குவெற்றியுமளித்திருக்கிறது. தற்போது பேசவேண்டிய மிக முக்கியமான பிரச்சினையை எப்படியாவது பலரிடம் கொண்டு சேர்த்துவிடுவது என்பதே இயக்குநரது குறிக்கோளாயிருந்திருக்கிறது. அதற்கு அவர் சினிமாவைப் பயன்படுத்தியிருக்கின்றார். தெரிந்தோ தெரியாமலோ இதுவும் மூன்றாவது சினிமாவின் ஏதோவொரு (அனைத்துமல்ல ஏதோவொரு கருத்தியலில் மாத்திரமே) சட்டகத்துக்குள் அடங்கிவிடுகிறது.

"சினிமாஎன்பதுவெறுமனேநுகர்வுக்காகவும் களியனுபவத்துக்காகவும் என்றில்லாது அதனை சமூக மாற்றத்துக்கான ஆயுதமாக்கவேண்டும். அது என்னைத் தன்போல் உணர்வதே பெருமை. அவன்போல உண்பதேநாகரிகம். நீமனிதனாகக் கருதப்படவேண்டுமானால், நீ என்போல் உடுத்தி, என் மொழியில்பேசி, என்போல இரு என்று மாற்றிவைத்திருக்கும்காலனித்துவத்தின்விழுமியங்களைத் தகர்க்கின்ற ஆயுதமாக மாற்றவேண்டும் என்பதை மூன்றாவது சினிமா முன்மொழிந்தது" (புதியவன்.ரா - உயிர்நிழல் 2008) என்ற கூற்றுக்கமைவாக 1929 சமூக மாற்றத்துக்கான ஒரு சாதனமாக ஆயுதமாகஅமைந்திருப்பதில்வெற்றிபெற்றிருக்கின்றது.

**பரவச்செய்வதில் நமக்கிருக்கும் கடமை**

பல சினிமாக்கள் பல மனிதர்களையும் போர்களையும், பொருளாதார மாற்றங்களையும், அரசியலையும் உருவாக்கியிருக்கின்றன, மாற்றியிருக்கின்றன. அதேபால 1929 படமும் ஒரு விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க முயன்றிருக்கின்றது. இந்தச்சினிமாவில்நாம்அழகியலைத் தேடாமல், முறையியலைத் தேடாமல் உருவாக்கம் பற்றிய ஒழுங்கமைவைத் தேடாமல் கருத்தியலை மட்டுமே கவனத்தில்கொண்டு வரவேற்கவேண்டும். இந்தப்படம் சினிமா என்பதை விடுத்து ஒரு கதைப்படமாக, செய்திப்படமாக ஒவ்வொரு பாடசாலைகளிலும் திரையிடப்படவேண்டும். இதன் பயனை அனைவரும் அறிந்து அனுபவித்தால் சிறுவர்களின் வாழ்வு, இனி வரும் தலைமுறை சுபீட்சமாக மலரும் என்பதில் ஐயமில்லை.



கடவுள் எல்லா இடங்களிலும்
தான் இருக்க
முடியாதென்பதாலேயே
தாயைப் படைத்தார்.
சாத்தான்
தான் எல்லா இடங்களிலும்
இருக்க முடியாதென்பதாலேயே
பிளாஸ்ரிக், பொலித்தீனைப்
படைத்தான்.

செ. செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பி.சமுத்திரக்கனியின்

# தொண்டன்

**கதைப்பார்வை**

அம்புலன்ஸ் ஓட்டுநரான மகாவிஷ்ணு (சமுத்திரக்கனி) வீதியில் வெட்டுப்பட்டுக் கிடக்கும் ஒருவரைத் தன்னுடைய அம்புலன்சில் ஏற்றிக்கொண்டு வைத்திய சாலைக்கு விரைகிறார். வெட்டுப்பட்ட நபர் உயிரிழக்கவில்லை. அவர் காப்பாற்றப்படப்போகின்றார் என்பதை அறிந்ததும் அவரை அந்த ஆம்புலன்சிலேயே தீர்த்துக்கட்ட இதன் சூத்திரதாரியான நாராயணன் (நமோ நாராயணன்) தனது ஆள்களுக்குக் கட்டளையிடுகிறார். அந்தக் கும்பலிடம் இருந்து பாதுகாப்பாக வெட்டுப்பட்ட நபரைக்காத்து வைத்தியசாலையில் சேர்த்து உயிர் பிழைக்க வைக்கிறார் சமுத்திரக்கனி. அம்புலன்ஸ் வண்டியைத் தனது தாய் எனவும் அதில் ஏற்றியவர்களை ஒருபோதும் தான் கைவிட்டதில்லை எனவும் பொருமை கொள்கின்றார். இதனால் சமுத்திரக்கனிக்கும், நமோ நாராயணனுக்கும் முரண் தோற்றிக்கொள்கின்றது.

நாராயணனின் தம்பி சவுந்தர ராஜா ஒரு பிரச்சினையில் சிக்கி உயிருக்குப் போராடும்போது சமுத்திரக்கனியின் அம்புலன்சில் ஏற்றப் பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறார். வைத்தியசாலையில் அவரைப் பரிசோதித்ததில் அவர் இறந்துவிட்டதை மருத்துவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். தன்னைப் பழிவாங்குவதற்காகவே சமுத்திரக்கனி தனது தம்பியைக் கொன்று விட்டதாக நினைக்கும் நாராயணனின் கோபம் வலுக்கின்றது. அதன்பின் நாராயணனால் சமுத்திரக்கனி எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? அதை அவர் எப்படிச் சமாளிக்கின்றார் என்பதுதான் மீதிக் கதை.

**நற் கருத்துகளும் பரப்புரைகளும்**

சாதி அரசியல் தொடங்கி மாணவிகள், பெண்களுக்கு எதிரான கொடுமை, பணப் பதுக்கல், சமீபத்தில் வெடித்த ஜல்லிக்கட்டு போராட்டம், நெடுவாசல், விவசாயிகள் பிரச்சினை, உதவாத நண்பர்களின் சேர்க்கை என்று காட்சிக்குக் காட்சி சமூகத்தின் நடப்புப் போக்குகளை அலசுகின்றது படம். வசனங்கள் பல இடங்களில் வலுவாகவே இருக்கின்றன. இந்தக் கருத்துகள் முழுக்க பரப்புரைகளாக ஆகிவிடக் கூடாது என்று நகைச்சுவை, காதல், நட்பு ஆகிய விடயங்களைத் திரைக்கதைக்குள் நுழைத்திருக்கிறார் இயக்குநர். ஆனால் இத்தனையையும் மீறிப் பரப்புரைகள் தூக்கலாகவே இருக்கின்றன.

பரப்புரைப் பாணியில் கருத்துக்களை முன் வைக்கும்போது பெரும்பாலும் நாயகனையும், அவர் எதிர்கொள்ளும் பிரச்சினையையும் மட்டுமே படத்தில் பிரதிபலிக்கும் சூழல் நிலவிவிடும். ஆனால், இந்தப் படத்தில் தன்னைச் சுற்றியுள்ள பல கதாபாத்திரங்களுக்கும் வேலை கொடுத்திருக்கின்றார் சமுத்திரக் கனி. என்றாலும் அது முழுமையாகத் திருப்தி அளிக்கவில்லை.

**பாத்திரங்களைப் பற்றி...**

விக்ராந்த் மனம் மாறும் இடம், கல்லூரி மாணவிகளின் குமுறல், தன்னுடைய குருநாதரின் கூற்றுப்படி சமுத்திரக்கனி எதிரியை நேரடியாகப் பழிவாங்காமல் திசை மாற்றிவிடுவது உள்ளிட்ட பல காட்சிகள் கைதட்டலைப் பெறுகின்றன. காவல்துறை அதிகாரிகளில் நல்லவர்களையும், கெட்டவர்களையும் பிரித்துக் காட்டியுள்ள இடமும் சிறப்பு. சுனைனா – சமுத்திரக்கனி காதல் காட்சிகள் ஈர்க்கவில்லை. வீட்டைச் சுற்றிச் சின்னச் சின்னப் பொருட்கள் திருடுபோவது சுவாரஸ்யமாக இருந்தாலும் அதற்கான காரணத்தைச் சொல்லவில்லை. அதற்காக ஒரு சங்கம் அமைத்துத் தேடும் இடமும் அவ்வளவு இரசிக்கும்படி இல்லை. நமோ நாராயணனிடம் பணம் வாங்கிக்கொண்டு எல்லா விதமான குற்றங்களுக்கும் உறுதுணையாக இருக்கும் தாசில்தார், வி.ஏ.ஓ. உள்ளிட்ட அதிகாரிகள் நல்லவர்களாக மாறும் காட்சிகள் செயற்கையாக இருக்கின்றன.

அரசியல்வாதியை நாயகன் எதிர்கொள்ளும் விதம் வலுவாகக் கட்டியமைக்கப்படவில்லை. ஆனால், சமூக மாற்றம், தார்மீகப் போராட்டம் ஆகியவற்றை முன்னெடுக்க வன்முறையை நாட வேண்டியதில்லை என்பதை அழுத்தமாகச் சொன்னதற்காக இயக்குநர் சமுத்திரக்கனிக்குப் பாராட்டுக்கள்.

தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் கொதிப்போடு உருகும் பக்குவமான நடிப்பு சமுத்திரக்கனிக்கு. இதுவரை தன் அம்புலன்சில் ஏற்றிய ஒரு உயிர்கூட இறந்ததில்லை. இதுதான் எனது தாய்!' என்று உருகும் இடங்களில் மனதைக் கவர்கிறார் கனி.

சுனைனா, வேல்.ராமமூர்த்தி, கஞ்சா கருப்பு, தம்பி ராமையா, சூரி ஆகியவர்களது பங்களிப்புக்கள் படத்தின் சுவையைக் கூட்டுகின்றன. விக்ராந்த் இன்னும் கொஞ்சம் ஈடுபாடு காட்டி நடித்திருக்கலாம்.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித்தொகுப்பு**

ஏகாம்பரம், ரிச்சர்ட் எம்.நாதன் ஆகியோரின் ஒளிப்பதிவு நன்று. பின்னணி இசையில் அசத்தியுள்ள ஜஸ்டின் பிரபாகரின் பாடல்கள், இசை நல்லாயிருக்கின்றன.

சாதாரண மனிதர்கள் அதிக சர்ந்தர்ப்பங்களில் பணத் திமிர் பிடித்த அரசியல் சக்திகளால் அடக்கப்படுகிறார்கள் என்பதைப் பிரதிபலிக்க முயற்சித்த தொண்டன் கருத்துப் பரப்புரைகளின் மூலமாகவே அதிகம் தொண்டாற்றியுள்ளது.

அறிவுரைக் கதை



# பிருந்தாவனம்

**கதைப்பார்வை**

ஊட்டிப் பிரதேசத்துக்கு ஓய்வெடுக்க வருகின்றார் பிரபல நகைச்சுவை நடிகரான விவேக். அங்கே செவிப்புலனற்ற, வாய் பேசவியலாத கண்ணன் (அருள்நிதி) என்ற இளைஞனைச் சந்திக்கிறார். அவன் தனது தீவிர இரசிகன் என்பதை அறிந்து நெகிழும் அவர், அவனை நண்பனாக்கிக்கொள்கிறார்.

சிறு வயது முதல் கண்ணனின் தோழியாக இருக்கும் சந்தியா (தான்யா ரவிச்சந்திரன்), அவனைச் சுற்றிச் சுற்றி வருகிறாள். ஒரு கட்டத்தில் அவனிடம் காதலை வெளிப்படுத்துகிறாள். ஆனால் அவளது காதலை நிராகரிக்கிறான் கண்ணன். இதை அறியும் விவேக், கண்ணனையும் சந்தியாவையும் சேர்த்து வைக்க முயற்சி எடுக்கிறார். கண்ணன் காதலை நிராகரிக்கக் காரணம் என்ன? விவேக்கின் முயற்சிக்கு வெற்றி கிடைத்ததா? என்கிற கேள்விகளுக்கு விடை சொல்கிறது படம்.

**வாழ்வியல் யதார்த்தம்...**

மென்மையும் அன்பும் கூடிய கதாபாத்திரங்களின் பின்னால் ஒளிந்திருக் கும் சம்பவங்களை அழுத்தமாக வெளிப்படுத்துவது, சம்பவங்களைச் சரியான வரிசையில் தொடுத்துச் சீரான வேகத்தில் திரைக் கதையை நகர்த்துவது, வாசலில் நீர் தெளிப்பதுபோலத் திரைக்கதை முழுவதும் நகைச்சுவையைத் தெளிப்பது, அதன் மேல் நல்லுணர்வுகளை வைத் துக் கோலம் போடுவது ஆகியவை இயக்குநர் ராதாமோகனின் இயல்புகள். 'பிருந்தாவன'த்திலும் அவை அனைத்தும் இருக்கின்றன. ஒரு நடிகருக்கும் ரசிகருக்கும் இடையிலான அபிமானமும் பிணைப்பும் அவர்கள் எதிர்பாராமல் சந்திக்கும்போது வெளிப்படும் விதம், அவர்களுக்கிடையில் மலரும் நட்பு ஆகியவற்றைக் காட்சிகளாக்கியிருக்கும் விதம் உணர்வு பூர்வமான அழகைக் கொண்டிருக்கிறது.



**திரைக்கதையின் பலவீனம்**

கதையின் மையத்தைச் சுற்றிப் பின்னப்படும் சம்பவங்கள் பலவும் ஒரே மாதிரி இருப்பதுதான் படத்தின் சிக்கல். அருள்நிதியின் கோபம், தான்யாவின் ஏக்கம், விவேக்கின் முயற்சி ஆகியவை திரும்பத் திரும்ப ஒரே மாதிரி நிகழ்கின்றன. இதனால் படம் நீண்டுகொண்டே போகின்றது.

ஊட்டி மலைப் பாதைகளில் சுற்றிச் சுற்றி வரும் விவேக்கின் காரைப் போலவே கதையும் பல இடங்களைச் சுற்றிவிட்டு, பிறகு அனைவருக்கும் தெரிந்த இடத்தில் வந்து முடிகிறது. வாழ்க்கையின் மீது நம்பிக்கை ஏற்படுத்த விழையும் திரைக்கதை, வாழ்வின் சிக்கல்கள், வெவ்வேறு சாயல்கள் ஆகியவற்றிடம் பாராமுகமாக இருக்கிறது. எனவே, திரைக்கதையின் மொழி தட்டையாக உள்ளது.

**கதாபாத்திரங்கள் பற்றி...**

நடிகர் விவேக், விவேக்காகவே படம் முழுவதும் வருகிறார். ஒரு நடிகர் ஒரு ஊருக்கு வந்து அங்குள்ள மனிதர்களுடன் இயல்பாகக் கலந்து பழகுவதாகத் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ள விதம் நன்றாக உள்ளது. ஆனால், விவேக்கின் பாத்திரம், திரையில் நாம் காணும் நகைச்சுவை விவேக்கைப் போலவே இருக்கிறது. வசனம், உடல் மொழி, நாயகி அல்லது நாயகனின் காதலுக்கு உதவுவது, நாயக, நாயகியர் அவரைத் தங்கள் இஷ்டத்துக்கு வளைப்பது என எல்லாவற்றிலும் திரை விவேக்கே தெரிகிறார். செவிப்புலனற்ற, வாய் பேச முடியாத பாத்திரத்தில் அருள்நிதியின் நடிப்பும் அவர் உடல்மொழியும் முக பாவனைகளும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இருக்கின்றன. காதலை நிராகரிக்கும்போது ஏற்படும் கோபத்தையும் அன்பைக் காட்ட முடியாத வேதனையையும் நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

தான்யா ரவிச்சந்திரன், துடுக்கான கதாபாத்திரத்தில், ஈர்க்கும் எளிய அழகுடன் வரும் காட்சிகள் புத்துணர்வுடன் இருக்கின்றன. எம்.எஸ்.பாஸ்கர், தலைவாசல் விஜய் ஆகியோர் தங்களது முத்திரைகளைப் பதிக்கிறார்கள். அருள்நிதியின் நண்பனாக வரும் செந்தில் கவனிக்க வைக்கின்றார்.


**இசை, ஒளிப்பதிவு, வசனங்கள்...**

பொன். பார்த்திபன் எழுதியிருக்கும் ஈர்ப்பும் மென்நகைச்சுவையும் கூடிய வசனங்கள், கதாபாத்திரங்களுடன் ஒன்ற வைக்கின்றன. கதை நிகழும் களம் ஊட்டியாக இருந்தபோதும் கதையைத் தாண்டித் தனது கமராவை அலையவிடாமல் தனது பிடியிலேயே வைத்திருந்த ஒளிப்பதிவாளர் எம்.எஸ். விவேக்கானந்தின் படப்பிடிப்பு படத்துக்கு முதுகெலும்பு. விஷால் சந்திரசேகரின் இசையில் பாடல்கள், பின்னணி இசை எல்லாவற்றிலுமே இளமைத் துள்ளல்.

மனித உறவுகளின் மேன்மை, மனித நல்லியல்புகள் மீதான நம்பிக்கை, வாழ்வின் மீதான பிடிப்பு ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட ராதா மோகனின் அணுகுமுறைதான் இந்தப் படத்தின் பலம். இனிப்பாகவே இருந்தாலும் அளவு மீறினால் திகட்டும். அதுவே இந்தப் படத்தின் பலவீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நானும் நீயும், ஒரு போர்க்களமும்

இரவின் விளிம்பில்
வழக்கியபடி விடியல்
இறப்பின் கடைசிப்படியைக்
கட்டிப்பிடித்தபடி நான்
இன்னும் சில நிமிடங்களில் விடியும்
என் வாழ்வும் முடியும்

இரண்டுபேரும் காத்திருக்கின்றோம் உனக்காக
சூரியன் போர்வை களைய
நான் பூமியில் தொலைந்துபோவேன்
அந்தப்பொல்லாத பொழுதுகள்
முந்திக்கொள்ளும் முன்
என் முகத்தருகில் உன் வெப்பம்
தொடவேண்டும்.

இங்கே பார் என் தேகமெங்கும்
குருதிச் சிவப்புகள்
உன் கோபம் போலவே
ஆயிரம் கீறல்கள் உடலில்
நீபோடும் புள்ளிக் கோலங்களாய்
அடிக்கடி கேட்பாயே
ஆளில்லா அண்டவெளி நாம்
கதைத்துக்கூத்தாட
இப்போது வா...! இங்கே யாருமில்லை.

சன்னங்களின் சத்தமில்லை
எறிகணையின் இடிமுழக்கம் இல்லை
அவை சற்றுமுன்தான் எனக்கானதோடு
இல்லாது போயின
சருகுகள் கூட மௌனிக்கின்றன

பூப்பூத்த புல்வெளி, கள்ளிருக்கும் பனைமரம்,
காளான் தின்னும் தத்துவெட்டி
ஐம்பது மீற்றர் இடைவெளியில் அன்பான எதிரி
இவைகளுக்கு மத்தியில் நான்.

உன்னிடம் ஓடிவரக் கால்களைத் தேடுகிறேன்
இருப்பிடம் விட்டுத் தொலைவிலே கிடக்கின்றன
கடைசியாய் ஒருமுறை
உன்பெயரைக் கிறுக்கி முத்தமிடுவோமெனில்
இல்லாது போயிருக்கின்றன
பொல்லாத கைகள்

உயிருடைந்து ஒழுகும் கடைசி நொடியில்
உன்னை நினைத்தபடி இறக்க
இதயமாவது துடிக்கிறதே
அது போதும் எனக்கு
நாளை எப்படி எனக்கான செய்தியை
எதிர்கொள்வாய் என்று எண்ணியபடியே
செத்துவிடுகிறேன்

மற்றவைகளை நினைக்க
நேரமிருக்கிறதா என்ன...?
அதோ சூரியக்கதிர் என்னை
நோக்கி வருகிறது
இத்தனைக்குள் நான்
செத்திருக்க வேண்டும்
வழமை போலவே
உன்னால்தான் தாமதம்
போனமாதம் நீ தந்துபோன
புன்னகையில்
கொஞ்சம் மிச்சம் கிடக்கிறது
அடுத்த பிறவி வரைக்கும்
வைத்துச் செலவழிக்க
அது போதும் எனக்கு

அதோ சூரியக்கதிர்
நெருங்கிவிட்டது
நான் போகிறேன்.

சிவ.பரமேஸ்வரி

# செல்லும் வழியின் தூரம்...

ப்ரியமதா பயஸ்

சாதரணமான ஒரு நிலைமையில் ஒரு குழந்தையை வளர்த்தெடுப்பதென்பதும் அகோரமான போர்ச்சூழலில் ஒரு குழந்தையை வளர்த்தெடுப்பதென்பதும் இரண்டு வேறுபட்ட நாடுகளில் வாழ்வதுபோன்றது.

போரின் மத்தியில் பெரும்பாலான நேரங்கள் பதுங்குக் குழிக்குள்ளேயேஇருக்கவேண்டும். குழந்தை மூச்சுத் திணறி, சுவாசிக்கக் கஷ்டப்பட்டாலும் வெளியில் தலை காட்டமுடியாது.

குண்டுமழை பொழிந்து கொண்டிருக்கும். அவை சற்றே ஓய்ந்தால், பங்கர் வாசல்வரை வந்து பிள்ளை வெளிக்காற்றைச் சுவாசிக்கும்படியாக வைத்திருக்கும் தருணங்கள் என்னிடமிருந்த பிள்ளை மீதான அன்பையும் அக்கறையையும் அதிகப்படுத்தியது.

### குழந்தைகள் அனுபவித்த குண்டுச் சத்தங்கள்

சிறுகுழந்தைகளை நோய்கள் என்பவை வெகு இலகுவாகப் பற்றிக்கொள்ள முடிந்தவை. அவற்றைக் குணமாக்க மருந்துகள் இல்லாதிருப்பதால் சிறிய நோயும், போரும் பெரும் அவலத்தை தரும் குண்டுகள் பொழியும்போது. பாலகர்கள் நெஞ்சு பதைத்து, தாய் முகத்தைப் பார்க்கும் தருணங்களை வன்னியில்




இருந்த அத்தனை தாய்மாரும் அனுபவித்திருப்பார். மிக அருகாமையில் குண்டுகள் விழும்போது குழந்தைகளின் இதயம் அதிகமாகப் படபடக்கும். பயந்து விழிகள் மிரண்டு தாய் அணைப்பை மட்டுமே நாடி அழுதுகொண்டிருப்பார். குண்டுச் சத்தங்கள் செவிப்பறையை பாதிக்காதிருக்க அவர்களின் பிஞ்சுக் காதுகளுக்குள் பஞ்சுகளையும் துணிகளையும் வைத்து அடைத்து, பங்கரே வாழ்க்கை என்று இருப்போம். அவர்கள் இரண்டு, மூன்று வயதை அடைந்ததும் தூரத்தில் விமானச் சத்தத்தைக் கேட்கும்போது மண்ணோடு மண்ணாகக் குப்புறப் படுத்துக்கொள்ள கற்றுகொண்டார்கள். இப்படி அவர்களும் போரையும் போரியல் வாழ்வையும் மெல்லமெல்லக் கற்று, அனுபவிக்கத் தொடங்கிவிடுவர்

### கிளிநொச்சியிலிருந்து நகர்வு...

இப்போது கிளிநொச்சிப் பகுதிவரை இராணுவப்பிடிக்குள் வந்திருந்தது. குண்டுகளுக்கும் பல்குழல் எறிகணைகளுக்கும் பஞ்சமே இருக்கவில்லை. ஆனாலும் நாம் எமது சாவைக்கூட எண்ணிப் பார்க்க முடியாதவர்களாக வாழ்ந்து கொண்டே இருந்தோம்

கிளிநொச்சி பகுதிவாழ் மக்கள் எல்லோரும் பகுதி பகுதியாக இடம் பெயரத்தொடங்கிவிட்டனர். வீட்டுக் கூரைகள் தொடக்கம் தாம் சேர்த்த அத்தனை பொருள்களையும் ஒவ்வொருவரும் கிடைத்த உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு விஸ்வமடு - தர்மபுரம் பகுதிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். விஸ்வமடு - தர்மபுரம் பகுதிகள் மக்கள் நெருக்கடியைச் சந்திக்கின்றன. உறவினர்கள், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் எங்கேங்கு இருக்கின்றனரோ அங்கங்கே தாமும் நிலைகொள்ளலாம் என எண்ணி அவர்கள் இடம்பெயர்கின்றனர். கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்கள் ஒவ்வொரு உயிராக விழுங்கிக்கொண்டு இருக்கின்றன.

யாருக்கு எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு சூழ்நிலை நாமும் எம்மை அடுத்தகட்டத்துக்குத் தயார்ப்படுத்துவோம் என்று யாரும் எண்ணிப்பார்க்கமுடியாத வேகமான போர். இராணுவம் தன்னிலைகளைப் பலப்படுத்தவும் புலிகள் தமது நிலைகளை விட்டுக்கொடுக்காமலும் நடக்கும் போரின் உக்கிரம் என்பதைச் சொல்லில் சொல்லிட முடியாது.

காயப்பட்டவர்களைக் கவனிக்கும் பொறுப்புக்களையும் மக்களே தமது கைகளில் எடுத்துக்கொள்கின்றனர். மிதமான மக்கள் நகர்வும் உக்கிரமான போரும் இடம் பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

### அன்றாடப் பணிகளுடனான காலம்

நாம் இப்போதும் காலையில் வழமை போலவே நித்திரையிலிருந்து விழிக்கின்றோம். ஏதோ கிடைப்பதைச் சமைக்கின்றோம். எமது வேலைகளுக்குப் புறப்படுகின்றோம். போர் எம்மை அண்மிக்கும்வரைக்கும் முடிந்தளவில் பொதுவாக நாம் எல்லோரும் அதையே செய்துகொண்டிருந்தோம். காரணம் நாம் போர்ச் சூழல் நம்மை அப்படித்தான் கட்டமைத்துள்ளது. ஆனால் கூடியளவில் எல்லோரும் தாங்கள் தங்கள் கடமைகளைக் கைவிடவில்லை. சாவு வீடுகள் ,வீரச்சாவு வீடுகள் என எவற்றையும் கவனிக்கத் தவறவில்லை. எம்மில் இருந்து 100, 200 மீற்றர்கள் தூரத்தில் குண்டுகளோ ,விமானத்தாக்குதல்களோ நடந்தால் அது தூரத்திலே சம்பவிக்கின்றன என்பதாக எமது இப்போதைய நிலைப்பாடு மாறிவிட்டது. எமக்கு மேலே விழுந்தால் மாத்திரமே அது பெரியதொரு விடயமாக இருக்கும் நிலை. கிளிநொச்சியில் இருந்து வந்த எமது உறவினர்கள், மல்லாவிப்பக்கம் இருந்து வந்த எமது உறவினர்கள் என அதிகளவானோர் எமது இரண்டு ஏக்கர் காணிக்குள் குவிகின்றனர். பெரிய கிடாரங்களை வைத்து அனைவருக்கும் சமையல் செய்கின்றோம். எல்லோரும் இணைந்து காணி முழுவதும் பங்கர்களையும் பீப்பாக்கள் மற்றும் தகரங்களைப் புதைத்து மலசல கூடங்களையும் அமைத்து கொடிய போரில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராகின்றோம் .

(தொடரும்)

மிக அருகாமையில் குண்டுகள் விழும்போது குழந்தைகளின் இதயம் அதிகமாகப் படபடக்கும் பயந்து விழிகள் மிரண்டு தாய் அணைப்பை மட்டுமே நாடி அழுதுகொண்டிருப்பார். குண்டுச் சத்தங்கள் செவிப்பறையை பாதிக்காதிருக்க அவர்களின் பிஞ்சுக் காதுகளுக்குள் பஞ்சுகளையும் துணிகளையும் வைத்து அடைத்து, பங்கரே வாழ்க்கை என்று இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிக் கறுப்பன்



# தயவு செய்து ஒரு வழி சொல்லுங்கள்!

வாகனங்களைத் தெருவில் செலுத்துவதற்கு வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பொதுவான விதி ஒன்று உள்ளது.

அதற்கு முதல் சம்பந்தப்பட்ட வாகனங்களுக்குப் புகைப் பரிசோதனை செய்யும் வழக்கமும் உள்ளது. வரிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு இந்தப் புகைப் பரிசோதனை அறிக்கையானது அவசியம்.

சில காலங்களுக்கு முன்னர் நண்பர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளைப் புகைப் பரிசோதனைக்குக் கொண்டு சென்றார். பரிசோதனைக்குப் பிறகு அவருக்குச் சான்றிதழ் வழங்காமல் திருப்பி விட்டார்கள்.

பணமெல்லாம் செலுத்தித் தனது மோட்டார் சைக்கிள் மீது உறுதியான நம்பிக்கை இருந்தபடியால் சான்றிதழ் கிடைக்கும் என்று நம்பியிருந்த நண்பர் அதிர்ந்துபோனார்.

"சரி பண்ணிக்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் வந்துவிட்டால் மீண்டும் பணம் செலுத்தத் தேவையில்லை" எனப் புகைப் பரிசோதனை நிலையப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அழுதுவடித்தபடி நண்பர் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

"சரி சரி! இன்டைக்குக் கராய்ச் போய்விட்டு நாளைக்குத் திரும்பவும் புகைப் பரிசோதனைக்கு வருவம்" என நான் நண்பனுக்கு ஆறுதல் சொன்னேன்.

தெருவுக்கு வந்து மோட்டார் சைக்கிளில் இருவரும் பயணித்தபோது அளவுக்கு மிஞ்சிய ஆள்களை ஏற்றிக்கொண்டு ஒரு பக்கம் சரிந்தபடி மினிபஸ் ஒன்று மிகவேகமாகப் போனது. மினிபஸ் இப்படிப் போவதில் என்ன புதினம் என்றுதானே கேட்கின்றீர்கள்.

அந்த மினிபஸ் தனது புகைபோக்கியூடாகக் கக்கிச் சென்ற பெரும் புகை தெருவை மறைத்து எமது சுவாசிப்புக்கும் பெரும் இடைஞ்சலாக அமைந்தது.

அந்த மினிபஸ் மாத்திரமல்ல பெரும்பாலான பஸ்கள் இவ்விதம் பெரும்புகை கக்கியபடிதான் தெருவில் திரிகின்றன. இத்தகைய பஸ்கள் தமது வரி அனுமதிப் பத்திரங்களை எப்படிப் பெற்றுக் கொள்கின்றன என்ற கேள்விக்கு யார் விடை சொல்லுவார்கள்?

இல்லாவிடில் இத்தகைய புகை கக்கும் வாகனங்கள் புகைப் பரிசேதனைக்குப் போகும் போது என்ன மந்திர வித்தைகளைப் பிரயோகிக்கின்றன என்பதையாவது யாராவது தெரிவிப்பார்களா?





> அந்த மினிபஸ் மாத்திரமல்ல பெரும்பாலான பஸ்கள் இவ்விதம் பெரும்புகை கக்கியபடிதான் தெருவில் திரிகின்றன. இத்தகைய பஸ்கள் தமது வரி அனுமதிப் பத்திரங்களை எப்படிப் பெற்றுக் கொள்கின்றன என்ற கேள்விக்கு யார் விடை சொல்லுவார்கள்?

பிரதான தெருக்களில் பெரிய பெரிய கட்டடங்கள் கட்டப்படுவதைப் போல கவனிப்பார் அற்று இருந்த பல காணிகளும் திருத்தித் துப்புரவு செய்யப்படுகின்றன. நல்ல விடயம் தான்.

தனியார் வீடுகளுக்குச் செல்லும் ஒரு பாதை அதற்குப் பக்கத்தில் உள்ள காணி இரண்டு, மூன்று நாள்களாக வெகு அமளியாகத் துப்புரவு செய்யப்பட்டது.

காணிக்காரர்கள் ஒன்றில் வெளிநாடு அல்லது கொழும்பில் இருப்பவர்களாக இருக்கலாம். ஏராளமான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி படுவேகமாக வேலை நடந்தது.

வேலைமுடிய வளவுபடுசுத்தமானது. வளவின் நான்கு புறமும் தூண்கள் நிறுத்திக் கம்பி வேலியும் மேலே தகரமும் பொருத்தினார்கள்.

கேற்றுக்குப் பெரிய பூட்டும் போட்டுவிட்டுக் காணிக்காரர்கள் போய்விட்டார்கள். இதில் என்ன விசேசம் என்றுதானே கேட்கிறீர்கள். துப்புரவு செய்யப்பட்ட காணியின் சகல கழிவுகளையும் அதன் பக்கத்தே இருந்த தனிப்பட்ட பாதையின் ஓரமாக அள்ளிக் குவித்து விட்டார்கள்.

வெட்டப்பட்ட மரங்கள், கொப்புகள், கற்கள் எனச் சகல கழிவுகளையும் இறுதி நாள் வந்து மேற்சொன்ன விதமாகப் போட்டு விட்டார்கள். யோசித்துப் பாருங்கள் அந்தப் பாதையைப் பாவிப்பவர்கள் அந்தப் பாதையைப் பாவிக்கப் படும் பாடு இருக்கிறதே அது சொல்லிமாளாது. இதற்கு என்ன செய்யலாம் இதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்!


இனிச் சொல்லப்போகும் விடயம் நீங்கள் யாராவது அனுபவப்பட்டு இருப்பீர்கள். பிரதான வீதியில் இருந்து ஒழுங்கைக்குள் இறங்கிச் சிறிது தூரம்போன பின்னர் பார்த்தால் பெரிய மாடு ஒன்று கொம்புகளுடன்.

தலையை ஆட்டியபடி நிற்கும். இது எப்படி என்று கேட்கின்றீர்களா? பாதையின் வேலிக் கரையோரமாக உள்ள புல்லை மேய்வதற்காக யாரோ ஒரு புண்ணியவான் வேலியிலே மாட்டைக் கட்டிவிட்டுப் போய்விடுவார்.

மாட்டுக்கென்ன அது தன்பாட்டில் பாதையை ஊடறுத்து எதிர்ப்பக்கம் போய் நிற்கும். மாட்டின் கயிறு உயரம் பாய்தலுக்காகக் கட்டிய கயிறுபோல பாதையின் குறுக்காக நிற்கும்.

மோட்டார் சைக்கிள்கள், சாதாரண சைக்கிள்களில் போய் வருவோர் இதனால் எத்தனை அவஸ்தைப்படுவார்கள் என்று மாட்டைக் கட்டுவோர்கள் யாராவது யோசித்ததுண்டா? சில காலங்களுக்கு முன்னர் இவ்வாறு ஒரு கயிறு கடக்க முயன்று மாட்டின் கயிறு மோட்டார் சைக்கிளில் சிக்குப்பட்டு சம்பந்தப்பட்டவர் பட்ட அவலம் இருக்கே...?

இப்படி ஒழுங்கைகளில் மாடு, ஆடு கட்டுபவர்களை என்ன செய்யலாம்...?



# கடவுளிடமிருந்து திருடப்பட்ட அமைதி

ஊரின்
ஓரோரமாக மரத்தடியில்
ஆறியிருந்தார் கடவுள்.

கடவுளுக்குக் காற்று
இலைகளால் விசிறியது
மழை சாரலால்
குளிர் நீராட்டியது
வெயில் தன்பங்காய்
ஈரம் வரளத் துவட்டிற்று
கட்டாக்காலிகள்
துணையிருந்தன.
துணையாக
ஊருக்குக்காவலாயிருந்தார்
கடவுள்.

சனங்கள் எப்போதும்
தம் குறைகளை
கூறினர்.
பேசினர்.
ஏசினர்.
எல்லாம்
அவர்களால்
அவர்களாகவே
நிறைவேற்றப்பட்டன.
நிறைவேற்றப்பட்டவற்றில்
நேர்த்திகளாய்

பட்டுத் துண்டுகள்
பொங்கல்
மடை
கடா..சேவல்.. பலிகள்
எல்லாமிருந்தன.

இருந்தன எல்லாம்
நிறைவாக.
நிம்மதி.
ஆறுதல்.
அமைதி.

கடவுளுடனிருந்த
அத்தனையும்
கடவுளால்
அத்தனையையும்
வழங்க முடிந்திருந்தது
முடிந்திருந்தது.
கடவுளின் வாழிடம்
பக்தர்களின் நிம்மதி
எல்லாமே
முடிவாயிற்று.

வானவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# எனது ஆசை

காற்றில் கலந்து மிதந்திடுவேன்
கடலும் மலையும் தாண்டுவேன்
ஆற்று வெள்ளம் தன்னையே
அணைகள் கட்டித் தேக்குவேன்

பாட்டும் கலையும் பயிலுவேன்
பசியும் பிணியும் போக்குவேன்
நாட்டின் செல்வம் ஓங்கவே
நல்ல பணிகள் ஆற்றுவேன்

வீரம் அன்பு சத்தியம்
வெல்க என்று போற்றுவேன்
பாரில் இவைகள் எங்குமே
பரவ என்றும் நற்செயல்கள் நாடுவேன்

உலகம் ஒன்று கூடியோர்
உயர்ந்த குடும்பம் ஆகவும்
நலங்கள் பெற்று வாழவும்
நற்சிந்தனைகள் கொண்டுமே
நானும் உழைப்பேன் என்றுமே

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்



நிலாமுற்றத்தில், அன்னையின் மடியில் தலைசாய்த்திருந்த கனிஸ்ராவுக்கு, ஆருயிர் நண்பி அபிஷாவின் ஞாபகம் திடீரென வந்தது. ஓடிச்சென்று அவளுக்குத் கைபேசியில் அழைப்பெடுத்தாள். அபிஷா தனது உறவினர் வீட்டுத் திருமண நிகழ்வுக்குச் சென்றிருந்தமையால் அன்று பாடசாலைக்குச் செல்லவில்லை. பாடசாலைத் தருணங்களை அவளுடன் பகிர்ந்துகொண்டிருந்த கனிஸ்ரா, "அபி, நாளை பாடசாலைக்கு வா. உனக்கு ஒரு நண்பரை அறிமுகப்படுத்துகிறேன். உனக்கும் அவரை ரொம்பப் பிடிக்கும்" என்று கூறினாள். அபிஷாவுக்கு அந்த நண்பரைப் பற்றி அறியப் பேராவல். "யாரந்த நண்பர் கனி?" என்று அவள் பலமுறை கேட்டும் பதிலில்லை. "சரி, நாளை அந்த நண்பரைச் சந்திப்போம்" என்று கூறி கனிஸ்ரா அழைப்பைத் துண்டித்தாள்.

நண்பரின் நினைவில் மூழ்கித் தூங்கிய அபிஷா, அதே நினைவுடனே காலையிலும் துயிலெழுந்தாள். அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்தவள், பாடசாலை நோக்கிப் புறப்பட்டாள். அவளை எதிர்பார்த்த வண்ணம் அங்கிருந்த கனிஸ்ரா அவள் நெருங்கியதும், "வா அபி...எங்களுடைய நண்பரைப் பார்க்கலாம்" என்று அவளை அழைத்துச் சென்றாள்.

அவள் அழைத்துச் சென்ற இடத்தில், அவளைப் பார்த்து வாலாட்டியபடி ஒரு நாய்க்குட்டி நின்றது. "அபி, இவர்தான் நண்பர். நேற்று மதிய உணவு நேரம் இவரைச் சந்தித்தேன். பாவம், ஒட்டிய தோலும் உலர்ந்த கண்ணுமாக இருக்கு இந்த நாய்க்குட்டி. எனது சாப்பாடு முழுவதும் நாய்க்குட்டிக்கே போட்டேன். இதோ, அவனுக்குக் காலை உணவும் கூட எடுத்து வந்திருக்கிறேன்" என்று கூறியவாறு நாய்க்குட்டிக்குஉணவளித்தாள் கனிஸ்ரா. கண்கள் கசிந்துருகித் தனது நன்றியறிதலை அவளுக்குத் தெரிவித்த நாய்க்குட்டி, வாலை ஆட்டியவாறு வேக வேகமாகச் சாப்பிட்டது. தனது சாப்பாட்டுப் பெட்டியிலிருந்தும் உணவெடுத்து நாய்க்குட்டிக்கு வைத்தாள் அபிஷா. இவர்களின் செயலைப் பார்த்த பாடசாலை அதிபர் அவர்கள் அருகே சென்று, "சக மனிதர்களையே மதிக்காத இன்றைய உலகத்தில் ஒரு நாய்க்குட்டிக்கு இவ்வளவு பரிவோடு உணவூட்டுகிறீர்களே! உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்ற பாரதி கூற்றை மெய்ப்பித்துள்ளீர்கள்!! உண்மையில் நீங்கள் மகாத்மாக்கள். உங்களைக் கடவுள் எப்பொழுதும் ஆசீர்வதிப்பார்" என்றார். தோழிகள் இருவரும் அதிபருக்கு நன்றி கூறிவிட்டு, வகுப்பறை நோக்கி நடந்தனர். கண்களை இமைக்க மறந்து நாய்க் குட்டியும் அவர்களையே நன்றியுணர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தது.

*டி. அதிசயா*

## மாலைமாற்று / இருவழி ஏற்கும் சொற்கள்

முன்னிருந்து படித்தாலும் பின்னிருந்து படித்தாலும் ஒரேஅமைப்புடையதாக இருக்கும் சொற்கள், மாலைமாற்று அல்லது இருவழி ஏற்கும் சொற்கள் எனப்படும். அத்தகைய சொற்கள் சில கீழ்வருமாறு

| | |
|---|---|
| 1.திகதி | 2.தாத்தா |
| 3.விகடகவி | 4.காக்கா |
| 5.தேடாதே | 6.கைரேகை |
| 7.மாமா | 8.பாப்பா |
| 9.விரவி | 10.கானகா |
| 11.சீச்சீ | |

*ம.மேரிகா*

## மதங்களும் ஸ்தாபகர்களும்

| | | |
|---|---|---|
| ★கிறிஸ்தவம் | - | இயேசு கிறிஸ்து |
| ★பௌத்தம் | - | கௌதம புத்தர் |
| ★சமணம் | - | மகாவீரர் |
| ★ இஸ்லாம் | - | இப்றாஹிம் |

*ம.மேரிகா*



## சிரிக்க... சிந்திக்க...

ஒருநாள் தனது குருவைச் சந்தித்து, ஞானோதயம் பெறுவது எப்படி என்ற சந்தேகத்தைக் கேட்டார் அறிஞர் ஒருவர். "மழை பெய்யும் போது இரு கைகளையும் உயரத் தூக்கியவாறு நில்லுங்கள் ஞானோதயம் கிடைக்கும்" என்றார் குரு.

மறுநாள் குருவிடம் சென்ற அறிஞர், "குருவே! நீங்கள் சொன்னவாறே நேற்று எனது இரு கைகளையும் மேல் நோக்கி உயரத் தூக்கியவாறே மழையில் நின்றேன். தண்ணீர் என் கழுத்து வழியாகக் கீழே இறங்கி ஓடிய, அந்த சந்தர்ப்பத்திலே ஒரு முட்டாளைப் போல எனை நானும் உணர்ந்தேன்" என்றார்.

அறிஞர் சொன்ன விடயங்களை அமைதியாகக் கேட்டிருந்த குருவானவர் மௌனம் கலைத்து அறிஞரை விளித்து முதல்நாள் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஞானோதயமே இதுதான்" என்றார்.

## ஆள்காட்டிக் குருவி

மஞ்சள் நிறக் கால்களையும், கண்ணை ஒட்டிச் சிவப்பு நிற வரி போன்ற சதைப் பற்றான மடிப்பையும் உடைய நீர்ப்பறவை இதுவாகும். இந்தப் பறவை ஆள் நடமாட்டத்தைக் கண்டு கொண்டால், "டிட்டிட்யூட்டிட்" அல்லது பிட்டிட்யூட்டிட் என்று ஒலி எழுப்பிக் கொண்டு பறந்துவிடும். ஆள் வரவைக் காட்டிக்கொடுத்துவிடும். ஆதலால், ஆள்காட்டிக் குருவி என்று அழைக்கப்படுகிறது. இந்தப்பறவை தரையில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

*த.ஓவியா*





## சிந்தனைக்கு

பேரன்பைப் போலொரு
மாமருந்தில்லை

## ஐம்பெருங் காப்பியங்கள்

1.சிலப்பதிகாரம்
2.மணிமேகலை
3.சீவகசிந்தாமணி
4.குண்டலகேசி
5.வளையாபதி

*ந.கவிப்பிரியா,*
*வட்டு. இந்து கல்லூரி*



றெ.றக்ஷனா,
தரம் - 3 டி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



பா.அகிலேஷன்,
தரம் - 3 டி,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத் தளங்களில் விரைந்து தேட...

சி.சிவபாலன்

உலகெங்கிலுமுள்ள இணையப்பயன்பாட்டாளர்களின் நாளாந்தச் செயற்பாடாகி விட்ட தகவல் தேடலின்போது தேவையான தகவல்களைத் தேடித்தர உதவுபவை 'தேடுபொறிகள்' ஆகும். தேடுபொறிகள் எனும் சொல் சிலருக்குப் புதிதாகத் தோன்றினாலும் அவற்றைப் பயன்படுத்தாமல் எவரும் தகவல்களைத் தேடிப் பெற முடியாது.

**தேடுபொறிகள்**

நாம் இணையத் தளங்களில் தகவல்களைத் தேட முயலும்போது 'கூகிள்', 'யாகூ' போன்றவற்றின் இணையத் தளங்களின் முகப்புப் பக்கங்களை அடைந்து அவற்றில் தேடுதலுக்குரிய கட்டத்தில் எமக்கு வேண்டிய சொல்லைத் தட்டச்சுச் செய்தே பெற்றுக்கொள்கிறோம். இங்கு நாம் பயன்படுத்தும் இத்தகைய தளங்களே தேடுபொறிகளாகும்.

உலகெங்கிலுமுள்ள சேவையகங்களில் பல இட்சக் கணக்கான இணையத்தளங்களில் கோடிக்கணக்கான தகவல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. எழுத்துருக்கள், படங்கள், ஒலி, ஒளி வடிவங்களாக என இவை பல வகைகளில் சேமிக்கப்பட்டுள்ளன. இந்தத் தளங்களிலுள்ள தகவல்களைத் தேடிக் கண்டுபிடிக்க எமக்கு அந்தந்த இணையத்தளங்களின் முகவரி தேவைப்படும். அவற்றை உரிய கட்டத்துக்குள் தட்டச்சு செய்தால் நாம் அந்தத் தளங்களை அடைய முடியும். ஆனால் அவ்வளவு இணையத்தளங்களின் முகவரிகளையும் நினைவில் வைத்திருப்பது என்பது முடியாத காரியம். அத்துடன் எமக்குத் தேவையான விடயங்கள் எந்தெந்த இணையத் தளங்களில் உள்ளன என்பதையும் எம்மால் அறிந்துகொள்ள முடியாது. ஆனால் எமக்குத் தேவையான விடயத்தைச் சொல்லாக அல்லது சொற்தொடராக தட்டச்சுச் செய்வதன் மூலம் எந்த இணையத்தில் அந்த விடயங்கள் உள்ளன என்பதைக் கண்டறிய இந்தத் தேடுபொறிகள் எமக்கு உதவுகின்றன. இவை இல்லாவிடின் இணையத்தின் முழுப் பயனையும் பெறுவதென்பது முடியாத காரியம்.

**தேடுபொறிகளின் சேவைகள்**

இணையத் தளங்களின் முகவரிகள் தெரியாவிட்டாலும் தேடல் பொறிகள் மூலம் எமக்கு வேண்டிய இணையத் தளங்களை அடைந்து அவற்றைப் பயன்படுத்த முடிகிறது. இந்தத் தேடல்பொறிகளும் இணையத் தளங்களாகவே இருக்கின்றபோதிலும் அவை நூல்பட்டியல்கள் போன்றே செயற்படுகின்றன. அவை உலகெங்கிலும் உள்ள சேவையகங்களில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தாமாகவே தேடி, அவற்றை சொற்களின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி, அவற்றுக்கான இணையத்தள முகவரிகளை இணைத்துப் பட்டியல்படுத்தி வைத்திருக்கின்றன. இதற்கென ஒரு தரவுத் தளத்தை அவை கொண்டிருக்கின்றன.




நாம் எமக்குத் தேவையான சொல்லை அவற்றின் முகப்புப் பக்கத்தில் தட்டச்சுச் செய்தவுடன் நிறைந்து குவிந்துள்ள அந்தப் பட்டியலிலிருந்து உடனடியாகவே எமக்குத் தேவையான விடயத்தைக் கொண்ட இணையத் தளத்தை அவை தந்துவிடுகின்றன. அதாவது நாம் தட்டச்சு செய்தவுடன் அவை இணையத் தளங்களில் சென்று தேடுவதில்லை. முன்னரே அவை அற்றைப் பட்டியல்படுத்தி வைத்திருப்பதால் உடனடியாகவே எமது தேவையைப் பூர்த்தி செய்து விடுகின்றன. அத்துடன் நாம் சொற்களைத் தட்டச்சு செய்யத் தொடங்கியவுடன் அச்சொற்களைப் போன்ற வேறுபல சொற்களையும் அவை காண்பிக்கின்றன.

அத்துடன் இவை கட்டுரை வடிவத்திலுள்ள விடயங்கள், பட வடிவத்திலுள்ள விடயங்கள், வீடியோக்கள், வரைபடங்கள் என வகை பிரித்து பட்டியல் படுத்தி வைத்திருக்கின்றன. எமக்கு எந்த வடிவத்தில் தகவல் தேவையோ அந்த வடிவத்தில் தகவல்களைப் பெற உதவுகின்றன. உதாரணமாகக் குறித்த சொல்லுக்குரிய படங்கள் தேவையாயின் படங்களை மட்டும் image என்ற தொடுப்பியை பயன்படுத்திப் பெற முடிவது இதனாலேயாகும்.

**தத்தமது தளங்களை முன்னிலைப்படுத்தும் உத்திகள்**

அடிக்கடி மாற்றமடையக் கூடிய விடயங்களைக் கொண்ட இணையத்தளங்களை உதாரணமாக செய்தி இணையத்தளங்கள், தொலைக்காட்சி இணையத் தளங்கள் என்பனவற்றைப் பார்வையிட முயலும்போது அவற்றில் இறுதியாகச் சேர்க்கப்பட்ட விடயங்களை முதன்மைப் படுத்தி உடனடியாகக் காட்டவும் இந்தத் தேடுபொறிகள் உதவுகின்றன. இவற்றுக்கு இணையத் தளங்களில் புதிது புதிதாக இணைக்கும் விடயங்களையும் பட்டியல்படுத்தி வைக்கவேண்டிய தேவை உள்ளமையால் இடைவிடாது இணையத்தளங்களைத் தேடி தேவையானவற்றைத் தமது தரவுத் தளத்தில் பட்டியல் படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேடல்பொறிகளில் சொற்கள், சொற்தொடர்களை மட்டுமல்ல கேள்விகளுக்கான விடைகளைக்கூடத் தேட முடியும். நாம் எமக்கு எழும் சந்தேகங்களைக் கேள்வியாக எழுப்பும்போது அவற்றுக்கான விடைகளைக் கொண்ட இணையத்தளங்களின் இணைப்புகளை அவை பெற்றுத் தருகின்றன. இவ்வாறான தேடுபொறிகளில் குறித்த ஒரு வரிசைக்கிரமத்தில் நாம் தேடிய சொற்களைக்கொண்ட இணையத்தளங்களை இவை பட்டியல் படுத்துகின்ற போதிலும், இணையத்தளத்தை வைத்திருக்கும் சிலர் வேண்டிய கட்டணம் செலுத்தி தமது இணையத்தளங்களை முன்னிலைப்படுத்தும் வகையிலும் அமைத்துக்கொள்கின்றனர். சிலர் அடிக்கடி தேடப்படும் சொற்களை இணையத்தளங்களில் பயன்படுத்தி தேடுபொறியின் பட்டியலில் முன்னிலை வகிக்க முயல்கின்றனர். அதே வேளை தேடல் பொறிகளை செயற்படுத்தி வருகின்ற பல நிறுவனங்கள் இதனுடன் இணைந்த பல செயற்பாடுகளைச்செய்வதன் மூலமும் தேடல்பொறிகளை அபிவிருத்தி செய்து விரைவாக தேடுதலுக்கான விடைகளைப் பெறுவதன் மூலமும் தமது தேடல்பொறியை முன்னிலைக்குக் கொண்டுவர முயல்கின்றன. google, bing, yahoo, Ask.com, AOL.com, Baidu, Wolfamabha, DuckDuckGo போன்றன இப்போது முன்னனியிலுள்ள தேடல்பொறிகள் ஆகும். இவற்றைவிடவும் பல தேடல்பொறிகள் உள்ளன. இணையத்தளங்களை முழுமையாகப் பயன்படுத்தவும் வேகமாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் கண்டறியப்பட்டுள்ள இந்தத் தேடுபொறிகளை நல்லவற்றைத்தேடவும் பயனுள்ளவற்றை அறியவும் பயன்படுத்துவோமாக.






## தோற்றுப் பார்க்கலாமே.....

தோல்வி
இதுவுமொரு
வித்தியாசமான வேள்வி...


ஆகுதிப்பொருள்களுக்குப்
பதிலாக
அர்ப்பணிப்புக்களை
எரித்த புகையில்
கண்கள் கண்ணீரை
காணிக்கையாக வழங்கும்

நீ தோற்கும் இந்த
நொடியில்
காலம் உன் கைகளில்
தரும்

அனுபவத்தின் ஒருபிடி
சூரியன் தன்னை எரிப்பது
தோல்வியென்றால்
பூமி விடிவதே
கேள்வியாகிவிடும்..
தோல்விகள்தான்

வெற்றி வீதியில்
நம்மை வரவேற்கும்

தோரணங்கள்
சிலமுறை
தோற்றுப்பாருங்கள்
தலைமுறைக்கும்
வெற்றி நம் கைகளுக்குள்
கைகட்டி வேலைசெய்யும்!!!




மன்னார் ந. பிரதீப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவசி... 16

மிருசுவில் தமிழ்தாசன்

முற்றத்து மாமரத்தின் கீழிருந்து கைகளால் நுளம்படித்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் ஓவசி. கடந்த ஒரு வாரகாலமாகக் கூலி வேலைகள்எவையும்கிடைக்கவில்லை. மனைவி சவுந்தரியும் மூன்று, நான்கு நாள்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கின்றாள். வேலையில்லை, உழைப்பில்லை. மனைவிக்குச் சுகமில்லை. இவைகளால் அவனுக்கோ நிம்மதியில்லை. முற்றிப் பழுத்த மாம்பழம் போல மொளுமொளுவென்றிருந்த சவுந்தரியின் முகம் இப்போது சோபையிழந்து காணப்பட்டது. கருங்காலித் தடிகளாகவிருந்த கைகள் இப்போது கடுதாசிப் பூத்தடிகளாகக் காட்சியளித்தன. முகத்தில் சிரிப்பில்லை. முக்கலும் முனகலுமாகக் காணப்பட்ட சவுந்தரியை நினைக்க ஓவசிக்குப் பரிதாபமாகவிருந்தது. நடக்கவே முடியாதளவுக்குக் காய்ச்சல் அவளைப் பலவீனப்படுத்தியிருந்தது. காய்ச்சல் என்று சொன்னால் அது நுளம்பு கடித்தால் வந்த டெங்கு அல்ல. மழையில் நனைந்ததால் வந்த சாதாரண காய்ச்சல். அதுதானே! சவுந்தரியின் உடலில் கொட்டக்கூடிய "பலமான நுளம்பு வகை இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டாலே அது சாத்தியம். தெருப்படலையைச் சலிப்புடன் திறந்து வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினான். கையில் கிடந்த சைக்கிளையும் விற்றுத் தொலைத்து விட்டதால் இப்போதெல்லம் எங்கே போவதென்றாலும் 'கால் கோச்சி'தான்.

கிட்டத்தட்ட 3கிலோ மீற்றர்கள் வரை நடந்து கடந்து விட்டான். குறித்த ஊருக்கும் வந்தாயிற்று. இனிப் பொன்னுத்துரையண்ணரின் கடையைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒருவேளையாக அதையும் பிடித்தாகி விட்டது.



"கடவுளே! இதைக் கொண்டு போய் என்ரை மணிசியின்ரை கையிலை குடுத்தால் அது எவ்வளவு சந்தோஷப்படும். இதோடை ஆள் பழையபடி எழும்பி நடக்கத்துவங்கிடும். இப்போதையில் பலவீனமெல்லாம் பறந்திடும். ஓவசியின் மனதில் எல்லை கடந்த மகிழ்ச்சி மீண்டும் வீடு நோக்கி வெற்றி நடை போட்டான்...

"என்னடாப்பா ஓவசி இந்தப்பக்கம் காத்தடிச்சிருக்கு. என்ன விசேஷம்!"

கடைக்காரப் பொன்னுத்துரையர் தனது புனுகுப் பல்லைக் காட்டிச் சிரித்தபடி ஓவசியை வரவேற்றார்.

"பொன்னுத்துரையண்ணை! எனக்கு ஒரு மாப்பேணி தாருங்கோ. மனிசிக்குக் காய்ச்சல். இப்ப அஞ்சாறு நாளாய் உழைப்பொண்டுமில்லை. உழைப்பேதும் அம்பிட்டால் இந்தக் காசைக் கொண்டு வந்துதாறன்."

கெஞ்சலாகக் கேட்ட ஓவசியைப் பார்த்த பொன்னுத்துரையரின் மனம் ஐஸ்சாக உருகியது. ஒரு நெஸ்ரோமோல்ட், ஒருகிலோ சீனியுடன் கிறீம் கிறாக்கர் பிஸ்கட்டையும் ஒரு பையிலே போட் கொடுத்து விட்டார். மிக்க மகிழ்ச்சி.

"கடவுளே! இதைக் கொண்டுபோய் என்ரை மணிசியின்ரை கையிலை குடுத்தால் அது எவ்வளவு சந்தோஷப்படும். இதோடை ஆள் பழையபடி எழும்பி நடக்கத்துவங்கிடும். இப்போதைய பலவீனமெல்லாம் பறந்திடும்.

ஓவசியின் மனதில் எல்லை கடந்த மகிழ்ச்சி. மீண்டும் வீடு நோக்கி வெற்றி நடை போட்டான்.

"எட! போற வழியிலை உவர் வாரித் தம்பியரிட்டைப் போய் நாலஞ்சு செவ்விளனியும் வாங்கிக் கொண்டு போவம். காசைப் பேந்து குடுக்கலாம். மனிசன் கட்டாயம் தரும்."

வாரித்தம்பி வீட்டுப்படலையைத் தட்டினான். வாரித்தம்பியரின் மனைவி சிவகாமியக்கா தான் ஓவசியை வரவேற்றாள். விறாந்தையில் அமர்ந்திருந்த ஓவசி சிவகாமியக்கா உள்ளே போனபின்பு மெல்ல எழுந்து கிணற்றடியில் பார்வையை ஓடவிட்டான். அவன் எதிர்பார்த்தபடி செவ்விளநீர்கள் குலைகுலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. எப்படியும் பெற்றுக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையில் உறுதியாகவிருந்தான். வீட்டின் பின்பக்கமாக அமர்ந்திருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்த வாரித்தம்பியர் ஓவசியை உள்ளேவரும்படி உரிமையுடன் அழைக்க அவனும் கொண்டு வந்த பையை ஹோலில் கிடந்த மேசை மீது வைத்து விட்டு ஒருவித உரிமையுடன் அவரருகே சென்றான். வாரித்தம்பியருக்கும் கிணறு வெட்டிக்கொடுத்ததாலும் அந்த நாள்களில் அவருடன் இங்கிதமாகப் பழகியதாலும் அவருடைய மனத்தில் ஒரு நல்ல இடத்தைப் பிடித்து விட்டான் ஓவசி. அந்த நம்பிக்கையில் தானே இப்போது வந்திருக்கின்றான்.

"அப்ப என்ன மாதிரியடாப்பா! சொல்லு!" சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டபடி கேட்டார் வாரித்தம்பியர். ஓவசிக்கு எதையோ தவறவிட்டது போலவும் கையில் ஏதோ ஒன்றில்லாதது போலவும் ஒரு உணர்வேற்பட்டது. அது ஒன்றுமில்லை. பொன்னுத்துரையரிடம் கடனாக வாங்கி வந்த நெஸ்ரோமோல்ட் பொருள்களடங்கிய பை.

ஓ! அதைத்தானே ஹோலில் மேசை மீது வைத்துவிட்டு வாரித்தம்பியரிடம் வந்து உள்ளே பேசிக் கொண்டிருக்கின்றான். அந்தப் பையுக்கு ஒரு பொல்லாப்பும் வரப்போவதில்லை. அது பத்திரமாக இருக்கும் தானே!

ஓடியாடித்திரிந்து கொண்டிருந்தாள் வாரித்தம்பியின் இல்லத்தரசி சிவகாமிப்பிள்ளை.

"அந்த மனிசி பாவம்! எனக்குத் தேத்தண்ணி ஊத்துறதுக்காக ஓடுப்பட்டுத் திரியுது போலை, உண்மையிலை இரண்டு பேருமே நல்ல மனிசர். சிவகாமியக்காவும் சோக்கான மனிசி. இப்ப நான் வந்து அவைக்கு வீண் கரைச்சலைக் குடுத்திட்டன்."

ஓவசி மனதுக்குள் வருந்திக் கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்து சிவகாமியும் ஒரு பையைக் கொண்டு ஓடிவந்தாள் மிக மகிழ்ச்சியாக. அது வேறுயாருடையதுமல்ல! ஓவசி கொண்டு வந்திருந்த அதே நெஸ்றொமோல்ட் மற்றும் பொருள்கடங்கிய அவனுடைய பைதான்.

'இங்க பாருங்கோப்பா! இந்த ஓவசிப் பெடியன் செய்த வேலையை! உங்களுக்குக் காய்ச்சல் எண்டு கேள்விப்பட்டு மாப்பேணி, சீனி... எட... விசுக்கோத்து எல்லாம் வாங்கிக் கொண்டு உங்களை வருத்தம் பாக்க வந்து நிக்குது. பாவம்! அந்தப் பெடியன் படுற கஷ்டத்துக்க உங்களையும் நினைச்சு இதுவெல்லாத்தையும் வாங்கிக் கொண்டு வந்திருக்குதே! நன்றி மறக்காத பிள்ளைதான். எங்களை மறக்கயில்லை"

சொல்லியபடியே அடுப்படிக்குள் அவற்றைக் கொண்டுபோய் ஓவசியின் பையிலிருந்த நெஸ்ரோமோல்ட், சீனி, பிஸ்கட் எல்லாவற்றையும் தனித்தனியாக எடுத்துத் தன்னுடைய அலுமாரிக்குள் வைத்துப் பூட்டினாள். அடக்கடவுளே! இந்தப் பாடுபட்டு இவ்வளவு தூரம் நடந்து வந்து எண்டைக்கும் கேட்காத மனிசனிட்டைப் பல்லுக்காட்டிக் கடன் வாங்கி அதைக் கொண்டுபோய் என்ர காய்ச்சல்கார மனிசிக்குக் குடுக்கலாமெண்டால் இந்தக் கோதாரி விழுந்த மனிசி செய்த வேலையைப் பார்.

ஓவசிக்கு வெறுத்துப்போய் விட்டது.

'அப்ப என்னடாப்பா ஓவசி! கதையன் என்ன புதினம்?" மீண்டும் வாரித்தம்பியர் நச்சரித்தார்.

'ஒண்டுமில்லையண்ணை! சும்மா வந்தாப்போலை உங்களையுமொருக்கால் பாத்துக் கொண்டு போகலாமெண்டு வந்தன்."

மெல்ல எழுந்தவன் அந்த வீட்டை விட்டு வெளியே நடந்து போகவில்லை. ஓடியே போய்க் கொண்டிருந்தான். தாமதித்தால் இன்னும் ஏதாவது பொல்லாப்புகள் வந்துவிடுமோ என்ற பயம்தான்.

(தொடரும்)



## தேடுகிறேன் உன்னை...!

நோயுற்ற நாள் முதல்
நொந்து வருவேன் உன்னிடம் உன்
திருமுகம் மலர என் நோய்
தீர்த்து அனுப்பி வைப்பாய்...

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற
மகத்தான பொன்மொழிக்கு
மாண்புமிகு உன்சேவை என்ன
மாறாத விதிவிலக்கா?

அன்று
வழமைபோலவே நான் வந்தேன் இன்னும்
வாழவழி செய்வாய் என்று
வந்ததில் இருந்து நீயும் வரவே இல்லை.

வேற்று முகங்கள் என்னை தினம்
வெறுப்பாகப் பார்க்கவே
உணர்விழக்கா நிலையில் நான்
உன்னைத் தேடினேன்...

கடைசிவரை நீ என்
கண்முன்னே வரவில்லை
மறைபொருளாக நீ
மாறியது ஏன்? நான் அறியேன்.

உயிர்பிரிந்து நான் இப்போ
வானகம் சென்றுவிட்டேன்
என்பதை உனக்குக்
கவலையுடன் கூறுகின்றேன்...

சி.துர்க்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தவார முகநூலில்...

உசிலமணி



மே 17 இயக்கம்

தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதைக் குறியாகக் கொண்ட மே 17 இயக்கத்தின் திருமுருகன்காந்தி, மெரினாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்ய முற்பட்டதுக்காகக் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். அவருக்காகத் தமிழ் நாட்டவர்களின் முகநூல் பக்கங்களில் மாத்திரம்தான் பலத்த ஆதரவுக் குரல் எழுந்திருக்கின்றது. ஈழம் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் கணக்குப் பக்கங்களில் இருந்து சொல்லிக் கொள்ளும்படியாக ஆதரவுக் குரல் சமூக வலைத் தளத்தில் எழும்பவில்லை.

Like Comment

மழை இடரால் சிங்களச் சனம் பட்டபாடுதான் போன கிழமை முழுக்க முகநூலை ஆக்கிரமித்திருந்துது. ஒரு அழிவு அதுவும் பேரழிவு நடந்திருந்தது. இதில எங்கட 'பேஸ்புக்போராளிகளே' இரண்டுபட்டுப் போட்டாங்கள். ஒரு குறூப், இந்த அழிவை ஆனந்தமாய் கொண்டாடிச்சுது. மே மாதத்தில நடந்த அழிவு, நாங்கள் முள்ளிவாய்க்காலில அழிஞ்சனாங்கள், நீங்கள் இப்ப இயற்கையால அழியிறியள் என்று பதிவுகளைப் போட்டுது. மற்றக் குறூப், சிங்களவன் எங்கட அழிவில ஆனந்தப்பட்டவன். அவன்ர அழிவில நாங்கள் ஆனந்தப்பட்டால், அவனுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம் எண்டு கேட்டாங்கள்.

தலைவர் ஒருகாலமும் பொதுமக்கள் சாகிறதை விரும்பேல்ல என்ற பதிவும், தலைவரிட்ட இயற்கை இடருக்கு 2003ஆம் ஆண்டு அப்போதைய அரசு உதவி கேட்டது என்ற பதிவும் இதே காலத்தில உலாவினது. என்னதான் இருந்தாலும், ஒருத்தன் துன்பப்படக்கே கை கொடுக்கிறதுதான் மனிதாபிமானம். அது மற்றவையிட்ட இருந்ததா? இருக்குதா? என்று பார்க்கிறதை விட, நாங்கள் மனிதாபிமானத்துடன் இருக்க வேணும் எண்ட பெருந்தன்மையக் கொண்டாடின குறூப்புக்குத்தான் இதில வெற்றி கிடைச்சிருக்கிறதாத் தெரியுது.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழப்பம் இன்னும் தீர்ந்தபாடில்லை. பிரிட்டனில் 'இங்கிலிஸ் வெப்சைட்காரன்' இந்தக் குழப்பத்தைப்பற்றி போட்ட காணொலிப் பதிவுக்கு, வெள்ளைக்கார மனித உரிமைவாதி, இங்கு நினைவேந்தல் முக்கியத்துவம் இழந்து, குழப்பம் முனைப்புப் பெறுகின்றது. இது, அதீத உணர்ச்சிவசப்படுதலை குறுகிய அரசியலாகக் கொள்ள நினைப்பது. பலன்களுக்குப் பதில் பாதகங்களையே அதிகம் தரும் என்று குறிப்பிட்டிருந்தார். வெள்ளைக்காரனுக்கு இருக்கிற இஞ்சத்தேய அக்கறை எங்கட ஆக்களிட்ட இல்லை எண்ட வாதமும் கொஞ்சம் அலட்டலாத் தான் இருந்துது.

Like Comment Share

இதைவிட பேஸ்புக்கில் கடந்த வாரம் சூடு பிடித்த விடயம், இந்தியாவில் மாட்டு இறைச்சிக்கான தடை. இந்தியாவின் எல்லா மாநிலங்களும் எதிர்த்துப் போர்க் கொடி தூக்கின. ஆனால் தமிழக அரசு மட்டும் மௌனம் சாதித்ததை பலரும் கண்டித்தனர். மாட்டு இறைச்சித் தடைக்கு எதிராக மாட்டு இறைச்சி சாப்பிட்டுப் போராட்டம் நடத்தியதை, இந்தியாவின் ஆளும் பா.ஜ.க அரசின் தமிழக மாநிலத் தலைவர் தமிழிசை, மாட்டு இறைச்சிக்குத் தடைவித்ததால் அதனைச் சாப்பிட்டு போராட்டம் நடத்துபவர்கள் நாய்க்குத் தடைவித்தால் அதன் இறைச்சியைச் சாப்பிடுவார்களா...? என்று கேட்டிருந்தார். அதற்கு நடிகர் கமல், மாட்டு மூத்திரத்தைக் குடிக்கும் நீங்கள், நாய் மூத்திரத்தைக் குடித்தால், நாம் நாய் இறைச்சி சாப்பிடுவோம் என்று கடுப்பாகப் பதில் கொடுத்திருந்தார்.



Like Comment Share

கடந்த வாரம் சமூக வலைத் தளக் களம் பரப்பரப்பானதாகவே இருந்தது.
இந்த வாரமும் அது தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.



# நுண்ணறிவு, உளவளர்ச்சி குன்றியவர்களுக்கு ஊன்றுகோலாவோம்

அருளம்பலம் போல்கார்டிங்

ஒத்த வயதுடைய சாதாரண பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில் 3 வருடம் அல்லது அதற்குக் கூடிய காலங்கள் வரையில் பின் தங்கிய செயற்பாடு உடையவர்கள் நுண்ணறி, இயலாமையுடையவர்களாவர். அதாவது கதைத்தல், நடத்தல், செவிமடுத்தல், புரிந்து செயற்படுதல், ஞாபகசக்தி ஏனைய சுகாதாரப் பழக்கவழக்கங்கள் போன்ற செயற்பாடுகளிலும் இடம், காலம், பரிமாணம், தன்மை விளக்கம் போன்ற அறிவு சார் தொழிற்பாடுகளிலும் எழுதுதல், வாசித்தல், கணித எண்ணக்கரு விளக்கம் பெறும் தொழிற்பாடுகளிலும் பின் தங்கியிருக்கும் பிள்ளைகளையே நுண்ணறிவு இயலாமையுடைய பிள்ளைகள் எனக் கல்வி உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த வகைப்படுத்தலுக்குள் சாதாரண, மெல்லக் கற்கும் பிள்ளைகள் உள்ளடங்க மாட்டார்கள். ஒருவரின் செயல்திறன் 70 தொடக்கம் 75க்குக் கீழ் இருந்தும் கற்கும் திறமையில் குறிப்பிடத்தக்க குறை இருந்தால், அதுவும் நுண்ணறிவு இயலாமை என்ற வகைக்குள் அடங்கும் இந்த நிலை 18 வயதுக்கு முன்னமே ஆரம்பித்து விடும்.

**நுண்ணறிவு, இயலாமைக்கான காரணிகள்.**

இது ஒரு நோய் அல்ல இந்தத் தன்மையானது பரம்பரைக் காரணிகளாலும் பிள்ளையின் பிறப்புக்கு முன்னரும் பிறப்பின் போதும் கூட ஏற்பட முடியும். பிரசவத்துக்கு முன்னர் ஜேர்மன் சின்னமுத்து அல்லது ருபெல்லா போன்ற நோய்களால் தாய் பீடிக்கப்பட்டி ருந்தாலோ, பரிசோதனைக் கதிர் வீச்சுக்களை அதிகம் ஏற்றி ருந்தாலோ, குருதி உறவுத் திருமணம் செய்துகொண்டாலோ, குருதி அசாதாரண நிலை, குருதி பொருந்தாமை நிலவினாலோ, உளரீதியாகத் தாய் பாதிக்கப்பட்டிருந்தாலோ குழந்தையும் அதற்கு ஆட்பட்டுக் கொள்ளும். பிரசவத்தின் போதுகூட குழந்தைகளை இத்தகைய குறைபாடு பீடித்துக் கொள்ளலாம். அதற்கு ஏதுவாகக் குழந்தை பிறக்கும் போது அசாதாரண நிலைகள் குறைபாடுகள் கவனமின்றி இருத்தல், உபகரணங்களின் பயன்பாடு, தொப்புள் கொடி கழுத்தில் சுற்றியிருப்பதன் காரணமாக ஒட்சிசன் அளவு குறைந்து, தலைமாறி பிரசவித்தல், குழந்தை சுவாசிக்கப் போதியளவு வாயு கிடைக்காமை போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.



**இனம் கண்டு பராமரிப்போம்**

இப்படியான பலதரப்பட்ட காரணிகளால் பாதிக்கப்பட்டுச் சமூகத்தில் வாழத்தலைப்பட்டிருக்கும் நுண்ணறிவு, இயலாமையுடைய பிள்ளையிடம் காணப்படும் பொதுவான இயல்புகளாகக் குழந்தைத் தனம், தெளிவான பேச்சாற்றல் இன்மை, கற்றலில் தாமதம், புரிந்து கொள்வதில் சிரமம், கவனக்குறைவு, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாமை, உணவு உண்பதில் சிரமம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நுண்ணறிவு இயலாமல் இருத்தல் என்பது ஒரு வகைக் குறைபாடே தவிர அது ஒரு நோய் அல்ல. அத்துடன் பிரச்சினையும் அல்ல. இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளைக் கவனித்து அவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

முதலில் இவர்களை இனம் காண வேண்டும், பெற்றோர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் வகுப்புக்களுக்கு ஆயத்தப்படுத்துதல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையினதும் ஆற்றலுக்கும் விருத்தி மட்டத்துக்கும் ஏற்ப கற்பித்தலையும் பயிற்சி அளித்தலையும் மேற்கொள்ள வேண்டும்.

சுய உதவித்திறன்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையை நடத்துவதற்கு தேவையான ஆற்றலைப் பெருக்குதல் வேண்டும். எமது சமூகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் எனின் அவர்களும் ஆரோக்கியமாக வாழ, வளர வேண்டும். அதற்கு நாம் அனைவரும் அவர்களுக்கு ஊன்றுகோலயும் உதவியாயும் இருத்தல் வேண்டும்.

கட்டுரையாளர்
விசேட தேவையுடையோரின் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து...!

அனார்கலி

## தமிழரின் தலைவிதியா?

அம்பாறை மாவட்ட தமிழர்க ளின் நலன் கருதி உருவாக்கப் பட்ட கல்முனை- அம்பாறை பிராந்திய சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமா சத்தின் 25ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சமாசத் தலை வர் ஏ.அருள்நேசன் தலைமை யில், கல்முனையிலுள்ள சணச மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் உரையாற்றிய சமாச நிருவாகிகள் சிலர் தமிழ் மக்களுக்கான இந்தச் சமாசத் தின் நிலை குறித்துப் பெரும் கவலை வெளியிட்டனர். சமா சம் சற்றுப் பின்னடைவிலேயே உள்ளது என மீண்டும் தலைவ ராகத் தெரிசெய்யப்பட்டுள்ள அருள்நேசன் (அசிரியர்) தனது உரையில் ஏற்றுக்கொண்டார். சமாச உபதலைவரும் தொழிற் சங்கவாதியுமான எஸ்.லோகநா தன் உரையாற்றுகையில் சமாச நிருவாகத்தை வெகுவா கச் சாடினர்.

சமாசத்தில் கடன் பெற்றுவிட்டு கடனைத்திருப்பிச் செலுத்தாமல் டிமிக்கி கொடுத்து வருபவர்க ளில் ஒரு சிலரே சமாச நிருவா கிகளுக்குள் முக்கிய பதவிவகிப் பவர்களாக உள்ளார். சமாசம் எப்படி உருப்படுமெனச் சூடாகக் கேள்வி எழுப்பினார் லோகநா தன்! அம்பாறை மாவட்ட தமிழ ரின் தலைவிதி இப்படித்தான் அமையவேண்டும்? என்கி றார்கள் திருவாளர் பொது சனங்கள்!

## யானைக்கு எதிராக...



அம்பாறை மாவட்டத்தின் பலபிர தேசங்களிலும் மனிதர்களுக்கெ திரான காட்டுயானைகளின் அட்டகா சங்கள் அதிகரித்து வருவதால் பாதிக்கப் பட்டு வரும் மக்கள் கிளர்ந்தெழத் தொடங்கி யுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீள் குடியேற்றக் கிராமங் களான தங்கவேலாயுதபுரம், கஞ்சி குடிச்சாறு, சாகா மம் சிறிவள்ளிபுரம் நேருபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் திருக்கோயில் பிரதேசசெயலக நுழைவாயில் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டிருந் தனர். யானைத்தாக்குதலில் நான்கு பிள்ளைகளின் தாயொருவர் சாவடைந்ததை அடுத்து இந்தப் பெரிய ஆர்ப்பாட்டமும், போராட் டமும் இடம்பெற்றது.

வழக்கம்போல மூன்றுமாதங்களுக்குள் யானைகளைக் கட்டுப் படுத்தும் வேலி அமைக்கப்பட்டு யானைகளிடமிருந்து பாதுகாப் புத்தரப்படும் என்ற வாக்குறுதி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடு பட்டோருக்கு மாவட்ட அரச அதிபர் மட்டத்திலிருந்து வழங்கப்பட் டுள்ளது. நடக்குமா காரியம்?

## வாகன விபத்துக்கள்

அம்பாறை மாவட்டத்திலும் அண்மைக் காலமாகவே வாகன மற்றும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாகக் கல்முனை - அம்பாறை, கல் முனை, அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் விபத்துகள் அதிகரித்து வருகின்றன.

இரவு வேளைகளில் நித்திரையற்றுக் கண் விழித்துப் பயணம் மேற்கொள்ளும் வாக னச் சாரதிகளே அதிகாலை வேளைகளில் விபத்துக்குள்ளாகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளி மாவட்டமொன்றிலிருந்து மரக்கறி ஏற்றி வந்த சிறிய ரக வாகனமொன்று ஒலுவில் பிரதான வீதியில் அதிகாலை வேளை பய ணிக்கும்போது, பாதையை விட்டும் தடம்பு ரண்டு அருகிலுள்ள நீரோடை வாய்க்காலுக் குள் வீழ்ந்து கிடந்தது.



## வேதனை... வேதனை...!

"அம்பாறை மாவட்டத்தில் தமிழர் கள் திட்டமிட்ட முறையிலே கலா சார ரீதியாக, அபிவிருத்தி ரீதியாக, அரசியல் ரீதியாக புறக்கணிக்கப்பட்டு வரு கின்றனர். எங்களுடன் பேசி, எங்களுடன் உறவாடுபவர்களே எமது நிலங்களை, பிர தேசங்களை கபளீகரம் செய்யும் செயற்பாடு களை முன்னெடுத்து வருகின்றமை தான் எமக்குக் கவலை தருகிறது"

இப்படியாகக் கவலை வெளியிட்டிருக்கிறார் கிழக்கு மாகாண சபையின் கூட்டமைப்பு உறுப்பினர் தவராசா கலையரசன்!

கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக்காலம் முடிவடையும் தருணம் நெருங்கிறதல்லவா? இப்படிக் கனதியாக இனிப் பேசத்தானே வேண்டும்!

## அனுதாபம்!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயக மூர்த்தியின் மறைவுக்கு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளது. சங்கத்தலைவரும், தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் அவர்களின் மறைவு தொடர்பில் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தமிழ் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்த மூத்த சட்டத்தரணி அப்பாத்துரை விநாயக மூர்த்தியின் மறைவு தமிழ் இளைஞர் சமூ கத்துக்கு மட்டுமன்றித் தமிழ்ச் சமூகத்துக்கே பேரிழப்பாகும் எனத் தெரிவித்துள்ளார். சட்டவாதியாக, மனித உரிமை ஆர்வலராக அவர் ஆற்றிய பணிகள் காலம் காலமாக நினைவு கூரத்தக்கவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்த்துக்கள்

புதிய அமைச்சரவை மாற்றத்தின்போது திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சராகப் பதவியேற்றுள்ள அமைச்சர் சந்திம வீரக்கொடியை வரவேற்றும், வாழ்த்துக்கள் கூறியும் அம்பாறை மாவட்டத்திலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சிநிலைய முன்றல்களில்பதாகைகள், காட்சிப்படுத்தல்கள் தொங்க விடப்பட்டுள்ளன.

மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் அம்பாறை மாவட்ட காரியாலயம் என்பனவும் புதிய அமைச்சரை வரவேற்று, வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கின்றன.



## நாளை ஆரம்பம்!

கிழக்கிலங்கையிலிருக்கின்ற வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு சிறி கண்ணகை அம்மன் ஆலயத்தின் வரு டாந்த உற்சவம் நாளை 5ஆம் திகதி திங்கட்கிழமை திருக் கதவு திறத்தலுடன் ஆரம்பமாகவிருக்கின்றது.

எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க் கிழமைவரை கோலா கலமாக நடைபெறவிருக்கும் இந்த உற்சவம் அன்றைய தினம் அதிகாலை திருக்குளிர்த்திப்பாடுதலுடன் நிறைவு பெறும்.

உற்சவகாலத்தில் கண்ணகி வழக்குரை பாராயணமும் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிழக்கிலுள்ள களுவாஞ்சிக்குடி, துறைநீலா வனை போன்ற பகுதிகளிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயங்களிலும் மரபுவழியான இந்த உற்சவங்கள் இந்தமாதம் சிறப்பாக நடைபெறவுள்ளன.

## உதவிக் கரம்

மழையால் ஏற்பட்ட இடர்களால் பாதிக்கப்பட்டிருக் கும் மக்களுக்கான நிவாரணப் பொருள்களைச் சேகரித்து அனுப்புவதில் அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்கள் பெரும் அர்வம் காட்டி வருகின்ற னர்.

குறிப்பாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள், ஊழியர்கள், பள்ளிவாசல்கள், பொது அமைப்புக்கள் நிவாரணப் பொருள்கள் சேகரிப்பில் மும்முரமாக ஈடுபடுவதுடன், பெருந்தொகையில் அவற்றைச் சேகரித்து உடனுக்குடன் அவற்றை பாதிக் கப்பட்டவர்களுக்கு அனுப்பியும் வருகின்றனர்.

"2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி இடரின்போது, இன்று பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்கள் நிவாரணப் பொருள்களை எங்களுக்கு அனுப்பி உதவியிருந்த மையை எளிதில் மறந்து விடலாமா?" என்கின்றனர் இந்த மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உணர்வுகள்

அ. அஜந்தன்

எங்களைச் சூழ என்னவெல்லாம் நடக்கின்றன என்பவற்றை எச்சரிக்கும் ஒரு தொழிற்பாடாகவும், எமது வாழ்வில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ள உதவும் குறிகாட்டிகளாகவுமே எமக்குள்ளிருக்கும் உணர்வுகள் உள்ளன. நாங்கள் பகுத்தறிவால் நடாத்தப்பட்டாலும் சரியான பாதையில் செல்வதற்கு உணர்வுகளே உதவுகின்றன. உணர்வுகள் ஏன் எமது வாழ்வில் முக்கியமான ஒரு விடயமாக அடையாளப்படுத்தப்படுகின்றன? அனைவராலும் பேசப்படுகின்றன. என்பவற்றை ஆராய்ந்ததில் உணர்வுகள் 7 வகையான பங்களிப்பை மனிதனது வாழ்வில் ஆற்றி வருவதே அதற்குக் காரணமாக அமைகின்றது.



**1. உயிர் வாழ்வதற்கு...**
உணர்வுகள் எமது உயிர் வாழும் திறனை மேம்படுத்தி எமது உடலில் உயிர் ஒட்டியிருப்பதைத் தக்க வைக்கின்றன.
உதாரணமாக - நாம் தனிமையை உணரும்போது பிற மனிதருடன் தொடர்புகளை ஏற்படுத்திகொள்ளலாம். நாம் பயத்தை உணரும்போது பாதுகாப்பான சூழலை நோக்கி நகர்ந்து பாதுகாப்பை உறுதி செய்து கொள்கின்றோம்.

**2. முடிவுகளை எடுப்பதற்கு...**
எமது உணர்வுகள் பிரச்சினைகள் பற்றிய தகவல்களைத் தரக்கூடிய பெறுமதிமிக்க கருவிகளாதலால் முடிவுகளை எடுப்பது இலகுவானதாக அமையும். ஒருவர் உணர்வுகளை வெளியிடாமல் தனக்குள் அடக்கி வைத்திருந்தால் அவரால் ஒரு திடமான முடிவை எடுக்க முடியாதிருக்கும்.

**3. நடத்தைகளை அளவிடுவதற்கு...**
உணர்வுகள் எமது நடத்தைக் கோலங்களையும் எம்மோடு தொடர்புடைய ஏனையவர்களது நடத்தைக் கோலங்க ளையும் அளவிடும் கருவிகளாகவும் உள்ளன

**4. மற்றவர்களுடனான எமது உறவு எல்லைகளைச் சரிசெய்வதற்கு...**
எப்பொழுது ஒருவருடைய நடத்தை எமக்குப் பொருத்தமற்றது என நாம் உணர்கின்றோமோ அப்பொழுதே எமது உணர்வு எம்மை எச்சரித்து விடுகின்றது. எமது உணர்வுகள்மீது நம்பிக்கை வைத்து அதனைப் பிரதிபலித்தால், அந்த நபர் தனது நடத்தை எம்மை திருப்திப்படுத்தவில்லை என்பதைப் புரிந்து கொள்வார். இதன் மூலம் அவருடனான எமது எல்லைகளைச் சரி செய்து உடல், உள ஆரோக்கியத்தைப் பாது காத்துக் கொள்ளலாம்.

**5. சிறந்த தொடர்பாடலுக்கு...**
மற்றவர்களுடன் தொடர்பாடலில் ஈடுபடும்போது இருவரது முகத்திலும் வெளியிடப்படும் உணர்வுகள் மூலமாக அவரவர் என்ன மனநிலையில் இருக்கின்றனர். அவரவருக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகின்றன. என்பவற்றை உணர்ந்து அறிந்துகொள்ள முடியும்.
உதாரணமாக ஒருவர் மிகவும் கவலையோடு எம்மோடு உரையாடும்போது அவருக்கு ஆறுதலளிக்கும் வகையில் நாம் நமது உரையாடலைத் தொடர வேண்டும். ஒருவர் கோபத்தோடு எம்மோடு உரையாடினால் அதைத் தணிக்கும்முறையில் எமது உணர்வுகளை கையாண்டு உரையாடலைத் தொடர வேண்டும்.

**6. மகிழ்ச்சியாக இருப்பதற்கு**
நாம் மகிழ்வாக உள்ளோம் என்பதை உறுதி செய்து கொள்வது எமது முகத்தில் வெளிப்படும் மகிழ்ச்சி என்ற உணர்வே. எமது உணர்வுகளை நாம் உணர்ந்து கொள்வதன்மூலம் எப்பொழுது நாம் மகிழ்வாக உள்ளோம்? எப்பொழுது துக்கத்தில் உள்ளோம்? என்பவற்றைப் புரிந்துகொள்ள முடியும். நாம் மகிழ்வாக இருக்க எமக்கு என்னவெல்லாம் தேவைப்படுகின்றன என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

**7. ஒற்றுமைக்கு:** எமது மதமோ, கலாச்சாரமோ, மொழியோ அல்லது அரசியலோ மனிதனை ஒன்றுசேர்ப்பதில்லை மாறாக உணர்வுகளே மனித குலத்தை ஒன்றிணைக்கின்றன. இவற்றுக்கு ஒத்துணர்தல், இரக்கம், மன்னித்தல் மற்றும் கூட்டுறவு போன்ற உணர்வுகள் பங்காற்றுகின்றன.

**எமது உணர்ச்சியின் நிலையை அறிவது எப்படி?**
நாம் ஒவ்வொருவரும் எமது உணர்வுகளைத் தெரிந்து கொள்வதோடு எந்த அளவு நாம் அவற்றை தெரிந்துவைத்திருக்கின்றோம் என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இவ்வாறு பரீட்சித்துப் பார்ப்பதற்குக் கீழே உள்ள வினாக்களை எம்மை நாமே கேட்டுக்கொள்ள முடியும். இந்த வினாக்களுக்கு அதிக பதில்கள் 'ஆம்' என்றால் நாம் உணர்வுகளை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் நல்ல நிலையில் உள்ளோம் என்று அர்த்தப்படும். ஆனால் பதில்கள் 'இல்லை' என்றால் நாம் எமது உணர்வுகளில் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

1. கோபம், துக்கம், பயம், ஏமாற்றம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகளைத் தாங்கிக் கொள்ள முடிகிறதா?
2. உடலில் உணர்வுகளை உணர முடிகிறதா? நாம் துக்கத்தில் அல்லது அதீத மன எழுச்சியில் இருக்கும்போது உடலிலுள்ள ஏதாவது உபாதைகளில் ஒன்றை உணரமுடிகிறதா?
3. அனைத்து உணர்வுகளுடனும் சௌகரியமாக இருக்கிறோமா?
4. தீர்மானங்கள் எடுக்கும்போது உணர்வுகளில் கவனம் செலுத்தி உணர்வுகளையும் அந்தத் தீர்மானத்தில் பயன்படுத்துகின்றோமா?
5. எமது உணர்வுகள் தொடர்பாகக் கதைக்கும்போது நல்ல நிலையில் இருக்கின்றோமா எமது உணர்வுகள் தொடர்பாக நாம் நேர்மையாக உரையாடுகின்றோமா?
6. எமது உணர்வுகள் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்தனவா? மற்றவர்களுக்கு எங்கள் உணர்வுகள் புரிகிறதா? மற்றவர்கள் எமது உணர்வுகளைத் தெரிந்து கொள்வது எமக்குப் புரிகிறதா?
7. மற்றவர்களின் உணர்ச்சிகளை உணரக்கூடியவராக நாம் உள்ளோமா?

**உணர்ச்சியின் நிலையை அறிவதால் ஏற்படும் நன்மைகள்**

- உணர்வுகளைப் புரிந்து கொள்வதால் எமது உணர்வுரீதியான நன்நிலையை பேணுவதுடன் பிறரது உணர்வுகளை விளங்கிக்கொள்ள வும், அவர்களின் உணர்வு களை மதிக்கவும், அவர்களுடன் எமது உணர்வுகளைப் பரிமாறவும் அது தொடர்பாக கதைக்கவும் முடிகின்றது. இவ்வாறான நடத்தையால் மற்றவரின் கவனத்தை ஈர்ப்பதுடன் சுமூகமான உறவுமுறை யையும் ஏற்படுத்த முடியும்.
- பல சந்தர்ப்பங்களில் நாம் தீர்மானங்களை மேற்கொள்ளும்பொழுது எமது தேவைகளையும் பௌதீக ரீதியான விடயங்களையும் மட்டுமே கவனத்தில் எடுக்கின்றோம். இதனால் எமது தீர்மானங்கள் பௌதீகரீதியான தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஒரு தீர்வாகவே அமைகின்றன. ஆனால், எமது உணர்வுகள் மதிப்பளிக்கப்படாமல் அப்படியே எமக்குள் புதைக்கப்படுகின்றன. உணர்வுகளுக்கு மதிப்பளித்து தீர்மானங்களை மேற்கொள்ளும்போதே அது பூரணமான தீர்வாக அமையும்.
- எமது உடலில் ஏற்படும் சில உபாதைகளுக்கு எமது உணர்வுகளின் சமநிலையின்மையும் அதீத உணர்ச்சி வெளிப்பாடுகளுமே காரணமாக உள்ளன. ஆனால் நாம் எமது உணர்வுகளின் தன்மைகளையும் அவற்றின் மாற்றங்களையும் அறிய முற்படாமல் இருந்தால் அவற்றுக்குச் சிகிச்சையளிப்பது சிரமமாக இருக்கும். ஆனால் உணர்வு நிலையைத் தெரிந்துகொண்டாலே இத்தகைய சில உபாதைகளைத் தவிர்க்கலாம்.
- எமது உணர்வுகளின் நிலை தொடர்பான போதிய அறிவு இல்லாவிட்டால், எமக்குள் இருக்கும் எதிர்மறையான உணர்வுகளின் அளவையும் அவற்றால் ஏற்படும்விளைவுகளையும் உணரமுடியாமல் போய் விடும். இதனால்பல்வேறுகட்டங்களில் நாம் அசௌகரியங்களைஎதிர்நோக்குவோம். உணர்வுகளைதெரிந்துகொள்வதன்மூலமாக இவற்றை தவிர்க்கமுடியும். இத்தகைய காரணங்களால் மனிதர் நாம் நமது உணர்வுகளைக் கற்றுக்கொள்ள வழிசமைப்போம்.



> எமது உணர்வுகள் பிரச்சினைகள் பற்றிய தகவல்களைத் தரக்கூடிய பெறுமதி மிக்க கருவிகளாதலால் முடிவுகளை எடுப்பது இலகுவானதாக அமையும். ஒருவர் உணர்வுகளை வெளியிடாமல் தனக்குள் அடக்கி வைத்திருந்தால் அவரால் ஒரு திடமான முடிவை எடுக்க முடியாதிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்புரம்
சி.கதிர்காமநாதன்



# இதோ எந்தன் தெய்வம்...

வழமைபோல சத்தியக்காட்டுச் சந்தையில் சைவமும், அசைவமும் வாங்கி முடித்துவிட்டு கடைசியாக அவருடைய கடையில் தான் வாழைப் பழம் வாங்குவது வழக்கம். அவரிடம் மொத்த மாகவும், சில்லறையாகவும் வாங்கலாம். எப்போதும் சந்தனப் பொட்டோடு இருக்கும் சிரித்த முகம் கதைக்குப் பஞ்சமில்லை. என்னுடன் சற்று நேரம் கொஞ்சமாக உலக நடப்புக்களை அலசிவிட்டுத்தான் எனக்கான இதரையோ, கதலியோ வெட்டுவார்.

அன்றும் கதைத்து முடிந்து, பழமும் வாங்கி வெளியே வருகையில் எனது வாய் சும்மா இருக்கவில்லை.

"என்ன இந்த வெயில் இப்படி வாட்டுது" என்றேன். "நாடே தலை கீழாய்ப் போட்டுது. அநீதிகள், அக்கிரமங்கள் கூடினால், இப்படி எல்லாம் மாறித்தான் நடக்கும்" என்றார்.

"என்ன சொல்லுறீர்...? ஊருலகம் இப்ப பொலிவு பெற்றுக் கொண்டெல்லேபோகுது. அநேகமாய் எல்லாக் கோயில்களும் நிதி உதவி, பெற்றுக் கொண்டு (உள் நாடு, வெளிநாடு) அலங்கார வளைவுகளுமாய் வர்ண மயமாகக் கிடக்குது... திருவிழாவுக்கு இந்தியாவில் இருந்து சுப்பர் சிங்கர்கள்... இவையளோட கச்சேரியுமெல்லே நடக்குது" என்றேன். "இதற்குப் பிறகும் நாட்டில மும்மாரி பொழியாமல் அப்ப ஏன் கனத்த வெயில் அடிக்குது? மற்றப்பக்கம் மழை அள்ளிக்கொட்டுது?" என்று சொல்லிச் சிரித்தார். அது நம்பியாரும் பி.எஸ் வீரப்பாவும் கலந்த சிரிப்புப்போல இருந்தது.

— — — — — — —

"இதுகள் எல்லாம் நடந்தால் சரியே... இவையெல்லாம் பக்தியோட நடக்கவேணும், பக்தி காணாமல் எங்கேயோ போட்டுது. கோயில்கள் எல்லாத்தையும் வீடு மாதிரி மாத்திப் போட்டார்கள். பூச்சுக்கள், தரைக்கு மாபிள் அலங்காரம் என்று சொல்லி ஏராளம்.... இன்னும் கொஞ்சக் காலம் போனால் தெய்வங்களுக்கும் தென்னிந்திய அழகுக் கலை மன்னர்கள் வந்து பூச்சுப் பூசி, புருவங்களை வெட்டி அலங்கரித்தாலும் அலங்கரிப்பினம். பாவம் வயது போனதுகள் நடந்து போகேக்க வழுக்கினால், பிடரி அடிபட்டு சிவலோகம் செல்ல வேண்டியது தான். இதைவிட எச்சரிக்கை போர்ட்டுக்கள்... ஆமிக்காரர்கள் இருக்கிற இடத்தில தான் எச்சரிக்கை போர்ட்டுகள் இருக்கும். கோயிலில என்ன எச்சரிக்கை?

நாளைக்கு இப்படியும் எச்சரிக்கை வரும் இந்தப் பக்கம் வெளிநாட்டில இருந்து வந்த ஆக்களுக்கு அந்தப் பக்கம் ஊர் குடிமக்களுக்கு எண்டு. கோயிலுக்குப் போகேக்க பக்தியோட போகவேணும் சும்மா பயந்து, பயந்து (தனியார் வைத்தியசாலைக்குச் செல்வது போல்) செல்ல வேண்டியிருக்கு"

அவர் நீட்டிக்கொண்டே போனார். எனக்கு அவர் கதையை இடைமுறிக்க விருப்ப மில்லை. ஏதோ ஒரு உண்மை அதில் மறைந்து தான் இருக்கிறது.

"ஏன் இப்படிபக்தி இல்லையென்று சொல்லுறியல்...?" நானும் கொஞ்சம் கொழுத்தித்தான் விட்டேன்.



"முந்தி... எங்கட அம்மாவின்ர காலத்தில... ஏதேனும் கஸ்ர, துன்பம் நேர்ந்தால்... கடையில ஓடிப்போய் கற்பூரத்தை வாங்கி, கற்பூரம் கொழுத்திக் கொழுத்திக் கறுத்துப்போய் இருக்கும் கல்லில மனமுருகி என்ரை அம்மாளே...! எனச் சொல்லிக் கொண்டு நினைச்சது நடக்கவேணும் எண்ட சிந்தனையோட கற்பூரத்தைக் கொழுத்திக் கும்பிட்டால் அவாவுக்கு ஒரு மனத்திருப்தி, அது என்ன நிம்மதியாய் இருக்கும்...? இப்ப அப்படிக் கொழுத்தேலாது. தரைக்கு மாமிள் போட்டாச்சு நிலம் கறுத்துவிடும். என்ன சொல்லிறியள்?"

அவர் இப்படிச் சொல்லிக் கொண்டு தனது வாடிக்கையாளர்களையும் கவனித்துக் கொண்டார்.

— — — — — — —

"ஊர்க் கிணத்தில துலாகொண்டு வாளியில தண்ணியள்ளித் தலை முழுகி, ஈரம் சொட்டச் சொட்டப் பக்கத்து ஆலடி வைரவரைச் சுற்றிவந்து கற்பூரம் கொழுத்திக் கும்பிட்டவை இப்ப வெளிநாட்டில இருந்து காசு அனுப் பித் திருவிழாச் செய்யினம், இங்க இருக்கிறவை அங்கயிருக்கிறவைக்காகத் திருவிழாச் செய்யினம். அதிலயும் ஆளுக்காள் போட்டி. கனக்கச் செலவழிக்கிறது. ஆடம்பரம், கூத்துக் கும்மாளம் எண்டு கோயிலுகள் எல்லாம் இப்பிடிக் களியாட்டங்களா மாறிப்போச்சுது. பின்ன எப்பிடி இஞ்ச பக்தி வளரும்...? என்னதான் அமர்க்களமாய்க் கோயிலில திருவிழா நடந்தாலும், கடைசியில எல்லாமே போட்டியும் சண்டையிலயும் தான் போய் முடியும். ஏன் பக்தி வளருற இடத்தில போட்டி, சண்டை வருகுது? இப்ப யாழ்ப்பாணத்தில எத்தனை விதம் விதமான புதுச்சாமிகள், கோயில்கள்எல்லாம்முளைத்து விட்டன. நாங்கள் அறியாத, புழக்கத்துக்கு வந்துவிட்ட நவீன சாமியர்கள் எத்தனை?"

அவர் என்னை உற்றுப் பார்த்தார் .

— — — — — —

கோயில்கள், தலங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டதை முன்பு பத்திரிகையில் படித்திருக்கிறோம். முந்தி எங்களுக்குத் தெரிந்த வங்கிகள் மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்றனவே. இப்ப...? வகை தொகையாக வங்கிகள் வந்து விட்டன. இப்படியாகத்தான் இண்டைக்குக் கோயில்களும் சாமியார்களும் நமது ஊருக்குள் குவிக்கப்பட்டிருக்கும் விடயங்களா கிவிட்டன.

ஆனால் ஒண்டு தெரியுது?

இப்ப வங்கியளுக்கும் கூட்டம் தேவை சாமிக்கும் கூட்டம் தேவை எல்லாத்தையும் வியாபாரமாக்கிப் போட்டாங்கள்.

யாரும் கோயில் கட்டலாம், எந்த இடத்திலையும் சாமியை வைக்கலாம். கொஞ்சக் காலத்துக்கு முன்னம் கே.கே.எஸ் றோட்டை அகலிக்கேக்க றோட்டில வைச்ச சாமிகள் பட்டபாடு. ரெண்டு, மூண்டு நாள்களுக்கு முன்னமும் சாவகச்சேரிப் பகுதியில இப்படியான சாமியளை அகத்தச் சொல்ல அவை அந்தரப் படுகினமாம்.

நேரம் போவதை உணர்ந்தேன்

சரிபோட்டு வாரும் ஒண்டும் யோசியாதையும் எல்லாரோடையும் உதுகளைக் கதைக்கேலாது. உம்மோட மட்டும் தான் இப்படிக் கதைக்கிறனான்.

நான் வீடு நோக்கிச் சைக்கிளை மிதித்தேன்.

— — — — — — —

அவரின் கருத்துக்களை நான் யோசித்தபடி சென்று கொண்டிருந்தேன். இப்போதெல்லாம் சில கோயில் திருவிழாக்களில் இரவில் கூட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குகிறார்கள், இட்லி,உப்புமா என உணவுவகைகள் பரிமாறப்படுகின்றன.

"இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்
அவன் கருணையுள்ள மனிதரிலே கோயில் கொள்கின்றான்..."

வீட்டை அண்மித்துக் கொண்டிருக்க அந்த ஐஸ் பழம் விற்கும் வண்டி பாடலுடன் என்னைக் கடந்து போனது.

கோயில்கள் எல்லாத்தையும் வீடு மாதிரி மாத்திப் போட்டார்கள். பூச்சுக்கள், தரைக்கு மாபிள் அலங்காரம் என்று சொல்லி ஏராளம்.... இன்னும் கொஞ்சக் காலம் போனால் தெய்வங்களுக்கும் தென்னிந்திய அழகுக் கலை மன்னர்கள் வந்து பூச்சுப் பூசி, புருவங்களை வெட்டி அலங்கரித்தாலும் அலங்கரிப்பினம். பாவம் வயது போனதுகள் நடந்து போகேக்க வழுக்கினால், பிடரி அடிபட்டு சிவலோகம் செல்ல வேண்டியது தான்.

## அன்பே சிவம்

கடவுள் இருக்கின்றார?
இல்லையா?
யாரும் கண்டதில்லை.
எவருக்கும் தெரியாது
கடவுள் ஒரு நம்பிக்கை
அவ்வளவுதான்....

இதுவரைக்கும் யாரும்
அவரைக் கண்டதில்லை
நமக்கு அப்பாற்பட்டவரை
நம்மால் காணவியலாது
எங்களையும் அண்டத்தையும்
படைத்த அவர்
எப்படியிருப்பார்...
கற்பனை பண்ணத்
தொடங்கிவிட்டீர்களா...?

கவலை வேண்டாம் நான்
எத்தனையோ தடவைகள்
அவரைக் கண்டுள்ளேன்
அண்மையில்கூட
ஒரு நாள் அவரைக்
கண்டேன்
அன்றைக்கு...
மிக வேகமாக வந்த
மோட்டார் சைக்கில் ஒன்று
என்னை முட்டிமோதிச்
சென்றுவிட்டது.
பின்னாலே சைக்கிளில் வந்த
கடவுள்தான்
எனது நான்கு கால்களுக்கும்
தாயும் ஆற்றினார்.



பொன். நகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடருற்றிருக்கும் இலங்கையின் இடர் முகாமைத்துவம்!

ஸ்ரீடோ ஸ்வாமி

சுனாமிக்குப் பிறகு இடர் முகாமைத்துவத்தைக் கையாளுவதற்கென உருவாக்கப்பட்டிருந்த அமைச்சு மற்றும் செயலணிக்குக் கடந்த மாதம் கடும் வேலைப்பழு ஒன்று ஏற்பட்டிருந்தது. சீரற்ற காலநிலையின் பாதிப்புக்கள் இருவேறு வடிவங்களில் இலங்கையைப் பாதித்திருக்கின்றன. தெற்கில் உருவான வெள்ள நிலைவரமும் அதனோடிணைந்த அபாயங்களும் ஒரு மில்லியனுக்கும் மேலான மக்களை இடம்பெயர வைத்திருப்பதுடன் 200இக்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டுடிருக்கின்றன. வடக்கிலும் காலநிலையின் பாதிப்பு அறிக்கையிடப்பட்டிருக்கிறது. இதில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 3ஆயிரத்து 362குடும்பங்களைச் சேர்ந்த 1இலட்சத்து 21ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இது போதிய மழை கிடைக்காத காரணத்தாலும் அதிகரித்த வெயில் காரணமாகவும் உருவெடுத்த வறட்சியால் ஏற்பட்டிருப்பதாகும்.


**விசனத்துக்குள்ளாகியிருக்கும் இடர் அமைச்சு.**

ஏற்பட்டது இயற்கை இடர் என்று அறிக்கையிடப்பட்டிருந்தாலும், அதன் பின்னரான மனிதத் தலையீடுகளின் காரணமாகவும் விளைவுகள் பாரதூரமான நிலைக்குச் சென்றிருக்கின்றன. தொடர்ந்திருந்த இடர் நிலைமை காரணமாகவும் பல பகுதிகளில் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலை மற்றும் தாமதம் ஏற்பட்டிருந்தது. இயல்புநிலை ஸ்தம்பித்திருந்த பகுதிகளில் தற்போது வழமைநிலை திரும்பிக் கொண்டிருந்தாலும் ஏற்பட்ட சொத்தழிவுகளும் உயிரழிவுகளும் கவலைக்குரியவையே. இந்த நிலையில் சுனாமி அவலத்தில் கற்றுக்கொண்ட பாடத்தை வைத்துத் தனக்கென்றொரு இடர் முகாமைத்துவ அமைச்சு ஒதுக்கத்தை வைத்திருந்து அதை எதிர்கொள்ளக் காத்திருந்த இலங்கையின் தயார் நிலை. பலராலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு விசனத்துடன் நோக்கப்பட்டிருக்கின்றது. இடர் முகாமைத்துவம் செய்வதற்கான தயார்நிலையில் அது இருந்ததா? என்பதாகவும் முன்னெச்சரிக்கை விடுக்கும் விவகாரத்தில் முன் எச்சரிக்கையாக இருந்ததா? என்பதாகவும் பலவாறாக அதற்கு எதிராக வினாவெழுப்பப்பட்டிருக்கின்றது.

அனுர பிரியதர்ஷன யாப்பாவை அமைச்சராகவும் டுனேஷ் கன்கந்தவை பதில் அமைச்சராகவும் கொண்டு இயங்கி வரும் இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு 2017ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டில் ரூபா. 17,97,353,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டுகளைவிட அதிகமான தொகையாகும்.

**அமைச்சர் நாட்டில் இல்லை!**

இலங்கை வெள்ள இடரை எதிர்கொண்டிருந்த ஆரம்ப நாள்களில் இடர் முகாமைத்துவ அமைச்சர் மெக்சிக்கோவில் இருந்ததாகவும் கடந்த 31ஆம் திகதி அளவிலேயே அவர் நாடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மெக்சிக்கோவின் கங்குன் நகரில் இடம்பெற்ற பேரழிவு ஆபத்துக்களை குறைத்துக்கொள்ளுதல் தொடர்பான உலக மாநாட்டில் கலந்து கொள்ளவே மெக்சிக்கோவுக்கு அவர் பயணம் செய்திருந்தார். அதன்போது அவர் நிகழ்த்திய உரையில், இயற்கை பேரிடர்களின் போது உயிரிழப்புக்கள் மற்றும் பொருளாதார இழப்புக்கள் என்பவற்றைக் குறைத்துக்கொள்வதற்காக இலங்கை நடைமுறைப்படுத்தும் திட்டம் தொடர்பில் விளக்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர் அங்கு உரை நிகழ்த்திய சம நேரத்தில் அவருடைய தாய்நாட்டில் அவருடைய ஆளுகையின் கீழ் வரும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் நிவாரணப் பொருள்களை போதிய அளவில் களஞ்சியப்படுத்தத் தவறி நிவாரண பொருள்களுக்காக உதவி கோரி அல்லல்பட்டுக் கொண்டிருந்தது. இதன் பிரதிபலனாகவே கடந்த 31ஆம் திகதி ஊடகங்களுக்கு முகம் கொடுத்த அமைச்சர், ஊடகவியலாளர்களின் கடுமையான கேள்விக்கணைகளை எதிர் கொண்டிருந்தார்.



ஏற்பட்டது இயற்கை இடர் என்று அறிக்கையிடப்பட்டிருந்தாலும், அதன் பின்னரான மனிதத் தலையீடுகளின் காரணமாகவும் விளைவுகள் பாரதூரமான நிலைக்குச் சென்றிருக்கின்றன. தொடர்ந்திருந்த இடர்நிலைமைகாரணமாகவும் பல பகுதிகளில் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலை மற்றும் தாமதம் ஏற்பட்டி ருந்தது. இயல்புநிலை ஸ்தம்பித்திருந்த பகுதிகளில் தற்போது வழமைநிலை திரும்பிக் கொண்டிருந்தாலும் ஏற்பட்ட சொத்தழிவுகளும் உயிரழிவுகளும் கவலைக்குரியவை.

**அவசர நிலையை கையாளத் திட்டமில்லை!**

ஊழலுக்கு எதிரான முன்னணியின் ஆலோசகரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான கீர்த்தி தென்னக்கோன், இய்ற்கை இடர்களை எதிர்கொள்வதில் தகுந்த திட்டமிடல்கள் காணப்படாமை தொடர்பில் தனது விசனத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். உள்ளூரில் பெறக்கூடிய பொருள்களான அரிசி, மா, பருப்பு, சீனி, பால்மா மற்றும் பிஸ்கட் போன்ற பொருள்களைக்கூட இந்தியாவில் இருந்து உதவி கோரியமை தொடர்பில் நாம் வெட்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

**வேடிக்கை பார்க்க வந்தவர்களின் அவலச்சாவு!**

சரியான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட இடங்களில் நடைமுறைப்படுத்தப்படாமையால் வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களை வேடிக்கை பார்க்கச் சென்ற 18பேர் அவற்றுக்குள் சிக்குண்டு பலியாகியுள்ளதாகப் பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவசர நிலைமைகளின்போது ஒன்றுபட்டுச் செயற்படும் வகையில் அரச திணைக்களங்களும் முப்படைகளும் ஊடக நிறுவனங்களும் ஒருங்கிணைக்கப்படுவது தொடர்பிலும் அத்தகையதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் வெற்றிடம் நிலவுவது இதன் மூலம் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. உயிர்கள், உடமைகளைக் காவுகொடுத்த பின்னரே இந்த வெற்றிடம் உணரப்பட்டிருக்கின்றது. இதில் பூனைக்கு மணியைத் தொங்க விடவேண்டிய பொறுப்பு தெளிவாகவே இடர்முகாமைத்துவ அமைச்சிடம் தான் வருகின்றது. இந்த ஒருங்கிணைந்த திட்டம் முதலில் நடைமுறைக்கிடப்பட வேண்டும். இது தொடர்பில் மக்கள் அறிவூட்டப்பட வேண்டும். தவறின், பேரிடர்களால் காவுகொள்ளப்படும் துயரங்கள் வருடாவருடம் அதிகரித்தே செல்லும். மாத்திரமின்றி சாதாரண மனிதர்களுக்கு மீண்டும் மீண்டும் பூச்சியப் புள்ளியிலிருந்து வாழ்க்கையை ஆரம்பிக்கும் சுமை தொடரவே செய்யும். சுனாமிப் பேரிடருக்கு முகம் கொடுத்ததைப் போன்று வெள்ளம் மற்றும் மண்சரிவுக்கான ஒத்திகைகள் தொடர்பில் பரீட்சித்துப் பார்ப்பது காலத்தின் தேவையாக மாறியிருக்கின்றது. சுனாமி மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தையும், அதைச் சாட்டாக வைத்து நிதி ஒதுக்கீடுகளால் தன்னைப் பலப்படுத்திக் கொண்டதையும் இடர் முகாமைத்துவ அமைச்சு சரிவரப் பயன்படுத்தித் தற்போது நிகழ்ந்திருக்கும் இடரைச் சரியான திட்டமிடல், முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவந்திருக்கவில்லை என்பதை விமர்சிப்பதுடன் மாத்திரமில்லாது மக்கள் பலரும் அத்தகைய அமைச்சு மீதான அதிகரித்த விசனத்துடனும் அதைத் தூற்றி வருகின்றனர். இனி வருங்காலங்களிலாவது இந்த இடர் முகாமைத்துவ அமைச்சைப் போன்ற அவசர தேவைகளுக்கு உதவாத வேலைத்திட்டங்கள் அனைத்தும் மீள் பரிசீலனை செய்யப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி. பத்மநாதன்

# இலங்கையில் 2000வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்

வெளிப்படுத்தப்படாத காரணங்களால் வரலாற்றுச் சின்னங்கள், பல தரப்பினராலும் வேகமாக அழிக்கப்படுகின்றன. இங்கே கா. இந்திரபாலா கூறுவனவற்றைக் கவனிப்பது அவசியமாகும்.

*"பல ஆண்டுகளுக்கு முன் முக்கியத்துவம் வாய்ந்த கற்கிடை அடக்கங்களும் கல்வட்டங்களைக் கொண்ட அடக்கங்களும் மாமடுவில் கண்டறியப்பட்டன. கவலைக்குரிய வகையில் கல்வட்டம் அனைத்தும் முறையான ஆய்வுகள் நடத்தப்படுவதற்கு முன்னர் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன"*

*"பறங்கி ஆற்றுக்கு அண்மையான இடத்தில் இந்த ஆதி இருப்புக் காலத் தொல்லியல் அடக்கங்கள் காணப்பட்டமை கவனிக்கத்தக்கது. பறங்கி ஆறு வடமேற்குக் கரையில் மன்னாருக்கு வடக்கே கடலோடு சங்கமிக்கின்றது. பாக்கு நீரிணை (சேது சமுத்திரம்) வழியாகத் தமிழ் நாட்டிலிருந்து பரவிய செல்வாக்குகள் நதி வழியாக உள்ளே பரவியதை இலங்கையின் வேறு இடங்களில் காண்பதுபோல, இங்கும் பறங்கி ஆறு வழியாக வவுனியா மாவட்டத்துக்குள் ஆதி இரும்புக் காலச் செல்வாக்குப் பரவியமையைக் காணலாம். கிழக்கில் பாயும் மாஓயா, யான்ஓயா, வழியாகவும் வவுனியா மாவட்டத்துக்குள் இந்தச் செல்வாக்குப் பரவியது"*

*"மாமடுவில் இரண்டு வகையான சவ அடக்கங்கள் காணப்பட்டன. ஒரு அடக்கக் கூட்டம் கற்கிடை அடக்கங்களைக் கொண்டது. பெருங்கற்களால் இவை அமைக்கப்பட்டுக் கற்பலகைகளால் மூடப்பட்டன. பெருமளவு நிலப்பரப்பில் இவை காணப்படுகின்றன. இன்னும் இவை முறையாக ஆய்வு செய்யப்படவில்லை. இரண்டாவது வகை அடக்கங்கள் கல்வட்டங்களைக் கொண்டவை. அவை கற்கிடைகள் காணப்படும் இடத்திலிருந்து சிறிது தூரத்தில் ஒரு கூட்டுறவுப் பண்ணையில் காணப்பட்டவை. அவை கற்களால் அமைக்கப்பட்ட வளையங்களைக் கொண்ட அடக்கங்கள். அவற்றின் தாழிகள் புதைக்கப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. இத்தகைய சான்றுகளை வேறு கரும் - செம் மட்பாண்ட ஓடுகளையும் கண்ட பேராசிரியர் செனவிரத்ன இவை இது வரை இலங்கையில் வேறெங்கும் கண்டறியப்படாத தனித்துவமுள்ள கல்வட்ட அடக்கங்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் இந்த அரிய தொல்லியல் கண்டுப்பிடிப்புகள் இன்று இல்லை"*

### அருணா கண்டறிந்தவை...

இவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்து அருணாவின் பணிகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. அவர் எங்காவது நிலத்தை அகழ்ந்து எதையும் எடுக்கவில்லை. அவர் கண்டவை எல்லாம் தரை மேல் உள்ளவை. அவற்றைப் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் குடியானவர்கள் எவருக்கும் உரிமையுண்டு. அது மனித உரிமையின் வழியான அடிப்படை உரிமை. ஒரு ஜனநாயக நாட்டில், அறிவு தொடர்பாக, மக்களுக்குரிய உரிமையை உறுதி செய்வதே அரசின் தலையாய கடமை. இப்பொழுது தகவலறியும் சட்டம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு மாறாகச் செயற்படுவோரும் நினைப்போரும் பணிபுரிவோரும் சற்று அவதானமாக இருக்க வேண்டும்.

அருணா செல்லத்துரையின் கண்டுபிடிப்புகளால், இருள் மயமாகிவிட்ட வன்னியின் ஆதி வரலாறு இப்பொழுது தெளிவாகவும் விபரமாகவும் தெரிகின்றது. அவ்வாறு தெளிவு பெறும் வரலாறும் தமிழ் மொழி பேசுவோரின் வரலாறாகவே வெளிப்படுகின்றது. அவர் கண்டுப்பிடித்த தொல்பொருள் சின்னங்களில் பெரும்பாலானவற்றிலே தமிழ் பிராமி வரி வடிவங்கள் தெரிகின்றன. அவற்றிலே தமிழ்ச் சொற்கள் எழுதப்பட்டுள்ளன.

இதே நிலை யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலங்கையிலும் காணப்படுகின்றது. இந்தப் பண்பாட்டு அம்சங்கள் இலங்கையின் வடமத்திய வலயத்திலும் தென்பிராந்தியத்திலும் ஊடுருவிப் பரவியுள்ளமை குறிப்பிடற்குரியது.

04



*"கள ஆய்வுகள் மூலம் வன்னியிலேயே கண்டுபிடிக்கப்பட்ட புராதனமான பண்பாட்டுச் சின்னங்கள் நாகரோடு தொடர்புடையவை. மலைப்பாறைகளின் உச்சியில் வெட்டிய கேணிகளைச் சுற்றியும் தூண்தாங்கு கற்களிலும் வேறு பல பொருள்களிலும் நாகர்குல வேளிர்களின் பட்டப் பெயர்கள் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. கிழக்கிலங்கையி லும் யாழ்ப்பாணத்திலும் போல மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த நாகர்குல வேளிரின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. அடங்காப்பற்று – வன்னியில் பல வேள்புலங்கள் இருந்தன. சில ஈமக் கல்லறைகளின் மூடிகள் போலத் தெரிகின்றன."*

இதுவரை கலாசார முக்கோணத்தினர் பல்வேறு வரலாற்றுத் தலங்களிலுள்ள பௌத்த சிற்பங்களைப் பற்றிய நூல்களை சிங்கள மொழியில் வெளியிட்டுள்ளனர். அபயகிரி மகா விகாரத்து பௌத்த படிமங்கள் பற்றியது அவற்றுள் ஒன்று அதில் வெளியிடப்பட்டுள்ளது.

சிற்பங்களின் படங்களில் மணிணாகன் என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. இது பலருக்கு வியப்பாக இருக்கலாம். இதுவரை இலங்கையின் தொல்லியல் சார்பான நிறுவனங்களும் தொல்லியலாளரும் தமிழ் பிராமி வரிவடிவங்கள் இலங்கையிலும் பயன்படுத்தப்பட்டன என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களின் ஆய்வு முறைகளும் தகைமைகளும் எவ்வளவு பின்தங்கிய நிலையில் உள்ளன என்பது காலப் போக்கில் வெளிப்படையாகும்.

### வெளிப்படைத்தன்மையான கண்டடைவுகள்

அருணா செல்லத்துரை தொல்லியல் பயின்ற ஆய்வாளர் அல்லர். ஊடகவியலாளர் என்ற தகைமையும் அனுபவமும் கொண்டவர். அதனால்தான் சிரமப்பட்டுக் கண்டவற்றை எல்லோரும் அறிந்து கொள்ளும் வரையில் தனக்கெட்டிய விபரங்களைப் பற்றி பகிரங்கமாக எழுதுகின்றார். அடங்காப்பற்று வன்னியின் வரலாறு பற்றிய ஆர்வமும் தமிழ் மொழி மீதும் அதனைப் பேசுவோர் மேலும் கொண்டுள்ள பாசமும் அவருக்கு உந்து சக்திகளாக அமைகின்றன. அவருடைய கட்டுரைகளில் வெளிப்படைத்தன்மை மேலோங்கி இருப்பதைக் காண்கின்றேன்.

அவரது சாதனைகள் அடங்காப்பற்று வன்னியிலே தமிழரின் ஆதிகால வரலாற்றை ஆழமாகவும் பரந்தளவிலும் ஆய்வு செய்வதற்கு அடித்தளம் அமைத்துள்ளன. அந்தக்காலத்துச் சமுதாய நிலைகள், வழிபாட்டு முறைகள், கட்டுமான முறைகள், நீர்த்தேக் கங்கள் என்பன பற்றிய ஆய்வுகளுக்கு அவை ஆதாரமாகின்றன. இதுவரை வேறெவரும் கண்டு, அடையாளப்படுத்த முடியாத பண்பாட்டு சின்னங்கள் பற்றிய விபரங்கள் பெரும் அளவிலானவற்றை அவர் வெளியிடுகின்றார். அவர் வெளியிடும் சின்னங்கள் காணப்படும் இடங்களும் பெருந்தொகையானவை. அவை அடங்காப்பற்று, வன்னியின் எல்லாப் பாகங்களிலும் உள்ளவை. அவை நிலத்துக்குள் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள். அவை மலைப்பாறைகளின் உச்சிப் பகுதிகள், மலைச்சாரல்கள், அடர்த்தியான காடுகள், வயல் நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், குளங்களின் அணைக்கட்டுகள், புராதன வழிபாட்டுத் தலங்கள், இன்றுவரை வழிபாடு நடைபெறும் தலங்கள் முதலானவற்றுள் அடங்கியுள்ளன.

ஆதி காலத்து நாக சிற்பங்கள் ஏராளமானவை. அவற்றுள் சில சிற்பங்களின் படங்கள் மட்டுமே இங்கு வெளியிடப்படுகின்றன. சைவ சமய சின்னங்களும் பௌத்த சமய சின்னங்களும் பெருந்தொகையானவை. அவற்றிலும் பெயர்கள் தமிழ் மொழியில்எழுதப்பட்டுள்ளன.

### பௌத்த மரபுகளுக்கு முன்னோடியாக நாகர்கள்.

கள ஆய்வுகள் மூலம் வன்னியிலே கண்டுபிடிக்கப்பட்ட புராதனமான பண்பாட்டுச் சின்னங்கள் நாகரோடு தொடர்புடையவை. மலைப்பாறைகளின் உச்சியில் வெட்டிய கேணிகளைச் சுற்றியும் தூண் தாங்கு கற்களிலும் வேறு பல பொருள்களிலும் நாகர்குல வேளிர்களின் பட்டப் பெயர்கள் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. கிழக்கிலங்கையி லும் யாழ்ப்பாணத்திலும் போல மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த நாகர்குல வேளிரின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. அடங்காப் பற்று - வன்னியிற் பல வேள்புலங்கள் இருந்தன. சில ஈமக் கல்லறைகளின் மூடிகள் போலத் தெரிகின்றன.

கிழக்கிலங்கைபோலவே அடங்காப் பற்று- வன்னியிலும் அரைவட்டக் கற்கள் கட்டடத்தின் நுழைவாயிலின் முன்பு வைக்கப்பட்டிருந்தன. அவற்றிலொன்று அத்திமாலை பெற்ற தனிச் சிறப்புடையது. அதைப்போன்ற வேறொரு வடிவம் இது வரை கிடைக்க வில்லை. நடுவிலே சிவலிங்க வடிவம் தெரிகின்றது. அதனை வழிபடுவதற்குச் செல்லும் கோலத்தில் இரு பக்கமும் யானைகளின் நிரைகள் காணப்படுகின்றன. வேறு பல அரைவட்டக் கற்கள் நாகர் அமைத்த கோயில்களின் வாயிற்புறப் படிக்கற்களாக அமைந்துள்ளன. அவை சிற்பங்களில்லாதவை. நாகரின் கட்டுமானங்களிற் காணப்படும் அரைவட்டக்கற்கள் பிற்காலத்துப் பௌத்த மரபிலுள்ள சந்திரவட்டக் கற்களுக்கு முன்னோடி யானவை. இதை எவரும் அறிந்து கொள்ளாமையால் இந்த நாள்களில் இந்துக் கோயில்கள் பல கடினமான கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளன.

### தவறான முன்னெடுப்புக்கள்


முன்னேஸ்வரத்தின் கோபுரத்தைப் புதிதாக நிர்மாணிப்பதற்கு நிலத்தை வெட்டிய பொழுது புராதனமான கோயிலுக்குரிய அரை வட்டக் கல் காணப்பட்டது. அது பௌத்த சின்னம் என்ற தவறான விளக்கத்தால் கட்டுமானவேலைகளை நிறுத்துமாறு கொழும்பிலுள்ள அதிகாரிகள் கட்டளையிட்டனர். இவ்வாறான அச்சுறுத்தல்கல் இனி மேலும் பல சைவக் கோயில்களுக்கு ஏற்படலாம்.

ஆதியான சைவக் கோயில்களின் ஒரு அம்சமான அரைவட்டக் கல் இன்றும் பல கோயில்களின் முகப்புகளில் உள்ளன. கோயில் முகாமையாளரும் வழிபடுவோரும் ஆராதனை செய்கின்ற அந்தணர்களும் இவற்றைப் பற்றிய வரலாறுகளைத் தெரிந்து உண்மைகளை எல்லோருக்கும் விளக்க வேண்டிய நெருக்கடியான காலமிது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தளவாசல் 3ஆவது இதழ்

எழுகலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் கலாண்டிதழான தளவாசல் பல்வேறு கனதியான படைப்புக்களுடன் பார்க்கக் கிடைத்துள்ளது. மறைந்த கவிஞர் மகாகவி அவர்கள் தொடர்பான 'கோதைப்பழம்' எனும் சிறப்புக் கட்டுரையுடன் ந.குகபரன், உடுவில் அரவிந்தன், த. அஜந்தகுமார், ஈ.பி.டொங்காலர், இ.குமணண், சி.சிவபாலன், விவேகானந்தனூர் சதீஸ், ம.சி. சந்திரபோஸ், நா.நவராஜ், சாந்தன், யதார்த்தன், ந. மயூரரூபன், த.சிவகுமாரன், ராதேயன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், தமிழினி சந்திரபோஸ், சந்திர வதனா, நாக. சிவசிதம்பரம், சு.க. சிந்துதாசன், கை.சரவணன், செ. விக்னேஸ்வரன், சுவைஞன் சுப்பிரமணியம், மகாகவி, தி. நடனசபாபதி சர்மா, த.சத்திய மூர்த்தி ஆகிய படைப்பாளிகளின் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எனப் பல அம்சங்கள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. நமது கலை இலக்கியச் சூழலில், எங்களது பண்பாட்டுச் சூழலை அடையாளப்படுத்தும் முக்கிய செயற்பாட்டில் தளவாசல் இதழ் ஈடுபட்டிருப்பது அவதானிக்கக் கூடியது.

ஈழத்துத் தமிழ்மக்களின் பழமைகளில் ஒன்றான புகையிலையை உண(ல)ர்த்தும் போறணை அட்டைப்படமும். அது தொடர்பான புகையும் பண்பாடு எனும் கட்டுரையும் மேற்குறித்த விடயங்களை உறுதி செய்கின்றன.



## சிவபூமி நிழல்

சிவபூமி முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு சிறப்புமலர் சிவபூமி நிழல் அண் மையில் வெளியிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள சூழலில் முதியோரைப் பராமரித்தல் என்பது கவனத்துக்குரிய ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளதை யாவரும் அறிவர். சில குடும்பங்கள் தங்கள் பெற்றோரை அல்லது மாமன், மாமியைத் தங்களுக்குச் சுமையாக நினைத்துப் புறந்தள்ளி ஒதுக்குவது அதிகரித்துவரும் சூழலில் சிவபூமி முதியோர் இல்லம் போன்ற இல்லங்களின் தேவையும் அவசியமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பலரது வாழ்த்துச் செய்திகள், அறிஞர்களின் கருத்துக்களுடன் வெளியாகியுள்ள இந்த மலரில் அனைத்துலக முதியோர் தினம், முதியோரைப் பேணல், இளைஞர்களின் கடமை போன்ற முக்கியமான கட்டுரைகளுடன் சிவபூமி முதியோர் இல்லம் தொடர்பான பூரண தகவல்களையும் கொண்டதாகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்ட முதியோர்களில் 52 முதியோர்கள் இறைவனடி சேர்ந்திருக்கிறார்கள் இவர்களில் கனிசமானோரின் அந்திமக் கடனை அவர்களின் பிள்ளையாக இருந்து சிவபூமி முதியோர் இல்ல ஆரம்ப கர்த்தாவாகவும் செயற்பாட்டுத் தலைவராகவும் உள்ள ஆறுதிருமுருகன் அவர்களே முன்னெடுத்துள்ளார் என்ற தகவல் மன நிறைவைத் தரும் ஒரு செய்தியாகும்.

# வாசகர்களுக்காகக் காத்திருக்கிறது யாழ்ப்பாணப் பொதுநூலகம்

ஜோதா

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமையை நினைவுகூர்ந்த சம்பவங்கள் பலவும் பத்திரிகைகள், ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் எங்கிலும் கடந்த மாத இறுதியில் பேசப்பட்டிருந்தன. யாழ்ப்பாண நூலகம் எதிர்கொண்ட அந்தத் துயரமும் கொடூரமும் ஒரு மறக்க முடியாத வரலாற்றுப் பதிவு ஆனாலும் தான் எதிர்கொண்ட அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்த அந்த நூலகம் இன்றைக்கு ஒருவாறாகத் தன்னைக் கட்டமைத்துவிட்டிருக்கின்றது. அதன் பழமை என்பதும் அதன் பெருமை என்பதுவும் மழுங்கடிக்கப்பட்டாலும் அது இன்றைக்கு ஒருவாறாகப் புதுப்பொலிவு பெற்றிருக்கின்றது.

**பழமை என்பதும் அதன் பெருமை என்பதுவும் மழுங்கடிக்கப்பட்டாலும் அது இன்றைக்கு ஒருவாறாகப் புதுப்பொலிவு பெற்றிருக்கின்றது. ஏராளம் நூல்களை நிறைத்திருக்கின்றது. ஆனாலும் ஏனோ அது தன்னில் வெறுமை இருப்பதாகவே உணர்கின்றது.**





ஏராளம் நூல்களை நிறைத்தி ருக்கின்றது. ஆனாலும் ஏனோ அது தன்னில் வெறுமை இருப்பதாகவே உணர்கின்றது.

அமைதியும் அடக்கமும் அதன் அடிப்படை என்றாலும், வகை தொகையாக நூல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகைகள் பலவற்றையும் அது தனக்குள் உள்ளீர்த்துக் கொண்டிருக்கின்றது.

சஞ்சிகைகள், இணைய வசதிகள் எனப் பலதரப்பட்ட தாராளங்கள் அதற்குள்ளிருந்தும்கூட இந்த வெறுமை எப்படிச் சாத்தியமாயிற்று...? அதை வெறுமை என்று சொல்வதைவிட வறுமை என்று சொல்லுவதே பொருத்தமானது. அதாவது வாசகர்களுக்கு நிலவும் வறுமை. மீளவும் கட்டியமைக்கப்பட்ட அந்த நூலகம் இப்போதும் தான் ஏராளம் வளங்களைக் கொண்டிருந்தாலும் அதற்கேற்ப வாசகர்களைக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

வரலாறு நிகழ்த்திச் சென்ற சோகத்துடன் இப்போது இந்த வாசகர்கள் பற்றாக்குறை எனும் வறுமையையும் எதிர்கொண்டிருக்கின்றது அந்த நூலகம். இதனாலேயே அது ஏராளம் புத்தகங்களைக் கொண்டிருந்தாலும் வெறுமையுடனிருப்பதாகத் தன்னை உணர்ந்துகொள்கின்றது.

யாழ்ப்பாணத் திரையரங்குகளையும், யாழ்ப்பாணக் கோட்டைச் சுற்றாடல் போன்று சோடி சேர்ந்து அமர்ந்து கொள்ளும் பகுதிகளையும், இடைக்கிடை வந்துபோகும் இந்திய இசை மேதைகளின் களியாட்டங்களையும் வெசாக் போன்று நடந்தேறும் தென்பகுதிக் கோலகலங்களையும் நிரப்பிக் கொள்ளும் இங்குள்ளவர்களுக்கு இந்த நூலகத்தின் பயனும் வாசிப்பின் அருமையும் எப்படித் தெரியவரும்...? வாசிப்பில் நாட்டமுள்ளவர்கள் வாள் ஏந்தத் துணிவார்களா...? கற்று நன்றாய்த் தெளிந்தவர்கள் கஞ்சாவைத் தான் நுகர்வார்களா...?

தொடர்ந்தும் தொடர்ந்துவரும் தலைமுறைக்காகக் காத்திருக்கின்றது அந்த நூலகம். அதன் வெறுமையை நிறைக்கும் வாசகர்களை எதிர்பார்த்தபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகிம்சை போராட்டத்தால் கிடைத்த வெற்றியின் முடிவு என்ன?

டிலீப். கணேசதாசன்
படங்கள் - சோபிதன்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஊடகங்களிலும் பொதுத் தளங்களிலும் அதிகம் உச்சரிக்கப்பட்ட பிலக்குடியிருப்பு இப்போது எப்படியிருக்கின்றது என்பதைக் காண்டறிவதற்கான பயணம் ஆரம்பமானது. வீதி ஓர வாய்க்காலுக்குள் அமைக்கப்பட்டிருந்த தகரக் கொட்டகைகள் இப்போது இல்லை. அந்த இடத்தில் சனப்புழக்கம் இல்லை. அருகில் வேப்ப மரத்தில் சமையல் கூடம் இல்லை. அமைதியாக, வெட்ட வெளியாக போராடிய களம் இருந்தது.

வான்படையினர் ஆக்கிரமித்து வைத்திருந்தபோது மூடப்பட்டிருந்த கதவுகள் இப்போது திறந்தேயிருக்கின்றன. விடுவிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற காணிக்குள் நுழையத் தொடங்கினோம். காற்று, மணலில் புழுதியை எழுப்பிக் கொண்டிருந்தது. எதிர்த்தே சென்று கொண்டிருந்தோம். எங்கள் கண்ணில் இடையிடையே நீல நிறத் தறப்பாள்கள் எத்துப்பட்டன. சில மனிதர்களும் தெரிந்தார்கள். அவை விரல்களின்எண்ணிக்கைக்குள்தான்அடக்கம்.

### வாட்டி எடுக்கின்றது வறுமையும் வெம்மையும்

100 மீற்றர்கள் தூரம்வரை சென்றிருப்போம். 60 ஐத் தாண்டிய ஒரு அம்மா. நாங்கள் சென்று கொண்டிருந்த வீதியை நோக்கி வந்தார். "நீங்கள் பேப்பர்காரர்தானே? போராட்டம் நடக்கேக்க வந்தனியள்" என்றார். எங்களை இன்னமும் அவர் ஞாபகம் வைத்திருந்தது ஆச்சரியமாக இருந்தது.

வந்தோரை வரவேற்பதில் வறுமையைக் காண்பிப்பதில்லை என்பதோ என்னவோ, காணி விடுவிப்புக்காகப் போராடிய காலத்தில் கொடுத்த பாயைக் கொண்டு வந்து புளியமரத்து நிழலில் போட்டார். "இருங்கோ தம்பியவை" என்று பாசமாகக் கேட்டுக் கொண்டார்.

பாயில் இருந்து கொண்டு அவருடைய வீட்டு வளவை கண்ணால் ஒரு சுற்றுச் சுற்றினேன். காணி மூலையில் அத்திவாரம் போடப்பட்டிருந்தது. "இடம் பெயர முந்தியோ அத்திவாரம் போட்டனீங்கள்" என்ற கேள்வியுடன் மரத்தடிப் பேச்சுத் தொடங்கியது.

"ஓ... 2006இல போட்டனாங்கள். அத்திவாரத்தோட விட்டுட்டுப் போனனாங்கள். அது அப்பிடியே இருக்குது" என்றார். காணிக்குள் கிணறு வெட்டப்பட்டு அதிலிருந்துதான் அத்திவாரத்துக்குத் தண்ணீர் எடுத்ததாகச் சொல்லிக் கிணற்றைக் காட்டினார். அது மூடியும் மூடாமலும் மூச்சிழுத்துக் கொண்டிருக்கின்றது. இடப்பெயர்வுக்கு முன்னர் தற்காலிக வீட்டில் இருந்ததையும் வீட்டுத் திட்டம் கிடைக்கப் பெற்று அத்திவாரம் போட்ட பின்னர் அங்கிருந்து வெளியேறியதாகவும் கூறினார்.

"நாங்கள் தொடர்ந்தும் இருந்திருந்தமெண்டா இத்தனைக்கும் வீட்டைக் கட்டி எழுப்பியிருப்பம்" என்று உறுதியாகச் சொன்னார்.

"நந்திக் கடல்ல தொழில் செய்தனாங்கள். இறால் பிடிப்பம். இப்ப ஒன்றும் இல்லை. நந்திக் கடலும் வத்திப் போச்சு. இறாலுமில்லை ஒண்டுமில்லை. இந்தக் காணிக்கை பயிருகள் வைச்சிருந்தம். தென்னை, தோடை, பலா எல்லாம் நிண்டது. அதெல்லாம் ஒட்டுமொத்தமாய் போய்ச் சேர்ந்துட்டுதுகள். நாங்கள் 2பேரும்தான் மிஞ்சியிருக்கிறம்" என்று நீண்ட பெருமூச்சுடன் சொல்லி முடித்தார்.

"காணி முதலாம் திகதி விட்டவங்கள். அண்டையில இருந்து இங்கதான் இருக்கிறன். ஆர்ப்பாட்டத்தில இருக்கேக்க தந்த தறப்பாள் துண்டைத்தான் போட்டிருக்கிறன். இந்தப் பத்தைகளுக்க திரிஞ்சு தகரத் துண்டுகள் பொறுக்கி இதை அடைச்சிருக்கிறன் (அவர்கள் வீடாக வாழும் குடிலைக் காட்டுகின்றார்) இந்த வெக்கேக்க இருக்கேலாது. அதுதான் மரத்தடியில குந்தியிருக்கிறம். போராட்டம் நடத்தேக்க, பகல்ல வெயிலுக்கையும் இரவு பனிக்கையும் இருந்தனாங்கள்தானே" என்று காணி கிடைத்த பின்னரும் மாறாத தனது வாழ்க்கைக் கோலத்தைச் சொல்லி முடித்தார்.

பீடிப் புகையுடன், நரைத்த தலை மயிரும், தாடியும் கறுத்த உடலுடனும் கணவர் திருச்செல்வம் வந்தார். நாங்கள் மரத்தடியில் பேசிக்கொண்டிருக்கும் போது, முன்பாக அமர்ந்திருந்து அவற்றைக் கேட்டுக் கொண்டு இருந்தார்.

"இங்கால கட்டைகள் வெட்டக் கூடியதாய் இருந்தா அதை வெட்டிக் கொட்டிலைப் போடுவன். இதுக்க வெட்டுறதுக்கு விடுறாங்கள் இல்லை" என்றார். தொழிலைப் பற்றிக் கேட்க அவரது பதிலும் தொழில் இப்போது கிடைப்பதில்லை என்பதாக இருந்தது. வறட்சியும் இதற்குக் காரணம். "இஞ்சால கச்சான் போட்டவை. தண்ணியில்ல அதுவும் அழிஞ்சு போட்டுது. எங்களுக்கு எப்படி கூலிவேலை வரும்?" என்று கேட்கின்றார்.







### அரச அதிகாரிகளின் அக்கறையின்மை

இடப்பெயர்வுக்கு முன்னரான வருமானம் பற்றிக் கேட்டதும் சுவாரசியமான நீண்ட பதில் வந்தது.

"நான் இதுக்குப் பின்னால இருந்த அவங்கட (தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்) பேசில சமையல் செய்தனான். அரை மயில்ல அவங்கட விமான ஓடுபாதை இருந்தது. அதோட இருந்த பேசிலதான் சமையல் வேலை" என்றார்.

ஆர்வமிகுதியால் "இப்போதும் அந்த ஓடுபாதை இருக்கோ, மரத்தில ஏறிப் பார்த்தாத் தெரியுமோ" என்று கேட்க, ஆமி இப்ப அதை வச்சிருக்கிறான்.



➡ 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யோ நான் என்ன செய்வேன்...
ஞாயிற்றுகிழமை முடியப் போகுதே...



வாரம் முழுக்க ``சன்டேயா'' இருக்கக் கூடாதா...

தலைக்கு மேலே பேனும்
தலைக்குக் கீழே போனும் இருந்தா




நிம்மதியாத் தூங்க முடியாது...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | | 7 | | | 8 | |
| 7 | 9 | 4 | | | | | | |
| 5 | 8 | 6 | | | 4 | 1 | | 7 |
| 1 | | 2 | | 6 | | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | | 7 | |
| 3 | | | | | 8 | 7 | | |
| | | | 5 | | | 8 | | 3 |
| 9 | | 8 | 4 | | | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 8 | 6 | 7 | 2 | 9 | 5 | 3 |
| 2 | 3 | 7 | 5 | 8 | 9 | 4 | 6 | 1 |
| 6 | 9 | 5 | 1 | 3 | 4 | 7 | 2 | 8 |
| 8 | 5 | 4 | 3 | 6 | 7 | 2 | 1 | 9 |
| 7 | 6 | 9 | 2 | 1 | 8 | 5 | 3 | 4 |
| 3 | 1 | 2 | 4 | 9 | 5 | 6 | 8 | 7 |
| 5 | 2 | 3 | 9 | 4 | 1 | 8 | 7 | 6 |
| 4 | 7 | 1 | 8 | 5 | 6 | 3 | 9 | 2 |
| 9 | 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியவிவி சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கி யது. 2005 இல்இது உலக அளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனைவரிடமும் அன்புடன் பழகு வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்பத்தி னரின்விருப்பம்அறிந்துநிறைவேற்றுவீர்கள். ஆன்மிக நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள்.

**மிதுனம்:** நேர்மையான குணத்துடன் செயல்படு வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தி ஆதாயம் காண்பீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** புதியவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரத் தாமதமாகும்.

**சிங்கம்:** உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரி மித வளர்ச்சி உண்டாகும். விருந்து உப சரிப்பில் கலந்து கொள்வீர்கள். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**கன்னி:** உழைப்புக்குரிய நற்பலன் உங்க ளைத் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**துலாம்:** மனதில் இருந்த குழப்பம் மறையும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் உயரும். மனைவியின் செயல்பாடு பெருமை சேர்க்கும்.

**விருச்சிகம்:** பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியா பாரத்தில் உழைப்புக்கேற்ப வளர்ச்சி உண்டா கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**தனுசு:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த் ததை விட லாபம் கூடும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உறவினருக்கு இயன்ற அளவில் உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் உண்டாகும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மாண வர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**கும்பம்:** நிதானத்துடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் லாபம் காண்பீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** அன்றாடப் பணிகளில் தாமதம் ஏற்பட லாம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறை வதால் வருமானம் கூடும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும்.

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.05.1962

மறைவு
10.06.2016

## அமரர் திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

(சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரியல் விஞ்ஞானத்துறை,
பிரயோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம், யாழ்பல்கலைக்கழகம்)

மறையும் சூரியனின் ஒளியை
நிலா ஏந்துவது போல - எம்
வாழ்வில் மறைந்தும் மறையாத
உன் நினைவுகளை ஏந்துகிறோம் - நாம்
அறியாத வேளையிலும்...
கம்பீரம் என்பது உங்களுக்கே உரித்தானது.!
உங்கள் ஒவ்வொரு வார்த்தையையும் நினைக்கும் பொழுது
எங்கள் இயலாமை இல்லாமல் போகிறது
வழிகாட்டியாய் எங்கள்
நினைவுகளில் என்றும் - நீங்கள்

உங்கள் வழிகாட்டலில் மலர்ந்த முத்துக்கள்
(V.V.Ramanathan & co (pvt) Ltd
காரியாலய உத்தியோகத்தர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It's all about DELIVERY!
Fast, Fresh and FAN TASTIC!
Pizza Hut
நாம் புதிதாக ஹிக்கடுவ, அம்பலாங்கொடை, மற்றும் யாழ் நகரில் திறக்கவுள்ள கிளைக்கு வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன.

CREW MEMBERS
FULL TIME (முழுநேரம்) (ஆண்/பெண்)



- அடிப்படை சம்பளம் ரூ. 13,600
- முழு சம்பளம் ரூ.20,000 - 25,000 இடைப்பட்ட
- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை போனஸ்
- சேவை கட்டணம் (Service Charge)
- வயது 18-28 இடைப்பட்டிருத்தல்
- மேலதிக நேர சேவை கொடுப்பனவு (Overtime)
- சேவை நேரங்களில் உணவு இலவசம்
- தெரிவு செய்யப்பட்ட கிளைகளுக்கு தங்குமிட வசதி (ஆண்களுக்கு மாத்திரம்)
- போக்குவரத்து வசதிகள்
- முன்அனுபவத்திற்கு விசேட சம்பளத் தொகை
- மாதத்திற்கு 8 நாள் விடுமுறை, நாள் ஒன்றுக்கு 9 1/2 மணிநேர சேவை
- சாதாரண சிங்கள மொழி அறிவு

DELIVERY RIDERS
Full Time (முழுநேரம்)

- அடிப்படை சம்பளம் ரூ. 13,600
- முழு சம்பளம் ரூ. 25,000 - 30,000
- வயது 22-38 இடைப்பட்டிருத்தல்
- EPF மற்றும் ETF வழங்கப்படும்
- நிருவனத்தினால் வழங்கப்படும் துவிச்சக்கர வண்டி (Bajaj CT100) மற்றும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி
- சேவை நேரங்களில் உணவு இலவசம்
- தெரிவு செய்யப்பட்ட கிளைகளுக்கு தங்குமிட வசதி
- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை போனஸ்
- சேவையை ஆரம்பிக்கும் நாள்முதல் ஒரு மில்லியன் ரூபாவிற்கான காப்புறுதி வழங்கப்படும்
- துவிச்சக்கர வண்டி ஓட்டுநர் உரிமம் இருத்தல் வேண்டும்
- மாதத்திற்கு 6 நாள் விடுமுறை, நாள் ஒன்றுக்கு 8 1/2 மணிநேர சேவை
- சாதாரண சிங்கள மொழி அறிவு




DELIVERY RIDERS க்கு பகுதி நேர (Part Time) வேலைவாய்ப்பு உள்ளது



அதுருகிரிய, அத்திடிய, அவிஸ்ஸாவளை, பொரலஸ்கமுவ, கோட்டை, ஹைவ்லொக், ஜா-எல, கடவத்தை, கடுவெல, கிரிபத்கொடை, கொட்டாஞ்சேனை, கொடிகாவத்தை, மஹரகம, மாலபே, நீர்கொழும்பு, பிலியந்தலை, ராஜகிரிய, தலவத்துக்கொடை, யூனியன் பிளேஸ், வத்தளை, வெலிசற மற்றும் வென்னப்புவ

குறைந்தபட்ச தகமை: க.பொ.த. சாதாரண தரம்வரை (O/L) கல்வி கற்றிருத்தல்

உங்களின் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், கல்வி, சேவை சான்றிதழ் மற்றும் வங்கி புத்தகத்தின் பிரதியுடன் திங்கள், செவ்வாய் மற்றம் புதன் நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 மணியளவில் கீழுள்ள முகவரிக்கு நேர்முக பரீட்சைக்காக வரவும்.

Part Time க்கு துவிச்சக்கர வண்டியுடன் வரவும

55/25, வொக்ஸ்ஹோல் ஒழுங்கை, கொழும்பு 02.
(இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பிரதான காரியாலயத்திற்கு பின்னால்)
jayakody@gamma.lk
0766 531 891 / 0766 833 096

(கோட்டையிலிருந்து 138 மஹரகம பஸ்சில் ஏறி நவலோக சந்தியில் இறங்கி கியூ வீதியிலுள்ள வொக்ஸ்ஹோல் ஒழுங்கையில் இறுதி முனைக்கு வரவும்)

# கோடைக் காலத்தில் சருமப் பராமரிப்பு



கோடைக்காலத்தில் சரும வறட்சி ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. அதைச் சரி செய்ய உணவு மட்டுமல்ல, பழக்க வழக்கங்களும் சரியாக இருக்க வேண்டும். அவகோடாவைத் தொடர்ந்து சாப்பிட்டுவர சருமம் பொலிவு பெறும். தோல் எரிச்சல், தோல் சிவந்து போவது, வறட்சி போன்ற சருமப் பிரச்னைகளைச் சரி செய்யும். அதிகமாக வியர்க்கும்போது அப்படியே விட்டுவிடக் கூடாது. சிறிது வியர்வை குறைந்தபிறகு அல்லது வியர்வையைத் துடைத்த பிறகு குளிப்பது நல்லது.

கற்றாழையில் உள்ள பசையை உடல் முழுவதும் தேய்த்து, சில நிமிடங்கள் கழித்துக் குளிக்கலாம். இது, அதீத வெயிலினால் ஏற்படும் தோல் கருமையை நீக்கி, புறஊதாக் கதிர்களின் தாக்கத்தைக் குறைக்கும். சருமத்தைப் பளபளப்பாக்கும். தண்ணீர் அதிகம் குடிப்பது, தினசரி மாதுளை, பீட்ரூட், கரட் போன்றவற்றைச் சாப்பிடுவதன் மூலம் சரும வறட்சியைத் தடுக்கலாம். அவகோடாவை அரைத்து முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்துக் கழுவ முகம் பளபளக்கும்.

## நாளை

**வைகாசி-22**
திங்கட்கிழமை –05.06.2017
திதி: ஏகாதசி பி.ப.12.26
நட்சத்திரம்: சித்திரை மு.இ.08.13
சுபநேரம்:11.52–01.22 வரை
ராகுகாலம்:07.22–08.52 வரை
ஏகாதசி விரதம்

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 1000 |
| நண்டு | 400 | 300 | 400 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 700 | 600 | – |
| சுறா | 800 | 700 | 800 | – |
| சீலா | 400 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 600 |
| முரல் | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 500 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 500 | 600 | – |
| ஓரா | 400 | 400 | 400 | 550 |
| திரளி | 250 | 300 | 200 | 200 |
| நகரை | 300 | 200 | 400 | – |
| சூடை | 200 | 150 | 300 | 200 |
| ஒட்டி | 250 | – | 400 | 500 |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 200 | 250 | 600 |
| கொய் | 150 | 80 | 120 | 80 |
| பாலை | 250 | 250 | 400 | 600 |
| வாழை | 100 | – | 250 | – |

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்



| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 50 | 80 |
| கத்தரி | 180 | 200 | 140 | 180 |
| கரட் | 200 | 280 | 160-280 | 300 |
| மரவள்ளி | 60 | 80 | 55 | 60 |
| பயிற்றை | 140 | 120 | 100 | 120 |
| பாகல் | 170 | 200 | 160 | 180 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 75 | 100 |
| சி.வெங்காயம் | 300 | 300 | 200-240 | 280 |
| பூசணி | 60 | 60 | 50 | 70 |
| தக்காளி | 160 | 160 | 110 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 35 | 40 |
| கீரை | 25 | 30 | 25-35 | 40 |
| [illegible] | 25 | 40 | 25 | 40 |
| பச்சை மிளகாய் | 400 | 400 | 350-400 | 450 |
| புடோல் | 120 | 100 | 50 | 100 |
| கோவா | 140 | 200 | 140 | 180 |
| வெண்டி | 120 | 120 | 60 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 45-60 | 50-60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 280 | 280 | 140 |
| இராசவள்ளி | 200 | - | | 300 |
| முருங்கைக்காய் | 160 | 100 | 60-80 | 50 |




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஞ்சதந்திரக் க(வி)தைகள்



வடையொன்றைத் திருடிய காகம் ஒன்று
வாயில் கவ்விக் கொண்டு மரக்
கிளையொன்றில் இருந்தது. வழியால் வந்த
நரியொன்று அதைக் கண்டு
வடையைப் பறித்துத் தின்றிடப் போட்டது
மனதினில் திட்டம் ஒன்று. விரைந்து
அடைந்து மரத்தை அண்ணாந்து பார்த்தது
அப்பாவி போல் நின்று

அத்தனை பறவையிலும் அழகுமிகக்
கொண்ட
அன்பிற் குரிய என் காகமே நீ
எத்தனை அழகாகப் பாடுவாய் அப்போது
எங்கேனும் பறந்தோடும் சோகமே
நித்தமும் நீயுந்தன் வாயினால் பாடுவது
முத்தான மோகன ராகமே என்
சித்தமும் குளிர்ந்திடச் சிந்தையும் மகிழ்ந்திடச்
சிறப்பாகப் பாடு ஒரு பாடலே

உயர்ச்சியாய் பேசிய நரியின் போலி
வார்த்தையில் மனம் நெகிழ்ந்து
புகழ்ச்சிக்கு மயங்கிய காகமும் தலைகால்
புரியாது நிலை குலைந்து

மகிழ்ச்சியால் தனது வாயினில் இருந்த
வடையினை மறந்து சும்மா
அலட்சிய மாகப் பாடிட எண்ணி
'கா' என வாய் திறந்தது

கத்திட வாயில் இருந்த வடையும்
கீழே விழுந்திடவே
காத்துக் கொண்டிருந்த நரியும் கவ்வித்
தின்றது மகிழ்வுடனே
காரியம் எதுவும் கைகூட வேண்டி
யாரும் புகழ்ந்திடவே அந்த
காகத்தைப் போலவே ஏமாந் திடுவார்
என்பர் பொதுப் படவே

**இது ஈழத்துக் காகம்...**
பெருமையாய் பேசிய நரியின் மனத்
திட்டமதைப் புரிந்து
இருகால் களாலும் வடையைப் பற்றி
அழகாய் வாய்திறந்து
அருமையாய் புகழ்ந்த அப்பாவி நண்பாநான்
இருக்கும் இடம் மறந்து
பெரும் திட்டம் தீட்டி வடையினைப் பறிக்க
வந்து விட்டாய் விரைந்து

இருப்பது நானிங்கு இலங்கையில் அதுவும்
ஈழத்தில் உரத்து இன்னும்
இருபத்து ஓராம் நூற்றாண் டென்று
தொனியினிலே உரைத்து உன்
பருப்பொன்றும் என்னிடம் வேகாது மகனே
போய்விடு இங்கிருந்து போய்
உருப்படியாக ஏதேனும் செய் என்று
போய்விட்டதே பறந்து காக்கை.

■ டே.த.எட்வின்

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 474

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | 12 | | ■ |
| ■ | 13 | 14 | | ■ | | ■ | 15 |
| 16 | | | ■ | 17 | | 18 | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | 22 | | ■ | 23 | 24 | | |
| 25 | | ■ | 26 | | | | ■ |

**அனுப்புபவர் பெயர்:**..............................................
**முழுமையான தபால் விலாசம்:** ..............................
..............................................................
**கையொப்பம்:**...................................................

- - - - - - - - - - - - - - - - - - - - -

**இடமிருந்து வலம்**

1. உத்தியோகத்தர் நிலை
4. செயற்கைக் கோள்
7. பாண்டவரின் தாய்
9. அணி
10. நினைவு நாள்
11. நாய், பூனை போன்றவற்றில் ஆண்
13. பிழிந்து எடுப்பது
16. தாய்
17. சளி பிடித்தல்
19. மனைவியின் சகோதரி கணவன்
20 . அதிக
21. தகுந்த நிலை
23. மூளை பிசகியவன்
25. வலிமை
26. நண்பகல் வேளை

**மேலிருந்து கீழ்**

1. ஒன்றின் பாகம்
2. உபாயம்
3. விதிக்கப்பட்டது
4. காது கேளாத தன்மை
5. காமன்
6. விளக்கில் எரிவது
8. உடம்பு
12. வாகனம்
14. சங்கங்களின் கூட்டமைப்பு
15. அரசன்
16. தலைவன்
17. சிரசில் எழுதப்பட்டது
18. மீன் சின்னம்
22. குளிர்மை
24. கழித்தல் குறி

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 472 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) நிர்வாகி (4) பண்பு (6) சராசரி (7) யாசகம் (9) காதம் (11)மையம் (12)நரம்பு (13)அகம் (14)அம்பலம் (16)நல் (17)கும் (18) சக (19)திரை (20)புத்திரன்

**மேலிருந்து கீழ்**
(1)நிலையாமை (2)வாசகம் (3) கிராம் (4)பரிகாரம் (5)புலம்புதல் (8)சயனம் (10)தம் (12)நகம் (13)அலம்பு (14)அந்தி (15)பகு (16)நகர(18)சதி
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 472 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
செ.சக்திவேல்,
குச்சம் வீதி,
வல்வெட்டித்துறை.

**2 ஆம் பரிசு**
மயில்வாகனம் செல்வராசா,
இல.6-8/AC வியாசர் வீதி,
தோணிக்கல், வவுனியா.

**3 ஆம் பரிசு**
ஜெ.மயூரிபா,
இல. 150, சிவபுரம்,
பரந்தன், கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
நா.நிசாந்தன்,
இல.46/3, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
கி.நாகரத்தினம்,
எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுத்துமட்டுவாள்.

**பாராட்டுப் பெறுவோர்**

N. செல்வராணி,
சிவன் வீதி,
காரைநகர் வடகிழக்கு,
காரைநகர்.

இ.லிங்கநாதன்,
"கோபால கிரி"
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

அமுதா விஜயன்,
திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.

சொற்சிலம்பம் போட்டி இல.474 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (14.06.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.474இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 18.06.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 472 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தவாரம் உங்களுக்கு எப்படி?

**04.06.2017 தொடக்கம் 10.06.2017 வரை**

## மேடம்

சுக்கிரன், கேது நற்பலன் தரக் காத்திருக்கின்றனர். தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். உடன்பிறந்தவருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது. புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற உதவுவீர்கள். ஒவ்வாத உணவை தவிர்ப்பது அவசியம். மனைவி உங்களின் மீது மிகுந்த நம்பிக்கை கொள்வார். தொழில், வியாபார வளர்ச்சிக்கான சூழ்நிலை உருவாகும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்தவும். பெண்கள் செலவு செய்வதில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர் மாணவர்கள், நண்பர்களின் உதவியுடன் படிப்பில் முன்னேறுவர்.

## இடபம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். மற்றவரிடம் அதிருப்தியாகப் பேச வேண்டாம். தம்பி, தங்கையர் மூலம் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். சிலர் மனதில் வீடு, வாகனம் மாற்றுகின்ற எண்ணம் ஏற்படலாம். புத்திரர் சாதுர்யமாகச் செயற்பட்டு முன்னேறுவர். பகைவரால் உருவான கெடுசெயல் பலம் இழக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும். வெளியூர்ப் பயணங்களைப் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் பணவரவு சீராகும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் குடும்ப நலன் பற்றிக் கணவரிடம் ஆலோசிப்பர். மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கான சூழ்நிலை அமையப் பெறுவர்.

## கடகம்

சூரியன், புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். நீண்ட நாள் கவலை நீங்கும். பணிகள் குறித்த காலத்தில் நிறைவேறும். தம்பி, தங்கை வாழ்வு வளம் பெற உதவுவீர்கள். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தரக் கேட்டு பிடிவாதம் செய்வர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். உடல் ஆரோக்கியம் பெற மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வார். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள் சலுகையை கேட்பதில் பொறுமை தேவை. பெண்கள் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவர். மாணவர்களுக்குப் படிப்பில் அதிக தரத்தேர்ச்சி கிடைக்கும்.

## மிதுனம்

ராகு, சனீஸ்வரர் அனுகூலமாக அமர்ந்துள்ளனர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாமதித்த செயல்களில் நல்ல முடிவு கிடைக்கும். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர், பெற்றோரின் சொல் கேட்டு நடப்பர். அதிக நாள் இருந்த பிரச்சினையின் தீவிரம் குறையும். மனைவியின் செயலில் குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் ஓரளவு இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிறருக்காகப் பணப் பொறுப்பினை ஏற்பது கூடாது. மாணவர்கள் படிப்பில் முன்னேற விடாமுயற்சி தேவைப்படும்.

## சிங்கம்

பெரும்பான்மையான கிரகங்கள் அளப்பரிய நற்பலன்களை தர உள்ளனர். கடினமான செயல்கள் எளிதாக நிறைவேறும். வாழ்வில் அதிர்ஷ்டகரமான நன்மைகள் கிடைக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். புத்திரர் உங்கள் சொல்லுக்கு மதிப்பு அளிப்பர். எதிர்ப்பாளர்களிடம் இருந்து புத்திசாலித்தனமாக விலகுவீர்கள். மனைவியின் அதிக அன்பு, பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். வீட்டுத்தேவை அனைத்தும் தாராள செலவில் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். லாபம் பன்மடங்கு உயரும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

## கன்னி

சனீஸ்வரர், கேது அதிக நன்மை தருவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீட்டில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர், பெற்றோரின் அன்பைப் பெற்று மகிழ்வர். வழக்கு, விவகாரத்தில் நல்ல தீர்வு கிடைக்கும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அரசு வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் குறையாது. பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு. மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்

## துலாம்

ராகு, புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். புதியவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். முக்கியமான பணி எளிதில் நிறைவேறும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி பிடிவாத குணத்துடன் நடந்து கொள்வார். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு கூடும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியில் ஈடுபடுவர். பெண்கள் யாரிடமும் நகை, பணம் இரவல் வாங்க கூடாது. மாணவர்கள் படிப்புத் தவிர்ந்த ஏனைய கருமங்களில் ஈடுபட வேண்டாம்.

## தனுசு

சூரியன், புதன், சுக்கிரன், கேது நற்பலன் தருவர். பொது இடங்களில் சூழல் உணர்ந்து பேசுவது நல்லது. சகோதரரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப்பயணம் இனிய அனுபவம் தரும். இஷ்டதெய்வ அருள் பலம் துணை நிற்கும். புத்திரர், நற்செயல்களால் பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர். கடன் தொல்லை, நோய் தொந்தரவு குறையும். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பால் ஆதாயம் காண்பர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன். சந்திரன் அனுகூலமாக உள்ளனர். கடந்த கால நற்செயலுக்கு புகழும், நன்மையும் தேடி வரும். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். புத்திரரின் செயலால் நன்மை காண்பீர்கள். கூடுதல் சொத்து வாங்க யோகமுண்டு. குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை உடனுக்குடன் சரி செய்வது நல்லது. பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் பின்பற்று வது அவசியம். பெண்கள், கணவரின் அன்பை பெற்று மகிழ்வர். மாணவர்கள் படிப்புடன், விளையாட்டிலும் ஈடுபடுவர்.

## மகரம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர் அதிர்ஷ்ட பலன் தருவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனம், செயலில் புத்துணர்வு மேலோங்கும். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது. புத்திரர் உங்களிடம் அதிக அன்பு காட்டுவர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும். மனைவி குடும்பநலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் லாபம் பல மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் நவீன தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்களுக்கு, தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று பரிசு, பாராட்டு பெறுவர்.

## மீனம்

சூரியன், சுக்கிரன், குரு, ராகு ஆகியோர் வியத்தகு அளவில் நன்மை வழங்குவர். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட செயல்களைச் சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். வாகனப்பயணம் திருப்தியளிக்கும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் மேம்படுவர். பூர்வீகச் சொத்து மூலம் கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சிறந்த தீர்வு கிடைக்கும். மனைவியின் செயற்பாடு பெருமை சேர்க்கும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை செலுத்துவர். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

## கும்பம்


புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். சுய பெருமை பேச வேண்டாம். குடும்பத்தினரின் ஆதரவு மனதிற்கு ஊக்கம் அளிக்கும். வாகனப் பயணத்தால் நன்மை உண்டாகும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். உடல்நலத்திற்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம். மனைவியால் குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை [illegible] பெண்கள் யாரிடமும் பணம், நகை இரவல் [illegible]. மாணவர்கள் படிப்பில் முன் [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார்க்கெடுத்துரைப்பேன்...

■ உளறி

“ஹலோ...யாழ்ப்பாணத்திலயிருந்து நான்தான் கதைக்கிறன்... நான் மட்டும் தான்... உங்கட ஊரில வெயில் எப்பிடி...?
இஞ்சத்தேய உள்ளூர் அமைச்சர் ஒருத்தர் சொல்லியிருக்கிறார் இன்னுங் கொஞ்சக் காலத்தில யாழ்ப்பாணம் பாலைவனமா மாறீருமாம். அவர் கொழும்பில இருக்கிறவர். அங்க உவ்வளவு மழை அடிச்சும் அந்தாளுக்கு எங்கட மண்ணிலதான் பிடிப்பு.... எண்டு...
அவசரப்பட்டுடதேயுங்கோ. சாட்டோட அவர் இப்பிடியும் அடிச்சுவிட்டிருக்கிறார். சுயநிர்ணய உரிமைப் போரட்டங்களைத் தவிர்த்து யாழ்ப்பாணத்த வறட்சியில இருந்து காப்பாற்றிக்கொள்ள எல்லோரும் ஒன்றிணைய வேணுமாம். இவர் நகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க. இவர் இஞ்ச இப்பிடிச் சொல்ல அங்க உந்தப் பெரிய 'பிஸ்னஸ் மான்' என்ன செய்திருக்கிறார் எண்டா...அணலடிக்கிற வெம்மையக் குறைக்கிற அந்தப் புண்ணிய காரியத்தில இருந்து பின்வாங்கியிருக்கிறார்”
ஊருலகப் புதினங்கள் இப்படியிருக்க, கடந்த மாதங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்திருக்கின்றது. வறட்சி தலைவிரித்தாடுகின்றது.
இதற்கு மழைவீழ்ச்சி குறைவே காரணம் எனினும் அது உட்பட எல்லாவற்றுக்குமே மூலகாரணம் மனிதரே. ஆனால் அதை எவரும் இன்னும் உணரவில்லை.
இங்கே, இப்போது வெயில் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றது. நிலங்களில் நீர் வற்றிப்போய் வறட்சியும் வெம்மையும் அதிகரித்துவிட்டன. நம் அனைவராலும் குளிரூட்டிகளின் கீழ் இருக்கமுடியுமா? அப்படி இருந்தாலும் எவ்வளவு காலங்களுக்குத்தான் அது சாத்தியம்?
“என்ன வெயிலடா சாமி...” என்று அரிதாகிவிட்ட ஒன்றிரண்டு மர நிழல்களைத்தேடி ஓடி, ஒதுங்கியும்கூட உங்கள் மந்தபுத்திக்கு அறிவு வரவில்லை என்றால் யார்தான் என்ன செய்யமுடியும்...?
சரி எங்கடை ஆக்களுக்குத்தான் அறிவு இப்பிடியிருக்கு தெண்டால் உந்த வெள்ளக்காரனுக்கு என்ன நடந்தது...?”
இதுவும் நியாயமான கேள்விதான். ஏன் இதை நான் மட்டும் கேட்கேல்லை. அவர் செய்த வேலையால அமெரிக்காவில இருக்கிற அவர் தவிர்ந்த எல்லாருமே அவரைத் திட்டித் தீர்த்துக் கொண்டுதான் இருக்குதுகளாம்.
“ட்ரம்ப் செய்தது வரலாற்றுத் தவறு எங்களின்ர பேரப்பிள்ளைகள் இப்பிடித் திட்டிக் கொண்டு இருக்கமாட்டுதுகள்” எண்டு அவை கடுப்பாகிப்போய் இருக்கினமாம். அமெரிக்கா அதிபர் ஏன்தான் உப்பிடிப் பொறுப்பில்லாமல் உந்தப் பரீஸ் ஒப்பந்தத்தில இருந்து வெளியேறினாரோ... எண்டு நீங்கள் ஒருத்தரும் யோசிக்கத் தேவையில்லை. அவர் ஒரு பிசினஸ்மான். காச அதிக அதிகமாகச் சேர்த்து வைக்கிறதும் ஆடம்பரமாக இருக்கிறதும் அவரின்ர இயல்பு. அந்தாளக் கொண்டுவந்து உந்தக் கதிரையில இருத்தினது ஆரின்ரவேலை...?”
“அணலடிக்கிற உந்த வெயிலால இப்ப உடனடியா அந்தாளுக்கோ அங்கத்தேய ஆக்களுக்கோ பாதிப்பில்ல. மத்திய கோட்டுக்குக் கிட்டவா இருக்கிற எங்களுக்குத்தான் உடனடிப் பிரச்சினை வந்திருக்குது. இனிக் கொஞ்சம் கொஞ்சமாத்தான் அவைக்கு உது போகும். பனிக்கட்டிகள் இப்பத்தானே கொஞ்சம் கொஞ்சமா உருக ஆரம்பிச்சிருக்குது...”
“கிட்டடியில கனடாப் பக்கமா கடலுக்குள்ள பெரிய பனிமலையொண்டு உடைஞ்சு வந்து கரைஞ்சு முடிஞ்சிருக்கு... பிறகு இப்ப என்னடா எண்டால், அந்தாட்டிக்காவில ஒரு இடத்தில ஐயாயிரம் சதுர பரப்பில ஒரு 'பனி நாடு' உடைஞ்சு கடலோட கலக்கிறதுக்குக் காத்துக்கொண்டிருக்காம்.
இப்பதானே தொடங்குது அமளியெல்லாம். இன்னுங்கொஞ்சக் காலத்தில அவையும் தத்தளிக்கத் தான் போயினம் பாருங்கோவன். பனிப்பாறைகள் எல்லாம் கரைஞ்சு கடலோட தண்ணியாகிக் கடல்மட்டம்கூட, நிலம் குறைய, வெயில் கூட, மரம்தடி, கொடிகள் குறைய இனிச் சோக்காத்தான் இருக்கப்போகுது எல்லாற்ற பாடும்... உதுகளைப் போய் இன்னும் கொஞ்சம் விளக்கமாச் சொன்னாக் கூட ஆருக்காவது மண்டையிலஏறுமோ...? ■



“ சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களைத் தவிர்த்து யாழ்ப்பாணத்த வறட்சியில இருந்து காப்பாற்றிக் கொள்ள எல்லோரும் ஒன்றிணைய வேணுமாம். இவர் நகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க. இவர் இஞ்ச இப்பிடிச் சொல்ல அங்க உந்தப் பெரிய 'பிஸ்னஸ்மான்' என்ன செய்திருக்கிறார் எண்டா... அணலடிக்கிற வெம்மையக் குறைக்கிற அந்தப் புண்ணிய காரியத்தில இருந்து பின் வாங்கியிருக்கிறார்





---


# அகிம்சைப் போராட்டத்தால்.....

(40ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரத்தில ஏறிப் பார்த்தாலும் தெரியாது. அவங்கள் முந்தி வைச்சிருக்கேக்க, சமான் (வானூர்தி) எழும்பேக்க பெரிய சத்தம் வரும். ஆனா சமான் அலுவல் முடிச்சுட்டு திரும்பி வரேக்கே ஒருத்தருக்கும் தெரியாது' என்று பழைய நினைவுகளை மீட்டினார்.
“இந்த வளவுக்க நாங்க வைச்ச தென்னம் பிள்ளைகளை, இவங்கள் கிளப்பி ரோட்டில வடிவுக்கு வைச்சிருக்கிறாங்கள்” என்று தங்களின் வாழ்வாதாரம் வேரறுக்கப்பட்டதை வேதனையுடன் சொன்னார். “அவங்கள் இருக்கேக்க, உடும்பு, பண்டி பிடிக்கலாம். இறைச்சி விக்கலாம். காசு கையில பாக்கலாம். இப்ப அதைப் பிடிச்சா, இதைப் பிடிச்சா தண்டம் என்று எங்கட கையில இருக்கிற காசையுமில்லே பிடுங்கிறாங்கள்” என்று கடிந்து கொண்டார்.
“உதவி ஏதாவது கிடைத்ததா...?” என்று கேட்டதில் வந்தது சிக்கலான பதில் ஒன்று. “ஒரு அரச உதவியும் வரேல்ல. விட்ட தொடக்கத்தில ஜி.எஸ். வந்தவர். அதுக்குப் பிறகு இதுக்க வரேல்ல. ஜி.எஸ். வந்த அண்டு இங்க ஒரு கலாட்டாவாப் போச்சுது. அதுக்குப் பிறகு ஜி.எஸ். ஒருத்தரும் வர்ரேல்ல. ஏனெண்டும் எங்களை எட்டிப் பாக்கிறேல்ல” என்றார்.

**காணி விடுவித்தலுடன் கைவிட்டுவிட்ட அரசு**

காணி விடுவிப்புக்கான போராட்டக் களத்தில் ஒன்றாக, கூட்டாக இருந்த மக்கள் இப்போது சிதறுண்டு போயிருக்கிறார்கள். 54 குடும்பங்கள் காணி விடுவிப்புக்கான போராட்டத்தில் இருந்தார்கள். தங்களது முழுக் காணிகளையும் விடுவிப்பதற்காக உறுதியுடன் போராடினார்கள். இவர்களது தொடர் போராட்டத்தைக் கண்டு வியக்காதவர்களே இல்லை. தமிழர் தாயகத்தில் ஆயுத மௌனிப்புக்கு பின்னர் புதியதொரு போராட்ட வடிவத்துக்கு அத்திபாரம் இட்டவர்களே இவர்கள்தான் என்று மெச்சாதவர்கள் இல்லை. தொடர் போராட்டத்தின் ஒவ்வொரு நாள்களும் கடக்கையில் ஆதரவுகள் பல்கிப் பெருகியதே தவிர குறையவில்லை.
ஆனால் காணிக்குள் காலடி வைத்ததும் நிலமைகள் மாறி விட்டன. போராடிய 54 குடும்பங்களில் 17 குடும்பங்கள்தான் காணிக்குள் கொட்டில்கள் போட்டிருக்கிறார்கள். எஞ்சியோர் மாதிரிக் கிராமத்திலிருந்து இங்கே வந்து குடியமரவில்லை. அவர்கள் இவ்விடத்தில் நிலைகொண்டு வாழ்வதற்குரிய வாழ்வாதார வசதிகள் எவையும் அது சார்ந்தவர்களால் அங்கு செய்து கொடுக்கப்படவில்லை.
மக்களுக்கு வாழ்வாதாரம் இல்லை. உதவிகளும் இல்லை. நெருப்பாக எரியும் வாழ்க்கைச் சுமையைச் சுமப்பதற்கு அவர்களால் முடியவுமில்லை. யாராவது கை கொடுக்க மாட்டார்களா என்று அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.
மக்களை ஒன்றுபடுத்துவதும், அந்தக் காணிக்குள் அவர்களை குடியமர்த்துவதும் இப்போது எழுந்திருக்கும் சவால். இதை அரசு செய்யும் என்று பந்தை அந்தப் பக்கம் எறிந்து ஒதுங்கி விடாமல் இப்போது யார் இதைச் செய்யப் போகிறார்கள் என்பதே கேள்வி. அகிம்சை ரீதியில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற போராட்டத்தின் முழுமையான பலாபலனையும் மக்கள் அனுபவிப்பார்களா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!

எம்.ஐ.முபாறக்

## பெற்றோலின்றி வெள்ளத்தில் தத்தளித்த எம்.பிக்கள்

தெற்கில் ஏற்பட்ட கடும் மழையுடன் கூடிய பெரு வெள்ளம் மக்களை மாத்திரமன்றி அவர்களுக்கு உதவி செய்வதற்குச் சென்றவர்களையும் அசௌகரியத்துக்கும் ஆபத்துக்கும் தள்ளியது.

குறிப்பாகக் களத்தில் நின்று மக்களுக்கு உதவிய பல அரசியல்வாதிகள் சரியானமுறையில் செயலாற்ற முடியாமல் அவதிப்பட்ட - இடையூறுகள் விளைவிக்கப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றன. மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் இவ்வாறாகச் சேவை செய்த ஜே.வி.பியின் எம்.பி சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட எம்.பி பந்துலால் பண்டாரிகொடா ஆகியோர் ஒரே மாதிரியான பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

காலி - மாபலகம எனும் ஊரில் இருந்து பந்துலால் பண்டாரிகொட அமைச்சருக்கு மக்கள் தொலைபேசி அழைப்பு எடுத்தனர். அந்த ஊருக்கு நிவாரணப் பணியாளர்கள் யாரும் வராததால் தாம் சாப்பிட வழி இல்லாமல் அவதிப்படுவதாகக் கூறினர்.

உடனே அந்த இடத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டு போவதற்குத் தாயாரானார் பந்துலால். 1500 சாப்பாட்டுப் பார்சல்களைத் தயார்ப்படுத்தினார். செல்வதற்குத் தயாரானார்.

வீதி எங்கும் வெள்ளம்.படகில் மாத்திரமே செல்ல முடியும். கடற்படையினருடன் பேசிப் படகு ஒன்றைப் பெற்றுக்கொண்டு கின் கங்கை வழியாக மாபலகம போகத் தயாரானபோது படகில் பெற்றோல் தீர்ந்துபோய் இருந்தது அப்போதுதான் அவருக்குத் தெரிய வந்தது.

நாகொட பிரதேச சபையில் படகுகளுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படுவதை அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு 10லீற்றர் பெற்றோல் தருமாறு கேட்டார் அமைச்சர். ஆனால், அமைச்சர் கொண்டு சென்ற அந்தப் படகு அந்தப் பிரதேச சபையில் பதியப்படவில்லை என்றொரு காரணத்தைக் கூறி அவருக்கு பெற்றோல் கொடுப்பதற்கு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

உடனே அங்கிருந்து 18கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள எரி பொருள் நிரப்பு நிலையத்துக்கு இருவரை மோட்டார் சைக்கிளில் அனுப்பி பெற்றோலைப் பெற்றுக்கொண்டார். பெற்றோலை நிரப்பிக் கொண்டு மாபலகம எனும் இடத்தை அடையும் போது பிற்பகல் 3.30 ஆகி இருந்தது.பசியோடு இருந்த மக்கள் பார்சல்களை பெற்று அந்த இடத்திலேயே அவதிப்பட்டுச் சாப்பிடத் தொடங்கினர்.

இவ்வாறு பல இன்னல்களை அனுபவித்துத்தான் சில எம்பிக்கள் மக்களுக்கான சேவையில் ஈடுபட்டனர்.ஆனால்,அரச அதிகாரிகளோ ஏ.சி அறைகளுக் குள் இருந்துக்கொண்டு சட்டம் பேசிக்கொண்டிருந்துள்ளார்.





## அமைச்சருக்கு ஏன் இந்தப் பொறாமை?

மக்களுக்குச் சேவை செய்கின்ற விடயத்தில் சில அரசியல்வாதிகள் மக்களோடு மக்களாக இணைந்து களத்தில் நின்று செயலாற்றுவர். சிலர் சட்டையில் அழுக்குப் படாமல் ஏ.சி அறைக்குள் இருந்து கொண்டு உத்தரவை மாத்திரம் பிறப்பிப்பர்.

களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பாலித தேவரப்பெரும முதலாம் ரகத்தைச் சேந்தவர். மக்களுக்கு ஏதும் என்றால் உடனே களத்தில் நிற்பார்.

அழுத்கமவில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தின்போது துணிந்து நின்று முஸ்லிம்களைக் காப்பாற்றியது மாத்திரமன்றி அதற்காகப் பேரினவாதிகளின் தாக்குதலுக்கும் உள்ளானார்.

அந்த மாவட்டத்தில் முன்பு ஒரு தடவை வெள்ளம் ஏற்பட்டபோது அவர் களத்தில் நின்று சேவை செய்தது மாத்திரமன்றி வெள்ளம் வழிந்தோடிய பிறகு பல வீடுகளைத் தன் கைகளினாலேயே கழுவிச் சுத்தம் செய்தும் கொடுத்தார்.

இந்தத் தடவை ஏற்பட்ட வெள்ளத்தின்போது முன்பைவிடவும் வேகமாக அவர் செயற்பட்டார். உணவுப் பொருள்களை தண்ணீர்ப் போத்தல்களை அவர் சுமந்து சென்று மக்களிடம் கொடுக்கும் காட்சியும் உயிரிழந்த உடல்களை சுமந்து செல்லும் காட்சியும் ஊடகங்களில் வெளியாகி அவரை ஒரு ஹீரோவாக ஆக்கின.

ஆனால்,ஏ.சி அறைகளில் இருந்து உத்தரவை மாத்திரம் இடும் அந்த இரண்டாம் ரக அரசியல்வாதிகளுக்கு இவரது செயல் பொறாமையை ஏற்படுத்தியது. தேவரப்பெருமவின் செயலை வெளிப்படையாகவே விமர்ச்சிக்கத் தொடங்கினர்.

அவ்வாறானவர்களுள் ஒருவர் தான் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ. இடர் ஏற்பட்டதன் பின் சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டுபொருட்களை சுமந்து திரிந்து சேவை செய்வது அர்த்தமற்றது. இவ்வாறான இடர்கள் வருவதற்கு முன் மக்களைக் காப்பாற்றும் வகையில் திட்டம் வகுத்து சேவையாற்றுவதுதான் பொருத்தமான சேவையாகும் என்று கூறியுள்ளார்.

தேவரப்பெருமவின் அந்த அர்ப்பணிப்பைக் கொஞ்சம்கூடப் பாராட்டாமல்தனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்று கூடப் பார்க்காமல் இவ்வாறு விமர்ச்சிக்கும் அளவுக்கு அமைச்சருக்கு எவ்வளவு தூரம் வயிறு பற்றி எரிகின்றது என்று பாருங்கள்.

## அனுரவிடம் 400 ஊழல் மோசடிப் 'பைல்'கள்

ஊழல், மோசடிகள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் ஜே.வி.பியின் கண்களில் இருந்து தப்ப முடியாது. எல்லா மோசடிகள் சம்பந்தமான தகவல்களும் அவர்களிடம் உண்டு. அவர்கள் மகிந்தவின் ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்தப் போய்த்தான் மகிந்த அரசே கவிழ்ந்து என்பதை எவராலும் மறுக்க முடியாது.

அவர்கள் அவ்வாறு அம்பலப்படுத்தியது கொஞ்சம் தானாம். இன்னும் அம்பலப்படுத்துவதற்கு ஏராளம் மோசடிகள் உள்ளனவாம். இரண்டு அரசுகளின் மோசடிகள் சம்பந்தமாகவும் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் கைகளில் 400இற்கு மேற்பட்ட 'பைல்கள்' உள்ளனவாம். அது மாத்திரமன்றி மகிந்த அரசில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளை மூடி மறைப்பதற்காக இந்த அரசுக்கும் மகிந்த தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விவரங்களும் அவரின் கையில் உள்ளனவாம். அப்படியானால் இந்த அரசுக்கும் ஆப்பு வைக்கப்போவது ஜே.வி.பியினர்தான்போல.

## தேவையா? இந்த 'பில்ட் அப்'

நாட்டில் ஏற்பட்ட வெள்ள இடரின் போது இன, மத பேதங்களைக் கடந்து மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றியதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆனால், சில அரசியல்வாதிகள் அந்தத் துன்பகரமான நிகழ்வின்போதுகூட தங்களின் அரசியல் செல்வாக்கை அதிகரிக்கும் கீழ்த்தரமான வேலைகளைச் செய்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.


தாங்கள் களத்தில் நின்று பணியாற்றுகிறோம் என்று மக்கள் சொல்ல வேண்டும், அதனூடாகத் தங்களது அரசியல் செல்வாக்கு அதிகரிக்க வேண்டும் என்பதற்காக 'ஓவர் பில்ட் அப்' கொடுத்து மாட்டிக்கொண்ட அரசியல் வாதிகளும் உள்ளனர்.

நிவாரணப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அந்த அரசியல்வாதி ஊடகங்களின் கமராவைக் கண்டதும் நகைச்சுவை நடிகர் வடிவேலுபோல் ஆகிவிட்டார்.

ஒரு அடிக்கும் குறைவான நீரில் நடந்து வந்துகொண்டிருந்தார் அந்த மூதாட்டி. நடப்பதற்கு எந்தச் சிரமமும் அவருக்கு இருக்கவில்லை. கமராவைக் கண்டதுதான் தாமதம்.உடனே அந்த மூதாட்டியைத் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினார் அந்த அரசியல்வாதி.

அந்த பில்ட்அப்பை அறிந்த அந்த ஊடகவியலாளர் சிரிப்பை அடக்கிக் கொண்டு படமெடுத்தார். இதை அறிந்திராத அந்த அரசியல்வாதி பாட்டியைப் பக்குவமாகத் தூக்கிக் கொண்டு கம்பீரத்துடன் நடந்து சென்றார்.

## பிழைக்கத் தெரிந்த பிறவி




எமது நாட்டில் காற்றடிக்கின்ற பக்கம் சாய்கின்ற அரசியல்வாதிகள் நிறையப் பேர் உள்ளனர். ஒரு தோணியில் பயணித்தாலும் அவர்களின் மற்றைய காலை இன்னொரு தோணியில் போட்டவாறுதான் பயணிப்பார்கள். அப்படியான ஒருவரா வட மத்திய மாகாண முதலமைச்சர் பேச்சல ஜயரத்ன...? என்று இப்போது சந்தேகம் எழுகின்றது..

அந்த மாகாண சபையின் ஆட்சி மகிந்த தரப்பிடம் இருந்தபோது மகிந்தவின் விசுவாசியாக இருந்தார். பின்னர் மைத்திரி விசுவாசியாக மாறினார்.

முதலமைச்சராகவும் ஆனார். அதைத் தொடர்ந்து மகிந்த அணியிலிருந்து மேலும் மூவரை மைத்திரிபக்கம் வளைத்துப்போட்டு அமைச்சர்களாக ஆக்குவ தற்குப் பின்னணியாக நின்று செயற்பட்டார்.

இருந்தும்,அவரது வீட்டுச் சுவரில் இப்போதும் மகிந்த வின் ஒளிப்படம்தான் தொங்குகிறதாம்.

தான் மகிந்தவை எதிர்க்கவில்லை என்று கூறி 'டபிள் கேம்' ஆடுகின்றார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறு கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் எகிறியுள்ள எதிர்பார்ப்பு

மினிஉலகக்கிண்ணத்தொடரில்இன்றுநடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இந்தத் தொடரின் அதி முக்கித்துவம் வாய்ந்த ஆட்டமாக இன்றைய ஆட்டம் அமைந்துள்ளது. எதிர்பார்ப்புக்கள் மிகப்பெரும்அளவில்ஏற்பட்டுள்ளஆட்டமாகவும்இந்த ஆட்டம் பதிவாகியுள்ளது.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரதரப்புத் தொடர் கைவிடப்பட்டுள்ளது. நேரடித்தொடர்களில்இருஅணிகளும் விளையாடுவதில்லையாயினும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களான, உலகக்கிண்ணம், ரி-20உலகக்கிண்ணம், மினிஉலகக் கிண்ணம், ஆசியக்கிண்ணம்உள்ளிட்டதொடர்களில் விளையாடுகின்றன. இதனால் வருடத்தில் ஓரிரு முறை மட்டுமே இந்த இரு அணிகளும் கடந்த சில வருடங்களாக மோதுகின்றன. இந்த வருடத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் முதல் சந்தர்ப்பமாக இன்றைய நாள் பதிவாகியுள்ளது. அனேகமாக நடப்புவருடத்தில்ஆசியாவின்பரமஎதிரிகள்சந்திக்கும் இறுதி நாளும் இதுவாகவே அமைந்துவிட வாய்ப்புக்கள் அதிகம்.

கடந்த வருடம் நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் இந்தியா, பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது. மட்டுமல்லாமல் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களில் இந்திய அணியே பாகிஸ்தானை அடக்கியாள்கிறது. இதனால் பழைய கணக்குகள் பலவும்தீர்க்கப்படவேண்டியகட்டாயநிலையில்உள்ளது பாகிஸ்தான்.

இந்திய அணியைப்பொறுத்தவரை அந்த அணியின் தலைவர்கோக்லி அணிக்கு ஆனைப்பலம். எட்ஜ்பஸ்டனில்இன்றையஆட்டம்நடைபெறுகிறது. ஆடுகளம் துடுப்பாட்டத்தக்குச் சாதகமானது. இதனால் கோக்லி மீது எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாகியுள்ளன. கோக்லி மட்டுமல்ல டோனி, ரோகித், ரகானே, யுவராஜ் எனும் கூட்டணியை பாகிஸ்தானின் வேகப்பந்துவீச்சு வரிசையான ஆமிர், ரியாஸ்கூட்டணி அசைத்துப்பார்க்க எத்தனிக்கவுள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தை இந்தியாவின் துடுப்பாட்ட வரிசைக்கும் பகிஸ்தானின் பந்துவீச்சு வரிசைக்கும் இடையிலான போர் என்றும் சொல்லிக்கொள்ளலாம்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை அந்த அணி இளம் தலைவர் அகமட்டின் தலைமையில் களமிறங்குகிறது. பாகிஸ்தானின்கோக்லி என்று வர்ணிக்கப்படும் அசாம் இந்தியாவை எப்படிக் கையாளப் போகிறார் என்பது புது அனுபவமாக இருக்கும். இவரைத்தவிர அசார் அலி, மலிக், செசாட்பாகிஸ்தானின்துடுப்பாட்டப் பலம். இந்தியா - பாகிஸ்தான் ரசிகர்கள் மட்டுமல்லாது கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் எதிர்பாத்திருக்கும் ஆட்டமாகவும் இன்றைய ஆட்டம் அமைந்துள்ளது.

பிரகாஸ்






## இதுக்குத்தானே ஆசைப்பட்டீர்கள் லூசியானோ



றோமாவின் தலைமைப் பயிற்சியாளர்பதவியில்இருந்துநீக்கப்பட்டுள்ளார் லூசியானோ.

இத்தாலியின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகங்களில் ஒன்று றோமா. இந்த அணியின்நட்சத்திர வீரராகடொட்ரியைதிட்டமிட்டுகளமிறங்க மறுத்தார். டொட்ரி களமிறங்கும்நேரங்களைக்குறைத்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் லூசியானோ மீது முன்வைக்கப் பட்டன. எனினும்லூசியானோஅவற்றைக் கண்டுகொள்ளவில்லை. இந்தநிலையில்கடந்தசெவ்வாய்க்கிழமைதலைமைப்பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து லூசியானோ நீக்கப்பட்டுள்ளார்.

டொட்ரிகடந்தசனிக்கிழமைதனது இறுதி ஆட்டத்தில் விளையாடி பன்னாட்டு கால்பந்தாட்ட அரங்கில் இருந்து ஒரு வீரராக விடைபெற்ற மூன்றுதினங்களில்லூசியானோ விடுவிக்கப்பட்டுள்ளார்.

குற்றச்சாட்டு வைக்கப்பட்ட ஆரம்பத்தில் அதற்கு உரிய தீர்வை லூசியானோவழங்கியிருந்தால்இன்று அவர் வீட்டிற்குச் சென்றிருக்க வேண்டிய தேவை இருந்திருக்காதல்லவா? இதற்காகத் தானே ஆசைப்பட்டீர்கள் லூசியானோ.

## பின்னடைவு!

உலககார்ப்பந்தயத்தொடரில்நடப்புவருடத்தில் பிரிட்டன் வீரர் ஹமில்டன் சம்பியனாவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் ஹமில்டனை சிறந்த முறையில் அடக்கி ஆட்சிசெய்கிறார் ஜேர்மனியின் வீரர் வெட்டல். நடப்பு வருடத்தின் கார்ப்பந்தயத் தொடர் 20 சுற்றுக்க ளாக நடத்தப்படுகிறது. இதுவரை முடிவடைந்த 13 சுற்றுக்களின் நிறைவில் 129 புள்ளிகளுடன் வெட்டல் முதலிடத்தில் உள்ளார். 104 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஹமில்டன் உள்ளார். மூன்றாமிடத்தில் பின்லாந்தின் வல்ட்டேரி போத்தாஸ்உள்ளார். உலககார்ப்பந்தயத்தொடர் முடிவடையஇன்னும்7சுற்றுக்கள்எஞ்சியுள்ளன. கடந்த வருடம் ரஸ்பேர்க் சம்பியனாகியிருந்தார். ஹமில்டன் இரண்டாம் இடத்துக்கு வந்திருந்தார். கடந்த வருடத்துடன் ரஸ்பேர்க் ஓய்வு பெற்றார். இதனால் நடப்பு வருடத்தில் தனிக்காட்டு ராஜா என்ற கணக்கில் ஹமில்டன் ஆட்சிசெய்வார் என்று எதிர்பார்க்கப்பட நிலையில் இந்த எதிர்பார்ப்புக்கள் எல்லாம் தலைகீழாகியுள்ளன.

## சொன்னது என்னாச்சு

பிரான்ஸ்ரென்னிஸ்கிண்ணத்தைக்கைப் பற்றுவேன் என்று அறிக்கை விட்டிருந்தார் ஜேர்மனிவீராங்கனைகெர்பர். பலரும்தாம்தொடரில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருந்தாலும் முதல்முதலாக இவ்வாறான ஓர் கருத்தை வெளியிட்டவர் கெர்பரே. ஆனால் தொடரில் இருந்து வெளியேறிய முதல் முன்னணி வீராங்கனையாகவும் கெர்பரே பதிவாகியுள்ளார். செரீனா கர்ப்பமாகியுள்ளார் இதனால் அவர் இந்த வருடத்தில் எஞ்சியுள்ள அத்தனை ஆட்டங்களில் இருந்தும் விலகியுள்ளார். எனவே கெர்பர் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினால் அவர் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடரலாம் என்ற நிலைமை இருந்தது. தற்போது அவருக்குரிய வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கயிறு இழத்தல் போட்டியில், யாழ்.மாவட்ட அணியாகப் பங்கேற்ற கணேசன் இளைஞர் கழகப் பெண்கள் அணி ஏனைய மாவட்ட அணிகளுடன் கடுமையான போட்டியின் மத்தியில் வெற்றியீட்டியது.(ஐ)








வடமாகாண கல்வி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்குரிய மாகாணம் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம், நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க.பாடசாலை வளாகத்தில் தீவக கல்வி வலயம் முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி நிலையம்
தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. கட்டடத்துக்கான பெயர்ப்பலகையைத் தீவக வலயப் பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைக்க, நிகழ்வின் முதன்மை விருந்தினரான வடக்கு மாகாணசபை உறுப்பினர் கே. என். விந்தன் கனகரத்தினம் நாடாவை வெட்டி தொழிற்திறன் பயிற்சி நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (ஐ)





வீதி விபத்துக்களைத் தவிர்க்கக் கூடிய விழிப்புணர்வு நடவடிக்கையில் ஒரு பகுதியாக கடந்த வாரம் கே.கே.எஸ் வீதியில் விழிப்புணர்வு ``ஸ்ரிக்கர்களை" வாகனங்களுக்கு ஒட்டும் நடவடிக்கையில் நல்லூர் றோட்டறக் கழகம் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் இன்டறக் கழக மாணவர்களும் இணைந்து ஈடுபட்டனர். (ஐ-ரி)



கரவெட்டித்தெற்குமேற்குபிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் இரண்டுக்கு வீடு திருத்தம் செய்வதற்காக வடமாகாண சபை உறுப்பினரால் சீமெந்து பைகற்றுக்கள் வழங்கப்பட்டன. வடமாகாணசபை உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான சி. அகிலதாஸின் நிதி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 33 சீமெந்துப் பைக்கற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-108)






ஜெனிவாவில் வசிக்கும் பிரபு, தாயக மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகிறார். அண்மையில் தனது தந்தையின் 3 ஆம் ஆண்டு நினைவு நாளில் முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளை விடுதலைக்காக அர்ப்பணித்த தெய்வானை என்ற பெண்மணிக்கு வாழ்வாதார உதவியை தனது முகவர் ஊடாக வழங்கி வைத்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாக் கொடியேற்றம்கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. (ஜ -23)

# ஆலய வளாகத்தில் நேற்று சடலம் மீட்பு

அநாதரவானநிலையில்கோயில்வளாகத்தில்இருந்து குடும்பத்தலைவர்ஒருவரின்சடலம்உடுவில்மல்வம் பகுதியிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த வீரகத்தி சாந்தரூபன் (வயது- 45) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

உடுவில்மல்வம்பகுதியில்உள்ளஆலயத்தில்சந்தேகத்துக்கிடமானநிலையில்ஒருவர்கிடந்ததைப்பார்த்த பொதுமக்கள் இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத்தகவல்வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அதன் பின்னர் இறந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு இடம்பெற்ற உடற்கூற்றுப்பரிசோதனையில்உயிரிழந்தநபர்மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்துள்ளார் எனக் கண்டறியப்பட்டுள்ளது. (த-8)

## அமெ...

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் வருகை தந்தனர். கோயிலில் வழிபாடுகள் நடைபெற்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள், தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெயரில் அர்ச்சனை செய்தனர். வழிபாடுகள் முடிவடைந்ததும், கோயில் முன்றிலில் தேங்கா ய்கள் உடைத்தனர்.

அங்கிருந்து பேரணி ஆரம்பமானது. பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா, ஜனநாயக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பாஸ்கரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பேரணி பசார் வீதி ஊடாகச் சென்று, போராட்டம் நடைபெற்று வந்த, முதன்மை தபாலகத்துக்கு அருகில் வந்து முடிந்தது. அங்கு காணமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். அமெரிக்காவின் தேசியக் கொடியையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடியையும் அவர்கள் தாங்கிப் பிடித்திருந்தனர்.

"இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டு வந்தமைக்காக அமெரிக்காவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமக்கு நீதியும், குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு சரியான தண்டனையும் தேவை. அதனை அமெரிக்காவால் மாத்திரமே பெற்றுத் தர முடியும். தமிழர் தாயகத்துக்கு வந்து அமெரிக்கா எமக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும். அமெரிக்காவைத் தவிர வேறு யாரையும் நாங்கள் நம்பத் தயாரில்லை.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை அரசை இராணுவ ரீதியிலான அணுகுமுறை ஊடாகவே அசைக்க முடியும். 1987ஆம் ஆண்டுகளில் இந்தியப் படையும் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளும் அதனைச் செய்து காட்டினர். கிழக்குத் திமோர், பொஸ்னியா, தென்சூடானில் அமெரிக்காவினால் பாதுகாப்புக் கொடுக்க முடிந்தது என்றால், இங்கு எமக்குப் பாதுகாப்பு வழங்க முடியாதா?"என்று போராட்டத்தின் போது மக்கள் கேள்வி எழுப்பினர். சுமார் 200 பேர் வரையில் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் உறவினர்கள் அழுதனர். (வ-5,402)

## மகிந்த...

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை நீதியின் முன்பாக நிறுத்துவோம் என்று தேர்தல் காலத்தில் அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. எந்தவொரு வழக்கும் விசாரித்து முடிக்கப்பட வில்லை. அதனையடுத்து, இவ்வாறான வழக்குகள் எதிர்வரும் 2 வருடங்களுக்குள் நடத்தி முடிப்பதற்கு வசதியாக இத்தகைய நீதிமன்றங்களை நிறுவ வேண்டியதன் அவசியத்தை சட்ட நிபுணர்கள், அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் அரசின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

இந்தப் பரிந்துரையைக் கவனத்தில் எடுத்த அரசு, சிறப்பு உயர் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நீதிச் சட்டத்தின் கீழ், நீதி அமைச்சரின் கோரிக்கையின் அடிப்படையில் தலைமை நீதியரசர் இதுபோன்ற சிறப்பு உயர் நீதிமன்றத்தை நிறுவ முடியும்.

இதற்கான வேண்டுகோளை மிக விரைவில் நீதி அமைச்சர் விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் காலத்தில் முன்னைய அரசில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தும், நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து மக்கள் அரசு மீது நம்பிக்கை இழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## கத்தி...

ளையும் 6 லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றது. மற்றொரு வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் 5 பவுண் நகைகளும் 25 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையடித்தது.

இந்தச் சம்பவங்கள் வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி மற்றும் உடுத்துறை ஆகிய இடங்களில் நேற்று அதிகாலை இடம்பெற்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"10 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் மருதங்கேணியில் உள்ள கடையுடன் இணைந்த வீட்டுக்குள் நேற்று அதிகாலை 2 மணியளவில் புகுந்தது. நாய் குரைத்ததால் குடும்பத் தலைவர் வீட்டுக்கு வெளியே சென்றபோது, சிலர் அவரைக் கட்டிப்பிடித்து மடக்கினர். அதன்போது ஏற்பட்ட இடர்பாட்டினால் வீட்டிலிருந்தவர்கள் முழித்துக் கொண்டனர். குடும்பத் தலைவரின் தலையில் தாக்கியதால் அவரின் தலையிலிருந்து குருதி வடிந்தோடிக் கொண்டிருந்தது. அதனையும் பொருட்படுத்தாது அவரை 2 பேர் மடக்கி வைத்துக் கொண்டிருந்தனர்.

ஏனையவர்கள் வீடு புகுந்து சுமார் ஒன்றேகால் மணித்தியாலங்கள் தேடுதல் நடத்தி நகைகளை மீட்பதில் ஈடுபட்டிருந்தனர். சிறிது நேரத்தில் குடும்பத் தலைவர் மயங்கிச் சரிந்துவிட்டார். அதனால் அவரது மனைவி, மகள் பதறியதால் அவர்களது கழுத்தில் கத்தி வைக்கப்பட்டு வாய்மூடச் செய்யப்பட்டனர். பின்னர் 10 பவுண் நகைகளையும் 6 லட்சம் ரூபா பணத்தையும் கும்பல் கொள்ளையடித்தது.

வீட்டுடன் இணைந்த கடைக்குச் சென்ற கொள்ளைக் கும்பல் குளிர்சாதனப் பெட்டியில் இருந்த மென்பானங்களையும் எடுத்துக் குடித்து கடையிலும் பணம் திருடிக் கொண்டு சென்றது" என்று பொலிஸில் முறைபாடு செய்யப்பட்டது.

உடுத்துறைக்கு நேற்று அதிகாலை சென்ற கொள்ளைக் குழு அங்கிருந்த வயோதிபரை அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டது. அங்கு 5 பவுண் நகைகளையும் 25 ஆயிரம் ரூபா பணத்தையும் அந்தக் கும்பல் கொள்ளையடித்துச் சென்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்ட இடங்களிலும் பொலிஸார் மோப்பநாய் சகிதம் தடயங்களைப் பெறுவதிலும் விசாரணைகளிலும் ஈடுபட்டனர். எவருமே கைது செய்யப்படவில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (வ-4, 6,9,26)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியலாயத்துக்கு வன்னி மாவட்டப் பட்டதாரிகள் சங்கத் தலைவரும், வன்னிமாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரப்பட்டதாரிகள் சங்க இணைப்பாளருமான ம.ஆனந்தராஜாவால் போட்டோப்பிரதி இயந்திரம், பாடசாலையின் அதிபர் திருமதி கிருஷ்ணவேணி நந்தகுமாரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)



கொக்குவில் சிறி இராமகிருஷ்ண வித்தியாசாலையின் புதிய சாரணிய அமைப்பு பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் 17 சாரண்களுடன், சாரண ஆசிரியர் கு.பிரசண்ணாவினால் சின்னம் சூட்டித் தொடக்கி வைக்கப்பட்டது. இதில் உதவி மாவட்ட சாரண ஆணையாளரும் யாழ் மாவட்ட சாரணர் சங்க பயிற்சி இ.தவகோலனம், ஓய்வு நிலை அதிபர் கொக்குவில் சிறி இராமகிருஷ்ண வித்தியாசாலை செல்வி க.கமல நாயகியும், இங்கிலாந்து பழையமாணவர் சங்க உறுப்பினர் திருமதி க.சுகீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஐ)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சிறி முருகன் சனசமூக நிலையத்தினர் நிலையப் பிரிவுக்குட்பட்ட சாதனை புரிந்த இரு மாணவர்களைக் கௌரவித்தனர். தேசிய பளுதூக்கல் போட்டியில் தேசிய நிலையில் முதலிடம் பெற்ற மாணவன் மற்றும் கடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் ஆகியோர் நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-9)





பாண்டியன்குளம் அரசடி அற்புத விநாயகர் ஆலயத்தில் அறநெறி பாடசாலைக்கு, ரிசி தொண்டர் சுவாமிகளின் நிதியில் நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுப்பதற்கான அங்குரார்பனக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. (ஐ)



முறிகண்டி தென்னிந்திய திருச்சபை புனித பவுல் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த மழலைகள் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற குறித்த விளையாட்டு நிகழ்வில், மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகளும், இசையும் அசைவும் நிகழ்வும் பார்வையாளர்களைக் கவர்ந்தது. குறித்த நிகழ்வில் இந்துபுரம் கிராம சேவையாளர், அருட்தந்தையர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)



வலி.மேற்குப் (சங்கானை) பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச்சங்களால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிறைவும், மாணவிகளின் கலைப்பொருள்களின் கண்காட்சியும் சங்கானையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டார். நிகழ்வில் தையற்பயிற்சி பெற்ற மாணவிகளின் கலைப்பொருள்களும், தைத்த ஆடைகளும் காட்சிப்படுத்தப்பட்டதுடன், பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பற்றிமா கிரியில் போர்த்துக்கல் பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டுவிழா

## போர்த்துக்கேயரால் நடப்பட்டு இன்றும் அழகுறக் காட்சி தரும் இராசமுருக்கடியில் விருந்து கொடுத்துக் கொண்டாட்டம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

யாழ் மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மரியன்னையின் யாத்திரைத்தலமான பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் பெருவிழா நிகழ்வுகள் இவ்வாண்டு சிறப்புற இடம்பெற்றிருந்தன. 2017 ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டு பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டு விழா என்பதால், அவை இன்னமும் சிறப்பு முக்கியத்துவம் பெற்றதாக அமைத்திருந்தன. யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் விழா கொண்டாடப்பட்டது.

**மூன்று இடையச் சிறுவர்களுக்கு தேவ அன்னை காட்சி கொடுத்து 100 ஆண்டுகள் நிறைவு**

1917ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி போர்த்துக்கல் நாட்டில் பற்றிமா பதியில் தேவ அன்னையின் காட்சிகள் லூசியா, யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய மூன்று இடையச் சிறுவர்களுக்கு அருளப்பட்டது. மரியன்னையின் காட்சிகள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் 13 ஆம் திகதி என்ற திருநிலையோடு ஆறு மாதங்களுக்கு நீடித்தது. இந்தக்காட்சி நடைபெற்று 3 ஆண்டுகளின் பின்னர் குறிப்பாக பிரான்சிஸ் 1919ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதியன்றும், ஜசிந்தா 1920ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதியன்றும் சாவடைத்தனர். லூசியா கார்மேல்சபை அருட்சகோதரியாகித் தனது 97 ஆவது வயதுவரை வாழ்ந்து, 2005ஆம் ஆண்டு சாவடைத்தார். இந்த ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் போர்த்துக்கல் பற்றிமா அன்னையின் திருத்தலத்துக்குச் சென்று பற்றிமா நகரில் அன்னை மரியா காட்சியளித்ததைக் கண்ணுற்ற மூவரில் அருளாளர்களான பிரான்சீஸ் மார்த்தோ மற்றும் அவரது தங்கை யசிந்தா மார்த்தோ ஆகிய இருவரையும் புனிதர்களாக உயர்த்தினார்.

**பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை திருத்தலத்தின் நிறுவுனர் கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளார்**


1945ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பண்டத்தரிப்பு, சில்லாலை, விளான் ஆகிய பகுதிகள் ஒரு பங்குக்குருவின் கீழ் இயங்கின. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளார் இங்கு பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். போர்த்துக்கலின் சிற்றூராகிய பற்றிமாவில் 1917ஆம் ஆண்டு காட்சியளித்த பற்றிமா அன்னையில் ஆழ்ந்த பற்றும் பக்தியும் கொண்டு விளங்கிய இவர், பண்டத்தரிப்பு அந்தோனியார் ஆலயத்திலோ, செபமாலை மாதா ஆலயத்திலோ திருப்பலி நிறைவேற்றிய பின்னர் விளானுக்குச் செல்வதானால் தற்போது பற்றிமா வீதி என அழைக்கப்படும் டச்சு வீதி ஊடாகவே செல்லவேண்டும்.

இந்த வீதியின் அருகே ஒரு இராசமுருக்கு மரம் உண்டு. இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் காணப்படாதது என்று கூறப்படும் பழமை வாய்ந்த இந்த மரம், போர்த்துக்கல் நாட்டுக்குரித்தானது. போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலத்தில், அவர்களால் நடுகை செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. பண்டத்தரிப்பில் நடப்பட்ட இராசமுருக்கு மரம், இன்றும் அதே இடத்தில் அழியாது காணப்படுகிறது. இந்த மரத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதையொன்று உண்டு. ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியபோது இந்தப்பகுதியில் வாழ்ந்தவர்கள் ஊரை விட்டு இடம்பெயர்ந்து செல்லும் போது தங்களிடமிருந்த தங்க நகைகள் மற்றும் பொன், வெள்ளி நாணயங்கள் என்பவற்றை இந்த மரத்தடியில் புதைத்து விட்டு ஓடினார்கள். ஆட்சிகள் மாறிக் காலங்கடந்தாலும் புதையல் பற்றிய கதை மறையவில்லை. அதனால் இரவுநேரங்களில் மந்திரவாதிகள் உடுக்குகள் அடித்து, மந்திரம் ஓதிப் பேய்பூதங்களை வரவழைத்துப் புதையல் எடுக்க முயற்சித்தார்களாம். இவ்வாறு இந்த மரத்தை அண்டிய பகுதிகளில் ஆவிகளின் நடமாட்டம் இருக்கும் என்ற பயத்தில் மக்கள் எவரும் இந்தப் பகுதி வழியாக இரவில் செல்வதில்லை. காலப்போக்கில் இந்தப்பகுதி கைவிடப்பட்ட சிறுபற்றைக்கா டாகவே காட்சியளித்தது.

சிறு பற்றைகளின் நடுவே நின்ற இராசமுருக்கு மரத்தைப் பார்க்கும்போது ஜெலான் அடிகளாருக்கு பற்றிமா மாதாவின் நினைவே வந்தது. அவரின் கற்பனை இந்தப்பகுதியை பற்றிமாபதியாக மாற்ற வேண்டும் என்ற சிந்தனைத் திசையின் வழியே சென்றது. அடிகளாரும் ஆயர் கியோமர் ஆண்டகையிடம் தமது எண்ணக்கருவை வெளியிட்டார். ஆயரும் ஆசீர்வாதங்களோடு அதற்கு அனுமதியளித்தார்.

**போர்த்துக்கேயரால் நடப்பட்ட இராசமுருக்கு மரத்தடியில் பற்றிமா அன்னை**

ஜெலான் அடிகளார், அவ்விடத்தை ஆசீர்வதித்து இளைஞர்களிடம் விடயத்தைக் கூற அவர்களும் அவருடைய விருப்பத்திற்கமைவாகவே அந்தப்பகுதி முழுவதையும் துப்புரவு செய்தார்கள். சிறுகொட்டிலில் அமைந்த கோவிலும் அமைக்கப்பட்டது. 1945ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10ஆம் திகதி லொறற்றோ அன்னையின் திருநாளில் மாசற்ற இருதயநாயகியின் சிறிய சொரூபம் ஒன்று சில்லாலைக் கதிரைமாதா ஆலயத்திலிருந்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு இராசமுருக்கடியில் ஸ்தாபகம் செய்யப்பட்டது. ஜெலான் சுவாமி அவ்விடத்துக்கு "பற்றிமா கிரி" என்னும் புதிய பெயரையும் சூட்டினார். தொடர்ந்து இராசமுருக்கு மரத்தடியில் ஆழக்குழி தோண்டி முப்பத்தைந்து அடி உயரமான ஒரு தூண் கட்டப்பட்டது. அதன் உச்சியில் பற்றிமா அன்னையின் சொரூபம் நிறுவப்பட்டது. யாழ். நகரின் பிரபல சிற்பியான மனுவல்தம்பி அவர்களால் செதுக்கப்பட்ட பற்றிமா அன்னையின் சொரூபத்தை இன்றும் இராசமுருக்குப் பகுதியில் காணலாம். பண்டத்தரிப்பு இளையோர் ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ்.எல்.ஆர் கமில்ரன் அனுப்பிய இராசமுருக்குடன் அமைந்துள்ள பத்திமா அன்னையின் படம் இங்கு பிரசுரமாகியுள்ளது.



**பற்றிமா மாதா காட்சியளித்த கப்பிளினா ஆலயத்திலே உள்ள சொரூபத்தின் சாயலில் செய்யப்பட்ட முதலாவது சொரூபம்**

பற்றிமாபதியின் வளர்ச்சி கருதி கியோமர் ஆண்டகையும், பண்டத்தரிப்பைச் சில்லாலையில் இருந்து பிரித்துத் தனிப்பங்காக்கி ஜெலான் சுவாமியையே பங்குத்தந்தையாக நியமித்தார். ஜெலான் அடிகளார் தாய்நாடு சென்று திரும்பும்போது பற்றிமா மாதா சொரூபத்தைக் கொண்டு வந்தார். இந்தச் சொரூபம் பற்றிமா மாதா[illegible] கப்பிளினா ஆலயத்திலே [illegible] சாயலில் செய்யப்பட்ட முதலாவது சொரூபம் என அவரே 1948ஆம் ஆண்டு பண்டத்தரிப்பிலிருந்து வெளியிட்டதான தனது நூலில் சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்தச் சொரூபம் பாதுகாப்பாக பொதி செய்யப்பட்டிருந்தாலும், பொதிகள் வைக்க பகுதியில் அதை வைக்க விடாமல் தனக்கு அருகிலேயே அதற்கென்றும் ஓர் ஆசனத்தைப் பதிவு செய்து கப்பலில் கொண்டு வந்தார்.

பற்றிமாகிரியில் இருந்துகொண்டே வசதிகள் குறைந்த அந்தக்காலத்திலேயே பற்றிமா அன்னை பற்றிய சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டார். அத்தகைய எழுத்து முயற்சிகளின் கொடுமுடியாக 1948 ஆம் ஆண்டு "அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற புத்தம் புதிய நூலைத் தயார் செய்து, ஆயரின் உத்தரவைப் பெற்று, 1949 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பு பற்றிமா கிரியிலிருந்து வெளியிட்டார்.

கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார், கனன் பாத்தாஸ் அடிகளாரால் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டு சாள்ஸ் சூசைப்பிள்ளை ஆசீர்வாதம் அ.ம.தி அடிகளாரால் தமிழ் மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டு 1949ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற கிறிஸ்தவ இலக்கிய நூலை 2016ஆம் ஆண்டு அப்படியே மறுபதிப்புச் செய்வித்தார். இந்த நூல் அந்த 3 சிறுவர்களுக்கு அன்னை கொடுத்த காட்சிகளின் விளக்கமாகும். இவ்வாண்டிலும் "பற்றிமா மாதா காட்டும் வழி" என்ற இன்னுமொரு நூலையும் வெளியிட்டுள்ளார். பண்டத்தரிப்பு பற்றிமா பதிக்கு வரும் பக்தர்களின் பாவனைக்குரிய கைநூலாக செபங்கள் அடங்கியதாகவும், அன்னையின் காட்சிகள் பண்டத்தரிப்பு, பற்றிமா பதி வரலாறு என்பவற்றோடு அழகிய படங்களைக் கொண்டதாகவும் இந்த நூல் அமைந்துள்ளது

**ஓலையால் வேயப்பட்ட ஆலயம்**

ஓலையால் வேயப்பட்ட ஆலயமாக இருந்த பழைய ஆலயம் 1948 ஆம் ஆண்டில் கற்களால் கட்டப்பட்டது. ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. எனினும் துரதிர்ஷ்டவசமாக போர், பாரிய இடப்பெயர்வுகள் காரணமாக கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஞானரத்தினம் அடிகளார் (2000/2005) காலப்பகுதியில் இன்று அழகுறக் காட்சி தரும் ஆலயம் கட்டப்பட்டு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 2003ஆம் ஆண்டு நேர்ந்தளிக்கப்பட்டது. பழைய ஆலயத்திலிருந்த போர்த்துக்கல் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சொரூபம் தற்போதைய புதிய ஆலயத்தின் முன்மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. பழைய ஆலயம் இன்றுவரை நல்ல முறையில் பேணப்பட்டு வருகின்றது.

அத்துடன் பற்றிமா மாதா 1917 ஆம் ஆண்டு காட்சி தருவதற்கு ஆயத்தமாக, 1916 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேவதூதன் காட்சிகளின் நூறாவது ஆண்டை நினைவுபடுத்தும் வகையில் பங்குத்தந்தையும் பரிபாலகருமான மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரால் பற்றிமா அன்னையின் புதிய ஆலயத்திற்கு அருகில் சம்மனசும் மூன்று சிறுவர்களின் உருவங்களும் அடங்கிய "காட்சிகளின் தோட்டம்" அமைக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் நாள் குருமுதல்வர் பி.ஜே ஜெபரட்ணம் அடிகளா[illegible]ந்தும் வைக்கப்பட்[illegible] தொடர்ந்து [illegible]



யத்திலே பங்குமகள் ஒருவருடைய அன்பளிப்பாக அமெரிக்காவிலிருந்து பங்குத்தந்தையால் கொண்டுவரப்பட்ட அழகான ஒரு தேவநற்கருணைப்பேழை 2016 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8 ஆம் திகதி ஆசீர்வதிக்கப்பட்டு வைக்கப்பட்டது.

1948 இல் கட்டப்பட்ட பழைய ஆலயத்துடன் இணைந்து, குருமார் தங்கக்கூடிய ஒரு சிறிய அறைவீடு மரத்தாலான தளத்தைக் கொண்ட மிகவும் எளிமையான ஒரு மாடி வீடாக அமைக்கப்பட்டு அப்போது பாவனையில் இருந்தது. மறைமாவட்டத்தின் மூத்த குருக்களுக்கும் இந்தப் பகுதியிலே வாழுகின்ற வயதிலே முதிர்ந்த பொது நிலையினருக்கும் இது பற்றித் தெரியும். சிறுவயதிலிருந்தே இதைக் கண்டிருந்த தற்போதைய ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அனுமதியுடனும், நலன்விரும்பிகளின் உதவியினாலும் இந்த ஆண்டு பங்குத்தந்தையும் பரிபாலகருமான மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரின் முயற்சியினால் மீண்டும் அறைவீடு முற்றிலும் புனரமைக்கப்பட்டு ஆரம்பகாலங்களில் இருந்தது போலவே மரத்தாலான தளம் கொண்ட மேல்மாடி அறையுடையதாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஜெலான் சுவாமி இல்லம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேலும் இந்த நூறாவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் பரிசுத்த கன்னி மரியாள் மூன்று சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த சம்பவத்தைச் சித்தரிக்கும் 11 அடி உயரமான பற்றிமா அன்னையின் உருவமும் 3 சிறுவர்களுக்கு காட்சி கொடுத்த காட்சியை சித்தரிக்கும் காட்சித் தோட்டமும், மந்தைகளின் உருவங்களும் பற்றிமா அன்னையின் பெருவிழா அன்று ஆயரால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. திருப்பலியின் பின்னர் போர்த்துக்கல் நாட்டில் இருந்து கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளாரால் கொண்டுவரப்பட்ட திருச்சொரூபம் சரித்திரத்தில் முதற் தடவையாக பவனியாக எடுத்துவரப்பட்டமை சிறப்பு அம்சமாகும்.



யாழ். மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மரியன்னையின் யாத்திரைத்தலமான பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தலம் மேலும் வளர்ந்து அன்னையின் பக்திஸை வளர்க்கட்டும்.

175 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம் பற்றி அடுத்த வாரம் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்



## விற்பனைக்கு

40 நாள்கள் நிரம்பிய றொட்வீலர் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 0774341551 சங்கானை. (CS/4687)(10)

## விற்பனைக்கு

வளன்புரம், கொழும்புத்துறையில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 6633 722 / 077 8099 047 (CS 4684)(10)

## தேவை

3 கியூப் டிப்பர் வாகனம் விலைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 075 6563 907 (CS/4685)(10)

## காணி வீடு விற்பனைக்கு

கோண்டாவில் இராஜ வீதிச் சந்திக்கு அண்மையில் 11/2 பரப்பிலமைந்த வீடும் 3 1/2 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு - 076 697 2287

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வயோதிபத் தாயைப் பராமரிக்கக் கூடிய 35 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை.

தொடர்புகளுக்கு: 077 769 6771 (C/29119)(10)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகருக்கு அண்மையில், இல.42, பழைய பொலிஸ் நிலைய வீதி. எனும் முகவரியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு, தென்னை பயிர்ச் செய்கைக்கு உகந்த காணி.

தொடர்புகளுக்கு: 0777 4710 50 (C/29117)(10)

## Star Hotel வேலையாள் தேவை

கொத்து றொட்டி அடிப்பவர், அப்பம் போடுபவர், மேசைபராமரிப்பவர். Tea maker உடன் தேவை.

தொடர்பு.0777890398

பருத்தித்துறை வீதி, வில்லூமதவடி, நீர்வேலி

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 2003 உற்பத்திஆண்டின் Toyota Vios வகை KC - XXXX இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு. 0773000299

## மரணஅறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி அம்மா செல்லத்துரை ஐயர்



மயிலிட்டி தெற்கு கட்டுவன் சைவ மடத்தை பிறப்பிடமாகவும் டச்சுவீதி கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரிஅம்மா செல்லத்துரை ஐயர் 03.06.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா செல்லத்துரை ஐயரின் அன்பு மனைவியும் தர்மவதி காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, நீதிமதி மற்றும் நவரத்தினராஜா, பானுமதி, செல்வராஜா, குகதாசன், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஸ்கந்தராஜா மற்றும் குணேஸ்வரி ஸ்கந்தவதனா, ஞானகலை ஆகியோரின் பாசமிகு மாமியும் தாரிணி(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ஷாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - 077 911 2451

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு (மதவடி)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி அன்னபூரணம் மண்டலசேகரம்



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மலேசியா, கோப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய ஸ்ரீமதி அன்னபூரணம் மண்டலசேகரம் கடந்த (29.05.2017) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற முன்னாள் அதிபர் பொன்னம்பலம் மண்டலசேகரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான டாக்டர் பேரம்பலம், திருமதி பாக்கியம் தங்கராஜா, கனகசபாபதி, விஸ்வநாதன், திருமதி விசாலாட்சி பாலசுப்பிரமணியம், சிற்றம்பலம் மற்றும் கனடாவில் வசிக்கும் திருமதி மணி தேவராஜனின் அன்புச் சகோதரியும் சபாநடேசன் (கனடா), பஞ்சலிங்கம்(கொழும்பு), நிர்மலா(கனடா) ஆகியோரின் ஆருயிர்தாயும் காலஞ்சென்ற தில்லை நடேசனின் சிறிய தாயும் தயா (கனடா), மணி (கொழும்பு), யோசப் மோகன்தாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் விநோத், சஜித், தட்ஷா, அரிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு
ம.சபாநடேசன் - 001 905 456 0779
ம.பஞ்சலிங்கம் - 0112 388 185
யோசப் மோகன்தாஸ் - 001 647 3617052

தகவல்:
ம.சபாநடேசன் (மகன்)


## நொதேண் சென்றல் வைத்தியசாலையில் இப்பொழுது தலைமுடி உதிர்தல் பிரச்சினைக்கான தீர்வுகள் ...

- ✓ நீங்கள் தலைமுடி உதிர்வினால் (Hair Loss) அவதிப்படுகின்றீர்களா?
- ✓ உலகின் அதிநவீன தலைமுடி நடுதல் (Hair Implantation) தொழில்நுட்பத்தினை நமது வைத்தியசாலை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் Direct Hair Implantation (DHI) இன் அனுசரணையுடன் அறிமுகப்படுத்தவுள்ளது.
- ✓ தலைமுடி உதிர்தலுக்கான காரணிகளைத் துல்லியமாகக் கண்டறிந்து அவற்றுக்கேற்ற வாறு விசேட சிகிச்சையளிக்கப்படும்.
- ✓ வெட்டுக்காயங்கள் (Scars) மற்றும் நோவு (Pain) இல்லாமல் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.



Before After

நொதேண் சென்றல் வைத்தியசாலையில் பதிவு செய்து உங்களுக்குரிய இலவச ஆலோசனைகளை பின்வரும் நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

18th June 2017: 8.30am - 3.30pm
19th June 2017: 8.30am - 3.30pm

இந்த அரிய வாய்ப்பினை தவற விடாதீர்கள்!

மேலதிக தகவல் மற்றும் முற்பதிவுகளுக்கு: 0772979988 (7am - 9pm)

**Northern Central Hospital**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677
E-mail: nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

DHI
GLOBAL LEADER IN HAIR RESTORATION



DHI
GLOBAL LEADER IN HAIR RESTORATION

**WORLDS BEST IS HERE!**

Direct Hair Implantation (DHI) is the most advanced hair restoration technique in the world.
We find the hair loss causes and provide the best hair loss treatment in Sri Lanka now.
This latest revolutionary technique eliminates the use of scalpels with no scarring and no pain.



After

(C/29118)(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடர்...

நேரில் கூறினார், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன். நிவாரணப் பொருள்கள் வழங்கியமைக்காக நன்றி தெரிவிப்பதாக, இரத்தினபுரி சந்தர்மாலங்கார விகாராதிபதி எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனிடம் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நிவாரணப் பொருள்களுடன் இரத்தினபுரி மாவட்டச் செயலகத்துக்கு நேற்று மு.ப. 10.30 மணியளவில் சென்றனர்.

மாவட்டச் செயலாளரிடம் பொருள்கள் ஒப்படைக்கப்பட்டன. பின்பு அங்கிருந்து சந்தர்மாலங்கார விகாரைக்குச் சென்றனர். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அங்கு இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர். விகாராதிபதி கூட்டமைப்பினரை வரவேற்றதுடன், நிவாரணப் பொருள்கள் வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், "இந்த இடர் தொடர்பில் கவலையடைகின்றோம். இவ்வாறான இடர்கள் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஏற்பட்டு வருகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இடரின் போது பாதிப்புக்கள் குறைக்க உரிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் இரத்தினபுரியில் உள்ள பழமை வாய்ந்த சிவன் ஆலயத்துக்குச் சென்று எதிர்கட்சித் தலைவர் வழிபாடுகளில் ஈடுபட்டார். அதனை முடித்துக் கொண்டு இரத்தினபுரியில் உள்ள பள்ளிவாசலுக்கம் கூட்டமைப்பினர் சென்றனர். அங்கு இடம்பெற்ற சந்திப்புக்களில் அமைச்சர் ரிசாத் பதியுதீனும் கலந்து கொண்டிருந்தார். (வ-5)

## ஞானசாரரை...

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன"

இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக வடக்கு மாகாண மக்களிடம் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட நிவாரண உதவிகள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டன. இதன் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பொலிஸ்மா அதிபர் தெரிவித்ததாவது:

சட்டம் அனைவருக்கும் சமமானது. சட்டம் மீறப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எந்த வேளையிலும் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

உரிய நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப எமது விசாரணையின் விளைவாக கைது செய்யும் நடவடிக்கையை நாம் மேற்கொண்டுள்ளோம். நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் பக்கச்சார்பாக நடந்து கொள்வதாகவும் பல்வேறு இடங்களில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த இடத்தில் நான் தெளிவாக ஒரு விடயத்தைச் சொல்ல வேண்டும்.

நாங்கள் ஒரு தரப்புக்கு, ஒரு இனம், மதம் அன்றில் அரசியல் தேவைப்பாடுகளுக்காக நடவடிக்கை எடுப்பதில்லை. யாராகிலும் தவறு செய்தால் தவறுதான். அந்தத் தவறு இழைத்தவர் யார்? அவரின் தராதரம் எமக்கு அவசியம் இல்லை. அந்தத் தவறுக்கு ஏற்றவாறு நாம் நீதிமன்ற நடவடிக்கையை கடந்த காலங்களிலும் எடுத்துள்ளோம்.

முடிந்தவரை விரைவாக கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வோம். ஞானசார தேரரின் நடவடிக்கைகளை விசாரிக்க 4 சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கைகளை ஒன்றிணைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் என்றார். (வ-5)

## சிறுபான்மை

கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கவலையை வெளியிட்டுள்ளது.

இத்தகைய செயல்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரச தலைவர் மைத்திரிபால உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டுமெனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, முஸ்லிம் சமூகத்தை மாத்திரமன்றி நாட்டின் சிறுபான்மை சமூகத்துக்கு எதிராக செயற்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு, சட்டம் ஒழுங்கு அமைச்சு மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர் பணிப்புரை விடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு அளுத்கம பிரதேசத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறையில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதோடு, பல சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டமையை சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (வ-5)

## திருமலைப்...

மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மூதூர், மல்லிகைத் தீவில் அறநெறி வகுப்புக்குச் சென்ற 3 சிறுமிகள் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நோன்பை முடித்துக் கொண்டு தொழுகைக்காக பள்ளி வாசலுக்கு சென்ற பிரதேச மக்கள் பள்ளி வாசல் மீது தீ வைக்கப்பட்டுள்ளதை நேரில் கண்டதையடுத்து பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119இற்கு அறிவித்தனர்.

"பெற்றோல் நிரப்பப்பட்ட நான்கு போத்தல்கள் சம்பவ இடத்தில் காணப்பட்டன. பள்ளி வாசலின் காபட் மற்றும் பாய்கள் எரிந்து நாசமாகியுள்ளன. சம்பவ இடத்துக்குச் சென்ற திருகோணமலை துறைமுகப் பொலிஸார் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-45)

## சீரற்ற...

ஜப்பான் அன்பளிப்பாக வழங்கவுள்ள இந்த 2 ராடர்களும், கிழக்கு மாகாணத்தின் பொத்துவிலிலும், மேற்குப் புறமாக கற்பிட்டியி லும் பொருத்தப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலர் மீயான்வல தெரிவித்தார்.

"இந்த ராடர்களைப் பராமரிப்பது உள்ளிட்ட நிபுணத்துவ சேவைகளையும் ஜப்பான் வழங்கவுள்ளது. இதுதொடர்பான உடன்பாடு 2 நாடுகளுக்கும் இடையே அடுத்த சில நாள்களில் கையெழுத்திடப்படும்.

அமெரிக்காவால் வழங்கப்பட்ட டொப்ளர் ராடர் தொகுதி பழுதடைந்து விட்டது. சீர் செய்வதற்காக அது அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" என்று இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலர் மேலும் தெரிவித்தார்.

இந்த டொப்ளர் ராடர் முன்னர் மிகஉயர்ந்த மலையான பீதுருதாலகாலவின் உச்சியில் நிறுவப்பட்டிருந்தது. (வ-5)

## இடரில்...

ளது. இடரால் காணாமற்போன 91 பேர் இன்னும் மீட்கப்படவில்லை" என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

"கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட கடும் மழையைத் தொடர்ந்து இடர் ஏற்பட்டது. அதில் ஏராளமானோர் சிக்குண்டனர். பெரும் சிரமத்தின் மத்தியில் அவர்களில் பலர் மீட்கப்பட்டபோதும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சடலங்களாகவே மீட்கப்பட்டனர். மேலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காணாமற்போயிருந்தனர். அவ்வாறு காணாமற்போனவர்கள் தொடர்ந்து சடலங்கள் மீட்கப்பட்டனர். எனினும் கடந்த இரண்டு நாள்களாக சடலங்கள் மீட்கப்படுவது குறைந்திருந்தது. காணாமற்போனவர்களும் மீட்கப்பட்டிருக்கவில்லை. மீட்புப் பணிகள் தொடருகின்றன.

இந்த நிலையில் நேற்று மட்டும் 5 சடலங்கள் மீட்கப்பட்டன. 72 பேர் காயமடைந்துள்ளனர். 91 பேர் காணாமற்போயுள்ளனர்.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு இடர்களால் ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 805 குடும்பங்களைச் சேர்ந்த 7 லட்சத்து 4 ஆயிரத்து 815 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

(வ-4)

## அமெரிக்காவின்...

தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் அந்த நிதியைக் கையளித்தார்.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பாதுகாப்பான குடிதண்ணீர், தேகாரோக்கிய தொகுதிகள், அவசரகால நிலையின் போது உறைவிடப் பொருள்கள், வீட்டுத் திருத்தப் பொருள்கள் மற்றும் நோய்களை தவிர்ப்பதற்கு முக்கியமான சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு இந்த உதவியானது பயன்படும்.

"இரண்டு நாடுகளினதும் வரலாறு முழுவதிலும், அமெரிக்காவும், இலங்கையும் மிகவும் நெருக்கமான பிணைப்பை பகிர்ந்து கொண்டுள்ளன" என்று அரச தலைவரிடம் தூதுவர் கெசாப் தெரிவித்தார். தேவையான சந்தர்ப்பங்களில் இரு நாட்டு மக்களும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருந்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிவாரண நிதி உதவிக்கு மேலதிகமாக அமெரிக்க இடர் சேவை நிபுணர்கள், மறுசீரமைப்பு முயற்சிகளை ஒழுங்கமைக்க உதவுதல், பாதிப்பு மதிப்பீடுகளை முன்னெடுத்தல் மற்றும் களத்தின் தேவையை மதிப்பீடு செய்வதற்கு இலங்கை அரசு அதிகாரிகள் மற்றும் மனிதநேயப் பங்காளர்களுடன் பணியாற்றுதல் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவ நிலையம் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து களுத்துறை மாவட்டத்தில் வெள்ள இடரால் சேதமடைந்த பாடசாலைகளை சுத்தப்படுத்தல் மற்றும் திருத்தல் என்பவற்றில் அமெரிக்க இராணுவ பொறியியலாளர்கள் மற்றும் துருப்புக்கள் ஈடுபட்டுள்ளனர்.

சூழ்நிலையை கண்காணித்து வரும் அமெரிக்கத் தூதரகம், மேலதிகத் தேவைகளை அடையாளம் காண்பதற்கு இலங்கை அரசின் இடர் நிவாரண அதிகாரிகளுடன் தொடர்ந்தும் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது என்றுள்ளது. (வ5)

## இலங்கை...

இணையும் தமது வீரர் எந்தவிதத்திலும் மீறவில்லை என்பதை இலங்கை அதிகாரிகள் எழுத்துமூலம் உறுதிப்படுத்துவதுடன் தவறிழைக்கும் இராணுவத்தினரைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம் என்ற உறுதியையும் அவர்கள் வழங்க வேண்டும்"

இவ்வாறு ஐ.நா. செயலாளர் நாயகம் அன்ரொனியோ குரெசின் உதவிப் பேச்சாளர் பர்கான் ஹக், அசோசியேட்டட் பிரஸ் ஊடகத்துக்குத் தெரிவித்தார்.

ஐ.நா. அமைதிப் படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இலங்கை இராணுவ வீரர்களுக்கு எதிராக பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இவற்றை விசாரணை செய்வதற்கு முன்னாள் இராணுவ அதிகாரி ஜெகத் டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் இலங்கை இராணுவத்தினர் எந்தவித பாலியல் வன்புணர்வுச் சம்பங்களிலும் ஈடுபடவில்லை என்று கூறியிருந்தார்.

ஜெகத் டயஸின் கருத்துத் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே, ஹக் மேற்கண்டவாறு கூறினார்.

"எதிர்காலத்தில் அமைதி காக்கும் படைக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் போது ஒழுக்கமுடையவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக ஐ.நா. தற்போது இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுகிறது. எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து அனுப்பப்படும் வீரர்கள் தொடர்பாக 2005ஆம் ஆண்டுக்குப் பின்னரான தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அவர்கள் இராணுவத்தில் பணியாற்றும் போது மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்களையும் இலங்கை வழங்கும்.

இலங்கை அரசும் தனது வீரர்களைத் தனித்தனியாகப் பரிசீலிக்க வேண்டும். அத்துடன் ஐ.நா நியமங்கள் மற்றும் பாலியல் [illegible] தொடர்பான மனித உரிமை நன்னெறிகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு நியமங்களையும் பின்பற்றுவது தொடர்பாக இலங்கை இராணுவத்தினருக்கு அரசு பயிற்சியளிக்க வேண்டும்" என்று ஐ.நா. செயலாளரின் உதவிப் பேச்சாளர் பர்கான் ஹக் மேலும் தெரிவித்தார். (வ-5)

## திருட்டு...

தெரிவித்தனர்.

ஒமந்தையில் வசிக்கும் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலனின் வீட்டில் கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்த கொள்ளையர்கள் 20 பவுண் தங்க நகைகளும் 3 லட்சம் ரூபா பணமும் திருடப்பட்டிருந்தது.

புலன்விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் முதலில் ஒருவரைக் கைது செய்தனர். அவர் வேறொரு பிரதேசத்தில் திருடிய குற்றச்சாட்டிளளலேயே கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் பிரதேச செயலர் வீட்டுத் திருட்டுத் தெரியவந்தது. திருட்டில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படும் ஏனையவர்களும் மாட்டிக்கொண்டனர். இவ்வாறு நேற்றுமுன்தினம்வரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடிய 3 லட்சம் ரூபா பணத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா சந்தேகநபர்களிடமிருந்து மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட 5 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

**(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கம்)**

(வ-4-101)

## 2,500 கிலோ...

முன்தினம் கூலர் ரக வாகனத்தில் வெட்டப்பட்ட நிலையில் சுமார் 2 ஆயிரத்து 500 கிலோகிராம் இறைச்சியும் 38 மாட்டுத் தலைகளும் கடத்தப்பட்டபோது முழங்காவிலில் வைத்துப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அதில் நுணுக்கமான முறையில் மாட்டிறைச்சியை வைத்து வெளிப்புறமாகப் பார்த்தால் மீன்கள் கொண்டு செல்வதாகத் தெரியும் வகையில் திட்டமிட்டு அவை ஒழுங்கு படுத்தப்பட்டுக் கடத்தப்பட்டன என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

அந்த வாகனத்தில் இறைச்சியைக் கடத்திய குற்றச்சாட்டில் புத்தளததைச் சேர்ந்த 2 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். வாகனமும் தடுத்து வைக்கப்பட்டது.

அதனைக் கடத்தி சென்ற 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி நீதிவான்மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான், 2 ஆயிரத்து 500 கிலோ கிராம் இறைச்சியும் கிளிநொச்சி திருநகர் சுடலையில் புதைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா காசுப் பிணை மற்றும் 2 ஆள் பிணையில் விடுவித்தார். ஆள் பிணையில் கையொப்பமிடுவோர் கிராம அலுவலரின் உறுதிப்படுதிய கடிதத்தை மன்றில் முன்வைக்க வேண்டும். மேலும் சந்தேகநபர்கள் இருவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நீதிமன்றில் கையொப்பமிடவேண்டும் ஆகிய பிணை நிபந்தனைகளையும் மன்று விதித்தது.

மாடுகள் கொள்வனவு செய்யதமைக்கோ, இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கோ, அல்லது கொண்டு செல்லப்படுவதற்கோ எவ்விதமான சட்டரீதியான ஆவணங்கள் எதுவுமின்றியே இறைச்சி கடத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்பு முறியடிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஜசிந்தன் தெரிவித்தார்.


கரைச்சி பிரதேச சபையினர் தங்களது கனரக வாகனம் மூலமாக பணியாளர்களையும் கொண்டு பெருங் குழி தோண்டி இறைச்சி முழுவதையும் புதைத்தனர். (வ-ய-4-6-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலையின் கலைவாணி தட்டெறிதலில் வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு தட்டெறிதலில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பெண்கள் பிரிவு தட்டெறிதலில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜெ.கலைவாணி 22.56 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.
சப்ரகமுவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.தர்சிகா 28.26 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் சிறி ஜெயவார்தனபுர பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வீராங்கனை 2.07 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)





## ஈட்டி எறிதலில் யாழ். பல்கலை வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில், ஆண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.
ஆண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த லியனகே 58.57 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
சிறி ஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.எம்.எஸ். ரணசிங்க 72.20 மீற்றர் தூரத்துக்கு ஏறிந்து தங்கப் பதக்கத்தையும், கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சி.டி.வி. ஜெய குணசிங்க 60.06 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)



## உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கஜீபன் வெண்கலம் வென்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 4
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு உயரம் பாய்தலில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கஜீபன் வெண்கலப் பதக்கம் வென்றார்.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கஜீபன் 1.86 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.
கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டபிள்யூ.வை.என். மெண்டிஸ் 1.89 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும் ஆர்.எம்.கே.ஜி.பி. சரங்க 1.89 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம-23)

## இலங்கை கிரிக்கெட் சபையின் ஆட்டங்கள் சில இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 4
இலங்கை கிரிக்கெட் சபை, மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில கொக்குவில் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் மைதானங்களில் இன்று இடம்பெறவுள்ளன.
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து சிறி காமாட்சி அணி மோதவுள்ளது.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்றல் விளை யாட்டுக் கழக அணியை நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## வோக்ஸ் விலகல்



மினி உலகக்கிண்ணத் தொடரில் இருந்து காயம் காரணமாக இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் வோக்ஸ் விலகினார்.
மினி உலகக்கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகள் மோதின. களத்தடுப்பில் ஈடுபட்ட போது வோக்ஸின் காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அன்றைய ஆட்டத்தில் இருந்து பாதியில் விலகியிருந்த வோக்ஸ், மருத்துவக் குழாமின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் இருந்தும் விலகினார்.
வோக்ஸின் விலகல் அணிக்கு பெரும் பாதிப்பு என்று அந்த அணியின் தலைவர் மோர்கன் தெரிவித்தார். (ம)

## சரஸ்வதியின் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.
இந்தத் தொடரில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர், புத்தூர் கலைமதி, இளவாலை மத்தி, மன்னார் மாவட்ட அணி, கிளிநொச்சி மாவட்ட அணி, கொடிகாமம் இராணுவ அணி, வவுனியா இராணுவ அணி, அம்பாறை மாவட்ட அணிகள் மோதுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

## யாழ். கால்பந்தாட்ட அக்கடமியின் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாண கால்பந்தாட்ட அக்கடமியின் 16 வயது, 18 வயது பிரிவினருக்கான புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதன் தலைமைப் பயிற்சியாளர் விஜயகுமார் தெரிவித்தார்.
16 வயதுப் பிரிவினருக்கான பயிற்சி வகுப்புக்கள் செவ்வாய்க்கிழமைகளில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 6 மணி வரையும் 18 வயதுப் பிரிவினருக்கான பயிற்சி வகுப்புக்கள் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 6 மணி வரையும் இடம்பெற்று வருகின்றன. (ம-23)

# சுருண்டது இலங்கை



மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும், இலங்கை அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறுவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருந்தும் திடீர் சரிவுகண்டு சுருண்டது இலங்கை.
நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தீர்மானித் தது இலங்கை அணி. மலிங்க, லக்மல் கூட்டணி யின் பந்துவீச்சு ஆரம்பத்தில் மிக அபாரமாக அமைந்தது. ஓட்டங்களைப் பெறவிடாமல் இலங்கை அணி கட்டிப்போட்டது. களத்தடுப்பில் சிறந்த வியூகங்களை வகுத்தார் தரங்க. 23 ஓட்டங்களுடன் குயின்டன் ஆட்டமிழந்தார். அம்லா, பிளாசிஸ் இணை சரிவை சமன்செய்தது. அம்லாவின் பிடியெடுப்பைக் கோட்டைவிட்டார் மலிங்க. சாதகமாகப் பயன்படுத்தி சதம் கடந்தார் அம்லா. முடிவில் 6 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்கா. பந்துவீச்சில் பிரதீப் 2 இலக்குகளையும், லக்மல், பிரசன்னா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு நேர்த்தியான ஆரம்பம் வழங்கியது டிக்வெல்ல, தரங்க இணை. ஆரம்பம் முதல் அடித்தாடினார் டிக்வெல்ல. அணி 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவர் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். குசல் மென்டிஸ், சந்திமல், கப்புக்கெதர மத்திய வரிசையைப் பலப்படுத்தத் தவறினர். எவரும் பதின்ம ஓட்டங்களைத் தாண்டவில்லை. அத்தனை பேரையும் திக்குமுக்காட வைத்தார் தாகிர். அரைச்சதம் கடந்தார் தரங்க. 57 ஓட்டங்களுடன் தரங்கவையும் வீழ்த்தினார் தாகிர். குசல் ஜெனித் பெரேரா ஓர் முனையில் நிலைத்துநிற்க மறுமுனையில் இலக்குகள் சரிந்தன. முடிவில் 203 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி. 96 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.
பந்துவீச்சில் தாகிர் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். மொறிஸ் 2 இலக்குகளையும், ரபாடா, மோர்கல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். தாகிர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

## கரப்பந்தாட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 4
அராலி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக கரப்பந்தாட்டத் தொடரை நடத்தவுள்ளது.
இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா - புதுக்குளம் மகா வித்தியாலய அணிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தின்போது...

# மாகாணமட்ட கபடித் தொடர் காலிறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கபடித் தொடரில் ஆண்கள் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

**20 வயதுப் பிரிவு**

20 வயது ஆண்கள் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெடுந்தீவு மகா வித்தியாலய அணியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா பறக்கும் மகா வித்தியாலய அணியும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து பாலிநகர் வித்தியாலய அணியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.

**17 வயதுப் பிரிவு**

17 வயது ஆண்கள் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் கற்கோவளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன்பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி அணியும் கனகாம்பிகைகுளம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

(ம-422)

# மேற்கிந்தியத் தீவுகள் பதற்றமில்லா வெற்றி



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் பதற்றமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் முன்னணி வீரர்கள் எவரும் நம்பிக்கையை வழங்கவில்லை. நயிப் பெற்ற 12 ஓட்டங்களே முன்வரிசையில் அதிகபட்சம். அணித்தலைவர் ஸ்ரானிக்ஸை 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஏனைய எவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. மத்திய வரிசையில் ரசிட்கான் 33 ஓட்டங்களைப் பெற்றார். 110 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆப்கானிஸ்தான்.

பந்துவீச்சில் நரைன் 3 இலக்குகளையும், வில்லியம்ஸ், பிரீத் வைட் இருவரும் தலா 2 இலக்குகளையும், ரெய்லர், பத்ரி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 21 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து 6 இலக்குகளால் வெற்றிபெற்றது. சாமுவேல்ஸ் 35 ஓட்டங்களையும், லூயிஸ் 26 ஓட்டங்களையும், வல்ட்டன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம)

# கும்ளேயுடன் மோதலில்லை சொல்கிறார் விராட் கோக்லி

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கும்ளேயுடன் தனக்கு எந்தப் பிரச்சினையோ வாக்குவாதங்களோகருத்துமுரண்பாடுகளோ அல்லது மறைமுக மோதல்களோ இல்லை என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இன்றைய ஆட்டம் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

“அணியில் எந்தவிதமான பிரச்னையும் இல்லை. தலைமைப் பயிற்சியாளர் கும்ளேயுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்று பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன. அணியோடும், வீரர்களோடும் எந்தவிதமான தொடர்பும் இல்லாதவர்களாலேயே இது போன்ற தகவல்கள் பரப்பப்படுகின்றன. உண்மை நிலவரம் அறியாமல் ஒருவரைப் பற்றி மதிப்பிடுவது அல்லது கருத்துத் தெரிவிப்பது சரியாகாது. இதுதொடர்பாக விளக்கமளிக்க எங்களுக்கு அவகாசம் அளிக்காமல், ஊகம் செய்யவே ஊடகங்கள் விரும்புகின்றன" என கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)





# முகுருசா முன்னேற்றம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆம் சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீராங்கனை முகுருசா.

நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து கஜகஸ்தானின் யூலியா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முகுருசா. தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்த அவர் அடுத்த செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

(ம)

## ஆப்கானிஸ்தான் ரி-20 தொடரில் களமிறங்குகின்றனர் அக்மல்கள்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை நடத்தத் திட்டமிட்டுள்ள ரி-20 தொடரில் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களான கம்ரன் அக்மல் மற்றும் உமர் அக்மல் ஆகிய இருவரும் விளையாடுவது உறுதியாகியுள்ளது.

6 அணிகள் பங்குகொள்ளும் இந்தத் தொடரில், பாபர் அசாம், உமர் அக்மல், கம்ரன் அக்மல், தமிம் இக்பால், ஹமில்டன் மசகட்ஸா, இம்ருல் கைய்ஸ், வில்லியம்ஸ் போன்ற பன்னாட்டு வீரர்கள் விளையாடவுள்ளனர். ஜூலை 18ஆம் திகதி ஆரம்பித்து, 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடைபெறவுள்ளன.

(ம)




# மன்னார் லீக்கின் கால்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 4

மன்னார் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

முதலாவது ஆட்டத்தில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்த்து பட்டித் தோட்டம் சென். நீக்கிலஸ் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு இருதயநாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் ஸ்ரார் ஈகிள்ஸ் அணி வென்றது.

மூன்றாவது ஆட்டத்தில் கற்கிடந்தகுளம் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாலம்பிட்டி ஐக்கிய அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வென்றது.

நான்காவது ஆட்டத்தில் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொன்தீவு கண்டல் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சித்திவிநாயகர் அணி வென்றது.

ஐந்தாவது ஆட்டத்தில் கற்கிடந்தகுளம் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரியகடை எவர்கிறின் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் எவர்கிறின் அணி வென்றது.

ஆறாவது ஆட்டத்தில் மூன்றாம்பிட்டி சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து உதய ஜோதி அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் அன்ரனிஸ் வென்றது.

ஏழாவது ஆட்டத்தில் நீகன் ஸ்ரார் விளையாட்டு கழக அணியை எதிர்த்து முருங்கன் பொது சன சேவைகள் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் நீகன் ஸ்ரார் அணி வென்றது.

எட்டாவது ஆட்டத்தில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வென்றது.

(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்கான அழகுக்கலைக்கல்லூரி



British College Of Beauty Studies
அழகுக்கலை பயிற்சி நெறி + சேவைகள்
ஒளி அழகன் ஸ்ரூடியோ
British College of Beauty Studies
இணைந்து நடத்தும்
பெண்களுக்கு பொருத்தமான துறைசார் பாடநெறிகள்

Beauty Culture | Advance Beauty Theraphy
Advance Cosmatology | Advance hair cuts styles
Sinhalam | English | Dutch/French | Teddy Bear Making (Ladies Special)
Cake Icing | Tailoring | Cookering

வெளிநாடு செல்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பாடநெறி
International Beauty Theraphy Foundation
Course New Batch in Take

IVQ - Level 1
IVQ - Level 2
IVQ - Level 3

இவ் வருடத்திற்கான IVQ Level புதிய பிரிவுகள் ஆரம்பம் :
June - 19 திங்கட்கிழமை
ஆரம்பமாகவுள்ளது.

பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி.
கேக் ஐசிங், சிங்களம், ஆங்கில பயிற்சி வகுப்புக்களும் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

* திருநெல்வேலிக்கிளையில் இணையும் அனைத்து மாணவர்களுக்கும் அனைத்துப் பயிற்சிகளுக்கும் 8000/= ரூபா Discount (June 10 திகதிக்கு முன்)

அனுசரணை : ஒளி அழகன் ஸ்ரூடியோ British College of Beauty Studies
Kasthuriyar Road,
(உதயன் பணிமனை அருகில்). Jaffna. (076 701 1645)

London metropolitan college
7 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு
தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பம்

Diploma in beauty care
(Duration 3 month)

IELTS A1 (life skill) இற்கு 50% கட்டண சலுகை வழங்கப்படும் (திருமணம் ஆகி லண்டன் செல்வோருக்கான கற்கைநெறி)

Beautician Course contents
- கண் புருவம் சீராக்குதல்
- 4 விதமான தலைமுடி வெட்டுதல்
- 20 விதமான தலைமுடி அலங்கரிப்பு
- பிறைடல் மேக்ப்
- 7விதமான சாறி உடுத்தும் முறை
- 4 விதமான பேசியல்
- கண்ணின் கீழான கருமைக்கான தீர்வு



Diploma in cake icing
(Duration 4 month)

Cake icing course contents
- பட்டர் ஐசிங்
- பாச்மென்ற் ஐசிங்
- றோயல் ஐசிங்
- பொன்டன் ஐசிங்
- புறொஸ்டிங் ஐசிங்
- வோட்டர் ஐசிங்
- 10 விதமான கேக் கட்டிங் வகைகள்
- கையினால் றோஸ் செய்தல்



முற்றுமுழுதான பயிற்சிகள் உடன் கூடிய வகுப்புகள் ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 10 - 12 மாணவர்வரை மட்டுமே உள்வாங்கப்படுவர்.
குறிப்பு: இக் கற்கைநெறியில் இணையும் மாணவர்கள் Spoken English கற்கைநெறி இலவசமாக கற்க முடியும்.

மேலதிக விவரங்கள் மற்றும் பதிவுகளுக்கு - 076 419 0327
Address : London metropolitan college
No. 136, Palaly Road Parameswara
(தினேஷ் பேக்கரி கட்டடதொகுதி மேல்மாடி)
Ph number : 021 753 8395

**வீடு வாடகைக்குண்டு**

மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு அருகில் ஏழு பரப்பு காணியுடன் அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட விடு வாடகைக்கு உண்டு. (உடன் தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு. பத்மாவதி ,077 777 8860

**தேவை**

மன்னாரில் அமைந்துள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.
உணவுடன் தங்குமிடவசதி செய்து தரப்படும்.
சம்பளம் (வேலை அனுபவத்துக்கு ஏற்ப) பேசித் தீர்மானிக்கப்படும்.
எ.லீனஸ்/ A.Leenas - 077 766 3038

IPS
ஆனிமாதப் பிரிவுகள்
இலவச ஆங்கில, தகவல் தொடர் பாடல் தொழில்நுட்ப வகுப்புக்கள்.
ஆரம்பம் : 10/11.06.2017
சனி, ஞாயிறு
- Diploma in Spoken English
- Diploma in Information Technology

காலம்: 3 மாதங்கள்
அரச அங்கீகாரமுடைய சான்றிதழ்
IPS
Thirunelvely
Hotline : 076 685 2529, fb: Ips Ips

## மரண அறிவித்தல்



### கதிரன் சின்னராசா

சித்தியம்புளியடி தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் சின்னராசா (03.06.2017) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாதன் மற்றும் மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் அனுசியா (ஆசிரியை கிளி/முருகானந்தா கல்லூரி), அனுரதன் (கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெல்லிப்பழை), அனுசன் (இளைஞர் சேவை உத்தியோகத்தர் உடுவில்), அனுராகன் (சிறைச்சாலை உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலக்கண்ணன் (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), டயாணா, ஜெயபுஷ்பா (வலிவடக்கு பிரதேசசபை), மயூரஷ் (தாதிய உத்தியோகத்தர் திருகோணமலை) ஆகியோரின் அன்புமாமனும் நிகாறா, கயராம், ஷஷ்மிதா, தன்சிகா, தனக்சிகன், தக்ஷயன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தியம்புளியடி,
தெல்லிப்பழை கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## துடுப்பாட்டத் தொடர் விரைவில் ஆரம்பம்

புத்தூர் சிறி குமரகுருபரன் விளையாட்டுக் கழகம் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரை நடத்தவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் நாளைக்குள் தமது பதிவை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)

**வாகன விற்பனை**

TATA XENON (வெள்ளை) புதிய நிலையில் உள்ள குறைந்தளவு தூரமே ஓடிய நிலையிலுள்ள SINGLE CAB
தொடர்பு - 077 7323 156

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம் நியூமைதிலி ஜுவலர்ஸில்
உடனடி வேலைவாய்ப்பு. (ஆண்/பெண்) இருபாலாரும்
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
குறிப்பு: தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண்களும் தேவை. (சகல வசதிகளும் செய்து தரப்படும்.)
ஆர்வமுள்ளவர்கள் எமது ஜுவலர்ஸ்க்கு நேரில் வரவும்.
NJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல.38-40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

UK VISA
அனைத்து விதமான UK விசாக்களுக்கான ஆலோசனைகளும்.
ONLINE UK VISA படிவங்களும் ONLINE மூலம் VISA கட்டணங்களும் மிகவும் சிறந்த முறையில் தயார்படுத்தி கொடுக்கப்படும்.
Visitor Visa Family Visa Business Visa
Dependent Visa Settlement Visa
EXPONET
முன்கூட்டியே அனுமதிகளுடன் வரவும் CANADA, AUSTRALIA நாடுகளுக்குமான VISA விண்ணப்பங்களும் தயார்படுத்தி கொடுக்கப்படும்.
SCHENGEN VISA
அனைத்து Schengen நாடுகளுக்கான விசாக்களுக்கான ஆலோசனைகளும்.
ONLINE மூலம் விசா விண்ணப்பப் படிவங்கள் சிறந்த முறையில் பூர்த்தி செய்து ONLINE கட்டணங்களும் செலுத்தி கொடுக்கப்படும். தற்போது பதிவுகள் உள்வாங்கப்படுவதால் உடனடியாக அழையுங்கள்.
Example : Norway / Italy / Swiss / Germany / France / Denmark
EXPONET
முன் கூட்டியே அனுமதிகளுடன் வருக.
Branch:No.136, Palaly Road, Parameswara Junction, Jaffna. (தினேஷ் பேக்கரியின் மேல்புறம்) 021 7538395
Head Office: 379 1/2, Galle Road, Colombo 03 Hotline: 011 755 55511/14/18
Email: nimal@expogroup.lk / Web:www.expogroup.lk

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி அரியராசா

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தி கும்பிழாவளை பின் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி அரியராசா (03.06.2017) சனிக்கிழமை கும்பிழாவளைப் பிள்ளையாரடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரியராசாவின் அன்பு மனைவியும் கயேந்தியின் அன்புத்தாயும் தேவலிங்கம் அவர்களின் அன்புமாமியும் தேனுகா, ஜதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பழனிவேல், வெற்றிவேலு, அருணாசலம், வள்ளிநாயகி மற்றும் இராசம்மா, பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.06.2017)சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன் தேவலிங்கம் (துரை)
(பிரதேச சபை - சுழிபுரம்), கயேந்தி (மகள்)

மங்கலகரமான திறப்பு விழா



இல.52, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்த
த.குமாரசாமி ரெக்ஸ்டைல்ஸ்
நாளை (05.06.2017) திங்கட்கிழமை தொடக்கம் புதுப்பொலிவுடன்
வாடிக்கையாளர்க்கான வழமையான சேவையை வழங்குகின்றது
என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



இல.52, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் Tel: 021 222 8847 உரிமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.